இணைப்பு-I

(119 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

(பட்டியல்கள் 10 முதல் 15 வரை)@

பட்டியல்–10

1—

புறவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 27—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பெரம்பலூர்–மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில், திருவையாறு பேரூராட்சியில், திருவையாறு புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பெரம்பலூர்–மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில், திருவையாறு பேரூராட்சியில், திருவையாறு புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு மைய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2—

இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 30—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், அய்யனாபுரம் கிராமத்தில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்,

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், அய்யனாபுரம் கிராமத்தில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை

3—

பாலம் அமைத்தல்

வினா எண் 38—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தென்பெரமூர் கிராமம் அருகே வெண்ணாறு குறுக்கே புதிய உயர்மட்ட பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தென்பெரமூர் கிராமம் அருகே வெண்ணாறு குறுக்கே புதிய உயர்மட்ட பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

பாலம் அகலப்படுத்துதல்

வினா எண் 55—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நடுகாட்டுபாளையம் பகுதியிலுள்ள பாலத்தை அகலப்படுத்தி தடுப்புச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

நெய்வேலி தொகுதி, நடுகாட்டுபாளையம் பகுதியிலுள்ள பாலத்தை அகலப்படுத்தி தடுப்புச்சுவர் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2018 ஜூலை 9]

5—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 56—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மேலிருப்பு ஊராட்சியிலுள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

நெய்வேலி தொகுதி, மேலிருப்பு ஊராட்சியிலுள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

தடுப்புச்சுவர் அமைத்தல்

வினா எண் 86—திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, மருதம்பள்ளம் ஊராட்சியை சார்ந்த சின்னங்குடி, சின்னமேடு ஆகிய மீனவ கிராமங்களில் கடல்நீர் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, மருதம்பள்ளம் ஊராட்சியை சார்ந்த சின்னங்குடி மற்றும் சின்னமேடு ஆகிய மீனவ கிராமங்களில் கடல்நீர் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் அமைக்க ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

[2018 ஜூலை 9

7—

உயர்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 316—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி நகராட்சியையொட்டியுள்ள ஆறு வழிச்சாலையில் தண்டேகுப்பம், மேல்சோமார்பேட்டை ஆகிய பகுதிகளில் உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

கிருஷ்ணகிரி நகராட்சியையொட்டியுள்ள ஆறு வழிச்சாலையில் தண்டேகுப்பம், மேல்சோமார்பேட்டை ஆகிய பகுதிகளில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

8—

அணுகுசாலை அமைத்தல்

வினா எண் 449—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளை இணைக்கும் மேம்பாலத்தின் சிவில் லைன் பகுதியில் அணுகு சாலை (Service Road) *அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளை இணைக்கும் மேம்பாலத்தின் சிவில் லைன் பகுதியில் நிலம் கையகப்படுத்த இயலாத காரணத்தால் அணுகு சாலை அமைப்பதற்கு தற்போது வழிவகை இல்லை.

2018 ஜூலை 9]

9—

இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 482—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம்–பழனி இடையே சத்திரப்பட்டி, ஆயக்குடி, தாழையூத்து ஆகிய பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம்–பழனி இடையே சத்திரப்பட்டி, ஆயக்குடி, தாழையூத்து ஆகிய பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

10—

சாலை விரிவுபடுத்துதல்

வினா எண் 646—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூரிலிருந்து வீரளூர் வரை செல்லும் N.C. வீரளூர் சாலையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையினை இடைவழித் தடத்திலிருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

11—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 772—டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், அருகாவூர்–பனப்பாக்கம் சாலையின் குறுக்கே அமைந்துள்ள தொண்டி ஆற்றில் உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், அருகாவூர்–பனப்பாக்கம் சாலையின் குறுக்கே அமைந்துள்ள தொண்டி ஆற்றில் உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

12—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 1026—திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, வெட்டுவானம் ஊராட்சி, எல்லை அம்மன் சன்னதிக்கு பக்தர்கள் சென்று வர தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

அணைக்கட்டு தொகுதி, வெட்டுவானம் ஊராட்சி, எல்லை அம்மன் சன்னதிக்கு பக்தர்கள் சென்று வர தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

13—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 1411—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூர் முதல் குன்றாண்டார்கோவில் வரை செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூர் முதல் குன்றாண்டார்கோவில் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

ஆற்றுப்பாலம் அமைத்தல்

வினா எண் 1421—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், செங்கமேடு ஊராட்சி, மணமேடையில் ஆற்றுப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், செங்கமேடு ஊராட்சி, மணமேடையில் ஆற்றுப்பாலம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

15—

இணைப்புச் சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 1677—திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை குழிவளவு, ஒத்தக்கடை சாலைப்பிரிவு, செங்கரை எடப்புக்காடு, மேக்கினிக்காடு, நவக்காடு வழியாக செல்லும் ஒத்தக்கடை இணைப்புச் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை குழிவளவு, ஒத்தக்கடை சாலைப்பிரிவு, செங்கரை எடப்புக்காடு, மேக்கினிக்காடு, நவக்காடு வழியாக செல்லும் ஒத்தக்கடை இணைப்புச் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 1879—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடியிலிருந்து திருவோணம் வழியாக பட்டுக்கோட்டைக்கு செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடியிலிருந்து திருவோணம் வழியாக பட்டுக்கோட்டைக்கு செல்லும் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2018 ஜுலை 9]

17—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 1880—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடியிலிருந்து நெய்வேலி வழியாக பட்டுக்கோட்டை வரை செல்லும் தார்ச் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடியிலிருந்து நெய்வேலி வழியாக பட்டுக்கோட்டை வரை செல்லும் தார்ச் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

18—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 1904—திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், பணகுடி நான்கு வழிச்சாலையில் இரு மேம்பாலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், பணகுடி நான்கு வழிச்சாலையில் இரு மேம்பாலங்கள் அமைக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

19—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 1927—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பிள்ளை வாய்க்காலிலிருந்து பிரியும் ஆற்காடு பாசன வாய்க்காலில் தடுப்பணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, பிள்ளை வாய்க்காலிலிருந்து பிரியும் ஆற்காடு பாசன வாய்க்காலில் தடுப்பணை கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

20—

சுரங்க நடைபாதை அமைத்தல்

வினா எண் 1935—திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதி, கூடுவாஞ்சேரி பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையை கடப்பதற்கு சுரங்க நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, கூடுவாஞ்சேரி பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையை கடப்பதற்கு சுரங்க நடைபாதை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

2018 ஜூலை 9]

21—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 2736—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை பயணியர் மாளிகை மற்றும் மதுக்கூர் பயணியர் மாளிகைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை பயணியர் மாளிகை மற்றும் மதுக்கூர் பயணியர் மாளிகைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

22—

பாசனக் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2805—திரு. பி. முருகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி மருதாண்டப்பள்ளி ஏரியிலிருந்து துரை ஏரி வழியாக சின்னார் அணைக்கு பாசனக் கால்வாய் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி மருதாண்டப்பள்ளி ஏரியிலிருந்து துரை ஏரி வழியாக சின்னார் (வேம்பள்ளி) அணைக்கு இயற்கையாகவே பாசனக் கால்வாய் அமைந்துள்ளதால் தனியே ஒரு பாசனக் கால்வாய் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

23—

சாலை அமைத்தல்

வினா எண் 2820—திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி–சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலை எண் 227–ஐ நான்கு வழிச்சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

திருச்சி–சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலை எண் 227–ஐ அகலப்படுத்தி மேம்படுத்த தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் NHDP Phase-IV திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

24—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 2852—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வளத்தி—அவலூர்பேட்டை சாலையில், தாயனூர் அருகிலுள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வளத்தி—அவலூர்பேட்டை சாலையில், தாயனூர் அருகிலுள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2018 ஜூலை 9]

25—

உயர்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 2853—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, வளத்தி—அவலூர்பேட்டை சாலையில், நொச்சலூரிலுள்ள தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வளத்தி—அவலூர்பேட்டை சாலையில், நொச்சலூரிலுள்ள தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

26—

பாலம் அமைத்தல்

வினா எண் 2854—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, வடபாலை சாலையிலுள்ள வராகநதி தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வடபாலை சாலையிலுள்ள வராகநதி தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 3144—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, செங்கம் நகரில் புதிய புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, செங்கம் நகருக்கு புதிய புறவழிச்சாலை அமைப்பதற்கான பிரேரணை ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

28—

பாலம் அமைத்தல்

வினா எண் 3242—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகராட்சி, 27–வது வார்டில், இரயில் நிலையம்–மணவாளநகரை இணைக்க கூவம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர், மணவாளநகரை இணைக்க கூவம் ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக உயர்த்தும் திட்டம் ஏதும் இல்லை.

29—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 3263—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

வாலாஜாபாத் புறவழிச் சாலை அமைக்கும் பணிகளை விரைவில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

வாலாஜாபாத் புறவழிச் சாலை அமைக்க தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தபின் சாலை அமைக்கும் பணி நடைபெறும்.

30—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 3347—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், அம்மையார் குப்பம்–வீரகோயில் மோட்டூர் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், அம்மையார் குப்பம்–வீரகோயில் மோட்டூர் சாலையை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

31—

மாற்றுப்பாதை அமைத்தல்

வினா எண் 3370—திரு. அ. ராமு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் முதல் குன்னூர் வரை வாகனங்கள் செல்ல மாற்றுப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் முதல் குன்னூர் வரை வாகனங்கள் செல்ல மாற்றுப்பாதை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

32—

நெடுஞ்சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 3371—திரு. அ. ராமு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோத்தகிரி முதல் மேட்டுப்பாளையம் வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோத்தகிரி முதல் மேட்டுப்பாளையம் வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 3372—திரு. அ. ராமு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னூர் நகர இரயில்வே கடவுப்பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குன்னூர் நகரப்பகுதி இருப்புப்பாதை கடவு எண் 10-ல், இரயில்வே திட்டப் பணிகளின்கீழ் மேம்பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

2018 ஜூலை 9]

34—

சாலை மேம்படுத்துதல்

வினா எண் 3393—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, மாத்தி–சாக்கோட்டை தார்ச் சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, மாத்தி–சாக்கோட்டை தார்ச் சாலையை மேம்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

35—

சாலை மேம்படுத்துதல்

வினா எண் 3394—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, மாத்தி–கொருக்கை தார்ச் சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, மாத்தி–கொருக்கை தார்ச் சாலையை மேம்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

36—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 3468—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, ஆற்காடு–விழுப்புரம் சாலை, ஆற்காடு–கண்ணமங்களம் சாலை வழியாக, கிருஷ்ணகிரி–ராணிப்பேட்டை தேசிய நெடுஞ்சாலையில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

ஆற்காடு தொகுதி, ஆற்காடு–விழுப்புரம் சாலை, ஆற்காடு–கண்ணமங்களம் சாலை வழியாக, கிருஷ்ணகிரி–ராணிப்பேட்டை தேசிய நெடுஞ்சாலையில் ஆற்காடு நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பதற்கு முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

37—

சாலை சீரமைத்தல்

வினா எண் 3476—திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரை கிழக்கு தொகுதி, கருப்பாயூரணி–ஆண்டார்கொட்டாரம்–சக்கிமங்கலம்–கார்சேரி சக்குடி சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

மதுரை கிழக்கு தொகுதி, கருப்பாயூரணி–கார்சேரி வரையில் 2012-2013, 2013-2014, 2015-2016 ஆம் ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டு, தற்பொழுது போக்குவரத்துக்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

38—

சாலை சீரமைத்தல்

வினா எண் 3477—திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரை கிழக்கு தொகுதி, நத்தம் சாலை பிரிவிலிருந்து சின்னப்பட்டி–வெளிச்சநத்தம் வரையுள்ள சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

மதுரை கிழக்கு தொகுதி, நத்தம் சாலை பிரிவிலிருந்து சின்னப்பட்டி–வெளிச்சநத்தம் வரையுள்ள சாலை திட்டம்சாரா பணிகள்மூலம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இச்சாலையில் பழுதடைந்த பகுதிகள் உடனுக்குடன் தார் நொடிகள்மூலம் சரிசெய்யப்பட்டு வருகிறது.

39—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 3508—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *வேலூர் மாவட்டம், வாணியம்பாடி முதல் திருப்பத்தூர் வழியாக சேலம் செல்லும் இருவழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *வேலூர் மாவட்டம், வாணியம்பாடி முதல் திருப்பத்தூர் வழியாக சேலம் செல்லும் இருவழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த மைய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது .*

40—

அணை கட்டுதல்

வினா எண் 3528—திரு. சௌ. தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ராஜபாளையம் தொகுதி, சோலைசேரி ஊராட்சி, சோலைசேரி கிராமம், பிரார்வடி ஆறு மற்றும் சுந்தரராஜபுரம்*

கோட்டைமலை ஆறு ஆகிய ஆறுகளை இணைத்து அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராஜபாளையம் தொகுதி, சோலைசேரி ஊராட்சி, சோலைசேரி கிராமம், பிரார்வடி ஆறு மற்றும் சுந்தரராஜபுரம் கோட்டைமலை ஆறு ஆகிய ஆறுகளை இணைத்து அணை கட்ட தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறு இல்லை.

41—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 4239—திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், அர்ச்சுனா நதி நீர் வரத்து கால்வாயை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், அர்ச்சுனா நதி நீர் வரத்து கால்வாய், வருடாந்திர பராமரிப்பு நிதியின்கீழ் முறையாக தூர்வாரப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

42—

அணைத் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 4244—திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

(அ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், அழகர் அணைத் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், அழகர் அணைத் திட்டத்தை செயல்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.*

43—

தூர்வாரி தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 4245—திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சி, பேயனாற்றை தூர்வாரி தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சி, பேயனாற்றை தூர்வாரி தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*

44—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 4253—திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் முதல் செங்கோட்டை வரை புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் முதல் செங்கோட்டை வரை உள்ள சாலையில் சேத்தூர், சொக்கம்பட்டி ஆகிய பகுதிகளில் புறவழிச்சாலை அமைப்பதற்கான நடவடிக்கை மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

45—

நெடுஞ்சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 4258—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், அம்மையார்குப்பம்—சி.டி. நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், அம்மையார்குப்பம்—சி.டி. நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

46—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 4338—திரு. ஒ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் தாயனூர் முதல் வெள்ளியங்காடு வரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜுலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதியில் தாயனூர்–வெள்ளியங்காடு சாலை கி.மீ.0/0–5/0 வரை இருவழித் தடமாக அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

47—

சாலை அமைத்தல்

வினா எண் 4340—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர்–மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் நரசிம்மநாயக்கன்பாளையம் முதல் மேட்டுப்பாளையம் நகரம் முடிய உள்ள சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர்–மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் நரசிம்மநாயக்கன்பாளையம் உள்ளடக்கிய காங்கேயம்பாளையம் முதல் மேட்டுப்பாளையம் வரையுள்ள பகுதியை நான்கு வழிச் சாலையாக மாற்றும் திட்டம் ஏதும் இல்லை.

48—

சாலை சீரமைத்தல்

வினா எண் 4342—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டி பேரூராட்சி, நாயக்கனூர் முதல் சாமநாயக்கன்பாளையம் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டி பேரூராட்சி, நாயக்கனூர் முதல் சாமநாயக்கன்பாளையம் வரை செல்லும் சாலையில் போதிய போக்குவரத்து செறிவு இல்லாததால், சாலையினை அகலப்படுத்த அவசியம் எழவில்லை.

49—

இரயில்வே பாலம் அகலப்படுத்துதல்

வினா எண் 4343—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டி பேரூராட்சி, நாயக்கனூரிலுள்ள இரயில்வே பாலத்தை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டி பேரூராட்சி, நாயக்கனூரிலுள்ள இரயில்வே பாலத்தை அகலப்படுத்துவது தொடர்பாக இரயில்வே துறையின்மூலமே நடவடிக்கை எடுக்க இயலும்.

50—

சாலை சீரமைத்தல்

வினா எண் 4418—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, மேலூர்–நத்தம் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

மேலூர் தொகுதி, மேலூர்–நத்தம் சாலையில் சில பகுதிகள் மேம்பாடு செய்யும் பணிக்கு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது.

51—

நீர்த்தேக்கம் அமைத்தல்

வினா எண் 4460—திரு. ஆர்.எம். சின்னதம்பி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன் பாளையத்தில் கல்லாறு நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையத்தில் கல்லாறு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 4653—திரு. அ. சண்முகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிணத்துக்கடவு தொகுதி, பாலத்துறை நாச்சிபாளையம் இடையே கருஞ்சாமிக்கவுண்டன் பாளையத்தில் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 261, பொதுப் பணித் (டபிள்யூ1) துறை, நாள் 30–12–2014–ல் கிணத்துக்கடவு தொகுதி

பாலத்துறை நாச்சிபாளையம் இடையே கருஞ்சாமிக்கவுண்டன் பாளையத்தில் குமிட்டிபதி ஆற்றின் குறுக்கே க.ச. எண் 77–ல் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது.

53—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 4672—திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, கண்டமங்கலம் நெடுஞ்சாலையில் இரயில்வே கடவில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வானூர் தொகுதி, கண்டமங்கலம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இரயில்வே கடவு, விழுப்புரம்–பாண்டி–நாகப்பட்டினம் தே.நெ.45A, கி.மீ. 24/2–ல் பாண்டிச்சேரி மாநிலத்தில் அமைந்துள்ளதால், இப்பகுதியில் மேம்பாலம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

54—

சாலை மேம்படுத்துதல்

வினா எண் 4675—திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம்–பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கு கடற்கரை சாலைக்கு செல்லும் ஒழிந்தியாம்பட்டு, கீழ்புத்துப்பட்டு சாலையினை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம்–பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கு கடற்கரை சாலைக்கு செல்லும்

2018 ஜூலை 9]

ஒழிந்தியாம்பட்டு, கீழ்புத்துப்பட்டு சாலை கி.மீ. 0/0–6/5 வரை அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதி பகுதியான கி.மீ. 6/5 முதல் 13/1 வரை அகலப்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

55—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 5058—திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராதாபுரம் தொகுதி, கண்ணநல்லூரில் நம்பியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர் கிராமத்தில், நம்பியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டமானது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமற்றதாகிறது.

56—

உயர்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 5071—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், மன்னார்குடி–அதிராம்பட்டிணம் சாலையில் கண்ணனாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், மன்னார்குடி–அதிராம்பட்டிணம் சாலையில் கண்ணனாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

57—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 5075—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை நகரில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

பட்டுக்கோட்டை நகரில் புறவழிச்சாலை பகுதி-I நிறைவு பெற்றும், பகுதி-II-ன் பணிகள் விரைவில் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

58—

பழங்காவிரி ஆறு தூர்வாருதல்

வினா எண் 5115—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை நகரத்தில் பழங்காவிரி ஆற்றினை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மயிலாடுதுறை நகர்ப்புறத்தின் ஊடே செல்லும் பழங்காவேரி வாய்க்கால் 2014–2015 ஆம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு நிதியின்கீழ் முழுமையாக தூர்வாரப்பட்டது.

59—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 5129—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) *மயிலாடுதுறை தொகுதி, குத்தாலம்–திருமங்கலம் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, குத்தாலம்–திருமங்கலம் சாலையில் போக்குவரத்து செறிவு குறைவாக உள்ளதாலும், அகலப்படுத்த போதிய இடம் இல்லாததாலும் சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.

60—

மேம்பாலம் சீரமைத்தல்

வினா எண் 5130—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை–கும்பகோணம் நெடுஞ்சாலையில் இரயிலடி மேம்பாலத்தை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை–கும்பகோணம் நெடுஞ்சாலையில் இரயிலடி மேம்பாலம் சீரமைக்கப்பட்டு போக்குவரத்து நடைபெறுகிறது.

61—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 5326—திரு. டி.பி.எம். மைதீன்கான்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பாளையங்கோட்டை தொகுதி, தியாகராஜநகர் சிவந்திபட்டி சாலையில் உள்ள இரயில்வே கடவில் சாலை மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை தொகுதி, தியாகராஜநகர் சிவந்திபட்டி சாலையில் கடவு எண் 6–ல் இரயில்வே சாலை மேம்பாலம் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

62—

சாலை மாற்றியமைத்தல்

வினா எண் 5351—திரு. சி. ராஜா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி–கொமாரபாளையம் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி–கொமாரபாளையம் செல்லும் சாலை ஏற்கெனவே இருவழித்தட அகல சாலையாக பராமரிக்கப்பட்டு வருவதால், இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் கேள்வி எழவில்லை.

63—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 5358—திரு. அ. பிரபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், விருகாவூர், பொறசக்குறிச்சி இடையே உள்ள கோமுகி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், விருகாவூர், பொறசக்குறிச்சி இடையே உள்ள கோமுகி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2018 ஜூலை 9]

64—

வட்டச்சாலை அமைத்தல்

வினா எண் 5359—திரு. அ. பிரபு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகரத்தை சுற்றி வட்டச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகரத்தை சுற்றி வட்டச்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

65—

அலுவலகம் அமைத்தல்

வினா எண் 5487—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விருத்தாசலம் நகரில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

விருத்தாசலம் நகரில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

66—

பாலம் அமைத்தல்

வினா எண் 5693—டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் முதல் நாகக்கோனானூர் வரை செல்லும் சாலையில் கருப்பத்தேவனூர் பிரிவு அருகில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் முதல் நாகக்கோனானூர் வரை செல்லும் சாலையில் கருப்பத்தேவனூர் பிரிவு அருகில் பாலம் அமைக்க அரசின் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

67—

சாலை மேம்படுத்துதல்

வினா எண் 5843—திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, வண்டலூரிலிருந்து நல்லம்பாக்கம் வழியாக கீரப்பாக்கம் செல்லும் சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, ஜி.எஸ்.டி. சாலையிலிருந்து நல்லாம்பாக்கம் (வழி) காட்டூர்–காரணை புதுச்சேரி அருங்கல் செல்லும் சாலையானது மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் வனத் துறை பகுதியில் செல்லும் சாலைப் பகுதிகள் போக மீதமுள்ள சாலைப் பகுதிகள் போக்குவரத்துக்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளன.

68—

பாலம் அமைத்தல்

வினா எண் 6595—திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஊராட்சி ஒன்றியம், திண்ணக்கோணம் ஊராட்சி, திண்ணக்கோணம் முதல் தண்டலைப்புத்தூர் இடையே அய்யாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஊராட்சி ஒன்றியம், திண்ணக்கோணம் ஊராட்சி, திண்ணக்கோணம் முதல் தண்டலைப்புத்தூர் இடையே அய்யாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

69—

ஏரி தூர்வாருதல்

வினா எண் 6598—திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மண்ணச்சநல்லூர் தொகுதி, கோமங்கலம் ஏரியினை தூர்வாரி, ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், பேரூர், நெய்வேலி மற்றும் கோமங்கலம் ஏரிகளை தூர்வாரி, ஆழப்படுத்தும் பணிகள் 2015–2016 ஆம் நிதி ஆண்டில் நபார்டு வங்கி நிதியுதவி திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, 2015 ஆம் ஆண்டு டிசம்பரில் பணிகள் முடிக்கப்பட்டன.

70—

சுற்றுலா மாளிகை அமைத்தல்

வினா எண் 6601—திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மண்ணச்சநல்லூரில் சுற்றுலா மாளிகை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தொகுதி, மண்ணச்சநல்லூரில் சுற்றுலா மாளிகை அமைப்பதற்கு கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2018 ஜூலை 9

71—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 6821—திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் காந்திபுரத்திலிருந்து பாப்பநாயக்கன்பாளையம் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்ப கல்லூரி வரை சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

கோயம்புத்தூர் காந்திபுரத்திலிருந்து பாப்பநாயக்கன்பாளையம் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்ப கல்லூரி வரையிலான சாலையை அகலப்படுத்துவதற்குண்டான அவசியம் எழவில்லை.

72—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 6823—திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சிங்காநல்லூர்–திருச்சி சாலை காவல் நிலையம் அருகில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

சிங்காநல்லூர்–திருச்சி சாலை காவல் நிலையம் அருகில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

73—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 6826—திரு. டி.பி.எம். மைதீன்கான்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) பாளையங்கோட்டை தொகுதி, வண்ணார்பேட்டை முதல் முருகன்குறிச்சி வரை மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை தொகுதி, வண்ணார்பேட்டை முதல் முருகன்குறிச்சி வரை மேம்பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

74—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 7568—திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சைதாப்பேட்டை தொகுதி, சைதாப்பேட்டையில் பனகல் மாளிகை போக்குவரத்து சமிக்ஞைக்கும், தாடண்டர் நகர் போக்குவரத்து சமிக்ஞைக்கும் இடையே புதிய நடைமேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை தொகுதி, சைதாப்பேட்டையில் பனகல் மாளிகை போக்குவரத்து சமிக்ஞைக்கும், தாடண்டர் நகர் போக்குவரத்து சமிக்ஞைக்கும் இடையே புதிய நடைமேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

75—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 7909—திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர் தெற்கு தொகுதி, திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் அருகே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் அருகே மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

76—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 8256—திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை–சோளிங்கர்–பள்ளிப்பட்டை இணைக்க புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை–சோளிங்கர்–பள்ளிப்பட்டை இணைக்க புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

77—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 8400—திருமதி ப. மனோன்மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி, சேலம்–திருச்சி நெடுஞ்சாலையைக் கடக்கும் வகையில் மல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீரபாண்டி தொகுதி, சேலம்–திருச்சி நெடுஞ்சாலையைக் கடக்கும் வகையில் மல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் மேம்பாலம் அமைக்கும் சாத்தியமில்லை.

78—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 8401—திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வீரபாண்டி தொகுதி, கொண்டலாம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீரபாண்டி தொகுதி, கொண்டலாம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

அணை அமைத்தல்

வினா எண் 8407—திருமதி ம. கீதா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், கோயம்பள்ளி ஊராட்சி மற்றும் மேலப்பாளையம் ஊராட்சி இடையே அமராவதி ஆற்றின் குறுக்கே படுகை அணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், கோயம்பள்ளி ஊராட்சி மற்றும் மேலப்பாளையம் ஊராட்சி இடையே அமராவதி ஆற்றின் குறுக்கே படுகை அணை அமைக்க அவசியம் எழவில்லை.

80—

நடைப்பாலம் அமைத்தல்

வினா எண் 8569—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, இரயில்வே நிலையத்திலிருந்து சாலையைக் கடக்க நகரும் படிக்கட்டுகள் வசதியுடன் நடைபாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, இரயில்வே நிலையத்திலிருந்து சாலையைக் கடக்க நகரும் படிக்கட்டுகள் வசதியுடன் நடைபாலம் அமைக்கும் பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

81—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 8588—திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

லால்குடி தொகுதி, இருங்களூரிலிருந்து தச்சன்குறிச்சி பு. சங்கேந்தி வழியாக புள்ளம்பாடி (தேசிய நெடுஞ்சாலை எண் 227) வரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைத்து, மைய தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

லால்குடி தொகுதி, இருங்களூரிலிருந்து தச்சன்குறிச்சி பு. சங்கேந்தி வழியாக புள்ளம்பாடி (தேசிய நெடுஞ்சாலை எண் 227) வரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைத்து, மைய தடுப்புச் சுவர் அமைக்க போக்குவரத்து செறிவு அதிகமாகும் பட்சத்தில் பரிசீலனை செய்யப்படும்.

82—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 8589—திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

லால்குடி தொகுதி, கொப்பாவாரி–காட்டூர்–இ.வெள்ளனூர் (தேசிய நெடுஞ்சாலை எண் 227) இணைப்புச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

லால்குடி தொகுதி, கொப்பாவாரி–காட்டூர்–இ. வெள்ளனூர் இணைப்புச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்க இரண்டு சாலைகளின் போக்குவரத்து செறிவு அதிகமாகும்பட்சத்தில் பரிசீலிக்கப்படும்.

83—

பாலம் கட்டுதல்

வினா எண் 8644—திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், செமினிப்பட்டி–குட்லாடம்பட்டி சாலையில் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், செமினிப்பட்டி–குட்லாடம்பட்டி சாலையில் புதிய பாலம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

சாலை மேம்படுத்துதல்

வினா எண் 9205—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, வெள்ளலூர் நாடு வல்லடிகாரர் கோயில் மற்றும் ஏழைகாத்த அம்மன் கோயிலுக்கு செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

மேலூர் தொகுதி, வெள்ளலூர் நாடு வல்லடிகாரர் கோயில் மற்றும் ஏழைகாத்த அம்மன் கோயிலுக்கு செல்லும் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

85—

சாலை சீரமைத்தல்

வினா எண் 9207—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர்–அழகர்கோவில் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மதுரை–மேலூர்–அழகர்கோவில் சாலை கி.மீ.18/400–33/335 வரையுள்ள சாலைப்

2018 ஜூலை 9]

பகுதியானது பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டு, தற்போது போக்குவரத்துக்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

86—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 9404—திரு. ப. பலராமன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதி, ஆலாடு–மனோபுரம்–சோமஞ்சேரி ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

பொன்னேரி தொகுதி, ஆலாடு–மனோபுரம்–சோமஞ்சேரி–தத்தமஞ்சி சாலையை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 9405—திரு. ப. பலராமன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதி, சின்னகாவனம்–அரசூர்–அய்நெல்லூர் ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

பொன்னேரி தொகுதி, சின்னகாவனம்–அரசூர்–அய்நெல்லூர் சாலையானது மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் போதுமான அளவு போக்குவரத்து செறிவு இல்லாததால், தற்போது சாலையை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 9451—திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரை கிழக்கு தொகுதி, கள்ளந்தரியிலிருந்து லட்சுமிபுரம்–சிட்டம்பட்டி–பூலாம்பட்டி–பனைக்குளம் வரை உள்ள சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

மதுரை கிழக்கு தொகுதி, கள்ளந்தரியிலிருந்து லட்சுமிபுரம்–சிட்டம்பட்டி–பூலாம்பட்டி–பனைக்குளம் வரை உள்ள சாலையில் போக்குவரத்துச் செறிவுக்கு ஏற்ப சாலையின் அகலம் உள்ளது.

89—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 10848—திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர், பீளமேடு இரயில்வே உயர்மட்ட மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

கோயம்புத்தூர், பீளமேடு இரயில்வே உயர்மட்ட மேம்பாலப் பணிகளில் இதுவரை 58% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 42% பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

90—

பாலம் அமைத்தல்

வினா எண் 10991—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பொருளூர்–ஆயக்குடி இடையே கி.மீ. 1½-ல் உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பொருளூர்–ஆயக்குடி இடையே 1½ கி.மீ. உயர்மட்டப் பாலம் அமைக்க கோரப்பட்டுள்ள இடமானது பழைய ஆயக்குடி–பொருளூர் சாலை கி.மீ.0/0–19/1 வரையுள்ள மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 1½–ல் எவ்வித ஆறும் சாலையின் குறுக்கே செல்லவில்லை. தற்போது இச்சாலையின் கி.மீ.1¼–ல் காட்டாற்று ஓடை வேப்பன்வலசு என்ற இடத்தில் தரைமட்ட தாம்போகி உள்ளது. மழைக் காலங்களில் வெள்ள நீர் வடிவதற்கு போதுமான நீர்வழிப்பாதை உள்ளதால் போக்குவரத்து தடை ஏதும் ஏற்படாது. எனவே, மேற்படி இடத்தில் உயர்மட்ட பாலம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

91—

சாலை சீரமைத்தல்

வினா எண் 10997—திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் சேதமடைந்துள்ள மாவட்ட இதர சாலைகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் பழுது ஏற்பட்டிருந்த ஆறு மாவட்ட இதர சாலைகளானது, 2016–2017 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சிறப்புப் பழுது பார்த்தல் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டு தற்போது போக்குவரத்துக்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

[2018 ஜூலை 9

92—

நான்கு வழிச்சாலை அமைத்தல்

வினா எண் 11590—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி தொகுதி, நெல்லை நகரிலிருந்து முக்கூடல் வரை நான்கு வழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதி, நெல்லை நகரிலிருந்து முக்கூடல் வரை போதுமான போக்குவரத்து செறிவு இல்லாததால், இச்சாலையை நான்கு வழித்தடமாக அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 12373—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

2018 ஜூலை 9]

94—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 12395—திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரியலூர் மாவட்டம், மருதையாற்றில் இடையாத்தாங்குடி பெரிய திருக்கோணம் கிராம எல்லையில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், மருதையாற்றில் இடையாத்தாங்குடி பெரிய திருக்கோணம் கிராம எல்லையில் தடுப்பணை கட்ட சாத்தியக்கூறு இல்லை.

95—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 12495—திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திட்டக்குடி தொகுதி, சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையின் ஆவட்டி கூட்டுச் சாலையின் குறுக்கே சிறிய மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திட்டக்குடி தொகுதி, சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையின் ஆவட்டி கூட்டுச் சாலையில் வாகன கீழ்பாலம் அமைப்பதற்காக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

96—

அலுவலகம் அமைத்தல்

வினா எண் 13339—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமாத்தூர் ஒன்றியம், ஜமுனாமாத்தூரில் புதிதாக நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) *மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமாத்தூர் ஒன்றியம், ஜமுனாமாத்தூரில் புதிதாக நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.*

97—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 13475—திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகராட்சி, 57—வது கோட்டத்தில் உள்ள களரம்பட்டி நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், 57–வது கோட்டத்தில் உள்ள களரம்பட்டி நகராட்சி நடுநிலைப் பள்ளியானது 2017–2018 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

133—

நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 27499—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகராட்சி, 60–வது கோட்டம், சீலநாயக்கன்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, 60–வது கோட்டம். சீலநாயக்கன்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியானது 2017–2018 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

134—

உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 36046—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, முன்னீர்பள்ளத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, முன்னீர்பள்ளத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி, 2008–2009 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

135—

நடமாடும் நூலகம் அமைத்தல்

வினா எண் 36055—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் நடமாடும் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் 27–3–1958 முதற்கொண்டு கிளை நூலகம் ஒன்று சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் நூலக வசதி இல்லாத கிராமங்களுக்கும் நடமாடும் நூலக வாகனம் சென்று பொது மக்களுக்கு நூலகச் சேவை வழங்கி வருகிறது. இந்நிலையில், களக்காட்டில் தனியாக நடமாடும் நூலகம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

136—

உர ஆலையில் உற்பத்தியை அதிகரித்தல்

வினா எண் 138—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாமணி உர ஆலை உற்பத்தியை அதிகரித்து புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பாமணி உர ஆலையில் பாமணி 17:17:17 என்ற குருணை வடிவிலான கலப்புரம் தற்போது இரண்டு முறைப் பிரிவுகளில் (Shift) உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், 3 முறைப் பிரிவுகளில் (Shift) உற்பத்தி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, 3 முறைப் பிரிவுகளில் (Shift) உற்பத்தி மேற்கொள்ளும்போது உற்பத்தி அதிகரித்து கூடுதலான ஊழியர்களை பணியமர்த்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

137—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 286—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் கண்டமங்கலம் (இருப்பிடம் சேரி) என்ற பெயரில் 553 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. எனவே, அதே பகுதியில் மேலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

138—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 287—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், காளச்சேரி ஊராட்சி, சோத்தாரை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், காளச்சேரி ஊராட்சி, காளச்சேரியில் ஒரு முழுநேர நியாய விலைக் கடை 580 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் சோத்தாரை கிராமத்தைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளும் அடங்கும். உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், சோத்தாரை கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

139—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 331—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கரிக்கல் நத்தம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, போலுப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடையில் 428 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், கரிக்கல்நத்தம் பகுதியைச் சேர்ந்த 70 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு 150 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், கரிக்கல்நத்தம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

140—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 332—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, மோட்டூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, தேவசமுத்திரம் முழுநேர நியாய விலைக் கடை 528 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் மோட்டூர் பகுதியைச் சேர்ந்த 70 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்தால் தாய் நியாய விலைக் கடையில் 458 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டை பிரிக்கப்பட்ட பின்பு தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், மோட்டூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

141—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 333—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, குள்ளன்கொட்டாயில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, சோக்காடி முழுநேர நியாய விலைக் கடையில் 547 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் குள்ளன்கொட்டாய் பகுதியைச் சேர்ந்த 70 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்தால், தாய் நியாய விலைக் கடையில் 477 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின்பு தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், குள்ளன்கொட்டாய் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

142—

முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுதல்

வினா எண் 631—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, ஆத்திரிகுப்பம் கிராமத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, ஆத்திரிக்குப்பம் நியாய விலைக் கடையிலுள்ள மொத்த குடும்ப அட்டைகள் 192 ஆகும். அரசாணைப்படி, ஒரு முழுநேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், ஆத்திரிகுப்பம் பகுதிநேர நியாய விலைக் கடையில் 192 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. எனவே, ஆத்திரிகுப்பம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றியமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

143—

முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுதல்

வினா எண் 632—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கீழிருப்பு கிராமத்தில் இயங்கிவரும் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, கீழிருப்பு கிராமத்தில் செயல்படும் பகுதிநேர நியாய விலைக் கடையில் 373 குடும்ப அட்டைகள் உள்ளன. அரசாணைப்படி, ஒரு முழுநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், கீழிருப்பு கிராமத்தில் செயல்படும் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற வழிவகையில்லை.

144—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 633—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நடுக்குப்பம், சொரத்தங்குழி ஆகிய கிராமங்களில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி வட்டாரம், நடுக்குப்பம் கிராமத்தில் 592 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், அதே பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக்

2018 ஜூலை 9]

கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. 592 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் நடுக்குப்பம் நியாய விலைக் கடையில் சொரத்தங்குழியைச் சேர்ந்த 150 குடும்ப அட்டைகள் அடங்கும். இவற்றைப் பிரித்தால் தாய் நியாய விலைக் கடையில் 442 குடும்ப அட்டைகளே மீதமிருக்கும். அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் சொரத்தங்குழி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

145—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 634—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கீழிருப்பு கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாரத்திலுள்ள கீழிருப்பு பகுதிநேர நியாய விலைக் கடை, பெரியகாட்டுப்பாளையம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 373 குடும்ப அட்டைகளுடன் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு இலவசமாக கட்டட வசதி அக்கிராம மக்களால் செய்து தரப்பட வேண்டும் என்ற விதி உள்ளதால் மேற்படி கீழிருப்பு பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதியக் கட்டடம் கட்ட அவசியமில்லை.

146—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 639—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், வே.புதூர், மதுராகொல்லக்கொட்டாய் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டம், நாடழகானந்தல் ஊராட்சி, வே. புதூர், மதுராகொல்லக்கொட்டாய் பகுதியில் 120 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசின் நிபந்தனைப்படி, கிராமப் பகுதியில் 800 குடும்ப அட்டைகளைக் கொண்ட நியாய விலைக் கடையை மறுசீரமைப்பு செய்யும்போது புதிய நியாய விலைக் கடை அமையும் பகுதியில் 500 குடும்ப அட்டைகளுக்கு குறைவாக இருந்தால் திறக்க இயலாது என்ற அரசின் இந்த நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் வே.புதூர், மதுராகொல்லக்கொட்டாய் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

147—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1031—திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, வெட்டுவானம் அம்பேத்கர் நகரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, வெட்டுவானம் பகுதியில் 763 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த 300 குடும்ப அட்டைகளும் அடங்கும். இரண்டு பகுதிகளுக்கும் இடையே 1 கி.மீ. தூர இடைவெளி மட்டுமே உள்ளது. அம்பேத்கர் நகரைச் சேர்ந்த 300

2018 ஜூலை 9]

குடும்ப அட்டைகளைப் பிரித்தால், வெட்டுவானம் நியாய விலைக் கடையில் 463 குடும்ப அட்டைகளே மீதம் இருக்கும். பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்பு தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும் உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் இடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், அம்பேத்கர் நகரில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

148—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1033—திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, கீழ்மொணவூர் ஊராட்சியிலுள்ள பெருமாள் நகர் மற்றும் செம்பேடு ஊராட்சியிலுள்ள சகாதேவன்பட்டி ஆகிய கிராமங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, கீழ்மொணவூர் ஊராட்சி, பெருமாள் நகர் பகுதியில் 253 குடும்ப அட்டைகளுடன் டிசம்பர் 2012 முதல் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. எனவே, பெருமாள் நகர் பகுதியில் மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

செம்பேடு ஊராட்சியில் செம்பேடு நியாய விலைக் கடை 538 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. சகாதேவன்பட்டி கிராமத்தில 60 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசின் நிபந்தனைப்படி கிராமப் பகுதியில் 800 குடும்ப அட்டைகளைக் கொண்ட நியாய விலைக் கடையை மறுசீரமைப்பு செய்யும்போது புதிய நியாய விலைக் கடை அமையும் பகுதியில் 500 குடும்ப

அட்டைகளுக்குக் குறைவாக இருந்தால் திறக்க இயலாது. அரசின் இந்த நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் சகாதேவன்பட்டி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

149—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1241—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 61–வது வட்டம், டிரைவர் தெருவில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 61–வது வட்டம் டிரைவர் தெருவில், இணைப் பதிவாளர் (பொவிதி)–2 மண்டலக் கட்டுப்பாட்டில், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் நடத்தும் புதுப்பேட்டை கடை எண் 1 (MC010) மற்றும் சேவா பிரதம கூட்டுறவுப் பண்டக சாலை நடத்தும் இரண்டு நியாய விலைக் கடைகள் (NG003, NG010) இயங்கி வருகின்றன. ஏற்கெனவே மூன்று நியாய விலைக் கடைகள் உள்ள நிலையில், டிரைவர் தெருவில் புதியதாக கடை திறக்க வாய்ப்பில்லை.

150—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1251—திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், காட்டுக்கூடலூர் ஊராட்சி, நண்டுக்குழி கிராமத்திற்குப் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி வட்டாரம், காட்டுக்கூடலூர் ஊராட்சி, நண்டுக்குழி கிராமத்தில் ஏற்கெனவே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை 221 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இக்கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

151—

முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுதல்

வினா எண் 1252—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிறுவத்தூர் ஊராட்சியில் எஸ். ஏரிப்பாளையத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிறுவத்தூர் ஊராட்சியில் எஸ். ஏரிப்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடையிலுள்ள மொத்த குடும்ப அட்டைகள் 496 ஆகும். அரசாணைப்படி, ஒரு முழுநேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், எஸ்.ஏரிப்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடையில் 496 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளது. எனவே, எஸ்.ஏரிப்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றியமைக்க வாய்ப்புகள் இல்லை.

152—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1456—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் வட்டம், பெருங்களத்தூர், 15—வது வார்டு, காமராஜர் நெடுஞ்சாலையில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், பெருங்களத்தூர் 15—வது வார்டு, காமராஜர் நெடுஞ்சாலையில் தற்போது காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் பெருங்களத்தூர்–9 (KD141) *நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. இக்கடையில் இணைக்கப்பட்டுள்ள மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 1,521 ஆகும். ஏற்கெனவே, இப்பகுதியில் ஒரு நியாய விலைக் கடை இயங்கிவரும் நிலையில், புதிய நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

153—

நியாய விலைக் கடையை செயல்படுத்துதல்

வினா எண் 1457—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் நகராட்சி, 22—வது வார்டு, காமராஜர் தெருவில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடையை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி, 22—வது வார்டில் ஏற்கெனவே ஆனந்தபுரம் முழுநேர நியாய விலைக் கடை பூங்கா தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட கட்டடத்தில், 1–2–2016 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, காமராஜர் தெருவில் புதிதாகக் கட்டப்பட்ட

2018 ஜூலை 9]

கட்டடத்தைச் சுற்றி பெரிய கிணறு மற்றும் திறந்தவெளிக் கால்வாய் போன்றவை இருப்பதால் பொதுமக்கள் வரிசையில் நின்று அத்தியாவசியப் பொருட்கள் வாங்கும்போது சிரமங்கள் ஏற்படும் என்பதால், அந்தக் கட்டடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

154—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1470—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை மாநகராட்சி, 16–வது வட்டத்திற்குட்பட்ட கன்னியம்மன்பேட்டையில் உள்ள பல்நோக்கு கட்டடத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, 16–வது வார்டு, 1,900 குடும்ப அட்டைகளுடன் ஆண்டார்குப்பம் பகுதியில் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் கன்னியம்மன்பேட்டையைச் சேர்ந்த 310 குடும்ப அட்டைகளும் அடங்கும். ஆண்டார்குப்பம் நியாய விலைக் கடை சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், கன்னியம்மன்பேட்டையில் உள்ள பல்நோக்கு சமுதாய கட்டடத்தில் நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

155—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1909—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, பழையமண்ணை மற்றும் பெருமாள் நகர் கொளக்கரவாடியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, சீலப்பந்தல் கிராமத்தில் 650 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் பழையமண்ணையைச் சேர்ந்த 135 குடும்ப அட்டைகளும், பெருமாள் நகர், கொளக்கரவாடி பகுதியைச் சேர்ந்த 15 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனைப்படி, கிராமப்புறங்களில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்நேர்வில் பழையமண்ணையில் 135 குடும்ப அட்டைகளும், பெருமாள் நகர், கொளக்கரவாடியில் 15 குடும்ப அட்டைகளுமே இருப்பதால், இவ்விரு பகுதிகளிலும் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

156—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1910—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியம், சாணிபூண்டி, அண்ணா நகரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்திலுள்ள எச்.எச். 499 ஆவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் AP146 *சாணிப்பூண்டி முழுநேர நியாய விலைக் கடை 306 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையில் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் அண்ணா நகரைச் சேர்ந்த 26 குடும்ப அட்டைகளும் அடங்கும். கிராமப்புறப் பகுதிகளில் குறைந்தபட்சம் 500 குடும்ப*

அட்டைகள் இருந்தால் மட்டுமே புதிய நியாய விலைக் கடை திறக்க இயலும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், அண்ணா நகரில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

157—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1911—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, வேளானந்தல்புதூர் ஊராட்சி, கொல்லக்கொட்டாய் கிராமத்திற்கு தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, வேளானந்தல் முழுநேர நியாய விலைக் கடையில் 696 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் வேளானந்தல்புதூர், கொல்லக்கொட்டாய் பகுதியைச் சேர்ந்த 120 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனைப்படி, கிராமப்புறப் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், வேளானந்தல்புதூர், கொல்லக்கொட்டாய் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

158—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1912—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ராஜந்தாங்கலிலுள்ள நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து இலுப்பந்தாங்கல் கிராமத்திற்கு, தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ராஜந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடையில் 575 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் இலுப்பந்தாங்கல் பகுதியைச் சேர்ந்த 140 குடும்ப அட்டைகளும் அடங்கும். இரண்டு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. இடைவெளி மட்டுமே உள்ளது. இலுப்பந்தாங்கல் பகுதியைச் சேர்ந்த 140 குடும்ப அட்டைகளைப் பிரித்தால், ராஜந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடையில் 435 குடும்ப அட்டைகளே இருக்கும். அரசின் நிபந்தனைப்படி, பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும். அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் இலுப்பந்தாங்கல் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

159—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1913—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, நெய்குனி (வேடந்தவாடி) கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, வேடந்தவாடி–1 மற்றும் 2 ஆகிய முழுநேர நியாய விலைக் கடைகள் முறையே 771 மற்றும் 506 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் நெய்குனி கிராமத்தில் 52 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசின் நிபந்தனைப்படி, புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைய 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால், நெய்குனி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

160—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1914—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, மாதலம்பாடி ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதிக்கென தனியாக பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, மாதலம்பாடி முழுநேர நியாய விலைக் கடை 988 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் ஆதி திராவிடர் குடியிருப்பைச் சேர்ந்த 167 குடும்ப அட்டைகளும் அடங்கும். இரண்டு பகுதிகளுக்கிடையே 0.5 கி.மீ. இடைவெளி தூரமே உள்ளது. அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் ஆதி திராவிடர் குடியிருப்புக்கென தனியாக பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

161—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1916—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கருமாரப்பட்டியிலுள்ள இராமநாதபுரம் கிராமத்திற்கென தனியாக பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கருமாரப்பட்டி கிராமத்தில் 518 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் இராமநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த 135 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனைப்படி, புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைய குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். அரசின் இந்த நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், இராமநாதபுரம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

162—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2223—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி தொகுதி, தோவாளை ஒன்றியம், துவரங்காடு கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி தொகுதி, தோவாளை ஒன்றியம், துவரங்காடு கிராமத்தில் 954 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், அதே பகுதியில் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2018 ஜூலை 9]

163—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2226—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி தொகுதி, இறச்சகுளம் ஊராட்சி, அருள்ஞானபுரம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி தொகுதி, இறச்சகுளம் ஊராட்சி, அருள்ஞானபுரம் கிராமத்தில் 714 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், அதே பகுதியில் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

164—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2227—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி தொகுதி, பூதப்பாண்டி பேரூராட்சி தெற்கு தெரு பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி பேரூராட்சி, பூதப்பாண்டி தெற்கு தெரு பகுதியிலுள்ள 334 குடும்ப அட்டைகள் பூதப்பாண்டி–1 நியாய விலைக் கடையுடனும், 115 குடும்ப அட்டைகள் பூதப்பாண்டி–II நியாய விலைக் கடையுடனும் இணைக்கப்பட்டுள்ளன. பூதப்பாண்டி தெற்கு தெரு பகுதிக்கும், பூதப்பாண்டி–1 மற்றும் பூதப்பாண்டி–II ஆகிய இரண்டு நியாய விலைக் கடைகளுக்குமிடையே 0.1 கி.மீ. இடைவெளி தூரமே உள்ளது. எனவே, பூதப்பாண்டி தெற்கு தெரு பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

165—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2271—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அகரம் தென் ஊராட்சியில் அன்னை சத்யா நகரில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், அகரம் தென் ஊராட்சி, அகரம் தென் நியாய விலைக் கடை 1,748 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் அன்னை சத்யா நகரைச் சேர்ந்த 226 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனைப்படி, மாநகராட்சி பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைய குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்நேர்வில் 226 குடும்ப அட்டைகளே உள்ளதால், அன்னை சத்யா நகரில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

166—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2293—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, திருநகர், வேணுகோபால் நகர் மற்றும் இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி, வேணுகோபால் நகர் பகுதியில் 1,324 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய

2018 ஜுலை 9]

விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் வேணுகோபால் நகர், திருநகர் மற்றும் இந்திரா நகர் பகுதி மக்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். மேற்கூறிய பகுதிகளுக்கும் வேணுகோபால் நகர் நியாய விலைக் கடைக்கும் இடையே 1 கி.மீ. தூர இடைவெளியே உள்ளது. அரசின் நிபந்தனைப்படி, மாநகராட்சிப் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்நேர்வில் தாய் நியாய விலைக் கடையில் 1,324 குடும்ப அட்டைகளே உள்ளதால், 800 குடும்ப அட்டைகள் தனித் தனியே பிரித்து வேணுகோபால் நகர், திருநகர் மற்றும் இந்திரா நகர் ஆகிய 3 பகுதிகளில் தனித்தனியே நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

167—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2294—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, மஞ்சத்திடல் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியம், எல்லக்குடியில் 489 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் மஞ்சத்திடல் பகுதி பொது மக்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். அரசின் நிபந்தனைப்படி, மாநகராட்சிப் பகுதியில் குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய் நியாய விலைக் கடையான எல்லக்குடி முழுநேர நியாய விலைக் கடையில் உள்ள 489 குடும்ப அட்டைகளைப் பிரித்து மஞ்சத்திடல் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கு அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. எனவே, மஞ்சத்திடல் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.

168—

உர ஆலை அமைத்தல்

வினா எண் 2679—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, வெள்ளி சந்தை கிராமத்தில் உர ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, வெள்ளி சந்தை கிராமத்தில் உர ஆலை அமைப்பது தொடர்பாக கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

169—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2754—திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா வட்டம், சாம்பசிவபுரம் ஊராட்சி, கரடிமலையில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா வட்டம், சாம்பசிவபுரம் ஊராட்சி, அம்மூரார் வீதி பகுதியில் 151 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் அம்மூரார் வீதியைச்

2018 ஜூலை 9]

சேர்ந்த 87 குடும்ப அட்டைகளும், கரடிமலை பகுதியைச் சேர்ந்த 64 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவ்விரு பகுதிகளுக்கும் இடையே ½ கி.மீ. தூரமே உள்ளது. அரசின் நிபந்தனைப்படி, புதிய பகுதிநேர நியாய விலைக் கடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் இடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும். இந்நேர்வில் மேற்கூறிய அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், கரடிமலையில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

170—

நடமாடும் நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2763—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, குறும்பனை சைமன் காலனி, முட்டம், மண்டைக்காடு, கடியபட்டினம் ஆகிய கடற்கரை கிராமங்களுக்கு நடமாடும் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, குறும்பனை முழுநேர நியாய விலைக் கடை 396 குடும்ப அட்டைகளுடனும், சைமன் காலனி முழுநேர நியாய விலைக் கடை 782 குடும்ப அட்டைகளுடனும், முட்டம் பகுதிநேர நியாய விலைக் கடை 308 குடும்ப அட்டைகளுடனும், ஜேம்ஸ் நகர் பகுதிநேர நியாய விலைக் கடை 182 குடும்ப அட்டைகளுடனும், மண்டைக்காடு முழுநேர நியாய விலைக் கடை 876 குடும்ப அட்டைகளுடனும், கடியப்பட்டினம் பகுதிநேர நியாய விலைக் கடை 459 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. இந்த கிராமங்களுக்கு அருகருகே நியாய விலைக் கடைகள் அமைந்துள்ளதால், நடமாடும் நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

171—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2832—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திம்மணாமுத்தூர் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடையில் கூடுதலாக உள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்து பம்பாக்குட்டையில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திம்மணாமுத்தூர் ஊராட்சி, திம்மணாமுத்தூர் நியாய விலைக் கடை 615 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் பம்பாக்குட்டை கிராமத்தைச் சேர்ந்த 134 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்தால், திம்மணாமுத்தூர் நியாய விலைக் கடையில் 481 குடும்ப அட்டைகளே மீதம் இருக்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் பம்பாக்குட்டை கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

172—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2998—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) திருவையாறு தொகுதி, வெண்டையம்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து வேலுப்பட்டி கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, வெண்டையம்பட்டி கிராமத்தில் 389 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் வேலுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்றும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் வேலுப்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

173—

கூட்டுறவு மருந்தகம் அமைத்தல்

வினா எண் 3009—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் கூட்டுறவு மருந்துக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 3 தனியார் மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. பள்ளியாடி கிராமத்தில் சுமார் 7,000 மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில்

மார்த்தாண்டம் என்னும் இடத்தில் ஒரு கூட்டுறவு மருந்தகமும், திங்கள்நகர் என்னுமிடத்தில் ஒரு அம்மா மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. பள்ளியாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமானது, குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வருவதால், இதன்மூலம் பள்ளியாடி கிராமத்தில் கூட்டுறவு மருந்தகம் துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

174—

மலைப் பொருட்களை கொள்முதல் செய்தல்

வினா எண் 3131—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலைப் பகுதியில் விளையும் சாமை, வரகு மற்றும் தேன் போன்றவற்றை கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலை ஒன்றியத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் ஜவ்வாதுமலை மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின்மூலம், மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும்பொருட்டு அவர்கள் உற்பத்தி செய்யும் தேன், சாமை மற்றும் புளி ஆகிய பொருட்களை நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் விற்பனை செய்யும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20–6–2013 அன்று துவக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

175—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 3196—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், சித்தாங்காடு ஊராட்சி, நாங்கொளத்தூர், சித்தாற்காடு மற்றும் பாளையூர் கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், சித்தாமூர் ஒன்றியத்திலுள்ள நாங்கொளத்தூர் மற்றும் சித்தாற்காடு பகுதிநேர நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் முறையே 94 குடும்ப அட்டைகளுடன் மதுராந்தகம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டிலும், 88 குடும்ப அட்டைகளுடன் அமைந்தங்கரனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டிலும் செயல்பட்டு வருகின்றன. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு இலவசமாக கட்டட வசதி அக்கிராம மக்களால் செய்து தரப்பட வேண்டும். மேற்படி நிபந்தனை உள்ளதால் நாங்கொளத்தூர் மற்றும் சித்தாற்காடு பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், சித்தாமூர் ஒன்றியம், பாளையூர் முழுநேர நியாய விலைக் கடை 172 குடும்ப அட்டைகளுடன் மதுராந்தகம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் பாளையூர் அரசு பள்ளிக் கட்டடத்தின் ஒரு பகுதியில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. எனவே, பாளையூர் முழுநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

176—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 3282—திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஒன்றியம், இருக்கன்துறை ஊராட்சி, சங்கனேரியில் உள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், இருக்கன்துறை ஊராட்சி, சங்கனேரியில் உள்ள பகுதிநேர நியாய விலைக் கடை 407 குடும்ப அட்டைகளுடன் இஇ416 இருக்கன்துறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த IP040P2 *சங்கனேரி நியாய விலைக் கடை கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளது. இக்கட்டடத்தைப் புதுப்பிக்க இருக்கன்துறை ஊராட்சி மன்ற நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சங்கனேரியில் உள்ள பகுதிநேர நியாய விலைக் கடை கட்டடம் புதுப்பிக்கப்படவுள்ளதால், புதிய நியாய விலைக் கடைக்கான கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

177—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 3340—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை ஊராட்சி, பெரிய தெருவிலுள்ள நியாய விலைக் கடை எண் 2–க்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை ஊராட்சி, பெரிய தெருவிலுள்ள நியாய விலைக் கடை எண் 2 சி.எல். தனி 125 மேல்வைலாமூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 958 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1994–1995 இல் கட்டப்பட்ட அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, அவலூர்பேட்டை ஊராட்சி, பெரிய தெருவிலுள்ள நியாய விலைக் கடை எண் 2–க்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2018 ஜூலை 9]

178—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3350—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கோபாலபுரம் நியாய விலைக் கடையிலிருந்து திருநாதராஜபுரம் கிராம குடும்ப அட்டைகளைப் பிரித்து திருநாதராஜபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், JJ 627 பெத்தராமாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்திவரும் கோபாலபுரம் (GP093) முழுநேர நியாய விலைக் கடை 580 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையில் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் திருநாதராஜபுரம் பகுதியைச் சேர்ந்த 110 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்தால் கோபாலபுரம் முழுநேர நியாய விலைக் கடையில் 470 குடும்ப அட்டைகளே மீதமிருக்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடையில் 150 குடும்ப அட்டைகள் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் திருநாதராஜபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

179—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3351—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், மூலமத்தூர் நியாய விலைக் கடையிலிருந்து மத்தூர் காலனியிலுள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்து மத்தூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், GP 94 அலமேலுமங்காபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்திவரும் மூலமத்தூர் (FC0021) முழுநேர நியாய விலைக் கடை 704 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மத்தூர் காலனியைச் சேர்ந்த 350 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். இவற்றைப் பிரித்தால் மூலமத்தூர் நியாய விலைக் கடையில் 354 குடும்ப அட்டைகளே மீதமிருக்கும். பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் மத்தூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

180—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3352—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், அலமேலுமங்காபுரம் நியாய விலைக் கடையிலிருந்து ஏ.எம்.பேட்டை காலனியிலுள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்து ஏ.எம்.பேட்டை காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், GP 94 அலமேலுமங்காபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்திவரும் அலமேலுமங்காபுரம் (FP020) முழுநேர நியாய விலைக் கடை 565 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ஏ.எம்.பேட்டை காலனியைச் சேர்ந்த 155 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். இவற்றைப் பிரித்தால் அலமேலுமங்காபுரம் முழுநேர நியாய

விலைக் கடையில் 410 குடும்ப அட்டைகளே மீதமிருக்கும். பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் ஏ.எம்.பேட்டை காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

181—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3410—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், பெத்தநாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட நரிக்குறவர் குடியிருப்பில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதிக்குட்பட்ட சின்னகலையம்புத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் பெத்தநாயக்கன்பட்டி நியாய விலைக் கடை 689 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையில் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் நரிக்குறவர் காலனியின் 80 குடும்ப அட்டைகள் உள்ளன. இரண்டு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. தூர இடைவெளி உள்ளது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும், பகுதிநேர நியாய விலைக் கடைக்குமிடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூர இடைவெளி இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், நரிக்குறவர் குடியுருப்புப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

182—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 3450—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், இடக்கியநாடு பேரூராட்சி, மூன்றாவது வார்டு, முதலியார் குப்பத்திலுள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், சித்தாமூர் ஒன்றியம், கடப்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் முதலியார் குப்பம் கூட்டுறவு நியாய விலைக் கடையானது 167 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர கடையாக செயல்பட்டு வருகிறது. இந்தக் கடை தற்போது அரசுக் கட்டடத்தில் வாடகையின்றி இலவசமாக இயங்கி வருகிறது. எனவே, மேற்படி நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

183—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3514—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கம் தொகுதி, மேல்பெண்ணாத்தூர், மதுரை பூங்குட்டை பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் ஒன்றியத்திலுள்ள எச்.எச்.612 சி.சொர்ப்பனந்தல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்

2018 ஜூலை 9]

கடன் சங்கத்தில் CP044 *மேல்பெண்ணாத்தூர் முழுநேர நியாய விலைக் கடை 650 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையில் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மதுரை பூங்குட்டையைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளும் அடங்கும். இரண்டு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. தூர இடைவெளியே உள்ளது. அரசின் நிபந்தனைப்படி, பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூர இடைவெளி இருக்க வேண்டும். எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், மேல்பெண்ணாத்தூர், மதுரா பூங்குட்டை கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

184—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 3515—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கம் தொகுதி, செங்கம் கோளாந்தாங்கல் பகுதியில் இயங்கிவரும் பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, எச்.எச்.168 செ.நாச்சிப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 4 முழுநேரக் கூட்டுறவு நியாய விலைக் கடைகளும், 5 பகுதிநேரக் கூட்டுறவு நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. கோளாந்தாங்கல் பகுதிநேர கூட்டுறவு நியாய விலைக் கடை 149 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடை செ.நாச்சிப்பட்டு கிராம கூட்டுறவு நியாய விலைக் கடையிலிருந்து பிரிக்கப்பட்டு பஞ்சாயத்துக் கட்டடத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்படி கோளாந்தாங்கல் பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அவசியமில்லை.

185—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3525—திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தொகுதி, வீரநாயக்கன்தட்டு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சியில் 0.961 தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை செயல்பட்டு வருகிறது. இப்பண்டகசாலையால் நடத்தப்படும் சண்முகபுரம் 2 நியாய விலைக் கடையில் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் வீரநாயக்கன்தட்டு பகுதியில் உள்ள 85 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 766 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 அட்டைகள் இருக்க வேண்டும். அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், வீரநாயக்கன்தட்டு பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

186—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3558—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, வைரபெருமாள்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியத்தில் உள்ள ட்டி.1710 தொடக்க வேளாண்மைக்

2018 ஜூலை 9]

கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சித்திரக்குடி முழுநேர நியாய விலைக் கடை 624 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் வைரபெருமாள்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 135 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் வைரபெருமாள்பட்டி கிராமத்தில் 135 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளது. எனவே, வைரபெருமாள்பட்டியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

187—

கூட்டுறவு சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 3750—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, Y1560 லெட்சுமிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, லெட்சுமிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமாக 31 சென்ட் நிலம் உள்ளது. இந்நிலத்தில் 1958–ல் 700 சதுர அடியில் கட்டப்பட்ட கட்டடத்தில் சங்கம் செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் சிறிதளவு பழுதடைந்துள்ளதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்பொழுது ரூ.29.95 இலட்சம் மதிப்பீட்டில் லெட்சுமிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

188—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3758—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேசம் ஊராட்சி, மெய்பழத்தோட்டத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி மற்றும் ஊராட்சி ஒன்றியம், அசேசம் ஊராட்சி, கீழநத்தம் கிராமத்தில் ஒரு முழுநேர நியாய விலைக் கடை 492 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் மெய்பழத்தோட்டம் கிராமத்தைச் சேர்ந்த 90 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவ்விரு கிராமங்களுக்கும் இடையே 1.00 கி.மீ. இடைவெளி மட்டுமே உள்ளது. அரசின் நிபந்தனைப்படி, புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு 150 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும் புதிய உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடைக்குமிடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூர இடைவெளி இருக்க வேண்டும். மேற்கூறிய அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், மெய்பழத்தோட்டம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

189—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3881—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை ஊராட்சியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை ஊராட்சியில் ஏற்கெனவே 5 முழுநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, அதே பகுதியில் மீண்டும் நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

190—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3940—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், தெக்களூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், படவேட்டம்மன் மகளிர் சுய உதவிக் குழு நடத்தும் தெக்களூர் நியாய விலைக் கடை 490 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் தெக்களூர் காலனியைச் சேர்ந்த 120 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் தெக்களூர் காலனியைச் சேர்ந்த 120 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 370 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். மேலும், தாய்க்கடைக்கும், பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் தெக்களூர் காலனிக்கும் 1 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். மேற்படி அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத

நிலையில் தெக்களூர் காலனியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

191—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3941—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், வீரகநல்லூர் மேட்டு காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி மற்றும் வட்டம், வீரகநல்லூர் கிராமத்தில் 512 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் வீரகநல்லூர் மேட்டு காலனியைச் சேர்ந்த 63 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனைப்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு 150 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேற்படி நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், வீரகநல்லூர் மேட்டு காலனி பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

192—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4410—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி, மாங்குளப்பட்டி, வைரவன்பட்டி ஆகிய கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மாங்குளப்பட்டி, மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கச்சிராயன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் (FP020) *மணப்பட்டி நியாய விலைக் கடையிலுள்ள மொத்தமுள்ள 893 குடும்ப அட்டைகளில் மாங்குளப்பட்டியின் 134 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. வைரவன்பட்டி, மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்திலுள்ள மேலூர் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் திருச்சுனை நியாய விலைக் கடையிலுள்ள மொத்த குடும்ப அட்டைகளில் வைரவன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளைப் பிரித்து உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கக் கோரப்பட்டுள்ளதில் புதிய பகுதிநேரக் கடை துவங்க குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகவில்லை. எனவே, வைரவன்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

193—

நியாய விலைக் கடைகள் அமைத்தல்

வினா எண் 4415—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, சா.நடுப்பட்டி, தி. அய்யனார்புரம், ஒக்கப்பட்டி, மட்டங்கிப்பட்டி ஆகிய கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சா.நடுப்பட்டி–மேலூர் வட்டம், சாத்தமங்கலம் முழுநேர நியாய விலைக் கடை 482 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் சா.நடுப்பட்டியைச்

[2018 ஜூலை 9

சேர்ந்த 245 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

தி.அய்யனார்புரம்—மேலூர் வட்டம், மேலூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் டி.கோவில்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 356 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் தி.அய்யனார்புரம் கிராமத்தைச் சேர்ந்த 136 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மட்டங்கிப்பட்டி—மேலூர் வட்டம், வெள்ளலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் இடையவலசை பகுதிநேர நியாய விலைக் கடை 568 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மட்டங்கிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 225 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

ஒக்கப்பட்டி—மேலூர் வட்டம், அம்பலகாரன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் அம்பலகாரன்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 528 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ஒக்கப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 190 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2018 ஜூலை 9]

194—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4662—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, ஐயனூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி சட்டமன்ற தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, சென்னல்தாபுதுக்குளம் நியாய விலைக் கடை 883 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. இதன் பகுதிநேர நியாய விலைக் கடை DP018P1 பூவனூர் நியாய விலைக் கடை 448 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னல்தாபுதுக்குளம் நியாய விலைக் கடையில் 435 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ஐயனூரைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். தாய் அங்காடிக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ஐயனூர் பகுதிக்கும் 0.5 கி.மீ. தூரமே உள்ளது. அரசின் நிபந்தனைப்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும், உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் இடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. இருக்க வேண்டும். அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் ஐயனூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

195—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4945—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, தொட்டபூவத்தியில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து இருளர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, தொட்டபூவத்தி கிராமத்தில் 681 குடும்ப அட்டைகளுடன் (HP007) சிக்கபூவத்தி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் இருளர் காலனியைச் சேர்ந்த 40 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைய குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் இருளர் காலனியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

196—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4946—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கொடுகூரில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து உஸ்தல அள்ளியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, கொடுகூர் முழுநேரக் கடை, கொடுகூர் கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடையில் உஸ்தல அள்ளி கிராமத்தைச் சார்ந்த குடும்ப அட்டைகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. ஆனால், உஸ்தல அள்ளி கிராமத்தைச் சார்ந்த 80 குடும்ப அட்டைகள் HP129 இட்டிக்கல் அகரம் முழுநேர நியாய விலைக் கடையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, உஸ்தல அள்ளி கிராமத்தைச் சார்ந்த குடும்ப அட்டைகள் ஏதும்

2018 ஜூலை 9]

கொடுகூரில் இணைக்கப்படாத காரணத்தினால், கொடுகூரில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து உஸ்தல அள்ளியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

197—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4985—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், இலக்கிநாயக்கன்பட்டி நியாய விலைக் கடையைப் பிரித்து ஜல்லியூர் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், இலக்கிநாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட இலக்கிநாயக்கன்பட்டி முழுநேர நியாய விலைக் கடை குனிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 589 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் ஜல்லியூர் கிராமத்தைச் சேர்ந்த 154 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், தாய்க் கடையான இலக்கிநாயக்கன்பட்டி முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து உத்தேசிக்கப்படும் ஜல்லியூர் பகுதிநேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டபின் 435 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சி இருக்கும். எனவே, அரசு நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் ஜல்லியூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

198—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4986—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், மானவள்ளி கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து கொண்டப்பநாயக்கன்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், மானவள்ளி முழுநேர நியாய விலைக் கடை 596 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமையக் கோரும் கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 96 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

199—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4987—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், கூடப்பட்டு நியாய விலைக் கடையைப் பிரித்து வவ்வால்தோப்பு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் ஒன்றியம், அகரம் ஊராட்சி, கூடப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூடப்பட்டு முழுநேர நியாய விலைக் கடை 455 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் வவ்வால்தோப்பைச் சார்ந்த 126 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் வவ்வால்தோப்பு பகுதியில் 126 குடும்ப அட்டைகளே இணைக்கப்பட்டுள்ளது. மேலும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 329 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் வவ்வால்தோப்பு பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

200—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4988—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், கோனேரிக்குப்பம் நியாய விலைக் கடையைப் பிரித்து செவத்தான் வட்டம் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி மற்றும் ஒன்றியம், கோனேரிக்குப்பம் கிராமத்தில் 563 குடும்ப அட்டைகளுடன் ஒரு

முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் செவத்தான் வட்டத்தைச் சேர்ந்த 75 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், செவத்தான் வட்டத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

பட்டியல்–12

1—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4989—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி, TM சுலைமான் தெருவில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து ஆரிப் நகரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தாலுகா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சுலைமான் தெருவில் செயல்படும் கடை எண் 6–ல் மொத்தம் 1,056 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் ஆரிப் நகரைச் சேர்ந்த 410 குடும்ப அட்டைகளும் அடங்கும். சுலைமான் தெருவிலுள்ள கடை எண் 6 மற்றும் ஆரிப் நகருக்கு இடைப்பட்ட தூரம் 0.5 கி.மீ. மட்டுமே உள்ளது. அரசின் நிபந்தனையின்படி, தாய்க் கடைக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடையே 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். இந்நேர்வில்

2018 ஜூலை 9]

மேற்சொன்ன அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், ஆரிப் நகர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பு இல்லை.

2—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 5272—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், குருங்குளம் கீழ்பாதி ஊராட்சி, வாகரக்கோட்டையில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் ஒன்றியம், ஒரத்தநாடு தொகுதி, வாகரக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த 140 குடும்ப அட்டைகளில், AP066 *முழுநேர நியாய விலைக் கடையில் 35 குடும்ப அட்டைகளும், 19* APOB1 *சமத்துவபுரம் பகுதிநேர நியாய விலைக் கடையில் 105 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், வாகரக்கோட்டை பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

3—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 5788—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனை ஊராட்சி ஒன்றியம், குஞ்சங்குளம் ஊராட்சி, தினைக்காத்தான் வயல் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டாரத்தில் திருவாடனை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 19 முழுநேர நியாய விலைக் கடைகளையும் 6 பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகிறது. தினைக்காத்தான் வயல் (CP053P1) என்ற பகுதிநேர நியாய விலைக் கடை 274 குடும்ப அட்டைகளுடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ஆணை J5/54454/97, நாள் 6–8–1997–ன்படி செயல்பட்டு வருவதால், மேலும் ஒரு நியாய விலைக் கடை இக்கிராமத்தில் திறக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

4—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 5790—திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஓடைக்கால ஊராட்சி குலமாணிக்கம் கிராமத்தில் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம், ஊராட்சி ஒன்றியம், ஓடைக்கால ஊராட்சி குலமாணிக்கம் கிராமத்திலுள்ள (CC013) முழுநேர நியாய விலைக் கடை, N.N.221, திருவாடனை வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கட்டுப்பாட்டில், 168 குடும்ப அட்டைகளுடன், சமுதாயக் கூடக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, குலமாணிக்கம் முழுநேர நியாய

2018 ஜூலை 9]

விலைக் கடைக்கு சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே, இராமநாதபுரம், குலமாணிக்கம் முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக் கூறுகள் இல்லை.

5—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 6564—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருப்புனவாசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் இயங்கும் நியாய விலைக் கடையைப் பிரித்து, புத்தாம்பூர் கிராமத்தில் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருப்புனவாசல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் திருப்புன்வாசல் (20GP119PN) என்ற நியாய விலைக் கடை 689 குடும்ப அட்டைகளுடன் முழு நேர அங்காடியாக செயல்பட்டு வருகிறது. இதில் புதிய நியாயவிலை அங்காடி கோரும் புத்தாம்பூர் பகுதியைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசாணை எண் 63 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11–3–1997–ன்படி நகர்ப்புறத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க 800 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் 1000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், கிராமப்புறத்தில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் நியாய விலைக் கடை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய நியாய விலை அங்காடி கோரும் புத்தாம்பூர் பகுதியில் 85 குடும்ப அட்டைகளே உள்ளன. எனவே, அரசாணையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை பூர்த்தியாகாததால், புத்தாம்பூர் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.

6—

முழுநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 6565—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், புண்ணியவயல் ஊராட்சி, ஏமுநூற்றிமங்களம் நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சட்டப்பேரவைத் தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆவுடையார்கோவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஏமுநூற்றிமங்களம் அங்காடி 257 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே முழுநேர அங்காடியாகத்தான் செயல்பட்டு வருகிறது. எனவே, ஏமுநூற்றிமங்களம் நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற வேண்டிய கேள்வி எழவில்லை.*

7—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 6567—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாட்டியக்குடி ஊராட்சி, தச்சமல்லி கிராமத்தில் கூட்டுறவு நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாட்டியக்குடி ஊராட்சி, தச்சமல்லி கிராமத்தில், சாட்டியக்குடி முழுநேர அங்காடியானது, 585 குடும்ப அட்டைகளுடன் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.*

8—

நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

வினா எண் 7122—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, கீழ்மருதாந்தநல்லூர் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கீழ்மருதாந்தநல்லூர் ஊராட்சியில் செயல்படும் கீழ்மருதாந்தநல்லூர் (7DP005PN) முழுநேர நியாய விலைக் கடை* ZB.75, *ஆணதாண்டவபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், 435 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, கீழ்மருதாந்தநல்லூர் முழுநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட, சங்கத்தில் சொந்த இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால், புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

9—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 7549—திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சைதாப்பேட்டை தொகுதி, வேளச்சேரி சாலை, விநாயகர் கோயில் பகுதியில் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை தொகுதி, சென்னை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தால் வேளச்சேரி 15 (LC094) முழுநேர நியாய விலைக் கடை 948 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதிய நியாய விலைக் கடை கோரும் வேளச்சேரி சாலை விநாயகர் கோயில் பகுதியைச் சேர்ந்த 135 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை அமைக்கக் குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேலும், புதிய நியாய விலைக் கடை அமைக்கும் இடத்திற்கும் தாய் நியாய விலைக் கடைக்கும் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். தாய் நியாய விலைக் கடைக்கும் புதிய நியாய விலைக் கடை கோரும் வேளச்சேரி சாலை விநாயகர் கோயில் பகுதிக்கும் இடையே 0.5 கி.மீ. தூரமே உள்ளது. மேற்கண்ட அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், வேளச்சேரி சாலை, விநாயகர் கோயில் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

10—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7573—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, சக்கராபுரம் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள சக்கராபுரம்–II, முழுநேர நியாய விலைக்

2018 ஜூலை 9]

கடை, CLSPL 32 விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டில், *780* குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி சக்கராபுரம்–II, முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சங்கத்தில் சொந்த இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால் சக்கராபுரம்–II முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

11—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7574—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, கிருஷ்ணாபுரத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள கிருஷ்ணாபுரம் தேசூர்பேட்டை செஞ்சியிலுள்ள மக்களங்காடி–I, முழுநேர நியாய விலைக் கடை, CLSPL *32* விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டில், *563* குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி மக்களங்காடி–I, முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சங்கத்தில் இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

12—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7575—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, துத்திப்பட்டு காலனி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள துத்திப்பட்டு காலனி பகுதிநேர நியாய விலைக் கடை CLSPL 76 அனந்தபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், 212 குடும்ப அட்டைகளுடன், துத்திப்பட்டு காலனி கிராம பஞ்சாயத்து தொலைக்காட்சி அறையில் இலவசமாக வாடகையில்லாக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, துத்திப்பட்டு காலனி பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே, துத்திப்பட்டு காலனி பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

13—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7579—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, அத்தியூர் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள அத்தியூர் முழுநேர நியாய விலைக் கடை மேல்அருங்குணம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 460 குடும்ப அட்டைகளுடன்

2018 ஜூலை 9]

செயல்பட்டு வருகிறது. அத்தியூர் முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட மேல்அருங்குணம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 27 செண்ட் சொந்த இடம் உள்ளது. ஆனால், நிதி வசதி இல்லாததால், அத்தியூர் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7580—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, பெரியமூர் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள பெரியமூர் முழுநேர நியாய விலைக் கடை, CLSPL 132 தேவதானம்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 123 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பெரியமூர் முழுநேர நியாய விலைக் கடைக்கு சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே பெரியமூர் முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

15—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7581—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மாவட்டம்பாடி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள மாவட்டம்பாடி முழுநேர நியாய விலைக் கடை, CLSPL 78 கோணை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 306 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி மாவட்டம்பாடி முழுநேர நியாய விலைக் கடைக்கு தற்போது சங்கத்தில் சொந்த இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால், மாவட்டம்பாடி முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

16—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7582—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, கடகம்பூண்டி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள கடகம்பூண்டி முழுநேர நியாய விலைக் கடை, CLSPL 78 கோணை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 185 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி கடகம்பூண்டி முழுநேர நியாய விலைக் கடைக்கு சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே, விழுப்புரம்,

2018 ஜூலை 9]

கடகம்பூண்டி முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

17—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7589—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, போத்துவாய் கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி மற்றும் ஒன்றியத்திலுள்ள போத்துவாய் முழுநேர நியாய விலைக் கடை, இ.1564 செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 460 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி போத்துவாய் முழுநேர நியாய விலைக் கடைக்கு சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லாததால், போத்துவாய் முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7590—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, தடாகம் கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள தடாகம் முழுநேர நியாய விலைக் கடை, இ.1564 செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 463 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது சங்கத்தில் சொந்த இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால், தடாகம் முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

19—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7591—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, நாகலாம்பட்டு கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள நாகலாம்பட்டு முழுநேர நியாய விலைக் கடை, இ.1564 செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 354 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது சங்கத்தில் சொந்த இடம் இல்லாததாலும், நிதி வசதியின்மையாலும் நாகலாம்பட்டு முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

20—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7593—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) செஞ்சி தொகுதி, வேலந்தாங்கல் கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(*அ*) *மற்றும்* (*ஆ*) *விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி மற்றும் ஒன்றியத்திலுள்ள வேலந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடை,* CLSPL150G *செம்மேடு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 862 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. வேலந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே, வேலந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

21—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7594—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, கம்மந்தாங்கல் கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(*அ*) *மற்றும்* (*ஆ*) *விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள கம்மந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடை,* CLSPL 109 *பெருவளூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 89 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு*

வருகிறது. கம்மந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே, கம்மந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7596—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, சொக்கபலம் கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள சொக்கபலம் முழுநேர நியாய விலைக் கடை, 110 குடும்ப அட்டைகளுடன் 2014–2015 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் 20–5–2016 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, அதே நியாய விலைக் கடைக்குப் புதியதாகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

23—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7598—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, துறிஞ்சிப்பூண்டி கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள துறிஞ்சிப்பூண்டி முழுநேர நியாய விலைக் கடை, CLSPL 139 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 401 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி துறிஞ்சிப்பூண்டி முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சங்கத்தில் இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால், சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

24—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7600—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, சீயப்பூண்டி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், CLSPL 126 மானந்தல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் சீயப்பூண்டி கிராமத்திலுள்ள சீயப்பூண்டி முழுநேர நியாய விலைக் கடை 296 குடும்ப அட்டைகளுடன் 2014–2015 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் 7–6–2016 முதல் செயல்பட்டு வருகிறது.

25—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7602—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை கிராமத்தில் 2 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் அவலூர்பேட்டை முழுநேர நியாய விலைக் கடை எண் 1, சங்கத்தின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அவலூர்பேட்டை முழுநேர நியாய விலைக் கடை எண் 2, 1994–1995 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, அவலூர்பேட்டை கிராமத்தில் செயல்படும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

26—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7604—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, ஆர்காம்பூண்டி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள ஆர்காம்பூண்டி முழுநேர நியாய விலைக் கடை, II.96 சாத்தாம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 121 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு

வருகிறது. ஆர்காம்பூண்டி முழுநேர நியாய விலைக் கடைக்கு சங்கத்தில் சொந்த இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால், தற்போது சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7606—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, பறையந்தாங்கல் கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள பறையந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடை, II.96 சாத்தாம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 158 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது சங்கத்தில் சொந்த இடம் இல்லாததாலும், நிதி வசதியின்மையாலும் பறையந்தாங்கல் முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

28—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7607—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, கொடுக்கன்குப்பம் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, கொடுக்கன்குப்பம் கிராமத்தில் 483 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில் 9–3–2016 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, அதே நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

29—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7608—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, கப்பளாம்பாடி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள கப்பளாம்பாடி முழுநேர நியாய விலைக் கடை, II.96 சாத்தாம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 454 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது மேற்படி சங்கத்தில் சொந்த இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால், கப்பளாம்பாடி முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

30—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 7610—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) செஞ்சி தொகுதி, கோட்டப்பூண்டி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள கோட்டப்பூண்டி முழுநேர நியாய விலைக் கடை,* II. 96 *சாத்தாம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 731 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லாததால், கோட்டப்பூண்டி முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

31—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 7880—திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, தண்ணீர்பந்தல்காடு கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 10 முழு நேர நியாய விலைக் கடைகளை நடத்திவருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் தண்ணீர்பந்தல்காடு கிராமத்தில் ஏற்கெனவே முழு நேர நியாய விலைக் கடை 868*

குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, மேலும் ஒரு புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய நேர்வு எழவில்லை.

32—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 7881—திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், திருப்புளிநாடு ஊராட்சி, வால்குழிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் செயல்பட்டுவரும் முள்ளுக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் பெரியகோம்பை பகுதிநேர நியாய விலைக் கடை 464 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் வால்குழிப்பட்டியைச் சேர்ந்த 102 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். இவற்றைப் பிரித்தால் பெரியகோம்பை முதல் பகுதிநேர நியாய விலைக் கடையில் 362 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். அரசின் நிபந்தனைப்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு 150 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேற்படி நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், வால்குழிப்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2018 ஜூலை 9]

33—

நடமாடும் நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 7882—திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை பவர்க்காடு LAMP கூட்டுறவு சங்கம்மூலம் மேல்களூர், கீழ்களூர், போல்காடு ஆகிய கிராமங்களுக்கு நடமாடும் நியாய விலைக் கடை மூலமாகப் பொருட்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை வட்டம், கொல்லிமலை பவர்க்காடு பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின்* (Large sized Multipurpose Co-operative Society) *கட்டுப்பாட்டின்கீழ் தோட்டிக்காடு நடமாடும் நியாய விலைக் கடைமூலம் மேல்களூர், கீழ்களூர், போல்நாடு ஆகிய கிராமங்களுக்கு ஆகஸ்ட் திங்கள் 2016 முதல் குடிமைப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுவருகின்றன.*

34—

மத்திய கூட்டுறவு வங்கி துவங்குதல்

வினா எண் 7910—திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு மத்தியக் கூட்டுறவு வங்கி துவங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் மற்றும் மேற்படி வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்புச் சங்கங்கள் திருப்பூரில் செயல்பட்டுவருகின்றன. கோயம்புத்தூர்

மத்தியக் கூட்டுறவு வங்கியில் மொத்தம் உள்ள 36 கிளைகளில், திருப்பூர் மாவட்டத்தில 9 கிளைகள் இயங்கி வருகின்றன. அதே போன்று ஈரோடு மத்தியக் கூட்டுறவு வங்கியின் மொத்தம் உள்ள 33 கிளைகளில் திருப்பூர் மாவட்டத்தில் 8 கிளைகள் இயங்கி வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் மொத்தம் 1,083 சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றில், 238 கூட்டுறவுச் சங்கங்கள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ளன. அதேபோன்று ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் மொத்தம் 1,329 சங்கங்கள் இணைந்துள்ளன. அவற்றில், 231 கூட்டுறவுச் சங்கங்கள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ளன. கோயம்புத்தூர் மத்தியக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் மொத்தம் உள்ள 255 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், 118 சங்கங்கள் திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுகின்றன. ஈரோடு மத்தியக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் மொத்தம் உள்ள 227 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், 64 கடன் சங்கங்கள் திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுகின்றன.

மேலும், கடன் கூட்டுறவுகளை சீரமைக்க அமைக்கப்பட்ட வைத்தியநாதன் குழு, கூட்டுறவு வங்கிகளை இணைக்க மட்டுமே பரிந்துரை செய்துள்ளது. தற்போதுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளைப் பிரித்தால் இது மேலும் வங்கிகளை நலிவடையச் செய்வதுடன், பெருஞ்செலவுகளை ஏற்படுத்தும். வங்கிகளைப் பிரிப்பதால் ரிசர்வ் வங்கி நிர்ணயித்த இடர் சொத்துக்களுக்கான மூலதன விகிதத்தினை (CRAR) பராமரிக்க இயலாது. பிரிக்கப்பட்ட வங்கி மட்டும் அல்லாமல் தாய் வங்கியும் சேர்ந்தே பாதிப்படையும். வங்கிகளை பிரிக்கும்போது தற்போதுள்ள இடர் சொத்துக்களுக்கான மூலதன விகிதம் (CRAR) மிகவும் குறைந்து, தற்போது பெற்றுள்ள உரிமமும் இரத்தாகும் நிலை ஏற்படும். எனவே திருப்பூர் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 8062—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) அறந்தாங்கி தொகுதி, மூக்குடி தெற்கு குடியிருப்பில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி மூக்குடி முழுநேரக் கடையில் 698 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் மூக்குடி தெற்கு குடியிருப்பைச் சேர்ந்த 263 குடும்ப அட்டைகளும் அடங்கும். ஊரகப் பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், மூக்குடி தெற்குக் குடியிருப்புப் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

36—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 8227—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடானை தொகுதி, இராமநாதபுரம் வட்டம், அச்சுந்தன்வயல் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அச்சுந்தன்வயல் (AB050) என்ற முழுநேர நியாய விலைக் கடை, க்யூ.816 இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டில் 423 குடும்ப அட்டைகளுடன், சமுதாயக் கூடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, அச்சுந்தன்வயல் முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சங்கத்தில் சொந்த இடமோ, நிதி

வசதியோ இல்லை. எனவே, இராமநாதபுரம், அச்சுந்தன்வயல் முழுநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 8431—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், கலையநல்லூர் ஊராட்சி, மேட்டுக்குப்பம் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டாரத்தில் கலையநல்லூர் முழு நேர நியாய விலைக் கடை 508 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மேட்டுக்குப்பம் பகுதியைச் சேர்ந்த 155 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால், மேட்டுக்குப்பம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

38—

வேளாண் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 8593—திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில், 800 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் செயல்பட்டுவருவதால், விருத்தாசலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

39—

துணைப் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 8594—திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மண்டலத்தில் மூன்று சரகத் துணைப் பதிவாளர் அலுவலகங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகம், விருத்தாசலத்தில் செயல்பட்டுவருகிறது. இவ்வலுவலகம் விருத்தாசலம், திட்டக்குடி மற்றும் வேப்பூர் தாலுகாக்களின் செயல் எல்லைகளை உள்ளடக்கி செயல்பட்டுவருகிறது. இவ்வலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 64 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுவருகின்றன. இவ்வலுவலகத்தில் துணைப் பதிவாளர் உட்பட 20 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கடலூர் மாவட்டத்தில், விருத்தாசலம் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகம் தனியார் வாடகைக் கட்டடத்தில் சிறப்பான முறையில் செயல்பட்டுவருகிறது. தற்போது விருத்தாசலம் அலுவலகத்திற்கு அரசால் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

40—

நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

வினா எண் 8628—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, காளி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை வட்டம், காளி ஊராட்சியில் இசட்.* B96, *திருமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில்* 17DP039P1 *கிடாதலைமேடு பகுதிநேர நியாய விலைக் கடை 460 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவருகிறது. அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி பகுதிநேர அங்காடி அமைப்பதற்கு இலவசமாக கட்டட வசதி அக்கிராம மக்களால் செய்து தரப்பட வேண்டும் என்ற விதி உள்ளதால், கிடாதலைமேடு பகுதியில் புதிய நியாய விலைக் கடைக் கட்டடம் கட்ட அவசியம் இல்லை.*

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

41—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 8634—திரு. சி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம் எலவம்பட்டி ஊராட்சி, ம. வளவு மற்றும் நத்தக்காட்டானூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வங்காளியூரில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எலவம்பட்டி தாய் நியாய விலைக் கடை 601 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட தாய் நியாய விலைக் கடையிலிருந்து பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் வங்காளியூரில் உள்ள 271 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 330 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். அரசின் நிபந்தனைப்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேற்படி நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் மக்கட்டையான் வளவு மற்றும் நத்தக்காட்டானூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி வங்காளியூரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 8964 டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், நத்தப்பட்டி ஊராட்சி, கருப்பத்தேவன்பட்டி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஒன்றியம், நத்தப்பட்டி ஊராட்சியிலுள்ள பூத்தாம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்திவரும் சொக்கலிங்கபுரம் நியாய விலை அங்காடியில் 307 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் கருப்பத்தேவன்பட்டி

பகுதியைச் சேர்ந்த 7 குடும்ப அட்டைகளும் அடங்கும். ஊரகப் பகுதிகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் நியாய விலைக் கடைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், கருப்பத்தேவன்பட்டி பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 8965—டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், நாகையகோட்டை ஊராட்சி, பண்ணைப்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நாகையகோட்டை ஊராட்சியிலுள்ள நாகையகோட்டை வைகை நியாய விலை அங்காடியில் 569 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில், பண்ணைப்பட்டி பகுதியைச் சேர்ந்த 206 குடும்ப அட்டைகளும் அடங்கும். தாய்க் கடைக்கும் புதிய நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் பண்ணைப்பட்டி பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.00 கி.மீ.-க்கும் குறைவாக உள்ளது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் தாய் நியாய விலைக் கடைக்கும் குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூர இடைவெளி இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் பண்ணைப்பட்டி பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

44—

பல்பொருள் அங்காடி அமைத்தல்

வினா எண் 9190—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் கூட்டுறவுத் துறையின்மூலம் பல்பொருள் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி வால்பாறையில் மாநகராட்சி கட்டடத்தில் ஏற்கெனவே ஒரு பல்பொருள் அங்காடியை நடத்தி வருவதால் வால்பாறையில் மீண்டும் ஒரு பல்பொருள் அங்காடி அமைக்க அவசியம் எழவில்லை.

45—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 9232—திரு. சி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம் பாப்பம்பாடி ஊராட்சி, மூங்கத்தூரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சியில் எண் 173, சின்னப்பம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 07FP08PN பாப்பம்பாடி மற்றும் 07FP08PN கொண்டகாரனூர் ஆகிய முழுநேர நியாய விலைக் கடைகளில் உள்ள 228 குடும்ப அட்டைகளை பிரித்து 2–4–2017 முதல் மூங்கத்தூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.

46—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 9364—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், தாதநாயக்கன்பட்டி ஊராட்சி, தெற்கு தாதநாயக்கன்பட்டி 5, 6 ஆகிய வார்டுகளில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதியில் கரடிக்கூட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் காவல்பட்டி நியாய விலை அங்காடியில் 1,131 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில், தெற்கு தாதநாயக்கன்பட்டி, 5 மற்றும் 6–வது வார்டு பகுதிகளைச் சேர்ந்த 250 குடும்ப அட்டைகளும் அடங்கும். தாய் கடைக்கும், புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.00 கி.மீ. உள்ளது. தாய்க் கடைக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடையில் குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், தெற்கு தாதநாயக்கன்பட்டி, 5 மற்றும் 6–வது வார்டு பகுதிகளில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 9958—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், ஆதியூர் ஊராட்சி, புலிக்குட்டையில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து ஆதிசக்தி நகர் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, ஆதியூர் ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் புலிக்குட்டை முழுநேர நியாய விலைக் கடை 550 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ஆதிசக்தி நகரைச் சேர்ந்த 132 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். இரண்டு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. தூர இடைவெளியே உள்ளது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். மேற்கண்ட அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், ஆதிசக்தி நகர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 9959—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், குனிச்சி ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து, செல்வனூர் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கந்திலி வட்டாரத்தில் குனிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் குனிச்சி முழுநேர நியாய விலைக் கடை 826 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் செல்வனூர் பகுதியைச் சேர்ந்த 130 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். இரண்டு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. தூர இடைவெளியே உள்ளது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும் ஆகிய அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், செல்வனூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 10300—திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கொல்லாலகுப்பம் கூட்டுறவு நியாய விலைக் கடையிலிருந்து கேசவராஜகுப்பம் கிராம குடும்ப அட்டைகளைப் பிரித்து, கேசவராஜகுப்பம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பாண்டரவேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 01GP028PY கொல்லாலகுப்பம் நியாய விலைக் கடை 809 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து 242 குடும்ப அட்டைகளைப் பிரித்து கேசவராஜகுப்பத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி 7–5–2017 முதல் செயல்பட்டு வருகிறது.

50—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 10638—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் 1, 2, 3 ஆகிய வார்டுகளில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி வட்டம், MM 23 ஆலங்குடி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஆலங்குடி யூனிட்–1 நியாய விலைக் கடை 1,001 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ஆலங்குடி 1, 2, 3 ஆகிய வார்டுகளில் உள்ள 651 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் வார்டு எண் 1, 2, 3 பகுதிகளின் 651 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 350 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டிருக்கும் மற்றும் தாய்க் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் 0.5 கி.மீ. மட்டுமே உள்ளது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும் மற்றும் புதிய பகுதிநேர அங்காடி அமைவதற்கு அக்கிராம மக்களால் வாடகை இல்லாமல் இலவச கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும். மேற்படி அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், ஆலங்குடி வார்டு எண் 1, 2, 3 ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

51—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 10999—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சி, சத்யா நகரிலுள்ள நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து, லட்சுமிபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சி, பழனிகவுண்டன்புதூர் முழுநேர நியாய விலைக் கடை 1,082 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் லட்சுமிபுரத்தைச் சேர்ந்த 75 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேற்கண்ட அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், லட்சுமிபுரத்தில் ஒரு புதிய நியாய விலைக் கடை தொடங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

52—

பகுதிநேர நியாய விலைக் கடைக்கு கட்டடம்

வினா எண் 11000—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, வேலம்பட்டி ஊராட்சி, வேலூர் கிராமத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, வேலம்பட்டி ஊராட்சி, வேலூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை ஏதும் செயல்படவில்லை. எனவே, கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

53—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11002—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஜவ்வாது ஊராட்சி, ஜவ்வாதுபட்டி புதூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி, ஜவ்வாதுபட்டி முழுநேர நியாய விலைக் கடை 759 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ஜவ்வாதுபட்டிபுதூர் கிராமத்தில் 300 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், தாய்க் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் இடையே 0.5 கி.மீ. மட்டும் உள்ளது. பகுதிநேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 459 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். மேற்கண்ட அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், ஜவ்வாதுபட்டிபுதூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

54—

கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைத்தல்

வினா எண் 11003—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி கூட்டுறவு விற்பனைச் சங்கம், பழனி மற்றும் ஒட்டன்சத்திரம் தாலுகாக்களை விவகார எல்லைகளாகக் கொண்டு, பழனி பகுதியைச் சார்ந்த 4,902 உறுப்பினர்களும் ஒட்டன்சத்திரம் பகுதியைச் சார்ந்த 3,250 உறுப்பினர்களும், ஆக மொத்தம் 8,152 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் சுமார் 10,000 விவசாயிகள் உள்ளனர். இப்பகுதியில் அதிகமாக காய்கறி உற்பத்தியாகிறது. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஏற்கெனவே உழவர் சந்தை மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகியன செயல்பட்டு வருகின்றன. எனவே, ஒட்டன்சத்திரத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்பட்டால், அதனை வாழ்திறனுடன் செயல்படுத்த இயலாது.

55—

செயற்கை உரத்திற்குப் பதிலாக இயற்கை உரம்

வினா எண் 11031—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்படும் செயற்கை உரத்திற்குப் பதிலாக இயற்கை உரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் விவசாயிகளுக்கு தேவைப்படும் செயற்கை உரங்களை நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் விநியோகம் செய்து வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டு முதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உறுப்பினர்களின் தேவைக்கேற்ப இயற்கை உரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இயற்கை உரம் தேவைப்படும் வேளாண் பெருமக்கள் கூட்டுறவுச் சங்கங்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

56—

கூட்டுறவு சங்கத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 11035—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரங்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு (Y76) புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரங்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் (Y76) தற்போது செயல்பட்டுவரும் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. அதனால் புதிய கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

57—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11066—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், எடுத்தனூர் ஊராட்சி, எடுத்தனூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி மற்றும் ஒன்றியம், எடுத்தனூர் ஊராட்சி, எடுத்தனூர் முழுநேர நியாய விலைக் கடை 555 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் எடுத்தனூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 170 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்தால் எடுத்தனூர் தாய் நியாய விலைக் கடையில் 385 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். இரண்டு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. தூரம் இடைவெளியே உள்ளது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும் உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடைக்குமிடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் ஆகிய அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், எடுத்தனூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

58—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 11087—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், இரும்பாநாடு ஊராட்சி, வெள்ளாலவயல் கிராமத்தில் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், இரும்பாநாடு ஊராட்சியிலுள்ள வெள்ளாலவயல் பகுதிநேர நியாய விலைக் கடை, ஒய்.ப்பி.603 மதகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 141 குடும்ப அட்டைகளுடன், அங்கன்வாடி கட்டடத்தின் ஒரு பகுதியில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு இலவசமாக கட்டட வசதி அக்கிராம மக்களால் செய்து தரப்பட வேண்டும் என்ற விதி பூர்த்தியாகி உள்ளதால், மேற்படி வெள்ளாலவயல் பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அவசியமில்லை.

59—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 11090—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, குருங்களூரில் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, குருங்களூர் (20GP063PY) முழு நேர நியாய விலைக் கடை, ஒய்.ப்பி.603 மதகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 292 குடும்ப அட்டைகளுடன், ஊராட்சி மன்றக் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டுவருகிறது. மேற்படி, குருங்களூர் முழு நேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட சங்கத்தில் இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால், புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

60—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11413—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, களங்குடி ஊராட்சி, கிங்கினிப்பட்டி பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, களங்குடி முழு நேரக் கடையில் 171 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் கிங்கினிப்பட்டி பகுதியைச் சேர்ந்த 60 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதி நேரக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் மீதம் இருக்க வேண்டும் ஆகிய அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், மேற்படி கிங்கினிப்பட்டி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

61—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11414—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, பூவரசக்குடி ஊராட்சி, அழகம்பாள்புரம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், பூவரசக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்

கட்டுப்பாட்டில் 20BP051PN *பூவரசக்குடி முழு நேர நியாய விலைக் கடை 661 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. இதில், பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் அழகம்பாள்புரம் கிராமத்தைச் சேர்ந்த 130 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால், அழகம்பாள்புரம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.*

62—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11416—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஊராட்சி, கோவில்பட்டி பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் முழு நேரக் கடையில் 1,021 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் கோவில்பட்டி பகுதியைச் சேர்ந்த 54 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதி நேரக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், தாய் கடைக்கும் பகுதி நேரக் கடைக்கும் இடையில் குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். ஆனால், உத்தேச பகுதி நேரக் கடை அமைக்கக் கோரும் கோவில்பட்டி பகுதியில் 54 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், மேற்படி கோவில்பட்டி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

நியாய விலைக் கடையைப் பிரித்தல்

வினா எண் 11418—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, பாலையூர் ஊராட்சி, பொம்மநாதபுரம் கிராம குடும்ப அட்டைகளை பாலையூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, மாளக்குடி நியாய விலைக் கடையில் இணைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, பாலையூர் ஊராட்சி, பொம்மநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த 42 குடும்ப அட்டைகள் செப்டம்பர் 2016–ல் பாலையூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரிக்கப்பட்டு, மாளக்குடி நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

64—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11419—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, திருக்கட்டளை ஊராட்சி, டி. தோப்புக்கொல்லை பகுதியில் பகுதிநேர நியாய நிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, திருக்கட்டளை முழு நேரக் கடையில் 591 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் டி. தோப்புக்கொல்லை பகுதியைச் சேர்ந்த 140 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், தாய்க் கடைக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடையில் குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூரமும் இருக்க வேண்டும். ஆனால், உத்தேச பகுதிநேரக் கடை அமைக்கக் கோரும் டி. தோப்புக் கொல்லைப் பகுதியில் 140 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், மேற்படி டி. தோப்புக்கொல்லைப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2018 ஜூலை 9]

65—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11421—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, வாண்டாக்கோட்டை ஊராட்சி, திருவுடையார்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வாண்டாக்கோட்டை முழு நேர நியாய விலைக் கடையில் 284 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் திருவுடையார்பட்டி பகுதியைச் சேர்ந்த 60 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால், மேற்படி திருவுடையார்பட்டி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

66—

கொப்பரைக் கொள்முதல் மையம் அமைத்தல்

வினா எண் 11431—திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை கிழக்கு தொகுதி, மதுரை மேற்கு ஒன்றியம், சத்திரப்பட்டியில் கொப்பரைக் கொள்முதல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 56, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎம்1) துறை, நாள்

10–6–2016–ன்படி மதுரை மாவட்டத்தில், மேலூர் தொகுதியில் மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஆகிய இடங்களில் இரண்டு கொப்பரைக் கொள்முதல் மையங்களும், சோழவந்தான் தொகுதியில் ஒரு கொப்பரைக் கொள்முதல் மையமும் ஆக மொத்தம் மூன்று கொப்பரைக் கொள்முதல் மையங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டுவருகின்றன. இக்கொப்பரைக் கொள்முதல் மையங்களில் மிகக் குறைந்த அளவிலேயே (0.784 மெட்ரிக் டன்) கொப்பரைக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், சத்திரப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மஞ்சம்பட்டி, கடவூர், தொண்டமான்பட்டி, சீகுபட்டி, கல்லம்பட்டி ஆகிய கிராமங்களில் குறைந்த நிலப்பரப்பு அளவிலேயே தென்னை சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. இந்நிலையில், சத்திரப்பட்டியில் கொப்பரைக் கொள்முதல் மையம் அமைத்தால் அது வாழ்திறனுடன் செயல்பட இயலாது. எனவே, சத்திரப்பட்டி பகுதியிலுள்ள விவசாயிகள், சோழவந்தான் மற்றும் மேலூரில் செயல்படும் கொப்பரைக் கொள்முதல் மையத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

67—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11573—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, அத்திபாடி ஊராட்சி உள்செக்கடியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஒன்றியத்தில் உள்ள எச்.எச். 493 ரெட்டிப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 10 முழு நேர கூட்டுறவு நியாய விலைக்

2018 ஜூலை 9]

கடைகள் செயல்பட்டு வருகின்றன. உள்செக்கடி என்ற பகுதியில் ஏற்கெனவே CP139 செம்மம்பட்டி என்ற முழுநேர நியாய விலைக் கடை 149 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. எனவே, மேலும் ஒரு நியாய விலைக் கடை உள்செக்கடி பகுதியில் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

68—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 11994—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனை ஊராட்சி ஒன்றியம், பழங்குளம் ஊராட்சி, ஊரணிக்கோட்டை கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊரணிக்கோட்டை கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 37 ஹெக்டேர். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 32 ஹெக்டேர் ஆகும். தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையான குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் அல்லது 4,950 ஏக்கர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு அதன் விவகார எல்லையில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், ஊரணிக்கோட்டை கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 12232—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஊராட்சி ஒன்றியம், ஒதியத்தூர் ஊராட்சியில் உள்ள சென்னாலூர்–தின்னலூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், CLSPL 174 கனக்கன்குப்பம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் சென்னாலூர் முழு நேர நியாய விலைக் கடை 287 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் தின்னலூர் பகுதியைச் சேர்ந்த 47 குடும்ப அட்டைகளும் சென்னாலூர் பகுதியைச் சேர்ந்த 240 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் தின்னலூர் கிராமத்தில் 47 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 240 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், தாய்க் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் 0.5 கி.மீ தூரம் மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் தின்னலூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

70—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 12233—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஊராட்சி ஒன்றியம், ஆர். நயம்பாடி ஊராட்சியில் சவூட்டூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஆர். நயம்பாடி முழு நேர நியாய விலைக் கடை 317 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் சவூட்டூர் பகுதியைச் சேர்ந்த 90 குடும்ப அட்டைகளும் சென்னாலூர் பகுதியைச் சேர்ந்த 240 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக் கோரும் சவூட்டூர் கிராமத்தில் 90 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளது. பிரிக்கப்பட்டபின் தாய்க்கடையில் 227 குடும்ப அட்டைகள் இருக்கும். மேலும், தாய்க் கடைக்கும் பகுதிநேர கடை கோரும் பகுதிக்கும் 1 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ தூரம் இருக்க வேண்டும். அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் சவூட்டூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

71—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 12235—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், தாழங்குனம் ஊராட்சியில் உள்ள கீழ்த்தாங்கல், களர்பாளையம், காந்திநகர் மற்றும் ஓடைதாங்கல் பகுதிகளில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், ஐ.ஐ.96 சாத்தாம்பாடி தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் தாழங்குனம் முழுநேர நியாய விலைக் கடை 547 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் கீழ்த்தாங்கல், காந்தி நகர், களர்பாளையம் மற்றும் ஓடைதாங்கல் பகுதிகளைச் சேர்ந்த 216 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் கீழ்த்தாங்கல், காந்திநகர், களர்பாளையம் மற்றும் ஓடைதாங்கல் ஆகிய நான்கு கிராமங்களில் மொத்தம் சேர்த்து 216 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டிருப்பினும், பிரிக்கப்பட்ட பின் தாய்க் கடையில் 331 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். மேலும், தாய்க் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் 1.5 கி.மீ.க்கும் குறைவாக உள்ளது.

எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் கீழ்த்தாங்கல், காந்திநகர், களர்பாளையம் மற்றும் ஓடைதாங்கல் ஆகிய நான்கு கிராமங்களையும் உள்ளடக்கிய ஒரு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுதல்

வினா எண் 12349—திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சி, காசவளநாடு–தெக்கூர் கிராமத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி மற்றும் ஒன்றியம், நடுவர் தொடக்க

வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 2 முழுநேர நியாய விலைக் கடைகளும் 4 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டுவருகின்றன. மேற்கண்ட 4 பகுதிநேர நியாய விலைக் கடைகளுள் காசவளநாடு தெக்கூர் பகுதிநேர நியாய விலைக் கடை 264 குடும்ப அட்டைகளுடன் இச்சங்கத்தில் இணைந்து செயல்பட்டுவருகிறது. அரசின் நிபந்தனைகளின்படி புதிய நியாய விலைக் கடை கோரும் ஊரகப் பகுதிகளில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் காசவளநாடு தெக்கூர் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற வழிவகை இல்லை.

73—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 12353—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், காட்டுக்குறிச்சி ஊராட்சி, கோவிலூர் கிராமத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், காட்டுக்குறிச்சி ஊராட்சி, கோவிலூர் கிராமத்திலுள்ள, கோவிலூர் (FP012) *பகுதிநேர நியாய விலைக் கடை, ட்டி.1742 நெடுவாக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், 349 குடும்ப அட்டைகளுடன், வாடகையில்லா இலவச கட்டடத்தில் செயல்பட்டுவருவதால், கோவிலூர் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.*

[2018 ஜூலை 9

74—

கூட்டுறவு வங்கி கிளை அமைத்தல்

வினா எண் 12472—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கடலாடி கிராமத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கிளை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை கலசப்பாக்கத்தில் செயல்பட்டுவருகிறது. இக்கிளையுடன் ஏழு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், ஒரு பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணயக் கடன் சங்கம் இணைப்பு சங்கங்களாக உள்ளன. கடலாடியில் புதிய கிளை துவக்கப்பட்டால் நான்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மட்டுமே இணைப்புச் சங்கங்களாக செயல்பட வாய்ப்புகள் உள்ளன.

மேலும், புதிய கிளை வாழ்திறன் கொண்டதாக செயல்பட ரூ.10.00 கோடிக்குக் குறையாமல் இணைப்புச் சங்கங்கள் மூலமாக கடன் வழங்கவும், ரூ.1.00 கோடிக்குக் குறையாமல் நேரடிக் கடன் வழங்கவும் தகுதியுள்ளதாக இருத்தல் வேண்டும். கடலாடி பகுதியில் புதிய கிளை ஆரம்பிக்கப்பட்டால் மேற்கண்டவாறு கடன் வழங்க வாய்ப்பு இல்லை. மேலும், கலசப்பாக்கம் கிளையின் கடன் அளவும் வைப்புத் தொகையும் குறைந்து இக்கிளையின் வாழ்திறன் பாதிப்படையும். எனவே, கடலாடி பகுதியில் புதிய கிளை துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

75—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 12547—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

திருவெறும்பூர் தொகுதி, நவல்பட்டு ஊராட்சி, பாரதியார் நகர் சிலோன் குடியிருப்புக்கு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி ஆர்.1554 துப்பாக்கித் தொழிற்சாலை ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் போலீஸ் காலனி முழுநேர நியாய விலைக் கடை 940 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. மேற்படி, நியாய விலைக் கடையிலிருந்து சிலோன் காலனி AP036P1 *பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 204 குடும்ப அட்டைகளுடன் 16–7–2016 முதல் செயல்பட்டுவரும் நிலையில் அதே பகுதியில் மற்றுமொரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

76—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 12549—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, பத்தாளப்பேட்டை ஊராட்சியிலுள்ள கீழமாங்காவனத்திற்கு நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி, வாளவந்தான்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் அய்யம்பட்டி நியாய விலைக் கடை 475 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. இதில் கீழமாங்காவனம் பகுதியைச் சேர்ந்த 60 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனைப்படி ஊரகப் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 500 குடும்ப

அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், கீழமாங்காவனம் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

77—

நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

வினா எண் 13170—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஒய்–10 ஈத்தாமொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் இயங்கும் வள்ளியாவிளை நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, ஒய்–10 ஈத்தாமொழி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் வள்ளியாவிளை முழுநேர நியாய விலைக் கடை 798 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவருகிறது. மேற்படி சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லாததால் வள்ளியாவிளை முழுநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.*

78—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 13195—டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், குறிஞ்சிப்பை கிராமத்திற்கு புதியதாக நியாய விலைக் கடை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியத்திலுள்ள CLSPL 49 தையூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் குறிஞ்சிப்பை முழுநேர நியாய விலைக் கடை 531 குடும்ப அட்டைகளுடன் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் (JVVT) கட்டப்பட்ட அரசுக் கட்டடத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. எனவே, குறிஞ்சிப்பை முழு நேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

79—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 13334—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்திவேலூர் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மேல்சாத்தம்பூர் ஊராட்சி, மேல்சாத்தம்பூர் நியாய விலைக் கடையைப் பிரித்து முருககவுண்டம்பாளையத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பரமத்திவேலூர் வட்டம், DP035 மேல்சாத்தம்பூர் நியாய விலைக் கடையில் 473 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. புதிய நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் முருககவுண்டம்பாளையம் பகுதியில் 85 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேல்சாத்தம்பூர் தாய் கடைக்கும், புதிதாக நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் முருககவுண்டம்பாளையம் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. ஆகும். அரசின் நிபந்தனையின்படி, ஊரகப் பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்நேர்வில், மேற்சொன்ன அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், முருககவுண்டம்பாளையம் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2018 ஜூலை 9

80—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 13358—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகர் அம்மாப்பேட்டை பகுதியில் 38–வது கோட்டத்தில் புதிய நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் மாநகர், அம்மாப்பேட்டை பகுதியில் 38–வது கோட்டத்தில் தங்க செங்கோடன் தெரு முழு நேர நியாய விலைக் கடை 1,327 குடும்ப அட்டைகளுடனும், தியாகி நடேசன் தெரு முழு நேர நியாய விலைக் கடை 949 குடும்ப அட்டைகளுடனும் மற்றும் தியாகி அருணாசலம் தெரு முழு நேர நியாய விலைக் கடை 766 குடும்ப அட்டைகளுடனும் ஆகிய 3 முழு நேர நியாய விலைக் கடைகளும் வாடகைக் கட்டடத்தில் சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள மூன்று முழுநேர நியாய விலைக் கடைகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்ட சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே, அம்மாப்பேட்டை 38–வது கோட்டத்தில், வாடகைக் கட்டடத்தில் செயல்படும் தங்க செங்கோடன் தெரு, தியாகி நடேசன் தெரு மற்றும் தியாகி அருணாசலம் தெரு ஆகிய மூன்று முழு நேர நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

81—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 13370—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) திருமயம் தொகுதி, தேக்காட்டூர் ஊராட்சி, டி. பூவம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, திருமயம் வட்டம்,* YP 605 *தேக்காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் தேக்காட்டூர் முழுநேர நியாய விலைக் கடை 516 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து டி. பூவம்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டு 202 குடும்ப அட்டைகளுடன் 17–9–2011 முதல் செயல்பட்டுவருகிறது. ஏற்கெனவே டி. பூவம்பட்டியில் நியாய விலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில், மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.*

82—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 13419—திரு. ஜே.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம் குருவாலப்பர் கோவில் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம்,* R.2334 *இடைக்கட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் குருவாலப்பர்*

கோவில் முழுநேர நியாய விலைக் கடை 659 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து குருவாலப்பர் கோவில் கிராமத்திற்கென புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி குருவாலப்பர் கோவில் பகுதியில் 19–3–2017 முதல் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 155 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது.

83—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 13487—திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், இந்திரவனம் கிராமத்திலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியத்திலுள்ள எச்.எச்.549 சேத்துப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இந்திரவனம் முழு நேர நியாய விலைக் கடை 415 குடும்ப அட்டைகளுடன் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, இந்திரவனம் முழு நேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

84—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 13950—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் வட்டம், ராயமுண்டான்பட்டி, சின்னகாங்கேயம்பட்டி மற்றும் நாச்சியார்பட்டி ஆகிய கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்ட பின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், பூதலூர் முழு நேர நியாய விலைக் கடையில் 705 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் நாச்சியார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 140 குடும்ப அட்டைகளும் அடங்கும். மேலும் இரண்டு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. தூர இடைவெளி மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால் சின்னகாங்கேயம்பட்டி கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் பெரிய காங்கேயம் முழுநேர நியாய விலைக் கடை 637 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. இதில் சின்னகாங்கேயம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்ப அட்டைகளும் அடங்கும். சின்னகாங்கேயம்பட்டி பகுதியில் 30 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், இரண்டு பகுதிகளுக்குமிடையே 0.5 கி.மீ. தூர இடைவெளி மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால் சின்ன காங்கேயம்பட்டி கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்கடன் சங்கக் கட்டுப்பாட்டில் முத்துவீரக்கண்டியன்பட்டி முழு நேர நியாய விலைக் கடை 211 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் ராயமுண்டான்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்ப அட்டைகளும் அடங்கும். ராயமுண்டான்பட்டி பகுதியில் 30 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. எனவே, அரசு நிபந்தனை பூர்த்தியாகாததால், ராயமுண்டான்பட்டி கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

85—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 13953—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கடையங்குடி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, நெடுங்குளம் பகுதிநேர நியாய விலைக் கடை 268 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. இதில், புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் கடையங்குடி கிராமத்தைச் சேர்ந்த 90 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்தால் தாய் நியாய விலைக் கடையில் 178 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். இரண்டு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. தூர இடைவெளியே உள்ளது. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கக் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்குமிடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூர இடைவெளி இருக்க வேண்டும் ஆகிய அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் கடையங்குடி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

86—

கூட்டுறவு நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 14616—திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) செய்யாறு தொகுதி, எச்சூர் ஊராட்சி, மலைவையாவூர் கிராமத்தில் பகுதிநேர கூட்டுறவு நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், எச்சூர் ஊராட்சி வி.எல். தணி 62 வட நாங்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் பள்ளஎச்சூர் முழு நேர நியாய விலைக் கடை 426 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மலைவையாவூர் கிராமத்தைச் சேர்ந்த 162 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். மேற்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மலைவையாவூர் பகுதியில் 162 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டிருந்தபோதிலும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 364 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், மலைவையாவூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

87—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 14623—திரு. ஜே.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், மீன்சுருட்டியில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து குண்டவெளி கிராமத்திற்கு தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், மீன்சுருட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 5 முழு நேர அங்காடியும், 4 பகுதிநேர அங்காடியும் செயல்பட்டு வருகின்றன. குண்டவெளி கிராமத்தில் 375 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் குண்டவெளி கிராமத்திற்கும் தாய் நியாய விலைக் கடையான மீன்சுருட்டி–II முழுநேர நியாய விலைக் கடைக்கும் இடைவெளி 1 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. கிராமப்புறங்களில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும், பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ தூரம் இடைவெளி இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் இந்நேர்வில் பூர்த்தியாகாத நிலையில், குண்டவெளி கிராமத்திற்கு தனியாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

88—

பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 14694—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, அகரகீரங்குடி ஊராட்சியில் பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை வட்டம், இசட்.B 97 மறையூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள அகரகீரங்குடி தாய்க் கடையிலிருந்து

2018 ஜூலை 9]

அகரகீரங்குடி பகுதி நேரக் கடை பிரிக்கப்பட்டு, அரககீரங்குடி பகுதிநேர நியாய விலைக் கடை 478 குடும்ப அட்டைகளுடன் ஊராட்சிமன்ற கட்டடத்தின் ஒரு பகுதியில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. எனவே, அகரகீரங்குடி பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதியக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

89—

பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 14699—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, சோழம்பேட்டை ஊராட்சியில் பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை வட்டம், இசட்.B88 ப. மாப்படுகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 17DP004P1 சோழம்பேட்டை பகுதிநேர நியாய விலைக் கடை 371 குடும்ப அட்டைகளுடன், ஓட்டு கட்டடத்தில் செயல்பட்டுவருகிறது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு இலவசமாக கட்டட வசதி அக்கிராம மக்களால் செய்து தரப்பட வேண்டும் என்ற விதி உள்ளதால், மேற்படி, சோழம்பேட்டை பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

90—

கூடுதல் நியாய விலைக் கடைகள் அமைத்தல்

வினா எண் 16288—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, சேலையூர் பகுதியில் கூடுதல் நேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, சேலையூர் பகுதியில் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் சேலையூர்–1 (KD027), *சேலையூர்–3* (KD038), *சேலையூர்–5* (KD174) *மற்றும் கணேஷ் நகர்* (KD161) *ஆகிய 4 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி இந்நியாய விலைக் கடைகளுக்கிடையே 1.5 கி.மீ. தூரத்திற்குள் உள்ளதால் கூடுதலாக சேலையூர் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

91—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 16495—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி, உடையார் தெருவிலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், இசட்.சி. 83 செருமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், உடையார் தெரு பகுதிநேர நியாய விலைக் கடை, 160 குடும்ப அட்டைகளுடன் வாடகையில்லா தனியார் கட்டடத்தில் செயல்பட்டுவருகிறது. உடையார் தெரு பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட உடையார்

2018 ஜூலை 9]

தெருவில் வசிக்கும் செம்பையன் மனைவி பொட்டம்மாள் என்பவர் தனது நிலத்தை இனாமாக எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால், சங்கத்தில் நிதி வசதி இல்லாததால், உடையார் தெரு பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

92—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 16831—திரு. அ. பிரபு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், வேளாக்குறிச்சி ஊராட்சியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி மற்றும் வட்டம், ஐ.ஐ.584 வேளாக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் வேளாக்குறிச்சி CP 109 முழு நேர நியாய விலைக் கடை 629 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருவதால், அதே பகுதியில் மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

93—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 16832—திரு. அ. பிரபு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், ஈயனூர் ஊராட்சி, மகரூரில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், ஈயனூர் ஊராட்சி, ஐ.ஐ.584 வேளாக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் மகரூர் CP 113 முழு நேர நியாய விலைக் கடை 67 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால் மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க நேர்வு எழவில்லை.

94—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 16836—திரு. அ. பிரபு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், வாழவந்தான்குப்பம் ஊராட்சியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி மற்றும் வட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், திம்மலை முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து 263 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு, வாழவந்தான்குப்பம் ஊராட்சியில் 1–6–1994 முதல் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், அதே பகுதியில் மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

95—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 16837—திரு. அ. பிரபு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், அசகளத்தூர் ஊராட்சியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி மற்றும் வட்டம், அசகளத்தூர் முழு நேர நியாய விலைக் கடையிலிருந்த 721 குடும்ப அட்டைகளிலிருந்து 297 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு, அசகளத்தூர் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை பாரதியார் மகளிர் மன்றக் கட்டடத்தில் எற்கெனவே செயல்பட்டு வருவதால், அதே ஊராட்சியில் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

96—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 16841—திரு. அ. பிரபு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், கண்டாச்சிமங்கலம், ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், ஐஐ 697 கொங்கராயப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கண்டாச்சிமங்கலம் முழு நேர நியாய விலைக் கடை 594 குடும்ப அட்டைகளுடன் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசுக்

கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், கண்டாச்சிமங்கலம் முழு நேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

97—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 16843—திரு. அ. பிரபு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், அந்தியூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், அந்தியூர் ஊராட்சியில் 1.1.614 குண்ணியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் அந்தியூர் பகுதிநேர நியாய விலைக் கடை 391 குடும்ப அட்டைகளுடன் மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்தில் செயல்பட்டுவருகிறது. எனவே, அந்தியூர் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு மேலுமொரு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

98—

கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 16861—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் அமைந்துள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் சரகம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீமுஷ்ணம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கமானது நகரின் முக்கியப் பகுதியில் சங்கத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. இச்சங்கத்திற்குத் தேவையான தான்ய ஈட்டுக்கிடங்கு 100 மெட்ரிக் டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே, நபார்டு நிதி உதவியுடன் உரக் கிடங்கு 100 மெட்ரிக் டன் கொள்ளளவில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

எனவே, ஸ்ரீமுஷ்ணம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிதாக கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

99—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 17377—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மருதக்குடியில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் வட்டாரத்தில், ட்டி.1679 திருமலைசமுத்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் AP064 *மருதகுடி முழு நேர நியாய விலைக் கடை 282 குடும்ப அட்டைகளுடன் 1994–95 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசுக்*

கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட நியாய விலைக் கடை கட்டடத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட இடம் சங்கத்திடம் இல்லாத காரணத்தால், மேற்படி மருதகுடி நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

100—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 17792—திரு. அ. பிரபு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், ஈரியூர் மற்றும் நல்ல சேவிபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி மற்றும் வட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், ஐ.ஐ.626 கருங்குளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஈரியூர் முழுநேர நியாய விலைக் கடை 603 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் நல்லசேவிபுரத்தைச் சேர்ந்த 58 குடும்ப அட்டைகளும் ஈரியூர் முழு நேர நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் நல்லசேவிபுரம் பகுதியில் 58 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், நல்லசேவிபுரத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

2018 ஜூலை 9]

101—

நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டுதல்

வினா எண் 19392—திரு. அ. பிரபு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பொற்படாக்குறிச்சி ஊராட்சியில் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டாரத்தில், I.199 தென்கீரனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் பொற்படாக்குறிச்சி முழுநேர நியாய விலைக் கடை 488 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டுவருகிறது. மேலும், பொற்படாக்குறிச்சி (காட்டுக்கொட்டாய்) பகுதிநேர நியாய விலைக் கடை 295 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டுவருகிறது. இந்நியாய விலைக் கடைக்கு 2016–2017 ஆம் ஆண்டுக்கு கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

102—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 19395—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியம், நெடுமரம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஒன்றியம், நெடுமரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் நெடுமரம் முழுநேர நியாய விலைக் கடை 564 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. எனவே, மேலும் ஒரு நியாய விலைக் கடை நெடுமரம் கிராமத்தில் அமைக்க நேர்வு எழவில்லை.

103—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 19422—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்தி-வேலூர் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், குன்னமலை ஊராட்சி, இரும்புபாலம் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் வட்டம் 6041 குன்னமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 08DP032PN குன்னமலை முழுநேர நியாய விலைக் கடை 693 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் இரும்புபாலம் பகுதியைச் சேர்ந்த 75 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் இரும்புபாலம் பகுதியில் 75 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், இரும்புபாலம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2018 ஜூலை 9]

104—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 19423—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்தி–வேலூர் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மேல்சாத்தம்பூர் ஊராட்சி, A.ராசாம்பாளையத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் வட்டம் எஸ்.887 கூடச்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 08DP025PY கூடச்சேரி முழுநேர நியாய விலைக் கடை 545 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் A. ராசாம்பாளையம் பகுதியைச் சேர்ந்த 63 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும்.

அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் A. ராசாம்பாளையம் பகுதியில் 63 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் A.ராசாம்பாளையம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியகூறுகள் இல்லை.

105—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 19424—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

பரமத்தி-வேலூர் தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பிலிக்கல்பாளையம் ஊராட்சி, சாணார்பாளையத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் வட்டம் எஸ்.288 பிலிக்கல்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் சாணார்பாளையம், முழுநேர நியாய விலைக் கடை 722 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவருகிறது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் சாணார்பாளையம் பகுதியைச் சேர்ந்த 214 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும்.

அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் தாய் அங்காடிக்கும் இடையே குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். ஆனால், தாய்க் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் சாணார்பாளையம் பகுதிக்கும் 0.5 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், சாணார்பாளையம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியகூறுகள் இல்லை.

106—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 20791—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், திருநாகேஸ்வரம் சங்கத்தைச் சார்ந்த சன்னாபுரம் முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், கும்பகோணம் தாலுகா, திருநாகேஸ்வரம் பேரூராட்சி பகுதியில் இசட்.819 திருநாகேஸ்வரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக்

2018 ஜூலை 9]

கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் DD093 *சன்னாபுரம் முழுநேர நியாய விலைக் கடை 928 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, திருநாகேஸ்வரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால், சன்னாபுரம் முழுநேர நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

107—

நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 20795—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், திருப்புறம்பியம் சங்கத்தைச் சார்ந்த மூப்ப கோயில், கொ.தட்டுமால் ஆகிய பகுதிகளிலுள்ள முழுநேர நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கும்பகோணம் வட்டாரத்தில், ட்டி.1022 திருப்புறம்பியம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் DD059 *மூப்ப கோயில் முழுநேர நியாய விலைக் கடை 681 குடும்ப அட்டைகளுடனும்,* DD067 *கொத்தங்குடி தட்டுமால் முழுநேர நியாய விலைக் கடை 219 குடும்ப அட்டைகளுடனும் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மேற்படி, ட்டி.1022 திருப்புறம்பியம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் இடம் இல்லாததால், மூப்ப கோயில் மற்றும்* DD067 *கொத்தங்குடி தட்டுமால் முழுநேர நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

108—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 20810—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், சின்னக்கருப்பூர், சின்னக்கருப்பூர்–3 நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், கும்பகோணம் தாலுகா, கும்பகோணம் பேரூராட்சி பகுதியில் ஒகே.878 சின்னக்கருப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் DD0145 சின்னக்கருப்பூர்–3 முழுநேர நியாய விலைக் கடை 693 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, சின்னக்கருப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால், சின்னக்கருப்பூர்–3 முழுநேர நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

109—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 20813—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தாராசுரத்தில் இயங்கும் தாராசுரம்–6 நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம் மற்றும் தாலுகா, இசட் 307 தாராசுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் DD0156 தாராசுரம் கடை எண் 6 முழுநேர நியாய விலைக் கடை 776 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

2018 ஜூலை 9]

தாராசுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால், மேற்படி முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

110—

நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 20815—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், சோழபுரம்–1 மற்றும் சோழபுரம்–2 ஆகிய நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம் மற்றும் தாலுகா, இசட்.825 சோழபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் DE045 *சோழபுரம்–1 முழுநேர நியாய விலைக் கடை 1,083 குடும்ப அட்டைகளுடன்,* DE0131 *சோழபுரம்–2 முழுநேர நியாய விலைக் கடை 708 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. சோழபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால், மேற்படி முழுநேர நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

111—

கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி துவங்குதல்

வினா எண் 22635—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குளச்சலில் கூட்டுறவு பயிற்சி கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், நாகர்கோவிலில் ஒரு கூட்டுறவு மேலாண்மை நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே மாவட்டத்தில் குளச்சலில் தனியாக கூட்டுறவு பயிற்சி கல்லூரி துவங்குவதற்கான அவசியம் தற்போது எழவில்லை.

112—

கூட்டுறவு வங்கி கிளைகள் தொடங்குதல்

வினா எண் 22793—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, மேல்சோழங்குப்பம், ஜமுனாமருதூர் (ஜவ்வாதுமலை) பகுதிகளில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மத்திய கூட்டுறவு வங்கியின் கலசப்பாக்கம் கிளை, மேல்சோழங்குப்பம் பகுதியிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்கலசப்பாக்கம் கிளை 8 இணைப்புச் சங்கங்களுக்கு தேவையான நிதியுதவி அளித்து அப்பகுதியில் உள்ள மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது. மேல்சோழங்குப்பத்தில் புதிய கிளை துவங்கினால், ஏற்கெனவே செயல்பட்டு வரும் கலசப்பாக்கம் கிளையில் உள்ள வைப்புத் தொகை மற்றும் கடன் நிலுவை புதிய கிளைக்கு மாற வாய்ப்புள்ளதால், மேற்படி இரண்டு கிளைகளும் வாழ்திறனை (viable) இழக்க நேரிடும். எனவே, மேல்சோழங்குப்பத்தில் திருவண்ணாமலை மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கிளை அமைக்க சாத்தியமில்லை.

2018 ஜூலை 9]

திருவண்ணாமலை மத்திய கூட்டுறவு வங்கியின் போளூர் கிளை ஜமுனாமருதூர் (ஜவ்வாதுமலை) பகுதியிலிருந்து 42 கி.மீ. தொலைவில் உ.ள்ளது. இப்பகுதியில் இந்தியன் வங்கி மட்டுமே செயல்பட்டு வருகிறது. அதிக மலைவாழ் மக்கள் தொகை கொண்டுள்ள ஜமுனாமருதூர் (ஜவ்வாதுமலை) பகுதியில் கிளை துவங்கினால் 272 குக்கிராமங்கள் பயனடையும் மற்றும் ரூ.200 இலட்சம் (தோராயமாக) வைப்புத் தொகையாக திரட்ட இயலும். இப்பகுதியில் உள்ள மக்களுக்கு மிக அருகிலேயே அனைத்து நவீன வங்கி சேவைகளையும், அதிக அளவில் கடன்களையும் வழங்கி, ஜமுனாமருதூர் (ஜவ்வாதுமலை) கிளை திறம்பட செயல்பட வாய்ப்புள்ளது. எனவே, ஜமுனாமருதூர் (ஜவ்வாதுமலை) திருவண்ணாமலையில் மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கிளை துவக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

113—

பகுதிநேர நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம்

வினா எண் 23451—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலாங்காடு ஊராட்சி ஒன்றியம், பெரியகளக்காட்டூர் ஊராட்சி, 3–வது வார்டில் உள்ள பகுதிநேர நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலாங்காடு ஊராட்சி ஒன்றியம், பெரியகளக்காட்டூர் ஊராட்சியில், பெரியகளக்காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் பெரியகளக்காட்டூர் முழுநேர நியாய விலைக் கடை 643 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் இணைக்கப்பட்ட பெரியகளக்காட்டூர் 3–வது வார்டில் உள்ள 172 குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒரு நாள் மட்டும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

பெரியகளக்காட்டூர் ஊராட்சி, 3–வது வார்டில் அரசு அனுமதியுடன் பகுதிநேர நியாய விலைக் கடை ஏதும் செயல்படாத நிலையில், புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகளில்லை.

114—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 24521—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், ராமபுரம் ஊராட்சி, துண்டக்கட்டளையில் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், ராமபுரம் ஊராட்சி, மன்னார்குடி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கட்டுப்பாட்டிலுள்ள துண்டக்கட்டளைப் பகுதியில் நியாய விலைக் கடை ஏதும் செயல்படவில்லை. எனவே, துண்டக்கட்டளைப் பகுதியில் சொந்தக் கட்டடம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

115—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 25079—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், சுப்பிரமணியபுரம் ஊராட்சி, கூகனூர் குடியிருப்பில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட அறந்தாங்கி வட்டாரத்தில் அரசர்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கூகனூர் குடியிருப்பு பகுதிநேர நியாய விலைக் கடை 174 குடும்ப அட்டைகளுடன் இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, அரசர்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த இடம் மற்றும் போதிய நிதிவசதி இல்லாததால் கூகனூர் குடியிருப்பு பகுதிநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

116—

நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 25081—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஏகப்பெருமாளூர் ஊராட்சி, வெள்ளாட்டுமங்கலம் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட அறந்தாங்கி வட்டாரத்தில், அறந்தாங்கி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில், வெள்ளாட்டுமங்கலம் பகுதிநேர நியாய விலைக் கடை 135 குடும்ப அட்டைகளுடன் இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், அறந்தாங்கி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால் வெள்ளாட்டுமங்கலம் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

117—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 25759—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஊராட்சி ஒன்றியம், நாகலாம்பட்டு ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், நாகலாம்பட்டு ஊராட்சி, இ.1564 செஞ்சி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கட்டுப்பாட்டில், நாகலாம்பட்டு முழுநேர நியாய விலைக் கடை 329 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மேலும், ஒரு நியாய விலைக் கடையை நாகலாம்பட்டு ஊராட்சியில் அமைத்திட நேர்வு எழவில்லை.

118—

புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 27424—திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், அகதாபட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, அகதாபட்டி பேரூராட்சி, சுந்தரபாண்டியம் ஸ்ரீராஜகோபாலன்

2018 ஜூலை 9]

கூட்டுறவுப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் சுந்தரபாண்டியம்–3 என்ற முழுநேர நியாய விலைக் கடை 625 குடும்ப அட்டைகளுடன் 11–1–1987 முதல் அகதாபட்டியில் செயல்பட்டு வரும் நிலையில், புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க நேர்வு எழவில்லை.

119—

நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம்

வினா எண் 27426—திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சி, மேலப்பாளையம் 17–வது வார்டிலுள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சி, மேலப்பாளையம் 17–வது வார்டில் வத்ராப் கடை எண் 5 முழுநேர நியாய விலைக் கடை வத்ராப் கூட்டுறவுப் பண்டகசாலை கட்டுப்பாட்டில் 627 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி வத்ராப் கூட்டுறவுப் பண்டகசாலையில் சொந்த இடம் மற்றும் கட்டடம் கட்ட நிதிவசதி இல்லை. எனவே, மேலப்பாளையம் 17–வது வார்டில் உள்ள வத்ராப் கடை எண் 5 முழுநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

120—

நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம்

வினா எண் 27952—திரு. பி. முருகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார் அக்ரஹாரம் ஊராட்சி, கோனேரி அக்ரஹாரம் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் வட்டம், இராயக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கோனேரி அக்ரஹாரம் பகுதிநேர நியாய விலைக் கடை 230 குடும்ப அட்டைகளுடன் வாடகையில்லா இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், கோனேரி அக்ரஹாரம் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

121—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 27956—திரு. பி. முருகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கொப்பக்கரை ஊராட்சி, கனவாய் ஊர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் வட்டம், கெலமங்கலம் கொப்பக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் சூளகுண்டா முழுநேர நியாய விலைக் கடை 505 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து 104 குடும்ப அட்டைகளைப் பிரித்து கனவாய் ஊர்ப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 23–2–2018 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, அதே பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

2018 ஜூலை 9]

122—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 27966—திரு. பி. முருகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, நாகமங்கலம் ஊராட்சி, கடூர் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் வட்டம், கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் நாகமங்கலம் முழுநேர நியாய விலைக் கடை 401 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை கோரும் கடூர் கிராமத்தைச் சேர்ந்த 120 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாயவிலைக் கடை கோரும் மலைப் பகுதியில் குறைந்தபட்சம் 100 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின் தாய் நியாய விலைக் கடையில் 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 281 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் கடூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

123—

துணைமின் நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 114—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், விண்டர்பெட் 30 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விண்டர்பெட் கிராமத்தில் இயங்கி வரும் 33 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 110 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையமாக மாற்றி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

124—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 153—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், முன்னவாசல் கோட்டையில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், முன்னவாசல் கோட்டை கிராமப் பகுதிகளுக்கு முன்னவாசல் கோட்டை SS IV 100 KVA *மின்மாற்றி வாயிலாக மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.*

125—

விலையில்லா எரிபொருள் வழங்குதல்

வினா எண் 296—திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) கீழ்வேளூர் தொகுதி, காவேரி டெல்டா கடைமடை பகுதியில் விவசாயத்திற்கு விசை பம்புமூலம் நீர் இறைப்பதற்கு மின்சாரம் அல்லது எரிபொருள் விலையில்லாமல் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 31–3–2016 அன்றுள்ளபடி தமிழகத்தில் 3,89,769 விவசாய விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. கீழ்வேளூர் தொகுதியை கொண்டுள்ள நாகை மாவட்டத்தில் 4,867 விவசாய விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் ஆண்டுதோறும் புதிய விவசாய மின் இணைப்புகள் விண்ணப்ப பதிவு மூப்பு அடிப்படையில் மாவட்ட வாரியாக அளிக்கப்பட்டு வருகிறது.

126—

மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றுதல்

வினா எண் 307—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதியில், மேலே செல்லும் மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதியில் உள்ள பகுதிகள், நகராட்சியின்கீழ் உள்ளதால், மின் கம்பிகளை புதை வடங்களாக மாற்றி அமைப்பதற்கு அரசு நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

127—

உயரழுத்த மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 660—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி காந்தி நகர் காலனியில் உயரழுத்த மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி காந்தி நகர் காலனிக்கு மூலக்கரைப்பட்டி XVIII 100 KVA மின்மாற்றியிலிருந்து சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது காந்தி நகர் காலனியில் குறைந்த மின்னழுத்தம் ஏதுமில்லை.

128—

கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 787—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் வட்டம், மாடம்பாக்கம் பேரூராட்சி 11—வது வார்டு பகுதியில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், மாடம்பாக்கம் பேரூராட்சி பகுதிக்கு இரண்டு 250 கே.வி.ஏ. மின்மாற்றிகள் மற்றும் 100 கே.வி.ஏ.

2018 ஜூலை 9]

மின்மாற்றிகள் வழியாக சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

129—

கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 788—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் வட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சி, சி.வி.ராமன் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சி, சி.வி. ராமன் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு 2 எண்ணிக்கை 100 கே.வி.ஏ. மற்றும் 2 எண்ணிக்கை 250 கே.வி.ஏ. ஆகிய 4 எண்ணிக்கை மின்மாற்றிகள் வழியாக மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

130—

துணை மின் நிலையத்தை செயல்படுத்துதல்

வினா எண் 790—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் வட்டம், சிட்லபாக்கம் பகுதி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் உள்ள துணை மின் நிலையத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தாம்பரம் வட்டம், சிட்லபாக்கத்தில் ஒரு புதிய துணை மின் நிலையம் 3–3–2016 அன்று நிறுவப்பட்டது.

131—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 797—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கேதையறும்பு மற்றும் கொத்தையத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது, கேதையறும்பு மற்றும் கொத்தையம் பகுதிகளில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கண்டறியப்பட்டு, நிலம் கையகப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

132—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 1221—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

ஆலங்குடி தொகுதி, அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

133—

மின் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 1227—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வக்கோட்டையிலுள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி மின் பொறியாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டையில் உள்ள கந்தர்வக்கோட்டை உதவி மின் பொறியாளர்/கிழக்கு பிரிவு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு தயாராக உள்ளது. சொந்த நிலம் இல்லாத காரணத்தால் மற்ற உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி மின் பொறியாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட கருத்துரு தற்போது ஏதுமில்லை.

134—

மின் கம்பிகளைச் சீரமைத்தல்

வினா எண் 1573—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, அண்ணா நகர், திடீர் நகர் பகுதிகளில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருவெறும்பூர் தொகுதி, அண்ணா நகர், திடீர் நகர் பகுதிகளில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை சீரமைக்க மின் வாரியம் ஆவன செய்யும்.

135—

சீரான மின்சாரம் வழங்குதல்

வினா எண் 1574—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, வீதிவடங்கம் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருவெறும்பூர் தொகுதி, வீதிவடங்கம் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க மின் வாரியம் ஆவன செய்யும்.

136—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 1599—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, கொடிவயல் ஊராட்சி, மணிவிளான்வயல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, கொடிவயல் ஊராட்சி, கொடிவயலில் 100 கே.வி./11 கி.வோ. மின்மாற்றி ஒன்று இயக்கத்தில் உள்ளது. மேற்படி மின்மாற்றிமூலம் மணிவிளான்வயல் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

137—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 2052—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் நகராட்சி, வார்டு 8–ல் காந்திசாலை காவல் நிலையம் அருகில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் நகர் பகுதிக்குட்பட்ட காந்தி ரோடு பகுதிக்கு தற்பொழுது காந்தி ரோடு SS 250 KVA மின்மாற்றியிலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றன.

138—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 2059—திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சுழி தொகுதி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், நாலூர் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தில் நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், நாலூர் கிராமத்திற்கு 100 கே.வி.ஏ. மின்மாற்றிமூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மின்மாற்றியில் விவசாய மின் இணைப்பு மற்றும் வீட்டு மின் இணைப்பு ஆகியவை மொத்தம் 117 HP மின்பளு உள்ளது.

139—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 2060—திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சுழி தொகுதி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரிய சோழன்டி மற்றும் கீழ்க்கள்ளக்காரி கிராமங்களில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தில் பெரிய சோழன்டி கிராமத்தில் 25 கே.வி.ஏ. மின்மாற்றி உள்ளது. குடிநீர் மின் இணைப்புக்கு 15 எச்.பி. மின்பளுவும், வீட்டு மின் இணைப்பு 8 கி.வாட். மின்பளு உள்ளது. எனவே, 25 கே.வி.ஏ. மின்மாற்றியை அதிக திறன் கொண்ட 100 கே.வி.ஏ. மின்மாற்றியாக மாற்றுவதற்கு மதிப்பீடு தயார் செய்து உரிய அனுமதி பெறப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் மின்மாற்றி அமைக்கப்படும்.

140—

புதிய மின்மாற்றிகள் அமைத்தல்

வினா எண் 2533—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், மன்னவனூர் ஊராட்சி, கீழானவயல் கிராமம் மற்றும் பெரியூர் ஊராட்சியிலுள்ள நல்லூர்காட்டில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதி, கொடைக்கானல் பகுதியில், (1) மன்னவனூர் ஊராட்சியில், கீழானவயல் கிராமத்திற்கு மன்னவனூர் மின்மாற்றி எண் 4–ல் உள்ள 100 கே.வி.ஏ.மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இக்கிராமத்தில் 108 வீட்டு மின் இணைப்புகள் உள்ளன. அதன் மொத்த மின்பளு 34 கிலோ வாட் ஆகும். தற்போது இக்கிராமத்தில் மின்னழுத்த குறைபாடு ஏதும் இல்லை.

(2) கொடைக்கானல் பெரியூர் ஊராட்சியில் உள்ள நல்லூர்காட்டில் உள்ள 49 குடியிருப்புகளுக்கு கே.சி. பட்டி 100 கே.வி.ஏ. மின்மாற்றிமூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

141—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 2535—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், காமலூர் ஊராட்சி, கொடலங்காட்டில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதி, கொடைக்கானல் காமலூர் ஊராட்சியில் உள்ள கொடலங்காட்டிற்கு குப்பம்மாள்பட்டி

மின்மாற்றிமூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மின்மாற்றிமூலம் இக்கிராமத்தில் உள்ள 70 வீடுகளுக்கு வீட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் மொத்த மின்பளு 42 கிலோ வாட் ஆகும்.

142—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 4163—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் பெருநகராட்சி, 19–வது வார்டு, அன்னை நகர், ராஜேஸ்வரி நகர் மற்றும் ஸ்ரீராம் நகரில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் 19–வது வார்டு, அன்னை நகர் பகுதிக்கு ஏற்கெனவே ஒரு 500 கே.வி.ஏ. மின்மாற்றி வழியாகவும், ராஜேஸ்வரி நகர் பகுதிக்கு மின்மாற்றிகள் (100 கே.வி.ஏ.–2, 250 கே.வி.ஏ.–2) வழியாகவும், ராம் நகர் பகுதிக்கு 5 மின்மாற்றிகள் (100 கே.வி.ஏ.–1, 250 கே.வி.ஏ.–4) வழியாகவும், சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது உள்ள மின்மாற்றிகள் திறனே அப்பகுதிக்கு போதுமானதாக உள்ளதால், புதிய மின்மாற்றி அமைக்கும் அவசியம் எழவில்லை.

143—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 5945—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், அரசநகரி ஊராட்சியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், அரசநகரி ஊராட்சியில் ஏற்கெனவே 25 எண்ணம் மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கூடுதலாக அரசநகரில் புதிய அரசநகரிபட்டினம் மின்மாற்றி எஸ்.எஸ்.26, 100 கே.வி.ஏ./11 கி.வோ. அமைத்து 6–5–2017 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளது.

144—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 5946—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாட்டியகுடி ஊராட்சி, மைனாக்குடியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாட்டியகுடி ஊராட்சி, மைனாக்குடிக்கு கருப்பூர் மின்மாற்றி 100 கே.வி.ஏ./11 கே.வி.–யிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அம்மின்மாற்றியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் இணைப்பு 3 எண்ணம் 17.5 எச்.பி–ம், வீட்டு மின் இணைப்பு 150 எண்ணம் 60 கிலோ வாட்டும் உள்ளன. மேலும், இக்கிராமம் மின்மாற்றியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால், ஒரு முனை இருகம்பிகள் வாயிலாக செய்யப்பட்டு வரும் மின் விநியோகத்தை மாற்றி, இரு முனை மூன்று கம்பிகள் தாழ்வழுத்த மின்பாதை அமைத்து இரு முனை மின்பாதை வாயிலாக மின் இணைப்புகள் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொண்டு, மேற்படி பணிகள் 30–9–2016 அன்று முடிக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2018 ஜூலை 9*

145—

மின்மாற்றியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 6244—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், கீழமாளிகை ஊராட்சியின் கிழக்கு பகுதியில் உள்ள 63 கே.வி.ஏ. மின்மாற்றியை 110 கே.வி.ஏ. ஆகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், கீழமாளிகை ஊராட்சியின் கிழக்கு பகுதியில் உள்ள கீழமாளிகை மின்மாற்றியின் தரம் 63 கே.வி.ஏ.–யிலிருந்து 110 கே.வி.ஏ. ஆக 24–8–2016 அன்று உயர்த்தப்பட்டது.

146—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 6366—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், ஏம்பல் ஊராட்சி, விசூர் தெற்கு கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், ஏம்பல் ஊராட்சி, விசூர் தெற்கு கிராமத்திற்கு போற்கொடி மின்மாற்றி II *63 கே.வி.ஏ./11 கே.வி.ஏ.–யிலிருந்து மின்சாரம்*

2018 ஜூலை 9]

வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் 2 மேல்நிலை குடிநீர்த் தொட்டி மற்றும் 4 விவசாய மின் இணைப்பு மற்றும் 120 வீட்டு மின் இணைப்பு ஆக மொத்தம் மின்பளு 30 HP + 50 KV *இணைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட போற்கொடி மின்மாற்றி* II *63 கே.வி.ஏ./11 கே.வி.ஏ.–யிலிருந்து 100 கே.வி.ஏ./11 கே.வி. மின்மாற்றியாக தரம் உயர்த்தி மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

147—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 6777—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம், கிடங்கூர் மற்றும் இளஞ்சியமங்கலம் ஆகிய கிராமப் பகுதிகளில் புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, திருவாடனை வட்டம், பாகனூர் ஊராட்சி, கிடங்கூர் மற்றும் இளஞ்சியமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு தற்போது மணலூர் 100 கே.வி.ஏ. திறன் கொண்ட எஸ்.எல்.1 மின்மாற்றியின்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

148—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 7207—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, ஏ. வல்லாளப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஏ. வல்லாளப்பட்டியில் இருந்து சுமார் 5.5 கி.மீ. தொலைவில் உள்ள மாங்குளம் என்ற பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாங்குளம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டவுடன், ஏ. வல்லாளப்பட்டி பகுதிக்கு புதியதாக நிறுவப்படவுள்ள துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்படும். மேலும், ஏ. வல்லாளப்பட்டி பகுதியின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய புதிதாக நிறுவப்படும் மாங்குளம் துணை மின் நிலையமே போதுமானதாகும். எனவே, ஏ. வல்லாளப்பட்டியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

149—

மின்மாற்றிகளை சீரமைத்தல்

வினா எண் 7213—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் பழுதடைந்துள்ள மின்மாற்றிகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

1–4–2016 முதல் இந்நாள் வரையில் கொட்டாம்பட்டியில் ஏழு எண்ணம் (100 கே.வி.ஏ. 7 எண்ணம்) மின்மாற்றிகள் பழுதடைந்ததை உடனடியாக மாற்றி அமைக்கப்பட்டது.

150—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 9906—திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) திட்டக்குடி தொகுதி, கழுதூர் ஊராட்சியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி தொகுதி, கழுதூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 15 மின்மாற்றிகள் (250 கே.வி.ஏ./11 கே.வி.–1 எண்ணிக்கை, 100 கே.வி.ஏ./11 கே.வி.–12 எண்ணிக்கை, 63 கே.வி.ஏ./11 கே.வி.–2 எண்ணிக்கை) நிறுவப்பட்டு சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

151—

மின் கம்பிகளை புதை வடங்களாக மாற்றுதல்

வினா எண் 12855—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரில் செல்வம் திரையரங்கம் முதல் ஆடவர் கல்லூரி வரை மேலே செல்லும் மின் கம்பிகளை பூமிக்கடியில் புதை வடங்களாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரில் மகாமகத் திருவிழாவின்போது செல்வம் திரையரங்கம் முதல் ஆடவர் கல்லூரி வரை மேலே செல்லும் மின் கம்பிகள் புதிய கம்பிகள் கொண்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் தேவைப்படின் மேலே செல்லும் மின் கம்பிகள் பூமிக்கடியில் புதை வடங்களாக மாற்றி அமைக்கப்படும்.

152—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 13130—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி வெங்கடேசபுரம் MKN நகரில் 100 கே.வி.ஏ. திறன் கொண்ட புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, வெங்கடேசபுரம் MKN நகரில் ஏற்கெனவே வெங்கடேசபுரம் SS 250 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

153—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 16323—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி, திருமலைநகர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி, திருமலைநகர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

2018 ஜூலை 9]

154—

குளம் புனரமைத்தல்

வினா எண் 12—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, இராயநல்லூர் ஊராட்சி ஆதி திராவிடர் பகுதியில் அமைந்துள்ள குளத்தினை புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, இராயநல்லூர் ஊராட்சி, ஆதி திராவிடர் பகுதியில் அமைந்துள்ள குளத்தினை புனரமைக்கும் பணி 2016–2017 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் ஒன்றிய பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

155—

பாலம் அமைத்தல்

வினா எண் 23—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காட்டுப்பாளையம் ஊராட்சியிலிருந்து மேல்காட்டுப்பாளையம் கிராமத்திற்கு செல்லும் வழியில் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி, ஒன்றியத்தை சேர்ந்த பெரியகாட்டுப்பாளையம் ஊராட்சியில் பெரியகாட்டுப்பாளையம் முதல் சின்ன காட்டுப்பாளையம் வரை

செல்லும் பாதையில் பாலம் அமைக்க போதிய நிதி இல்லாததால் தற்போது அமைக்க இயலாது.

156—

தரைப்பாலம் அமைத்தல்

வினா எண் 24—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதியிலுள்ள செம்மேடு மற்றும் தாழம்பட்டு ஆகிய ஊராட்சிகளுக்கு இடையே தரைப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த செம்மேடு முதல் தாழம்பட்டு வரையில் தரைப்பாலம் அமைக்க போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் தரைப்பாலம் தற்போது அமைத்திட இயலாது.

157—

உயர்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 37—திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, மாத்தூர்–ஒற்றைவீடு கிராமங்களுக்கு இடையே குடமுருட்டி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் ஒன்றியம், ஒற்றைவீடு கிராமத்திற்கும் மாத்தூருக்கும் இடையே செல்ல குடமுருட்டி ஆற்றின் குறுக்கே 280 மீ. உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு ரூ.5.5 கோடி நிதி தேவைப்படுகிறது. தற்போது போதிய நிதி வசதி இல்லாததால் மேற்குறித்த பணியினை செய்திட இயலவில்லை.

158—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 157—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் நிதி நிறுவனங்களிடமிருந்து உரிய தொகை பெற்று மேல் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

159—

வாய்க்கால்களைத் தூர்வாருதல்

வினா எண் 160—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2018 ஜூலை 9*

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரத்திலுள்ள சட்டுருட்டி வாய்க்கால் ஆக்கிரமிப்பை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி நகராட்சியில், மன்னார்குடி–மதுக்கூர் சாலையில் பிளாக் எண் 58–ல் ஆரம்பிக்கும் சட்டுருட்டி வாய்க்கால், கடந்த ஆண்டு, மன்னார்குடி நகராட்சியின் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் இயந்திரங்கள்மூலம் ரூ.78,000/– செலவிலும், ரூ.5.00 இலட்சத்திற்கு மன்னார்குடி ரோட்டரி சங்கம், மன்னார்குடி லயன்ஸ் சங்கம் மற்றும் மன்னார்குடி ஜேசிஸ் ஆகிய தொண்டு நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று, செயின் டோசர் மற்றும் டிப்பர் லாரிகள்மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு தூர்வாரப்பட்டது. மேலும், மேற்கண்ட வாய்க்காலில் ஏற்படும் அடைப்புகள், நகராட்சிப் பணியிளார்கள்மூலம் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வருவதால் மழைநீர் தங்குதடையின்றி செல்கிறது.

160—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 163—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், 29 நெம்மேலி ஊராட்சி மேலநெம்மேலியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், மேலநெம்மேலி தெற்கு தெருவில் ஏற்கெனவே சமுதாயக் கூடம்

2018 ஜூலை 9]

கட்டப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, 29–நெம்மேலி ஊராட்சி மேலநெம்மேலியில் புதிதாக மற்றொரு சமுதாயக் கூடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

161—

பொது சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 164—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், இராமபுரம் ஊராட்சி, வாஞ்சியூரில் பொது சுகாதார வளாகம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், இராமபுரம் ஊராட்சிக்குட்பட்ட வாஞ்சியூர் பகுதியில் சாலை இரு பக்கத்திலும் வயல்வெளிகள் சூழ்ந்து இருப்பதால், பொது சுகாதார வளாகம் அமைத்திட அரசுக்கு சொந்தமான தகுதியான இடம் ஏதுமில்லை. மேலும், வாஞ்சியூர் பகுதியிலிருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள இராமபுரம் ஊராட்சியில் சுகாதார வளாகம் கட்டப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. அத்துடன் தனிநபர் இல்ல கழிப்பறை திட்டம் வாஞ்சியூர் பகுதியில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, வாஞ்சியூர் பகுதியில் பொது சுகாதார வளாகம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

162—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 167—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், சித்தேரி சோழநிதி அண்ணா நகர் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், சித்தேரி சோழநிதி அண்ணா நகர்—நெம்மேலி சாலையானது சீரமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

163—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 172—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், துளசேந்திரபுரம் மாரியம்மன் கோயில் அருகே சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், துளசேந்திரபுரம் ஊராட்சியில், ஏற்கெனவே சமுதாயக் கூடம் கட்டப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, துளசேந்திரபுரம் ஊராட்சியில், தற்போது மற்றொரு சமுதாயக் கூடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

2018 ஜூலை 9]

164—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 179—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், தென்பரை ஊராட்சி, வடக்கு தென்பரை மாரியம்மன் கோயில் அருகே சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், தென்பரை ஊராட்சியில், மாரியம்மன் கோயில் அருகில் சமுதாயக் கூடம் (200 மீட்டர் தொலைவில்) அரசால் கட்டப்பட்டு, தென்பரை ஊராட்சி பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, தென்பரை ஊராட்சியில் மாரியம்மன் கோயில் அருகில் புதிதாக மற்றொரு சமுதாயக் கூடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

165—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 190—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், மேலதளிக்கோட்டையில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், மேலதளிக்கோட்டையில் சமுதாயக் கூடம் கட்ட நிதியிருப்பு மற்றும் இதர வருவாய் இல்லை. எனவே, மேலதளிக்கோட்டையில் சமுாயக் கூடம் கட்ட வழிவகை இல்லை.

166—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 191—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், சோனாப்பேட்டை மேற்கில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், சோனாப்பேட்டை ஊராட்சியில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவதற்கு நிதியிருப்பு இல்லை. எனவே, சோனாப்பேட்டை மேற்கில் புதிய சமுதாயக் கூடம் கட்ட வழிவகை இல்லை.

167—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 192—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், ஆதனூரில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், ஆதனூர் ஊராட்சியின் பெரியார் நினைவு சமத்துவபுரத்தில்

2018 ஜூலை 9]

அனைத்து பகுதி மக்களும் பயன்பெறும் வகையில் 2002–2003 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட சமுதாயக் கூட கட்டடம் ஆதனூர் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, ஆதனூர் ஊராட்சியில் புதிய சமுதாயக் கூட கட்டடம் கட்டுவதற்கான அவசியம் இல்லை.

168—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 193—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், சித்தாம்பூர் ஊராட்சி, குடிதாங்கிச்சேரியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், சித்தாம்பூர் ஊராட்சி, குடிதாங்கிச்சேரியில் புதிய சமுதாயக் கூடம் கட்ட ஊராட்சியின் நிதியிருப்பு போதுமானதாக இல்லை. எனவே, புதிய சமுாயக் கூட கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

169—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 195—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆய்குடி ஊராட்சி, அகரப்பொதக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு சிறிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[*2018 ஜூலை 9*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆய்குடி ஊராட்சி, அகரப்பொதக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு அருகில் (50 அடி தூரம்) ஆய்குடி ஊராட்சி மன்ற அலுவலக வாயிலில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய்மூலம் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

170—

மகளிர் குழு கட்டடம் கட்டுதல்

வினா எண் 198—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அய்யம்பேட்டை ஊராட்சி, நத்தம் கிராமத்தில் மகளிர் குழு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், செட்டிச்சத்திரம், அய்யம்பேட்டை ஊராட்சியில் நத்தம் ஆதி திராவிட தெருவில் மகளிர் குழு கட்டடம் ஏற்கெனவே கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

171—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 200—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கோவில்வெண்ணி தெற்குத் தெருவில் 5,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கோவில்வெண்ணி தெற்கு தெருவில் திட்டானி பகுதியில் 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

172—

கலையரங்கம் கட்டுதல்

வினா எண் 201—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், காளஞ்சிமேடு ஊராட்சியில் கலையரங்கம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், காளஞ்சிமேடு ஊராட்சியின் மக்கட்தொகை 1,589 ஆகும். இவ்வூராட்சியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில் போதிய நிதியிருப்பு இல்லை. இதற்கென நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. மேலும், 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் கட்டிட உரிய நிதி இதர வருவாய் இனங்களிலும், நிதி ஒதுக்கீடாகவும் பெற இயலாத நிலையில், இவ்வூராட்சியில் புதிய கலையரங்கம் கட்டடம் கட்ட இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2018 ஜூலை 9

173—

உயர்மின் கோபுர விளக்குகள் அமைத்தல்

வினா எண் 207—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் உயர்மின் கோபுர (High Mast Light) விளக்குகள் அமைக்க அனுமதி வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து உயர் மின் கோபுர விளக்குகள் பொருத்திட அனுமதியில்லை.

174—

100 நாள் திட்ட நாட்களை உயர்த்துதல்

வினா எண் 208—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

100 நாள் வேலை திட்டத்தை (NREGS) 150 நாட்களாக உயர்த்தவும், பயனாளிகளுக்கு ஊதியத்தை நேரடியாக வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டு, அதனால் ஏற்பட்ட பாதிப்புகளின் அடிப்படையில், பேரிடர் மேலாண்மைத் துறையினரால் கள ஆய்வு செய்யப்பட்டு, வறட்சி குறித்த அறிவிப்பு

2018 ஜூலை 9]

*வெளியிடப்பட்டால், அதனடிப்படையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டு வரும் 100 நாட்கள் வேலைவாய்ப்பினை 150 நாட்களாக உயர்த்த மத்திய அரசிற்கு பரிந்துரை செய்யப்படும். மேலும், 1–4–2015 முதல் பொது நிதி மேலாண்மை முறை (*Public Financial Management System*) அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து தொழிலாளர்களின் ஊதியம் அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படுகிறது.*

175—

பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைந்து முடித்தல்

வினா எண் 209—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி நகராட்சி பகுதியில் தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ரூ.37.32 கோடியில் இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, சிப்பம்–1–ல் கழிவு நீர் குழாய் பதித்தல் மற்றும் பிரதான கழிவு நீரேற்று நிலையம் அமைத்தல் பணி, சிப்பம்–2–ல், 9.00 எம்.எல்.டி. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் பணி ஆகிய பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

176—

மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 213—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, சோக்காடி முதல் ஜம்பு ஊத்து வரை செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட சோக்காடி முதல் ஜம்பு ஊத்து வரை உள்ள சாலை மொத்த நீளம் 4.50 கி.மீ. ஆகும். இதில் ஒரு கிலோ மீட்டர் தூரம் சாலை ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3.50 கி.மீ மண் சாலையானது காப்புக் காட்டுப் பகுதியில் (*Reserve Forest*) அமைந்துள்ளது. ஆகவே, மேற்படி சாலையினை தார்ச் சாலையாக அமைக்க இயலாது.*

177—

பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 215—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் மக்கட்தொகை மற்றும் வெளியேறும் கழிவு நீர் அடிப்படையில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

2018 ஜூலை 9]

178—

பேரூராட்சியை தரம் உயர்த்துதல்

வினா எண் 224—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசபாக்கம் தொகுதி, புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியை முதல் நிலை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியின் ஆண்டு வருவாய் குறைவாக உள்ளதால் முதல் நிலை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

179—

வெண்ணாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்

வினா எண் 271—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீடாமங்கலம் பேரூராட்சி கிழக்கு பகுதி, ஒளிமதி ஊராட்சி, வைகளத்தூரை இணைக்க வெண்ணாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அனுமந்தபுரம் ஊராட்சி–கற்கோயில் மற்றும் வைகளத்தூர்

பகுதிகளை இணைக்கும் வகையில் வண்டிப்பாலம் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, ஒளிமதி ஊராட்சி வைகளத்தூரை நீடாமங்கலம் பேரூராட்சி கிழக்கு பகுதியில் இணைக்க வெண்ணாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

180—

ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

வினா எண் 272—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் சாலையுடன் காளஞ்சிமேடு ஊராட்சியை இணைக்க பாமணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், காளஞ்சிமேடு ஊராட்சியை கும்பகோணம்–அதிராம்பட்டினம் சாலையில் சீத்தாராமன் சாவடியில் பாமணி ஆற்றின் குறுக்கே காளஞ்சிமேடு நாவல்பூண்டி பகுதிகளை இணைக்கும் பாலம் கட்டும் பணி 2015–2016 ஆம் ஆண்டு பாரத பிரதமர் கிராம சாலைகள் திட்டம் (Phase II)–ன்கீழ் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

181—

பாலம் கட்டுதல்

வினா எண் 274—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், தெற்கு தென்பரை–பாலையூர் இடையே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சட்டமன்ற தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், தென்பரை ஊராட்சியில் தெற்கு தென்பரை–பாலையூர் இடையே வண்டிப்பாலம் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. தற்சமயம் புதிய பாலம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

182—

கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 340—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பாலாறு–பொறுந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் ஒட்டன்சத்திரம் தொகுதி, பாலாறு-பொறுந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பழுதடைந்த மின் மோட்டார்கள் மற்றும் குதிரையாறு மற்றும் சண்முகா நதி ஆற்றுப்படுகையில் சேதமடைந்த குழாய்களை பழுது நீக்கம் செய்யும் பொருட்டு, ரூ.16.50 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு அனைத்து குடியிருப்புகளுக்கும் விரைவில் குடிநீர் வழங்கப்படும்.

[2018 ஜூலை 9

183—

கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 348—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட்சிக்கு தனிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட்சிக்கென தனிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

184—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 349—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாங்குநேரி தொகுதி, பருத்திப்பாடு கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பருத்திப்பாடு கிராமத்தில் சமுதாய நலக் கூடம் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. மேலும், அக்கிராமத்தில் அரசு கட்டடம் கட்ட போதுமான இடவசதி இல்லை என்பதால் சமுதாய நலக் கூடம் கட்ட இயலாது.

185—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 359—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, ஆத்தூர் இருளர் காலனியில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, இருளர் காலனியின் மக்கட்தொகை சுமார் 172 ஆகும். இப்பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஏற்கெனவே உள்ளது.

186—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 360—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, ஆத்தூர் இருளர் காலனியில் 600 மீட்டர் சிமென்ட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, இருளர்

காலனியில் 600 மீட்டர் சிமெண்ட் சாலை அமைத்திட தற்போது வழிவகை இல்லை. வரும் காலத்தில் ஆத்தூர் ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நிதி நிலைமைக்கேற்பவும் இவ்வூராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் அவசியத்தின் அடிப்படையிலும் இப்பணியினை மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

187—

சுய உதவிக் குழு கட்டடத்தைச் சீரமைத்தல்

வினா எண் 361—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, ஆத்தூர் கிராமத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் கிராமத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தை 2016–2017 ஆம் நிதியாண்டில் ஒன்றிய பொது நிதி அல்லது ஊராட்சி பொது நிதி அல்லது தகுதியுள்ள வேறு திட்டங்களின்கீழ் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

188—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 363—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, கீழ்குப்பம் ஊராட்சி, மேட்டுக் காலனியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஒன்றியம், கீழ்குப்பம் ஊராட்சி, மேட்டுக் காலனியின் மக்கள் தொகை சுமார் 296 ஆகும். இப்பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஏற்கெனவே உள்ளது.

189—

மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 364—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரக்கோணம் தொகுதி, பின்னவரம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், பின்னவரம் ஊராட்சியைச் சேர்ந்த சேந்தமங்கலம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழு ஏற்கெனவே அரசுக்கு சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

190—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 368—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, பாலாஜி நகரில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தண்டலம் ஊராட்சியில் 11 குக்கிராமங்கள் உள்ளன. அங்குள்ள மொத்த மக்கட்தொகை 3,350 ஆகும். மேற்படி, தண்டலம் ஊராட்சியைச் சார்ந்த கே.ஆர்.பி. நகரில் வசிக்கும் பொது மக்களுக்காக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பாலாஜி நகர் எல்லையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு குடியிருப்புகளுக்கு மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 14–வது நிதிக் குழு மானியத்தில் ஒரு சிறு மின்விசை பம்பும், ஊரக உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின்கீழ் ஒரு மின்விசை பம்பும், பாலாஜி நகரில் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

191—

பாலாற்றுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 375—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சியில் பாலாற்றுக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட மக்களுக்கு பாலாற்றுக் குடிநீர் தமிழ்நாடு வடிகால் வாரியம்மூலம் ஆலந்தூர்–பல்லாவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தினசரி 9.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2018 ஜூலை 9]

192—

பசுமை வீடுகள் கட்டுதல்

வினா எண் 389—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, புதுப்பெருங்களத்தூரில் வசிக்கும் மலை ஜாதி இந்து இருளர் மக்களுக்கு பசுமை வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூராட்சிப் பகுதிகளில் பசுமை வீடுகள் திட்டம் 2016–2017 ஆம் ஆண்டில் செயல்படுத்தும்போது, புதுப்பெருங்களத்தூரில் வீடுகள் கட்டுவதற்குரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

193—

பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுதல்

வினா எண் 391—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடையநல்லூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் விரிவான

திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை மற்றும் உரிய நிதி ஆதாரம் பெறப்பட்டவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

194—

குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்துதல்

வினா எண் 392—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடையநல்லூர் தொகுதியில் புதிய குடிநீர்த் திட்டத்தினை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடையநல்லூர் தொகுதியில் போதிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு புதிய குடிநீர்த் திட்டங்கள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

195—

காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்

வினா எண் 462—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், நரசிங்கபுரம் மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து அதிராம்பட்டினத்திற்கு செல்ல நரசிங்கபுரம் நசுவினி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நரசிங்கபுரம் ஊராட்சியின் அருகே உள்ள கிராமங்களிலிருந்து அதிராம்பட்டினத்திற்கு செல்ல

2018 ஜூலை 9]

ஊராட்சி அலுவலகத்தையொட்டி கிழக்கு கடற்கரை சாலையில் (ECR) நசுவினி ஆற்றின் குறுக்கே பொதுப் பணித் துறையின்மூலம் கட்டப்பட்டுள்ள 85 மீட்டர் நீள பெரிய பாலம் தற்போது பயன்பாட்டில் உள்ளது.

196—

ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 490—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி, மானடிக்குப்பம் பழைய அம்மன் கோயில் அருகில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சியைச் சேர்ந்த மானடிக்குப்பம் கிராமத்தில் 30,000 லிட்டர், 60,000 லிட்டர் மற்றும் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. வல்லம் ஊராட்சியில் மொத்தம் 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இதன்மூலம் வல்லம் ஊராட்சி பகுதி மக்களுக்கு போதிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மானடிக்குப்பம் பழைய அம்மன் கோயில் அருகில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் அவசியம் எழவில்லை.

197—

ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 491—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மருங்கூர் ஊராட்சி, கீழ்க்கொல்லை கிழக்குத் தெருவில் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மருங்கூர் ஊராட்சி, கீழ்க்கொல்லை கிழக்கு தெருவிற்கு, கீழ்க்கொல்லை உதவிபெறும் தொடக்கப்பள்ளி அருகிலுள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் குளத்து மேட்டுப் பகுதி ஆழ்குழாய் கிணறு ஆகிய இரண்டு ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கீழ்க்கொல்லை கிழக்கு தெருவில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

198—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 499—திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், புறங்கனி ஊராட்சி, பெரிய புறங்கனி செட்டி தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், புறங்கனி ஊராட்சி, பெரிய புறங்கனி செட்டி தெருவில் 10 குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு சிறு மின்விசைப் பம்புமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பெரிய புறங்கனி செட்டி தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

2018 ஜூலை 9]

199—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 501—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், நடுகுப்பம் ஊராட்சி, நடுமேட்டுக்குப்பம் வடக்கு தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், நடுகுப்பம் ஊராட்சி, நடுமேட்டுக்குப்பம் கிராமத்தில் 143 குடும்பங்கள் உள்ளன. அங்குள்ள மக்கட்தொகை 691 ஆகும். அங்கு 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. எனவே, நடுமேட்டுக்குப்பம் வடக்கு தெருவில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

200—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 503—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பேர்பெரியான்குப்பம் ஊராட்சி, முத்தாண்டிகுப்பம் மாரியம்மன் கோயில் மற்றும் அங்காளம்மன் கோயில் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பேர்பெரியான்குப்பம் ஊராட்சியில் மொத்தம் 33

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், முத்தாண்டிக்குப்பம் கிராமத்தில் 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் உள்ளன. மேலும், முத்தாண்டிக்குப்பம் மாரியம்மன் கோயில் அருகில் 50 குடும்பங்களும் மற்றும் அங்காளம்மன் கோயில் அருகில் 10 குடும்பங்களும் வசித்து வருகின்றனர். அப்பகுதி மக்களுக்கு நேரடி குழாய்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

பட்டியல்–13

1—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 504—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி, மானடிக்குப்பம் முருகன் கோயில் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி, மானடிக்குப்பம் கிராமத்தில் 139 குடும்பங்கள் உள்ளன. அங்கு 30,000 லிட்டர், 60,000 லிட்டர் மற்றும் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. மேலும், வல்லம் ஊராட்சியில் மொத்தம் 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. எனவே, மானடிக்குப்பம் முருகன் கோயில் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

2—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 514—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*

2018 ஜூலை 9]

செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சி, பட்டிக்குப்பம் பிரதான சாலை முதல் மதுரை வீரன் கோயில் வரை சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சி, பட்டிக்குப்பம் பிரதான சாலை முதல் மதுரை வீரன் கோயில் வரை ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் நிதியிலிருந்து 1,100 மீட்டர் தூரம் வரையில் தார்ச் சாலை அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

3—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 550—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியம், இலுப்பந்தாங்கல் மற்றும் ராஜந்தாங்கல் கிராமங்களில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியம், இலுப்பந்தாங்கல் மற்றும் ராஜந்தாங்கல் கிராமங்களில் தாய் திட்டக் கணக்கெடுப்பின்படி

மொத்தம் உள்ள 16 தெருக்களில் 8 தெருக்கள் நல்ல நிலையில் உள்ளதெனவும், 3 தெருக்கள் பகுதி சேதமடைந்தும், 5 தெருக்கள் முழுவதும் சேதமடைந்தும் உள்ளன என்று கண்டறியப்பட்டு, 2012–2013 தாய் திட்டத்தின்கீழ் ராஜந்தாங்கலில் 6 சிமெண்ட் சாலைகள் ரூ.6,89,000/– மதிப்பீட்டிலும், இலுப்பந்தாங்கலில் 1 சிமெண்ட் சாலை ரூ.1,33,500/–மதிப்பீட்டிலும், அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன. பழுதடைந்த சாலைகள் இருப்பின் தாய் திட்டம் 2016–2017–ல் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

4—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 554—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், விருதுவளங்கினான் கிராமம் முதல் புனிதவெள்ளி கல்வாரி மலைக்கு செல்ல தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், விருதுவளங்கினான் கிராமம் முதல் புனிதவெள்ளி கல்வாரி மலைக்கு செல்லும் சாலையானது ஊராட்சி ஒன்றிய சாலை பதிவேட்டில் இல்லை. இருப்பினும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் 2016–2017–ல் முன்னுரிமை அடிப்படையில் மேற்காணும் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 602—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*

2018 ஜூலை 9]

செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு தற்போது பயனில் உள்ள 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் தனிவிசைத் திட்டங்கள்மூலம் நாங்குநேரி தொகுதியிலுள்ள பேரூராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதமும், 527 ஊரகக் குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

6—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 609—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, கொங்கந்தான்பாறை ஊராட்சியிலுள்ள காமராஜ் நகர், பாலாஜி நகர், சீபா கோல்டன் சிட்டி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கொங்கந்தான்பாறை ஊராட்சியில் உள்ள

காமராஜ் நகர், பாலாஜி நகர், சீபா கோல்டன் சிட்டி ஆகிய பகுதிகளில் மொத்த மக்கள் தொகை 300 ஆகும். அப்பகுதியில் தாய் திட்டத்தின்கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.5,00,000 மதிப்பீட்டில் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்குழாய் கிணறு மின்மோட்டாருடன் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

7—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 622—திரு. பெரியண்ணன் அரசு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிப் பகுதியில் ரூ.49.03 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்று 27–2–2016–ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

8—

பேருந்து நிலையத்தை சீரமைத்தல்

வினா எண் 626—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

கன்னியாகுமரி தொகுதி, திட்டுவிளை பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தை சீரமைத்து நவீனமயமாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி பேரூராட்சி, திட்டுவிளை பேருந்து நிலையத்தில் சுமார் 15 பேருந்துகள் மட்டுமே வந்து செல்கின்றன. மேலும், போதிய இடவசதி இல்லாததால் இப்பேருந்து நிலையத்தை நவீனமயமாக்க வழிவகை இல்லை.

9—

புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 700—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, வரட்டுப்பள்ளம் அணையிலிருந்து அந்தியூருக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

அந்தியூர் பேரூராட்சிக்கென குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 2014–ல் நிறைவேற்றப்பட்டு அதன்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டுவரும் நிலையில் வரட்டுப்பள்ளம் அணையை நீராதாரமாகக் கொண்டு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கான அவசியம் எழவில்லை.

10—

அடிப்படை வசதிகள்

வினா எண் 702—திரு. துரை. கி. சரவணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, கங்கைகொண்டான் பேரூராட்சி, 13–வது வார்டில் அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

புவனகிரி தொகுதி, கங்கைகொண்டான் பேரூராட்சி, 13–வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் தெரு விளக்கு, குடிநீர் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

11—

குடிநீர்

வினா எண் 719—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் நகராட்சியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிழக்குக் கடற்கரைச் சாலை, பேரூரில் நிறுவப்படவுள்ள நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து குடிநீர் வழங்கும் வகையில் பயனீட்டாளர் பட்டியலில் பல்லாவரம் நகராட்சி சேர்க்கப்பட்டுள்ளது.

12—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 734—திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

துறையூர் தொகுதி, துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியங்களிலுள்ள ஊராட்சிகளுக்கு துறையூர் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பகுதி குடியிருப்புகளுக்கு துறையூர் மற்றும் 98 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், தங்க நகர் மற்றும் 10 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டங்களின்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

13—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 736—திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறையூர் தொகுதி, துறையூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

துறையூர் தொகுதி, துறையூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

பேருந்து நிலையம்

வினா எண் 738—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமயம் தொகுதி, அரிமளம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, அரிமளம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க போதிய இட வசதி இல்லாததால், பேருந்து நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

15—

தரம் உயர்த்துதல்

வினா எண் 739—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருவாய் குறைவாக உள்ளதால் நகராட்சியாக தரம் உயர்த்த வழிவகை இல்லை.

16—

ஊராட்சிகள் உருவாக்குதல்

வினா எண் 746—டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்*

2018 ஜூலை 9]

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, இரட்டணை ஊராட்சிக்குட்பட்ட இரட்டணை, நாரேரிக்குப்பம் மற்றும் முல்லாப்பாளையம் ஆகிய கிராமங்களைப் பிரித்து நாரேரிக்குப்பம் மற்றும் முல்லாப்பாளையம் ஊராட்சிகளை உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரித்தல், தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையுடன் அரசில் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி இரட்டணை ஊராட்சிக்குட்பட்ட இரட்டணை, நாரேரிக்குப்பம் மற்றும் முல்லாப்பாளையம் ஆகிய கிராமங்களைப் பிரித்து நாரேரிக்குப்பம் மற்றும் முல்லாப்பாளையம் ஊராட்சிகளை உருவாக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

17—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 747—டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, இரட்டணை ஊராட்சி, இரட்டணையில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, இரட்டணைக்கு தினந்தோறும் விழுப்புரம், திண்டிவனம் மற்றும் செஞ்சியிலிருந்து சுமார் 10 பேருந்துகள் வந்து செல்கின்றன. தவிர, ஒரே நேரத்தில் பல பேருந்துகள் நிறுத்திவைக்க வேண்டிய சூழ்நிலைகள் அல்லது போக்குவரத்து நெரிசல் ஏதும் இல்லை. எனவே, இரட்டணை ஊராட்சிக்கு தனியே பேருந்து நிலையம் அமைப்பதற்கான தேவை ஏற்படவில்லை.

18—

உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 856—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி 77–வது வார்டு, சிவராஜபுரம் கார்ப்பரேஷன் லைன் பகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி 77–வது வார்டு, சிவராஜபுரம் கார்ப்பரேஷன் லைன் பகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 907—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2018 ஜூலை 9]

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஒன்றியம், கடுக்காக்கோட்டை கிராமம், தெற்குத் தெருவில் கூடுதலாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட கடுக்காக்கோட்டை குக்கிராமம் தெற்குத் தெருவில் உள்ள மக்கள் தொகை 180 ஆகும். அங்கு தற்போது 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல முறையில் பயன்பாட்டில் உள்ளது. அந்நீர்தேக்கத் தொட்டியின்மூலம் அப்பகுதியிலுள்ள மக்களுக்குப் போதுமான அளவு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

20—

கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

வினா எண் 916—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஒன்றியம், சேதுராயன்குடிகாடு கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, சேதுராயன்குடிகாடு ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தற்போது

2 ஆர்.சி.சி. கட்டடங்கள் நல்ல முறையில் பயன்பாட்டில் உள்ளன. தற்பொழுது 1,442 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடம் உள்ளதால் மேற்கொண்டு அந்தப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

21—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 917—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஒன்றியம், சேதுராயன்குடிகாடு கிராமம், ஆதி திராவிடர் தெருவில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், சேதுராயன்குடிகாடு ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் தெருவில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. தற்பொழுது அது பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 14–வது நிதிக் குழு மானிய திட்டத்தில் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 918—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஒன்றியம், நடுவூர் கிராமம், ஆதி திராவிடர் தெருவில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நடுவூர் ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் 32 குடியிருப்புகள் உள்ளன. அப்பகுதியின் அருகே 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது. அந்தப் பகுதிக்கு குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்யப்பட்டு அங்குள்ள மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஆதி திராவிடர் தெருவிலுள்ள குடியிருப்புகளுக்கு தேவையான அளவு குடிநீர் வசதி உள்ளது.

23—

குடிநீர்

வினா எண் 921—திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, இறைவன்காடு மற்றும் பொய்கை ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் உள்ள 944 ஊரகக் குடியிருப்புகளில், இறைவன்காடு ஊராட்சியில் 14 குடியிருப்புகளுக்கும் மற்றும் பொய்கை ஊராட்சியில் 13 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

24—

குடிநீர் குழாய்கள் அமைத்தல்

வினா எண் 934—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி 58, 61 மற்றும் 78 ஆகிய வார்டுகளிலுள்ள தெருக்களில் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி 58, 61 மற்றும் 78 ஆகிய வார்டுகளிலுள்ள தெருக்களில் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

25—

கழிவுநீர்க் குழாய்களில் அடைப்புகள் அகற்றுதல்

வினா எண் 937—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, 58, 61 மற்றும் 78 ஆகிய வார்டுகளிலுள்ள தெருக்களில் கழிவுநீர்க் குழாய் மற்றும் மழைநீர் கால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

இப்பகுதிகளில் ஜெட்ராடிங், சூப்பர் சக்கர், ஜெட் கம் சக்ஷன் மற்றும் தூர் வாரும் இயந்திரங்களின்மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கழிவுநீர் கட்டமைப்புகள் பராமரிக்கப்பட்டு வருவதனால் கழிவு நீரடைப்பு புகார்களும் சாலைகளில் கழிவுநீர் வழிந்தோடுவதும் தடுக்கப்படுகிறது.

26—

உயர் கோபுர மின்விளக்கு

வினா எண் 953—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) எழும்பூர் தொகுதி 58–வது வார்டு நேவல் மருத்துவமனை சாலையிலுள்ள சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடலில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி 58–வது வார்டு நேவல் மருத்துவமனை சாலையிலுள்ள சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடலில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

27—

உயர் கோபுர மின்விளக்கு

வினா எண் 961—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி 77–வது வார்டு, பழைய ஆட்டுத்தொட்டி தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி 77–வது வார்டு, பழைய ஆட்டுத்தொட்டி தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

28—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 969—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, 77, 104 மற்றும் 107 ஆகிய வார்டுகளிலுள்ள அனைத்து சாலைகளிலும் ஆற்றல்மிகு தெரு மின் விளக்குகள் (எல்.இ.டி.) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) எழும்பூர் தொகுதி, வார்டு 77–ல் மொத்தம் உள்ள 829 தெரு விளக்குகளில் 287 மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன. மீதமுள்ள 542 எல்.இ.டி. தெரு விளக்குகளும் அமைக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியால் தொடங்கப்பட்டு முழுவதுமாக இப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

வார்டு 104–ல், மொத்தம் உள்ள 1,064 தெரு விளக்குகளில் 246 மின் சேமிப்பு வகை எல்.இ.டி. விளக்குகளும், வார்டு 107–ல் மொத்தம் உள்ள 1,300 தெரு விளக்குகளில் 338 மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெரு விளக்குகளும் நிறுவப்பட்டுள்ளன. மீதமுள்ள தெரு விளக்குகள் அனைத்தும் படிப்படியாக மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெரு விளக்குகளாக மாற்றி அமைக்கப்படும்.

29—

வீட்டு வசதி

வினா எண் 977—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) எழும்பூர் தொகுதி, 107–வது வார்டிலுள்ள சலவைத் தொழிலாளர்களுக்குப் புதிய குடியிருப்பு கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 107–வது வார்டிலுள்ள சலவைத் தொழிலாளர்களுக்குப் புதிய குடியிருப்பு கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

30—

புதிய பாலம்

வினா எண் 1021—திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகராட்சி, பலவன்சாத்து கானாற்றுக்கரை அருகில் புதிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேலூர் மாநகராட்சி, மண்டலம்–3–க்குட்பட்ட ஓட்டேரி, பலவன்சாத்து கானாற்றுப் பகுதியில் உள்ள சிறுபாலம் நல்ல நிலையிலும், போக்குவரத்து பயன்பாட்டிலும் உள்ளது. மேலும், கானாறு மாநகராட்சிமூலம் தூர் வாரப்பட்டு மழை நீர் தேங்காமல் அந்த சிறு பாலத்தின் வழியாக போக்குவரத்து செல்லுமாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாநகராட்சியின் தொடர் பராமரிப்பில் கானாற்றுப் பகுதியில் உள்ள சிறு பாலம் இருந்து வருவதால் அப்பகுதியில் புதிய பாலம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

31—

ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 1076—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கருக்கை ஊராட்சி, கருக்கைகாமன் கோயில் தெருவில் சிறு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கருக்கை ஊராட்சி, கருக்கை கிராமத்தில் இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் உள்ளன. மேலும், கருக்கைகாமன் கோயில் தெருவில் சிறுமின் விசைப்பம்புமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கருக்கைகாமன் கோயில் தெருவில் சிறு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் அவசியம் எழவில்லை.

32—

நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1082—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பணிக்கன்குப்பம் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி பகுதியில் சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பணிக்கன்குப்பம் ஊராட்சி, ஆதி திராவிடர்

காலனி பகுதியில் 190 குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ஆதி திராவிடர் காலனியில் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஆதி திராவிடர் காலனி பகுதியில் சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

33—

ஆழ்குழாய்க் கிணறு

வினா எண் 1087—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அரசடிகுப்பம் ஊராட்சி, சிறுதொண்டமாதேவி கிராமம், கிழக்குத் தெருவில் புதிய ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அரசடிக்குப்பம் ஊராட்சி, சிறுதொண்டமாதேவி கிராமத்தில் 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் 2 சிறுமின்விசைப் பம்புகள் உள்ளன. சிறுதொண்டமாதேவி கிராமம், கிழக்குத் தெருவில் வறட்சி நிவாரணம் திட்டத்தின்கீழ் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

34—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1098—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கீழூர் ஊராட்சி, பெருமாத்தூரில் புதிய ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கீழூர் ஊராட்சி, பெருமாத்தூரில் தற்போது மின்மோட்டாருடன்கூடிய 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பெருமாத்தூரில் புதிய ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் தேவை எழவில்லை.

35—

திருமண மண்டபம்

வினா எண் 1119—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், மாடம்பாக்கம் பேரூராட்சி, பதுவஞ்சேரியில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மாடம்பாக்கம் பேரூராட்சி, பதுவஞ்சேரியில் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் தரைதளம், முதல்தளம் மற்றும் சுற்றுச் சுவருடன்கூடிய திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்திருமண

2018 ஜூலை 9]

மண்டபத்தில் குளியலறை மற்றும் கழிவறை கட்டப்பட்டு வருவதால், பணிகள் முடிவுற்றவுடன் திருமண மண்டபம் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

36—

உயர் கோபுர மின்விளக்கு

வினா எண் 1121—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சி, வேலுநகர் பகுதி கல்லறை தோட்டத்திற்கு உயர் கோபுர மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சி, 2–வது வார்டுக்குட்பட்ட வேலுநகர் பகுதியில் உள்ள கல்லறை தோட்டத்தில் உயர் மின் கோபுர விளக்கு அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

37—

சாலை வசதி

வினா எண் 1130—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் 14–வது வார்டு, நேதாஜி நகர், நேதாஜி நகர் விரிவு பகுதிகளுக்கு சாலை வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்களத்தூர் பேரூராட்சி 14–வது வார்டு, நேதாஜி நகர் பகுதிகளில் பேரூராட்சி பொது நிதியிலிருந்து தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நேதாஜி நகர் விரிவு பகுதியானது அடையாறு கால்வாய்க்கு அருகில் உள்ளதால் சாலை வசதிகள் அமைத்திட இயலாது.

38—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1137—திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூடலூர் தொகுதி, சேரங்கோடு மற்றும் நெலாக்கோட்டை ஊராட்சிகளில் சோலாடி மற்றும் அம்பலமூலா கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியிலுள்ள சேரங்கோடு மற்றும் நெலாக்கோட்டை ஊராட்சிகளிலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருவதால் சோலாடி மற்றும் அம்பலமூலா கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் மேற்கண்ட ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

39—

தரமுயர்த்துதல்

வினா எண் 1150—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

கன்னியாகுமரி தொகுதி, கன்னியாகுமரி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருவாய் குறைவாக உள்ளதால் நகராட்சியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

40—

ஊராட்சிகளைப் பிரித்தல்

வினா எண் 1152—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, பொன்னமராவதி வட்டம், மறவாமதுரை ஊராட்சியை மறவாமதுரை, சடையம்பட்டி என இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரித்தல், தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையுடன் அரசில் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பொன்னமராவதி வட்டம், மறவாமதுரை ஊராட்சியை, மறவாமதுரை, சடையம்பட்டி என இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

ஊராட்சிகளைப் பிரித்தல்

வினா எண் 1153—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், திருக்களம்பூர் ஊராட்சியை திருக்களம்பூர், கருப்புகுடி என இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்தினை பிரித்தல், தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையுடன் அரசில் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், திருக்களம்பூர் ஊராட்சியை திருக்களம்பூர், கருப்புகுடி என இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1154—திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அருப்புக்கோட்டை நகராட்சியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அருப்புக்கோட்டை நகராட்சிக்கு வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு தற்போது நகராட்சியின் பராமரிப்பில் உள்ள குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு சுமார் 23.00 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கப் பெறுகிறது. மேலும், இந்நகராட்சிக்கு தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த 67 ஊரகக் குடியிருப்புகள், விருதுநகர், அருப்புக்கோட்டை நகராட்சிகள், காரியாபட்டி, மல்லாங்கிணறு பேரூராட்சிகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த 239 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தற்போது நாளொன்றுக்கு 40 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இவ்விரு திட்டங்கள்மூலம் இந்நகராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வழங்குவதற்கு தாமிரபரணி ஆற்றில் போதிய நீர் ஆதாரம் இல்லாததால், தாமிரபரணி ஆற்றிலிருந்து அருப்புக்கோட்டை நகராட்சிக்கு புதிய குடிநீர்த் திட்டம் அமைப்பது தற்போது சாத்தியமில்லை.

43—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 1156—திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டை நகராட்சியில், பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் அரசிடமிருந்து உரிய நிதி ஆதாரம் பெறப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

44—

வீட்டு வசதி

வினா எண் 1178—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கொடைக்கானல் வட்டம், கொடைக்கானல் மேல்மலை மற்றும் கீழ்மலைகளிலுள்ள ஆதிவாசிகள் மற்றும் பழங்குடியினர்களுக்கு புதிய வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மேல்மலை மற்றும் கீழ்மலையைச் சார்ந்த ஆதிவாசிகள் மற்றும் பழங்குடியினத்தவர்களுக்கு மொத்தம் 206 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

45—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1239—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) எழும்பூர் தொகுதி, 58–வது வார்டில் உள்ள நேவல் மருத்துவமனை சாலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின்கீழ் (National Urban Health Mission) *மண்டலத்திற்கு ஒரு 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனை என்ற அடிப்படையிலும், 50 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார மையம் என்ற அடிப்படையிலும் பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை செயல்பட்டு வருகிறது.*

எழும்பூர் தொகுதி, 58–வது வட்டத்திற்குட்பட்ட நேவல் மருத்துவமனை சாலைக்கு மிக அருகில், கரியப்பா முதலி தெரு, புரசைவாக்கம், பெருமாள்பேட்டை 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனையும், பாலைய்யா நாயுடு தெருவில் ராட்லர் மருந்தகம் மற்றும் முதியோர் நலவாழ்வு மையமும் மற்றும் எண் 50, E.V.K. *சம்பத் சாலையில் கடப்பா ரங்கையா நகர ஆரம்ப சுகாதார மையமும்* (UPHC) *செயல்பட்டு வருவதால், நேவல் மருத்துவமனை சாலையில் மேலும் ஓர் ஆரம்ப சுகாதார மையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.*

LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

46—

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 1260—திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் நகராட்சி, நின்னகரையிலுள்ள ஏரியில் கலக்கும் கழிவுநீரை தடுத்திட சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, சுற்றுச்சூழல் சுகாதார சீர்கேட்டை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் நகராட்சியில் வார்டு எண் 3, 4, 5, 6, 7, 8 மற்றும் தொழிற்பேட்டை பகுதிகளில் மட்டும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. மேற்படி குடியிருப்பு பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தால் 2.2 MLD *கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு நின்னகரை ஏரியில் சேர்க்கப்படுகிறது. மேலும், தொழிற்பேட்டை பகுதிகளிலிருந்து நேரடியாக வெளியேறும் கழிவுநீரை கழிவுநீர் தொட்டியில்* (Oxidization Pond) *சேகரிப்பு செய்து வெளியேற்றப்படுகிறது. மேலும், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இதன் மீதான தொடர் நடவடிக்கையை மேற்கொள்ள தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.*

47—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1261—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், தேவனூரிலிருந்து கரிப்பூர் வரையிலான கிராமங்களுக்கு அருகிலுள்ள தென்பெண்ணை ஆற்று நீரை பயன்படுத்தி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை ஒன்றியத்திலுள்ள தேவனூரில் இருந்து கரிப்பூர் வரையிலான கிராமங்களுக்கு

2018 ஜூலை 9]

தனித்தனியாக நீராதாரங்கள் அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் தென்பெண்ணை ஆற்று நீரை பயன்படுத்தி தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டிய அவசியம் தற்சமயம் எழவில்லை.

48—

பேருந்து நிலையம்

வினா எண் 1267—திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், நல்லம்பள்ளி கிராமத்தில் பேருந்து நிலையம் அமைக்க ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் 2016–2017 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் பணி துவங்கப்படும்.

49—

கலையரங்கம்

வினா எண் 1269—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வக்கோட்டை தொகுதி, அம்மா சத்திரம் ஊராட்சி, பசுமலைப்பட்டியில் வேம்பு அய்யனார் கோயிலுக்கு கலையரங்கம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், அம்மா சத்திரம் ஊராட்சி, பசுமலைப்பட்டி கிராமம், வேம்பு அய்யனார் கோயிலில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கலையரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

50—

கலையரங்கம்

வினா எண் 1270—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வக்கோட்டை தொகுதி, உப்பிலியக்குடி ஊராட்சி, வடுகப்பட்டி சுருளி கோயிலுக்கு கலையரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உப்பிலியக்குடி ஊராட்சி, வடுகப்பட்டி சுருளி கோயில் அருகில் மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து மாவட்ட ஊராட்சித் திட்டத்தின்கீழ் கலையரங்கம் அமைக்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

2018 ஜூலை 9]

51—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1272—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, கொடைக்கானல் நகரில் கீழ்குண்டாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

பழனி தொகுதியில் கீழ்குண்டாறு ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கொடைக்கானல் நகராட்சிப் பகுதிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்த அரசாணை எண் 514, நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 18–12–2014–ல் ரூ.46.31 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு 26–2–2016 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

52—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 1273—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பாலசமுத்திரம் பேரூராட்சியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பாலசமுத்திரம் பேரூராட்சியில், ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 92 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் இப்பேரூராட்சியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

53—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1274—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, நெய்க்காரப்பட்டி பேரூராட்சி, பெரியகலையம்புத்தூர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி, பெரியகலையம்புத்தூரில் 2,00,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இப்பகுதிக்கென புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அவசியம் இல்லை.

54—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 1275—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் நகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

2018 ஜூலை 9]

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு 1 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தகுந்த தொழில்நுட்பத்துடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வறிக்கை சமர்ப்பித்தவுடன் இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

55—

காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1277—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நத்தம் தொகுதியில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நத்தம், நிலக்கோட்டை, அம்மையநாயக்கனூர் பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,276 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கவும், கீரனூர், நெய்க்காரப்பட்டி ஆகிய இரண்டு பேரூராட்சிகள் மற்றும் பழனி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 354 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருச்சி மாவட்டம் வையம்பட்டி, மருங்காபுரி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 135 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன்கூடிய ரூ.636 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிருவாக ஒப்புதலளிக்கப்பட்டு 30–3–2015 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது 44 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன. இத்திட்டத்தினை 04/2017–ல் முடிக்க இலக்கிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

56—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1279—திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்*

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதியில் நாங்குநேரி–செட்டிகுளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ராதாபுரம் தொகுதியில் நாங்குநேரி திசையன்விளை மற்றும் 118 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 10.62 மில்லியன் லிட்டர் குடிநீரும் மற்றும் 113 கடற்கரையோர மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் செட்டிக்குளம் பஞ்சாயத்தைச் சார்ந்த 8 கிராமங்களுக்கு தினசரி சராசரியாக 4,66,200 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர கூடங்குளம் அணு மின்நிலையத்தை சுற்றியுள்ள 100 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 10/2016–ல் முடிக்கப்பட்டதும் செட்டிக்குளம் பஞ்சாயத்தை சார்ந்த 8 கிராமங்களுக்கும் தினசரி சராசரியாக 1,33,560 லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

57—

சமூக நலக் கூடம்

வினா எண் 1360—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் பேரூராட்சி, சங்கரன் புதூர் மற்றும் அழகனாபுரம் கிராமங்களில் புதியதாக சமூக நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் பேரூராட்சியில் சமூக நலக் கூடம் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து

2018 ஜூலை 9]

வருகிறது. மேலும், சங்கரன் புதூர் மற்றும் அழகனாபுரம் ஆகிய கிராமங்களிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் சமூக நலக் கூடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்துவருவதால், மேற்கண்ட கிராமங்களில் சமூக நலக் கூடம் கட்ட அவசியம் எழவில்லை.

58—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 1362—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், தென்தாமரைகுளம் பேரூராட்சிக்குட்பட்ட முகிலன் குடியிருப்பு கிராமத்தில் புதியதாக சமுதாய நலக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், தென்தாமரைகுளம் பேரூராட்சிக்குட்பட்ட முகிலன் குடியிருப்பு கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைப்பதற்கு போதிய இடவசதி இல்லாததால் அங்கு புதிய சமுதாய நலக் கூடம் கட்ட இயலாது.

59—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 1363—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சி ஆஸ்ரமம் கிராமத்தில் புதிய சமுதாய நலக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சி ஆஸ்ரமம் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதால் இப்பகுதியில் கூடுதலாக சமுதாய நலக் கூடம் கட்ட இயலாது.

60—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1371—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி தொகுதியில் அழகிய பாண்டியபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி தொகுதியில் அழகிய பாண்டியபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

61—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 1392—திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 1400—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

63—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1404—திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் நகராட்சி, இரயில் நகர் சித்தேரிக்கரை சாலையை அகலப்படுத்தி புதிய தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் நகராட்சி, இரயில் நகர் சித்தேரிக்கரை சாலை 2012–2013 ஆம் நிதியாண்டில் 4.00 மீட்டர் அகலத்திற்கு தார்ச் சாலையாக அமைக்கப்பட்டு இதுநாள் வரை நல்ல நிலையில் சாலை பயன்பாட்டில் உள்ளது. மேற்படி சாலையின் அகலம் போக்குவரத்திற்கு போதுமானதாக உள்ளதால் அகலப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

64—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 1507—திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறைமுகம் தொகுதி, 59–வது வட்டம், எல்லீஸ்புரத்தில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

துறைமுகம் தொகுதி, 59–வது வட்டம், எல்லீஸ்புரத்தில் உள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு அருகில் உள்ள திறந்தவெளி நிலத்தில் சமுதாய நலக் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது ஏதுமில்லை.

65—

சாலை சீரமைத்தல்

வினா எண் 1638—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

திருவெறும்பூர் தொகுதி, கிளியூர் ஊராட்சி, முடுக்குப்பட்டியிலிருந்து கிளியூர் வரையுள்ள சாலையினை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி, கிளியூர் ஊராட்சி, முடுக்குப்பட்டியிலிருந்து கிளியூர் வரை உள்ள சாலை ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமானது. இதன் நீளம் 4.8 கி.மீ, அகலம் 3 மீட்டர். இச்சாலையினை சீரமைக்க உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.100.00 இலட்சமாகும். இச்சாலை 2016–2017 ஆம் ஆண்டில் ஏதேனும் சிறப்பு சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு சாலை சீரமைக்கப்படும்.

66—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1720—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பேரூராட்சி, பெரியார் நகரில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சியின் 13–வது வார்டுக்கு உட்பட்ட பெரியார் நகரில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு தினந்தோறும் 111 LPCD குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதால் மேலும் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அவசியம் எழவில்லை.

67—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1721—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, வெண்ணாவல்குடி ஊராட்சி, குருந்தடிமனை கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வெண்ணாவல்குடி ஊராட்சி, குருந்தடிமனை கிராமத்தில் 996 மக்கள் தொகை உள்ளது. வெண்ணாவல்குடி ஊராட்சி, குருந்தடிமனை கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது.

68—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1722—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, வெண்ணாவல்குடி ஊராட்சி, பசுவயல் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வெண்ணாவல்குடி ஊராட்சி, பசுவயல் கிராமத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. மேலும், இப்பகுதி காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

2018 ஜூலை 9]

69—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1723—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, கோவிலூர் ஊராட்சி, தெற்கு மேலக்கோட்டையில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கோவிலூர் ஊராட்சி, தெற்கு மேலக்கோட்டை கிராமத்தில் 600 மக்கள் தொகை உள்ளது. கோவிலூர் ஊராட்சி, தெற்கு மேலக்கோட்டை கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது.

70—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1726—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, கும்மங்குளம் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, கும்மங்குளம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது.

71—

ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 1727—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, அரையப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, அரையப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையப் பகுதி காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

72—

தரமுயர்த்துதல்

வினா எண் 1742—திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

லால்குடி தொகுதி, லால்குடி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருவாய் குறைவாக உள்ளதால் நகராட்சியாக தரம் உயர்த்த வழிவகை இல்லை.

2018 ஜூலை 9]

73—

தரமுயர்த்துதல்

வினா எண் 1745—திரு. பி. முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள வேப்பனஹள்ளி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

74—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1747—திரு. பி. முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், இம்மிடிநாயக்கனப்பள்ளி ஊராட்சி, சீகலப்பள்ளி சாலை முதல் சாமனூர் வரை புதிய தார்ச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஊராட்சி ஒன்றியம்,

இம்மிடிநாயக்கனப்பள்ளி ஊராட்சி, சீகலப்பள்ளி முதல் சாமனூர் வரை உள்ள மண் சாலை சுமார் 3.00 கி.மீ. நீளம் உள்ளது. இதில் 1.00 கி.மீ. மண் சாலை தனியாருக்கு சொந்தமானதாகும். மீதமுள்ள 2.00 கி.மீ. மண் சாலை வனத் துறைக்குட்பட்ட காப்புக் காடுகள் (Reserve Forest) பகுதியில் உள்ளது. இச்சாலை சீகலப்பள்ளியிலிருந்து கீழ்சாமனூர், திப்பம்பட்டி ஆகிய இரு கிராமங்களுக்கு செல்லும் சாலையாகும். ஆகவே, மேற்படி சாலை தனியார் (பட்டா) மற்றும் காப்புக் காடு (Reserve Forest) பகுதியில் அமைந்துள்ளதால் இச்சாலை அமைக்க இயலாது.

75—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1751—திரு. பி. முருகன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ராயக்கோட்டை ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ராயக்கோட்டை ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 1766—திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

துறைமுகம் தொகுதி, 80–வது வட்டம், அன்னை சத்தியா நகரில் சமுதாய நலக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வார்டு 60–ல் உள்ள அன்னை சத்தியா நகர் அமைந்துள்ள இடம் இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சென்னை துறைமுகத்திற்கு சொந்தமான இடம் என்பதால், இப்பகுதியில் சமுதாய நலக் கூடம் கட்ட இயலாது.

77—

பாலம் அமைத்தல்

வினா எண் 1929—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கல்லணை கால்வாய் ஆற்றின் குறுக்கே சின்னகாங்கேயம்பட்டி–காமதேவமங்கலம் இடையே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், சின்னகாங்கேயம்பட்டி கிராமம், மனையடிப்பட்டி–கடம்பங்குடி சாலையில் புங்கனூர் கிராமம் அருகே 6/6 கி.மீ. நீளத்தில் நபார்டு 21 திட்டத்தின்கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டப்பட்டு வருகிறது. இப்பாலம் சின்னகாங்கேயம்பட்டி கிராமத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே, சின்னகாங்கேயம்பட்டி–காமதேவமங்கலம் இடையே புதிய பாலம் அமைத்திட அவசியம் எழவில்லை.

[2018 ஜூலை 9

78—

பேருந்து நிலையம்

வினா எண் 2157—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேருந்து நிலையத்தை மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தில் சுமார் 5,000 பயணிகள் வந்து செல்கின்றனர். மேற்படி பேருந்து நிலையம் 75 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இப்பேருந்து நிலையத்தில் பொது மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், உயர் மின் கோபுர விளக்கு, பயணியர் நிழற்குடை, பேருந்து கால அட்டவணை மற்றும் கட்டண கழிவறை என அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

79—

சாலை அமைத்தல்

வினா எண் 2166—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, பீமரபட்டி உள் செக்கடி முதல் மேல்மலச்சி வரை சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, பீமரபட்டி உள் செக்கடி முதல் மேல்மலச்சி வரை, மாநில

2018 ஜூலை 9]

திட்டக் குழு நிதியில் 2015–2016–ல் தேர்வு செய்யப்பட்டு சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

80—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2169—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, தாந்தாணி ஊராட்சி, துவரடிமனை மற்றும் தேவர்பட்டி பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

துவரடிமனை குடியிருப்பு மற்றும் தேவர்பட்டி குடியிருப்பு ஆகியவை அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தாந்தாணி ஊராட்சியின் குடியிருப்புகளாகும். துவரடிமனை குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை 797. இக்குடியிருப்பு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 706 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எடுப்பு முறை 5–ன்கீழ் பயன்பெறும் குடியிருப்பாகும். தற்போது வாரிய பராமரிப்பின்கீழுள்ள இத்திட்டன்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தேவர்பட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை 305 ஆகும். இக்குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் பயன்பாட்டில் உள்ளது. இக்குடியிருப்பில், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு போதுமானதாக உள்ளது.

81—

ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 2171—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஊராட்சி, கோவில்பட்டி, திருக்கட்டளை ஊராட்சி, மேட்டுப்பட்டி மற்றும் வல்லத்திராக்கோட்டை ஊராட்சி, பெரியநாயகிபுரம் ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவரங்குளம் ஊராட்சி, கோவில்பட்டி கிராமத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், திருக்கட்டளை ஊராட்சி, மேட்டுப்பட்டி கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், கத்தக்குறிச்சி ஊராட்சி, பெரியநாயகிபுரத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளன. மேலும், இப்பகுதி காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

82—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 2174—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, வெண்ணாவல்குடி ஊராட்சி, இந்திரா நகர் மற்றும் வள்ளிக்காடு ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வெண்ணாவல்குடி ஊராட்சி, இந்திரா நகர் கிராமத்தில் 300 பேர் வசித்து வருகின்றனர். வள்ளிக்காடு கிராமத்தில் 750 பேர்

2018 ஜூலை 9]

வசித்து வருகின்றனர். இந்திரா நகர் குடியிருப்பில் 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், வள்ளிக்காடு கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளன.

83—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 2176—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, அழியாநிலை ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

அழியாநிலை ஆதி திராவிடர் குடியிருப்பு, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அழியாநிலை ஊராட்சியின் ஒரு குடியிருப்பாகும். இதன் தற்போதைய மக்கள்தொகை 307 (ஆதி திராவிடர் 307). இக்குடியிருப்பு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 706 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எடுப்பு முறை 5–ன்கீழ் பயன்பெறும் குடியிருப்பாகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பின்கீழுள்ள இத்திட்டத்தால் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு போதுமானதாக உள்ளது.

84—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2177—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

ஆலங்குடி தொகுதி, நெய்வத்தலி ஊராட்சி, நெய்வத்தலி வடக்கு மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

நெய்வத்தலி வடக்கு மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்பு, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நெய்வத்தலி ஊராட்சியின் ஒரு குடியிருப்பாகும். இதன் தற்போதைய மக்கள்தொகை 209. இக்குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய ஒரு தனி மின்விசைத் திட்டம் பயன்பாட்டில் உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1,751 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இக்குடியிருப்பு சேர்க்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்பில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு போதுமானதாக உள்ளது.

85—

ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 2179—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் வடக்கு இலுப்பகொல்லை மற்றும் வடக்கு காசிய குடியிருப்பு ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, பெரியாளூர் ஊராட்சி, பாண்டிக்குடி கிழக்கு மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய இரண்டு தனி மின்விசைத் திட்டங்கள் பயன்பாட்டில் உள்ளன.

2018 ஜூலை 9]

86—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2181—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, புதுக்கோட்டை விடுதி, தவளப்பள்ளம் மற்றும் குலமங்களம் தெற்கு ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, புதுக்கோட்டை விடுதி, தவளப்பள்ளம் மற்றும் குலமங்களம் தெற்கு ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது.

87—

சாலை சீரமைத்தல்

வினா எண் 2297—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், சிறுபினாயூர் முதல் எஸ். மாம்பாக்கம் வரையுள்ள சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சிறுபினாயூர் முதல் எஸ்.மாம்பாக்கம்

வரையுள்ள 3.5 கி.மீ. நீளமுள்ள சாலையை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

88—

சாலை சீரமைத்தல்

வினா எண் 2298—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூர் தொகுதி, காக்கநல்லூர் முதல் முறுக்கேரி வரையுள்ள சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இச்சாலை காக்கநல்லூர் முதல் முறுக்கேரி வரை 2.75 கி.மீ. நீளம் கொண்டது. இச்சாலையின்மூலம் தினமும் தினையாம்பூண்டி, அழிசூர், மேல்பாக்கம் மற்றும் சிலாம்பாக்கம் ஊராட்சிகளில் வசிக்கும் சுமார் 5,770 பொது மக்கள் பயனடைந்து வருகின்றார்கள். இச்சாலை பணியினை PMGSY Phase IX *திட்டத்தின்கிழ் 2014–2015 ஆம் ஆண்டில் ரூபாய் 74.79 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டுள்ளது.*

89—

சாலை சீரமைத்தல்

வினா எண் 2300—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூர் தொகுதி, வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், நத்தாநல்லூர் முதல் புளியம்பாக்கம் வரையுள்ள சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜுலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி, வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், நத்தாநல்லூர் முதல் புளியம்பாக்கம் வரையுள்ள சாலையை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

90—

தார்ச் சாலை—உயர்மட்டப் பாலம்

வினா எண் 2303—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி, கவுண்டன்புதூர் முதல் மணல்காடு வரை செல்லும் சாலையினை தார்ச் சாலையாக மாற்றவும், பழுதடைந்துள்ள உயர்மட்டப் பாலத்தை சீரமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி கவுண்டன்புதூர் முதல் மணல்காடு வரை செல்லும் 2.50 கி.மீ. நீளம் உள்ள சாலை அமைந்துள்ள இடமானது தனியாருக்கு பாத்தியப்பட்ட நிலமாக உள்ளதால், தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்திட வருவாய்த் துறையினருக்கு நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலையினை மேம்பாடு செய்திடவும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாலத்தினை சீரமைக்கவும், உத்தேசமாக ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் நிதி தேவைப்படுகிறது. நில ஆர்ஜிதம் செய்யப்பட்டவுடன் 2016–2017 ஆம் ஆண்டு திட்டங்களில் நிதி ஒதுக்கீடு பெற்றிட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

91—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2305—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமயம் தொகுதி, திருமயம் ஊராட்சி, சந்தைப்பேட்டையில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமயம் சட்டமன்றத் தொகுதி, திருமயம் ஊராட்சி ஒன்றியம், திருமயம் ஊராட்சி, சந்தைப்பேட்டையில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட திருமயம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லை.

92—

ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்

வினா எண் 2307—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமயம் தொகுதி, பொன்னமராவதியில் ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சி பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு

2018 ஜூலை 9]

தற்போது போதிய இடவசதி இல்லை. இப்பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள வாரச் சந்தையை இடம் மாற்றம் செய்ய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் மாற்றம் செய்த பின்னர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

93—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 2350—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகரில் பாதாள சாக்கடைத் திட்டப் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்காக ரூ.54.79 கோடி மதிப்பீட்டில், திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III (TNUDP–III) கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணி நான்கு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, இதுவரையில் இப்பணிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம், ரூ.46.12 கோடி செலவிடப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் இத்திட்டப் பணி சிப்பம் 1, 2, 4 (கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்) பணிகள் முடிக்கப்பட்டு 27–2–2016 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. சிப்பம் 1 மற்றும் 2 பகுதிகளில் உள்ள கட்டடங்களுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. சிப்பம் 3 பகுதியில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2018 ஜூலை 9

94—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2383—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, இராஜேந்திரபுரம் ஊராட்சி, இராஜேந்திரபுரம் கிழக்கு, முஸ்லிம் தெரு மற்றும் குருந்திரான்கோட்டை ஆதி திராவிடர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், இராஜேந்திரபுரம் ஊராட்சியில் உள்ள முஸ்லிம் தெரு மற்றும் குருந்திரான்கோட்டை ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சுமார் 2,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். குருந்திரான்கோட்டை ஆதி திராவிடர் குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளன. முஸ்லிம் தெருவிற்கு குடிநீர் குழாய் நீட்டிப்புமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதி காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

95—

ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 2386—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

ஆலங்குடி தொகுதி, குரும்பூர் ஊராட்சி, வெளங்குடி வயல் மற்றும் பட்டரைச்சேரி ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, குரும்பூர் ஊராட்சி, வெளங்குடி வயல் மற்றும் பட்டரைச்சேரி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது.

96—

ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 2390—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, கல்லாலங்குடி ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் நாயக்கர் குடியிருப்புப் பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, கல்லாலங்குடி ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் நாயக்கர் குடியிருப்புப் பகுதிகள் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

97—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2394—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்*

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி, மடத்துக்குடியிருப்புப் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி, மடத்துக்குடியிருப்பில் சுமார் 800–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது.

98—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2403—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, தேவனாஞ்சேரி ஊராட்சி, கலைஞர் நகரில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட தேவனாஞ்சேரி கிராமம், கலைஞர் நகரில் தற்பொழுது அங்கன்வாடி தெருவில் 30,000 லிட்டர் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி மற்றும் 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நான்கு சிறு மின் விசைப்பம்பு மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2018 ஜூலை 9]

99—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 2460—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இராமையன்பட்டி ஊராட்சியில் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இராமையன்பட்டி ஊராட்சியில் மொத்த மக்கள் தொகை 9,500 ஆகும். இராமையன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அபிசேகபட்டி, கம்மாளன்குளம், வேப்பன்குளம் மற்றும் அரசு புதுகாலனி ஆகிய பகுதிகளுக்கு மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தாமிரபரணி ஆற்று நீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

100—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2464—திரு. சௌ. தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ராஜபாளையம் தொகுதி, செட்டியார்பட்டி பேரூராட்சியில் பத்து இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராஜபாளையம் தொகுதி, செட்டியார்பட்டி பேரூராட்சியின் மக்கள் தொகைக்கு ஏற்ப 6.60 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால், புதியதாக பத்து இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

101—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 2469—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, நுள்ளிவிளை, ஆளூர் மற்றும் வில்லுக்குறி ஆகிய கிராமங்களில் மாம்பழத்துறையாறு குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கோதையாற்றை நீராதாரமாகக் கொண்ட வில்லுக்குறி, ஆளூர் பேரூராட்சிகள் மற்றும் 53 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் வில்லுக்குறி மற்றும் ஆளூர் பேரூராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதமும், நுள்ளிவிளை கிராமத்திற்கு 40 லிட்டர் வீதமும், குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் மாம்பழத்துறையாறு குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

102—

ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 2500—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

ஆலங்குடி தொகுதி, குப்பக்குடி ஊராட்சி, மங்களாபுரம், தோப்புக்கொல்லை மற்றும் குப்பக்குடி ஆதி திராவிடர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, குப்பக்குடி ஊராட்சி, மங்களாபுரம் கிராமத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தோப்புக்கொல்லை கிராமத்தில் 30,000 மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் மற்றும் ஏ.டி. காலனியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளன.

103—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2508—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் வடக்கு இலுப்பகொல்லை மற்றும் வடக்கு காசிய குடியிருப்பு ஆகிய பகுதிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, திருநாளூர் வடக்கு மற்றும் இலுப்பகொல்லை குடியிருப்பு ஆகியவை அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருநாளூர் ஊராட்சியின் குடியிருப்புகளாகும்.

[2018 ஜூலை 9

இதன் தற்போதைய மக்கள் தொகை 408. இக்குடியிருப்பிற்கு 60,000 மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய இரண்டு தனி மின்விசைத் திட்டங்கள் பயன்பாட்டில் உள்ளன.

104—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2516—டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி ஒன்றியம், வெல்வார்கோட்டை ஊராட்சி, வெள்ளபொம்மன்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடமதுரை ஊராட்சி ஒன்றியம், வெல்வார்கோட்டை ஊராட்சி, வெள்ளபொம்மன்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதியில் ஏற்கெனவே 20,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன.

105—

குடிநீர்

வினா எண் 2520—டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, விராலிப்பட்டி கிராமத்தில் சுகாதாரமான குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, விராலிப்பட்டி கிராமத்தில் 10,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவில் இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

106—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2581—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, கோபி ஒன்றியம், பொம்மநாயக்கன் பாளையம் பொலவக்காளிபாளையம், கடுக்காம்பாளையம் மற்றும் சந்திராபுரம் ஆகிய ஊராட்சிகளுக்கு புதுக்கரை புதூரிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பொம்மநாயக்கன்பாளையம், பொலவக்காளிபாளையம், கடுக்காம்பாளையம் மற்றும் சந்திராபுரம் ஆகிய ஊராட்சிகளுக்கு பவானி ஆற்று நீரை நீர் ஆதாரமாகக் கொண்டு நாளொன்றுக்கு நபர்

ஒருவருக்கு 40 லிட்டர் என்ற அடிப்படையிலும், ஊராட்சிகளின் ஆழ்குழாய்க் கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்டு நபர் ஒருவருக்கு 15 லிட்டர் என்ற அடிப்படையிலும் மொத்தம் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

107—

வீட்டு வசதி

வினா எண் 2582—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், தொட்டகோம்பை மலைவாழ் மக்களுக்கு புதிய வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், பெருமுகை ஊராட்சியில் தொட்டகோம்பை பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு 20 வருடங்களுக்கு முன்பே வனத் துறையின்மூலம் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, தொட்டகோம்பையில் புதிய வீடுகள் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

108—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2587—திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, காவல்கிணறு ஊராட்சியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த காவல்கிணறு ஊராட்சியில் சுமார் 12,000 மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு 18 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாக தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

109—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2592—திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யாறு தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில் அனைத்து குடியிருப்புகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருவதால் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டிய அவசியம் தற்சமயம் எழவில்லை.

110—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 2597—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருத்தணி நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

111—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2747—திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறைமுகம் தொகுதி, 60–வது வட்டம், அன்னை சத்யா நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துறைமுகம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 60–வது வட்டத்திற்குட்பட்ட, அன்னை சத்யா நகரில் உள்ள மக்கள் A.K. நகர் (தெற்கு) அப்பு மேஸ்திரி தெரு, சென்னை–1 பகுதியில் உள்ள நகர ஆரம்ப சுகாதார நிலையத்தை பயன்படுத்தி வருகின்றார்கள். ஆதலால், அன்னை சத்யா நகரில் நகர ஆரம்ப சுகாதார மையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

112—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 2812—திரு. பி. முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*

2018 ஜூலை 9]

செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், காமன்தொட்டி ஊராட்சி, கோபசந்திரம் தேர்வீதி அருகில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், காமன்தொட்டி ஊராட்சி, கோபசந்திரம் தேர்வீதி அருகில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் ஜனவரி 2018 வரை உள்ளதால், ஒப்பந்த காலத்திற்குள் இப்பணி முழுமையாக முடிக்கப்படும்.

113—

பாலம் அமைத்தல்

வினா எண் 2986—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி ஒன்றியம், தாண்டவன்காட்டிலிருந்து அமராபுரம் செல்லும் சாலையில் புதிய பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாதவன்குறிச்சி

[2018 ஜூலை 9

ஊராட்சியில் தாண்டவன்காட்டிலிருந்து அமராபுரம் செல்லும் சாலையில் கருமேனி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தினை பழுது நீக்கம் செய்யும் பணி ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது.

114—

வாகன நிறுத்தம் அமைத்தல்

வினா எண் 3024—திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், காந்திபுரம், கிராஸ்கட் சாலையிலுள்ள பொது ஒதுக்கீட்டு இடத்தில் பன்னடுக்கு வாகன நிறுத்தம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் வார்டு எண் 51–க்குட்பட்ட கிராஸ்கட் சாலையில் சுமார் 300 ச.மீ. பரப்பளவில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் கட்ட உரிய அரசாணை (நிலை) எண் 159, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9–11–2016–ல் வெளியிடப்பட்டுள்ளது.

115—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3033—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, ரெட்டியப்பட்டி ஊராட்சி, காசாம்பட்டியில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ரெட்டியப்பட்டி, காசாம்பட்டியில் மக்கள் தொகை 2,520 ஆகும். இங்கு 60,000, 30,000 மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன.

116—

மழைநீர் வடிகால் திட்டம்

வினா எண் 3036—திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரியில் மழைநீர் வடிகால் திட்டத்தை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வேளச்சேரி பகுதியில் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 26.95 கி.மீ. நீளத்திற்கு ரூ.45.68 கோடி செலவினத்தில் 59 எண்ணிக்கை மழைநீர் வடிகால்வாய் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

வேளச்சேரி பகுதியில் வடிகால்வாய்களின்மூலம் வெளியேறும் மழைநீர் வீராங்கல் ஓடை மற்றும் ஐ.ஆர்.ஆர். கால்வாயினை சென்றடைகிறது. மேலும், மின்சார வாரியக் குடியிருப்புப் பகுதியில் 350 மீட்டர் நீளத்தில் ரூ.60 இலட்சம் செலவிலும், லஷ்மி நகர் பகுதியில் 450 மீட்டர் நீளத்தில் ரூ.84 இலட்சம் செலவிலும் புதிய மழைநீர் வடிகால்வாய்கள் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், வேளச்சேரி பகுதியில் பல இடங்கள் வீராங்கல் ஓடை

மற்றும் ஐ.ஆர். கால்வாய் சதுப்பு நிலப்பகுதிகளைவிட தாழ்வாக உள்ளதால், அப்பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டுவது கடினமாகும். ஆகவே, மழைக்காலங்களில் இப்பகுதிகளில் தேங்கும் மழைநீர் விசைபம்புகள் மூலமாக வெளியேற்றப்படுகிறது. மேலும், இப்பகுதியில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்காமல் இருக்க அனைத்து மழைநீர் வடிகால்வாய்களும் தூர்வாரப்பட்டு வருகின்றன.

117—

சமுதாயக் கூடம்

வினா எண் 3071—திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஊராட்சி ஒன்றியம், பிரதாபராமபுரம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஊராட்சி ஒன்றியம், பிரதாபராமபுரம் ஊராட்சியில் நடுத் தெரு மற்றும் யாதவ தெருவில் தலா ஒரு சமுதாயக் கூடம் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

118—

பேருந்து நிலையம்

வினா எண் 3080—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) விருத்தாசலம் தொகுதி, வேப்பூர் வட்டம், வேப்பூரில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பூர் கிராமம் சுமார் 4,500 மக்கள் தொகை கொண்ட ஊராட்சியாகும். இவ்வூராட்சியின் வழியில் திருச்சி—சென்னை தேசிய நெடுஞ்சாலை செல்கிறது. வேப்பூர் ஊராட்சியினை சுற்றி பல கிராமங்கள் உள்ளன. இக்கிராம மக்கள் வெளியூர் செல்ல வேப்பூர் வந்து செல்ல வேண்டும். வேப்பூர் ஊராட்சியில் தற்பொழுது ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

119—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3082—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியம், மு.பரூர் கிராமம் மற்றும் கர்நத்தம் ஊராட்சி புதிய காலனியில் 40 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மு.பரூர் ஊராட்சியில் உள்ள இரண்டு குக்கிராமங்களில் 60,000, 30,000 மற்றும் 10,000 கொள்ளளவுள்ள 3 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் போதுமான அளவிற்கு வழங்கப்பட்டு வருகிறது. கர்நத்தம் புதிய காலனியில்

தற்சமயம் சிறுமின்விசை பம்புமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

120—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3084—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியம், ஆர்.சி. முத்தனங்குப்பம் கிராமத்தில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதியைச் சேர்ந்த மாத்தூர் ஊராட்சிக்குட்பட்ட ஆர்.சி. முத்தனங்குப்பம் கிராமத்தில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1–ம், 3 சிறு மின்விசை பம்புகளும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

121—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3086—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், பூலாம்பாடி கிராமத்திற்கு 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், பூலாம்பாடி ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 3,668 ஆகும். இவ்வூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி–3, சிறுமின்விசை பம்ப்–19, கைபம்புகள்–42 ஆக மொத்தம் 64 குடிநீர் ஆதாரங்கள் உள்ளன. பூலாம்பாடி ஊராட்சியில் மேற்கண்ட விவரப்படியான குடிநீர் ஆதாரங்கள்மூலம் போதுமான அளவிற்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

122—

கூவம் ஆறு சுத்தப்படுத்துதல்

வினா எண் 3541—திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை கூவம் ஆற்றினை சுத்தப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த கூவம் நதியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டப் பணிகளுக்காக ரூ.604.77 கோடி மதிப்பிலான 60 துணைத் திட்டத்திற்கான நிருவாக அனுமதி அரசு வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2015 செப்டம்பர் 15 ஆம் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்டது. கூவம் நதி சீரமைப்பு திட்டப் பணிகள், அரசு சார் துறைகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக (0–3 ஆண்டுகள்) 60 திட்டங்கள், இரண்டாம் கட்டமாக (4–8 ஆண்டுகள்) 7 திட்டங்கள், அதன் பின்னர்

சீரமைப்புப் பணிகள் முடிவடைந்தவுடன் மூன்றாம் கட்டமாக பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மொத்தம் 8 ஆண்டிற்குள் சீரமைப்புப் பணிகளும், 3 ஆண்டிற்குள் முக்கிய பணிகளும் முடிவடையும்.

123—

சுற்றுச் சுவர்

வினா எண் 3560—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி, காஞ்சிக்குடிக்காடு தொடக்கப்பள்ளி மற்றும் வடுவூர் வடபாதி கொண்டையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி காஞ்சிக்குடிக்காடு தொடக்கப் பள்ளி, கொண்டையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணியை 2016–2017 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் அவர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

124—

தொடக்கப் பள்ளிக்குக் கட்டடம்

வினா எண் 3562—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூர் நடுத்தெரு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எடமேலையூர் நடுத்தெரு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தற்போது SSAதிட்டத்தின்கீழ் கட்டப்பட்ட புதிய பள்ளி கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, அப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட தேவை எழவில்லை.

125—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3578—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சித்தாம்பூர் ஊராட்சி, குடிதாங்கிச்சேரி வடக்குத் தெருவில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

நீடாமங்கலம் வட்டாரம், சித்தாம்பூர் ஊராட்சி, குடிதாங்கிச்சேரியில் உட்கிராமப் பகுதியில் 144 குடும்பங்கள் உள்ளன. இப்பகுதியில் பெரும்பான்மையாக ஆதி திராவிட இனத்தவர்கள் வசித்து வருகிறார்கள். சித்தாம்பூர் ஊராட்சி, குடிதாங்கிச்சேரி வடக்குத் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணிக்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

126—

கலையரங்கம் கட்டுதல்

வினா எண் 3579—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி, பல்லாக்கொல்லையில் கலையரங்கம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி, பல்லாக்கொல்லை பகுதியில் புதிய கலையரங்கக் கட்டடம் கட்ட 2016–2017 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

127—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 3620—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், தலையாமங்கலம் ஊராட்சி, சோழபாண்டியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட தலையாமங்கலம் ஊராட்சி, சோழபாண்டி அருகில் 1½ கிலோ

2018 ஜூலை 9]

மீட்டர் தொலைவில் உள்ள ஏத்தகுடியில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, சோழபாண்டியில் சமுதாயக் கூடம் கட்டத் தேவை எழவில்லை.

128—

தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 3625—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், கைனூரிலுள்ள இருளர் இன மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்ற தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், கைனூர் ஊராட்சியில் வசிக்கும் மொத்த குடும்பங்கள் 1,018 ஆகும். இங்கு வசிக்கும் இருளர் குடும்பங்கள் மொத்தம் 49 ஆகும். சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியலின்படி, இருளர் குடும்பங்கள் 36 என கணக்கிடப்பட்டுள்ளது. அதில் உள்ள 36 நபர்களுக்கும் இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளது. சொந்தமாக பட்டா பெற்றுள்ள 36 நபர்களுக்கு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

129—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3800—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சியில் மொத்தம் 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. 60,000 லிட்டர் கொள்ளளவில் நான்கும், 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலமாக மொத்தம் 3,40,000 லிட்டர் குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது.

130—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3801—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆர்.கே. பேட்டை ஊராட்சி, விளக்காணம்பூடி கிராமத்தில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சியில் விளக்காணம்பூடி கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இரண்டு, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று ஆகியவற்றின் மூலமாக மொத்தம் 1,50,000 லிட்டர் குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது.

2018 ஜூலை 9]

131—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3820—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஆவிடநல்லவிஜயபுரம் ஊராட்சி, சின்னக் குமளையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஒன்றியம், ஆவிடநல்லவிஜயபுரம் ஊராட்சியில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 6 எண்ணிக்கையும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் நான்கும் உள்ளன. இவற்றின்மூலம் தினமும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

132—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3824—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒரத்தநாடு தொகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், நா. வல்லுண்டான்பட்டு ஊராட்சி, மாப்பிள்ளைநாயக்கன்பட்டி மாதா கோயில் அருகே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், நா. வல்லுண்டான்பட்டு ஊராட்சி, மாப்பிள்ளைநாயக்கன்பட்டி மாதா கோயில் தெருவில் அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக தற்பொழுது மாதா கோயில் தெரு, மாதா கோயில் தெற்கு தெரு, அன்பு நகர், வடக்கு அம்பலக்காரத் தெரு மற்றும் மெயின் சாலை ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

133—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 4211—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, வரதப்பட்டு ஊராட்சி, மாரியம்மன் கோயில் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டாரத்தில் உள்ள வரதம்பட்டு ஊராட்சி சிவன் கோயில் தெரு, மாரியம்மன் கோயில் தெருவில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஏற்கெனவே அமைந்துள்ளது.

134—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 4221—திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்*

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, திருவத்திபுரம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

செய்யாறு தொகுதி, திருவத்திபுரம் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தினை அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

135—

ஆழ்துளைக் குழாய்க் கிணறு

வினா எண் 4767—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், நத்தம் ஊராட்சி, சின்ன சொக்கனாம்பட்டியில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து சிறுமின்விசை பம்புடன் சிறிய தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், நத்தம் ஊராட்சி, சின்னசொக்கனாம்பட்டியில் ஆழ்துளைக் கிணறுடன் சிறுமின்விசை பம்புடன் சிறிய தொட்டி அமைக்க தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை.

136—

கழிவுநீர் கால்வாய் சீரமைத்தல்

வினா எண் 4881—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி 29–வது வார்டு, கலைஞர் நகர் மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் குடிநீர் வசதி செய்யவும், கழிவுநீர் கால்வாய்களை சீரமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சி 29–வது வார்டு, கலைஞர் நகர் மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் உள்ள தெருக்களுக்கு தற்போது காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அண்ணா நகர் மற்றும் கலைஞர் நகரில் உள்ள கழிவுநீர் கால்வாய்களில் மழைக்காலங்களில் தூர் வாரும் பணிகள் JCB *இயந்திரம் கொண்டு குறிப்பிட்ட கால இடைவெளியில்* (Periodically) *தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

137—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 4883—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி 32, 33, 34, 35 மற்றும் 36 ஆகிய வார்டுகளுக்கு மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சியின் 32, 33, 34, 35 மற்றும் 36 ஆகிய வார்டுகளுக்கு வேலூர் (மேட்டூர்) கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு சீரான முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

138—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 4884—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி, கோட்டை தெருவில் 10,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தென்பெண்ணையாற்று கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சி 10–வது வார்டில் அமைந்துள்ள கோட்டை தெரு பகுதிக்கு ஏற்கெனவே பயனில் உள்ள 11.35 இலட்சம் லிட்டர் மற்றும் 10,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து போதுமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், மேலும் புதியதாக 10,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

139—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 5264—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு அறிக்கை பெறப்பட்டவுடன் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

140—

உயர் கோபுர மின்விளக்கு

வினா எண் 5374—திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சைதாப்பேட்டை தொகுதி, கோட்டூர் இரயில் நிலையம் அருகில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கோட்டூர் இரயில் நிலையம் அருகில் போதுமான இடவசதி இல்லை. அவ்விடத்தில் போதுமான தெரு மின்விளக்குகள் உள்ளன. எனவே, இவ்விடத்தில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்க இயலாது.

141—

சமுதாயக் கூடம்

வினா எண் 5426—திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

கோயம்புத்தூர் மாநகராட்சி, 64–வது வட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாநகராட்சி, சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி, வார்டு எண் 64–க்கு உட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் பொது ஒதுக்கீட்டு இடத்தில் சமுதாயக் கூடக் கட்டடம் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளது.

142—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 5666—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் நகராட்சிக்கு தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கடையநல்லூர்–புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சராசரியாக 32 இலட்சம் லிட்டர் குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கடையநல்லூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின்மூலம் 18 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

143—

சமுதாயக் கூடம்

வினா எண் 5674—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, நயினார் நகரம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நயினார் நகரம் கிராமத்தில் ஏற்கெனவே இரண்டு சமுதாய நலக் கூடங்கள் மக்கள் பயன்பாட்டில் உள்ளன. எனவே, புதிதாக சமுதாயக் கூடம் அமைப்பதற்கான தேவை எழவில்லை.

144—

நவீன உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 5686—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, 58-வது வார்டு, ஸ்டிங்கர் தெருவில் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, மண்டலம்-5, 58-வது வார்டு, ஸ்டிங்கர் தெருவில் தற்போது உடற்பயிற்சிக் கூடம்

2018 ஜூலை 9]

உபயோகத்தில் உள்ளது. எனவே, கூடுதலாக நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

145—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6011—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், நல்லநாயகபுரம் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நல்லநாயகபுரம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி TWADமூலம் 2013–2014 ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.

146—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6012—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், நாகல்குழி கிராமத்தில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நாகல்குழி உட்கிராமத்தில் TWAD மூலமாக 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

147—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6013—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், வடக்கு இரும்புலிகுறிச்சி மற்றும் பொன்பரப்பி கிராம நெசவாளர் காலனி ஆகிய பகுதிகளில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இரும்புலிக்குறிச்சி மற்றும் பொன்பரப்பி கிராம நெசவாளர் காலனி பகுதிகளில் 2002–2003 ஆம் ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட OHT, TWADமூலம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

148—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6015—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்*

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, ஆலத்தூர் வட்டம், காரை ஊராட்சி, புதுக்குறிச்சி கிராமத்தில் திறந்தவெளி கிணறு மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலத்தூர் வட்டாரம், காரை ஊராட்சி புதுக்குறிச்சியில் இரண்டு குடிநீர் கிணறுகள் உள்ளன. இப்பகுதி மக்களுக்கென 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றிலிருந்து தினசரி இரண்டு மணி நேரம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

149—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6017—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னம் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம், அணைப்பாடி கிராமத்தில் 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலத்தூர் வட்டாரம், அயினாபுரம் ஊராட்சி, அணைப்பாடி குக்கிராமத்தில் உள்ள BC *மக்களுக்கென 30,000*

லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு கொள்ளிடம் 43 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அழுந்தலைப்பூர் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆதி திராவிடர் காலனியில் அமைந்துள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு கொள்ளிடம் 306 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கருடமங்களம் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

150—

சமுதாயக் கூடம்

வினா எண் 6104—திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மாநகராட்சி, 59-வது வட்டம், எஸ்.ஐ.எச்.எஸ். காலனியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாநகராட்சி, 59-வது வட்டம், எஸ்.ஐ.எச்.எஸ். காலனியில் சமுதாயக் கூடம் அமைக்க போதிய இடவசதி இல்லை என்பதால், இப்பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்கும் திட்டம் இல்லை.

151—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 6174—திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வீரபாண்டி தொகுதி, பனமரத்துப்பட்டி ஒன்றியம், ஜல்லூத்துப்பட்டி முதல் ஐருகுமலை வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதி, பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், தும்பல்பட்டி கிராம ஊராட்சிக்குட்பட்ட ஜல்லூத்துப்பட்டி முதல் குரால் நத்தம் கிராம ஊராட்சிக்குட்பட்ட ஐருகுமலை வரை உள்ள தூரம் சுமார் 15–20 கி.மீ. ஆகும். இப்பகுதி முழுவதும் காப்புக் காடுகள் ஆகும். இதில் சாலை அமைக்கும்போது காப்புக் காட்டில் உள்ள பல நூற்றுக்கணக்கான மரங்களை அழித்த பின்னரே சாலை அமைக்க இயலும். மேலும் காப்புக் காடுகளில் தார்ச் சாலைகள் அமைக்க தேவையான நிலப்பரப்பிற்கு வனத் துறையின் உரிய அனுமதி பெறப்படுதல் வேண்டும். எனவே, போதிய நிதி ஆதாரம் இல்லாததாலும் வனத் துறை அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், மரங்களை அழிக்கும் சூழ்நிலை உள்ளதாலும் தற்போது மேற்படி சாலைப் பணியினை மேற்கொள்ள இயலாது.

152—

குடிநீர்

வினா எண் 6443—திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பெருகவாழ்ந்தான் ஊராட்சிக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பெருகவாழ்ந்தான் ஊராட்சிக்கு ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தினசரி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கத் திட்டம் செயல்படுத்தி, ஊராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டு, உள்ளாட்சிமூலம்

பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், தற்சமயம் இந்த ஊராட்சியில் மாற்றுத் திட்டமாக கொள்ளிடம் ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்ட 1,026 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

153—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 7024—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், இலால்பேட்டை பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், இலால்பேட்டை பேரூராட்சியில் பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் வெளியேறும் கழிவுநீர் ஆகியவற்றின் அடிப்படையில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

154—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 7041—டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி ஒன்றியம், பி.கொசவப்பட்டி ஊராட்சி, சிக்குபோலகவுண்டன்பட்டியில்

2018 ஜூலை 9]

30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொசவப்பட்டி ஊராட்சி, சிக்குபோலகவுண்டன்பட்டியில் மக்கள் தொகை 165 ஆகும். இங்கு முறையே 10,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை தொட்டிகள் உள்ளன. இவற்றுக்கு ஒரு ஆழ்குழாய்மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு, குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

155—

தரம் உயர்த்துதல்

வினா எண் 7289—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

156—

பல் மருத்துவமனை மீண்டும் செயல்படுத்துதல்

வினா எண் 7302—திரு. ஆர். நடராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

மயிலாப்பூர் தொகுதி, மயிலாப்பூர் சி.பி. ராமசாமி சாலையில் இயங்கி வந்த மாநகராட்சி பல் மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

மயிலாப்பூர் தொகுதி, மயிலாப்பூர் சி.பி. ராமசாமி சாலையில் இயங்கி வந்த மாநகராட்சி பல் மருத்துவமனை உட்பட, 15 பல் மருத்துவமனைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட பல் மருத்துவர்கள் பணி நிரந்தரம் கோரி தொடர்ந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், உயர் நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப மருத்துவமனைகள் தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

157—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 7459—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி, 2–வது வார்டு பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் விடுபட்டுபோன வார்டு எண் 2–ல் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டி நகர்மன்ற தீர்மானம் எண் 70, நாள் 30–8–2016–ல்

2018 ஜூலை 9]

நிறைவேற்றி ஒப்புதல் கடிதமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. எனவே, இந்நகராட்சியில் 2017 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாத இறுதிக்குள் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

158—

காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 7816—திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மதுரை கிழக்கு தொகுதியில் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 11 வார்டுகளில், 8 வார்டு பகுதிகளில் ஏற்கெனவே காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள 3 வார்டு பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய குழாய் மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

159—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 7877—திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் தொகுதி, தெற்கு பிச்சாவரத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தெற்கு பிச்சாவரத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ரூ.11.80 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

160—

சுற்றுச் சுவர்

வினா எண் 8366—திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சி, அம்பேத்கர் காலனியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சி, அம்பேத்கர் காலனியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.3.20 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்ட திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

2018 ஜூலை 9]

161—

சாலை சீரமைத்தல்

வினா எண் 8443—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, பிரம்மகுண்டம்–ராவத்தநல்லூர் சாலையை நெடுஞ்சாலைத் துறைமூலம் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிரம்மகுண்டம்–ராவத்தநல்லூர் சாலை நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலை அல்ல. அச்சாலை சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலையாகும். இச்சாலையானது ஊரக உட்கட்டமைப்பு திட்டம் (RIS) *2014–2015 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. இச்சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளது. எனவே, இச்சாலையினை நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பராமரிக்க அவசியம் எழவில்லை.*

162—

கலையரங்கம் கட்டுதல்

வினா எண் 8870—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமயம் தொகுதி, தேனூர் ஊராட்சி, கருகப்பூலாம்பட்டி மற்றும் தேனூரில் கலையரங்கம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், தேனூர் ஊராட்சி, கருகப்பூலாம்பட்டி மற்றும் தேனூர் பகுதிகளில் 2012–2013 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கலையரங்கம் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

163—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 9085—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், காக்கணாம்பாளையம் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், காக்கணாம்பாளையம் ஊராட்சி, ராமசாமி நகர் மற்றும் காலனி ஆகிய பகுதிகளில் கூடுதல் ஆழ்துளைக் கிணறு, மோட்டார் பைப்புடன் 2016 ஆம் ஆண்டு நிதிக் குழு மானியத்தில் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

164—

மேம்பாலம்

வினா எண் 9423—திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்*

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளிமலை ஊராட்சி ஒன்றியம், வஞ்சிக்குழி ஊராட்சி, பாப்பாத்திமூலை கிராமத்தில் உள்ள ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, வெள்ளிமலை ஊராட்சி ஒன்றியம், வஞ்சிக்குழி ஊராட்சி, பாப்பாத்திமூலை கிராமம் சென்றடையும் வரை ஆறுகள் ஏதும் குறுக்கிடவில்லை. பாப்பாத்திமூலை குக்கிராமத்தை அடுத்துதான் ஆறு அமையப் பெற்றிருக்கிறது. ஆற்றின் மறுபக்கம் சாலை ஏதும் அமையப் பெறாததால், மேற்படி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அவசியம் எழவில்லை.

165—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 9484—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழனி தொகுதி, பழனி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 492, நாள் 19–9–2013–ன்படி

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.4,915 இலட்சத்திற்கு பகுதி நிதி ஆதாரம் பெறப்பட்டுள்ளது. மேலும், தற்பொழுது ரூ.10,454 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்ட நிலையில், நிருவாக அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தென்மண்டல பசுமைத் தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட வழக்கில் திடக்கழிவு சேகரம் செய்யும் பணியைத் தவிர கட்டுமானப் பணிகள் ஏதும் செய்யக் கூடாது என்று தடையுத்தரவு உள்ளதால் இதன் மீதான தீர்ப்பிற்குப் பிறகு மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

166—

மின் மயானம்

வினா எண் 9542—திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை வேளச்சேரி தொகுதி, தரமணி சாலையிலுள்ள மயானத்தை மின் மயானமாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

வேளச்சேரி தொகுதி, வேளச்சேரி தரமணி 100 அடி பெருநகர சென்னை மாநகராட்சி மயான பூமியில் எரிவாயு (Gasifer) முறையில் தகனம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இங்கு மாதத்திற்கு 10 முதல் 15 வரையிலான சடலங்கள் எரியூட்டப்பட்டு வருகின்றன. இதனருகில் வேளச்சேரி பிரதான சாலையில் (குருநானக் கல்லூரி அருகாமையில்) உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மயானபூமி மின் மயான பூமியாக செயல்பட்டு வருகிறது.

167—

கலையரங்கம் கட்டுதல்

வினா எண் 9652—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, கம்பநேரி அருகிலுள்ள ஆவுடையாள்புரம் கிராமத்திற்கு கலையரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கம்பநேரி ஊராட்சி, ஆவுடையாள்புரம் கிராமத்தில் கலையரங்கம் கட்டுவதற்கு ஊராட்சிக்கு சொந்தமான அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லாததால் மேற்படி கிராமத்தில் கலையரங்கம் அமைக்க இயலவில்லை.

168—

கற்காரை சாலை அமைத்தல்

வினா எண் 10510—திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறைமுகம் தொகுதி, வெங்கட அய்யர் தெருவில் கற்காரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

துறைமுகம் தொகுதி, வெங்கட அய்யர் தெருவில் 24–9–2016 அன்று சிமெண்ட் சாலை போடப்பட்டு பணி நிறைவு செய்யப்பட்டது.

169—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 11934—திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

சங்கராபுரம் தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், தாவடிப்பட்டு சேஷசமுத்திரம் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

சங்கராபுரம் தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், தாவடிப்பட்டு–சேஷசமுத்திரம் ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே மேம்பாலம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளமையால், புதிய மேம்பாலம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

170—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 11936—திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலையில் உள்ள மோட்டாம்பட்டி மற்றும் கூடலூர் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலையில் உள்ள மோட்டாம்பட்டி மற்றும் கூடலூர் ஆற்றின் குறுக்கே தற்போது தரைப்பாலம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளமையால், இவ்வாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

171—

சிலை அமைத்தல்

வினா எண் 12073—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்*

2018 ஜூலை 9]

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி பேருந்து நிலையத்தில் தியாகி வ.உ. சிதம்பரானாருக்கு சிலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 221, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20–11–1998–ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சிலை, நினைவுத் தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை அமைப்பதற்கு அரசின் ஒப்புதல் பெறவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது உச்ச நீதிமன்றம், மேல்முறையீட்டு மனு எண் 8519/2006–ல் 18–1–2013 நாளிட்ட தனது இடைக்கால தீர்ப்பில் பொது சாலைகள், சாலை சந்திப்புகள், சாலை பக்கவாட்டில் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்களில் எவ்வித சிலைகளும் அமைக்கக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்துள்ளதால், மேற்படி வழக்கில் இறுதி தீர்ப்பு பெறப்பட்ட பின்பு பழனி பேருந்து நிலையத்தில் தியாகி வ.உ. சிதம்பரனாருக்கு சிலை அமைக்க பரிசீலிக்கப்படும்.

172—

சாலை அமைத்தல்

வினா எண் 12238—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி–அனந்தபுரம் சாலையிலிருந்து, அணையேரி–சிவகிரி–மாத்தூர் வழியாக சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி ஊராட்சி ஒன்றியம், செஞ்சி–அனந்தபுரம் சாலையிலிருந்து அணையேரி–சிவகிரி சாலை (Road Code No. 5) *மொத்த நீளம் 620 மீட்டர். இதில் தற்போது 581 மீட்டர் வரை சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதாவது, 0–180 மீட்டர் வரை சிமெண்ட் சாலை மற்றும் 180–581 மீட்டர் வரை 'தாய்' திட்டத்தில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 39 மீட்டர் மட்டுமே மண் சாலையாக உள்ளது. மேலும், இந்த சாலை குக்கிராமத்தை இணைக்காமல் மலையின் நடுவில் முடிவுற்றுள்ளதால் மேற்கண்ட சாலையை மேம்படுத்த போதுமான நீளம் இல்லை.*

173—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 12963—திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யாறு தொகுதி, அப்துல்லாபுரம் ஊராட்சி, ராஜீவ் காந்தி நகர் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் அப்துல்லாபுரம் ஊராட்சி ராஜீவ் காந்தி நகர் மக்களுக்கு ஊராட்சியின் வேறு பகுதியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பைப்லைன் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

174—

மருத்துவமனை புதுப்பித்தல்

வினா எண் 14007—திரு. கு.க. செல்வம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*

2018 ஜூலை 9]

செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, மண்டலம்–9, வார்டு–111, பேகம் சாகிப் தெருவில் உள்ள மாநகராட்சி மருத்துவமனையை புதுப்பித்து மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின்கீழ் (National Urban Health Mission) *50 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார மையம் என்ற அடிப்படையில் செயல்பட்டுவருகிறது. அதனடிப்படையில், வார்டு–111–ல் எண் 83, அஜிஸ்முல்க் 2–வது தெரு, ஆயிரம் விளக்கு, சென்னை–6 என்ற முகவரியில் இயங்கி வருகிறது. எனவே, பேகம் சாகிப் தெருவில் உள்ள மாநகராட்சி மருத்துவமனையை புதுப்பித்து மீண்டும் திறக்கும் திட்டம் தற்போது இல்லை.*

175—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 14039—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 191–வது வட்டம், ஜல்லடியான்பேட்டை, திருவள்ளுவர் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின்கீழ் (National Urban Health Mission) *50 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார மையம் என்ற அடிப்படையில் செயல்பட்டுவருகிறது. அதனடிப்படையில், பெருங்குடி மண்டலம் (சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி) 191—வது வட்டம், ஜல்லடியான்பேட்டை, திருவள்ளுவர் நகரில் நகர ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 27—3—2014 முதல் செயல்பட்டுவருகிறது.*

176—

சமுதாயக் கூடம்

வினா எண் 15042—திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டபட்டினத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டபட்டினம் ஊராட்சியில் சமுதாய நலக் கூடம் 1996—1997 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், 2013—2014 ஆம் ஆண்டு ஊரக கட்டடங்கள் மற்றும் பராமரிப்பு திட்டத்தின்கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் நடைபெறும் சமுதாய விழாக்களும், சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்று வருகின்றன. இதனால் 370—க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன.

2018 ஜூலை 9]

177—

ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்

வினா எண் 15067—திரு. அ. பிரபு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி தொகுதியிலுள்ள கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய கட்டடம் 2004–2005 ஆம் ஆண்டில் SGSY Infra *திட்டத்தின்கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டது. இவ்வலுவலகக் கட்டடம் முழுமையாக புதுப்பிக்கப்பட்டு, 11 ஆண்டுகளே கடந்துள்ளன. தற்போது, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.*

178—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 16271—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, 26–வது மற்றும் 32–வது வார்டுகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின்கீழ் (National Urban Health Mission) *50 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார மையம் என்ற அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட 26–வது வார்டில், எண் 47, சாமி நகரில் ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையமும், வார்டு–32–ல் லட்சுமிபுரம், எண் 32, கங்கையம்மன் கோயில் தெருவில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன.*

179—

வாய்க்கால் சீரமைத்தல்

வினா எண் 16958—திருமதி ப. சத்யா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் உள்ள கழிவுகளை வெளியேற்றும் வாலாஜா வாய்க்காலை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

பண்ருட்டி நகராட்சி 33 வார்டுகளை கொண்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 60,100; மொத்த குடியிருப்புகள் 15,666. மேலும், இந்நகரில் முந்திரி பதப்படுத்தும் தொழில்கள் நடைபெற்று வருகின்றன. இந்நகராட்சி பகுதிகளில் வசிக்கும் மக்களின் அன்றாட கழிவுநீர், மழைக்காலங்களில் பெய்யும் மழைநீர் போன்றவை அனைத்தும் பொதுப் பணித் துறைக்கு சொந்தமான வாலாஜா வாய்க்கால் வழியாகத்தான் ஓடிக் கொண்டிருக்கின்றன. மேற்கண்ட வாலாஜா வாய்க்கால்

2018 ஜூலை 9]

பொதுப் பணித் துறைக்கு சொந்தமானது என்றாலும், நகராட்சி எல்லைக்குள் வருவதால் நகராட்சியே இதன் மொத்த பராமரிப்புப் பணிகளையும் செய்து வருகிறது. மேலும், கடந்த பல ஆண்டுகளாக நகராட்சியின் மூலமாகத்தான் மழைக்காலங்களில் இந்தக் கால்வாய் தூர் வாரப்பட்டு நகராட்சி பராமரிப்பில் இருந்து வருகிறது. இந்நிலையில் பண்ருட்டி நகர மக்களின் பொது சுகாதாரம் கருதி, வாலாஜா வாய்க்காலை வருடா வருடம் நகராட்சிமூலம் தூர் வாரும் பணி செய்யப்பட்டு வருகிறது.

180—

சமுதாயக் கூடம்

வினா எண் 22523—திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மாநகராட்சி, 39–வது வட்டம், பூளைமேடு சாந்தி நகரில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், 39–வது வட்டம், பூளைமேடு சாந்தி நகரில் உள்ள பொது ஒதுக்கீடு இடமானது குறைந்த பரப்பில் உள்ளது. மேலும், தற்போது இட ஒதுக்கீட்டில் பெரும் பரப்பிலான இடத்தில் பொது மக்களின் பொது பயன்பாட்டுக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. எனவே, சமுதாயக் கூடம் கட்டுவதற்கு போதுமான இட வசதி இல்லை.

181—

இணைப்புப் பாலம் கட்டுதல்

வினா எண் 24283—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வரகரவயல்—பெரம்பூர் இடையே இணைப்புப் பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பெரம்பூர் ஊராட்சியை இணைக்க ஏற்கெனவே நடைபாலம் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. மேலும், கனரக போக்குவரத்து வாகனங்கள் இயக்கிடும் நிலை இல்லை. எனவே, புதிய இணைப்புப் பாலம் கட்டும் அவசியம் எழவில்லை.

182—

நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 438—திரு. சு. ரவி: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் சார்பு நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

அரக்கோணம் சார்பு நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

183—

நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 756—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூரிலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

உத்திரமேரூரிலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

184—

சட்டக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 782—டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, கூட்டேரிப்பட்டில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

185—

நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 4671—திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வானூர் வட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 8000—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், சங்கிலிக்குப்பம் ஊராட்சி, சங்கிலிக்குப்பம்–பி அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், சங்கிலிக்குப்பம் ஊராட்சி, சங்கிலிக்குப்பம்–பி அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு முதல் அரசு இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையத்திற்கென சொந்தக் கட்டடம் கட்ட 2015–2016 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சியரால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, தற்பொழுது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

73—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 8001—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அன்னமங்கலம் ஊராட்சி, அன்னமங்கலம்–பி அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அன்னமங்கலம் ஊராட்சி, அன்னமங்கலம்–பி அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு முதல் வாடகையில்லா அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கென சொந்தக் கட்டடம் கட்ட நத்தம் புறம்போக்கு சர்வே எண் 238–ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

74—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 8002—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அவலூர்பேட்டை ஊராட்சி, அவலூர்பேட்டை–5 அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டாரம், அவலூர்பேட்டை ஊராட்சி, அவலூர்பேட்டை–5 அங்கன்வாடி மையம் 2010 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கென சர்வே எண் 7/539–ல் நிலம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

75—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 8004—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், துறிஞ்சிப்பூண்டி ஊராட்சி, மேல்மன்னூர்–பி அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், துறிஞ்சிப்பூண்டி ஊராட்சி, மேல்மன்னூர்–பி அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு முதல் அரசு வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கென சொந்தக் கட்டடம் கட்ட 2015–2016 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியரால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, தற்பொழுது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

76—

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 8780—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்தி-வேலூர் வட்டம், கபிலர்மலை ஒன்றியம், கபிலர்மலையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் என்பது மத்திய அரசின் திட்டமாகும். மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்களுக்கான வாடகைத் தொகை, மத்திய மற்றும் மாநில அரசின் நிதிப் பங்களிப்பு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறே, பரமத்தி-வேலூர் வட்டம், கபிலர்மலை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகமும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.

77—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 11624—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், சோழபுரம் ஊராட்சி, சோழபுரம் மேற்கு அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி, ஒரத்தநாடு வட்டாரத்தைச் சேர்ந்த சோழபுரம் ஊராட்சிக்குட்பட்ட சோழபுரம் மேற்கு அங்கன்வாடி மையம் 1–7–1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தற்போது அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சர்வே எண் 272/3–ல் நிலம் தேர்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

78—

குழந்தைகள் காப்பகம் அமைத்தல்

வினா எண் 16348—திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தாலுகாவில் அரசினர் குழந்தைகள் இல்லம் ஒன்று தற்போது செயல்பட்டு வருகின்றது. இவ்வில்லத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 100 ஆகும். 19–1–2017 அன்றுள்ளவாறு, இவ்வில்லத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 53 சிறுமிகள் மற்றும் 2 சிறுவர்கள் ஆவர். மேலும், இவ்வில்லத்தில் குழந்தைகளை அனுமதிக்க போதிய உட்கட்டமைப்பு வசதிகளும் உள்ளன. இதுமட்டுமின்றி, திருநெல்வேலி மாவட்டத்தில், சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ், பின்வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மானியம் பெற்று செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	19–1–2017 அன்றைய நிலவரப்படி குழந்தைகளின் எண்ணிக்கை
1.	திருநெல்வேலி சோசியல் சர்வீஸ் சொசைட்டி	46
2.	அவ்வை ஆஸ்ரமம் குழந்தைகள் இல்லம்	46

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	*19—1—2017* அன்றைய நிலவரப்படி குழந்தைகளின் எண்ணிக்கை
3.	பரிசுத்த குடும்ப இல்லம்	*112*
4.	செயின்ட் தாமஸ் குழந்தைகள் இல்லம்	*138*
5.	செயின்ட் ஜோசப் காப்பகம்	*23*
6.	வின்சன்ட் இல்லம்	*50*
7.	ஸ்ரீகன்னியாகுமரி குருகுலம்	*67*
8.	லிட்டில் ப்ளவர் குழந்தைகள் இல்லம்	*25*

எனவே, தற்போது திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் குழந்தைகள் காப்பகம் அமைப்பதன் அவசியம் ஏதும் இல்லை.

79—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 18639—திரு. அ. பிரபு: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், இந்திலி, புக்கிரவாரி ஆகிய ஊராட்சிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், இந்திலி ஊராட்சியில் இந்திலி மற்றும் இந்திலி காலனி என இரண்டு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்திலி மையம் 1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, அதில் செயல்பட்டு வருகிறது. தற்போது இம்மையக் கட்டடம் பழுதடைந்துள்ளதால், கட்டடத்தின் மற்றொரு பகுதியில் (கூடம்) மையம் செயல்பட்டு வருகிறது. பழுதடைந்த இம்மையக் கட்டடத்தின் பழுதுகளை சீர் செய்வதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திலி காலனி அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, 1997 ஆம் ஆண்டு புதிய கட்டடம் கட்டப்பட்டு நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், புக்கிரவாரி ஊராட்சியில், புக்கிரவாரி–1, புக்கிரவாரி–2, புக்கிரவாரி புதூர் மற்றும் புக்கிரவாரி சாவடி என நான்கு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

புக்கிரவாரி–1 அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அரசு இலவச கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையத்திற்கென புதிய கட்டடம் 1985 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, அதில் செயல்பட்டு வருகிறது.

புக்கிரவாரி–2 அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புக்கிரவாரி புதூர் அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையத்திற்கென புதிய கட்டடம் கட்டப்பட்டு, மார்ச் 2017 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

புக்கிரவாரி சாவடி அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையத்திற்கென புதிய கட்டடம் கட்டப்பட்டு, மார்ச் 2011 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இந்திலி ஊராட்சியில் செயல்படும் இந்திலி காலனி அங்கன்வாடி மையம் மற்றும் புக்கிரவாரி ஊராட்சியில் செயல்படும் புக்கிரவாரி–1, புக்கிரவாரி புதூர் மற்றும் புக்கிரவாரி சாவடி ஆகிய மையங்கள் அரசு சொந்தக் கட்டடங்களில் நல்ல நிலையில் செயல்பட்டு வருவதால், புதிய கட்டடங்கள் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

80—

அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடம்

வினா எண் 18641—திரு. அ. பிரபு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வினைதீர்த்தாபுரம், சிறுமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வினைதீர்த்தாபுரம் ஊராட்சியிலுள்ள வினைதீர்த்தாபுரம் அங்கன்வாடி மையம் 1990 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அரசுக் கட்டடத்தில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.*

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சிறுமங்கலம் ஊராட்சியில் சிறுமங்கலம்–1 மற்றும் சிறுமங்கலம்–2 என இரண்டு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. சிறுமங்கலம்–1 அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தனியார் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையத்திற்கு 1990 ஆம் ஆண்டு

புதிய கட்டடம் கட்டப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. சிறுமங்கலம்–2 அங்கன்வாடி மையம் ஆகஸ்ட் 1993–ல் துவங்கப்பட்டு, அரசு சொந்தக் கட்டடத்தில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இம்மையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

81—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 19191—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கீழப்பழையார் ஊராட்சி, கீழப்பழையாரிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கீழப்பழையார் ஊராட்சி, கீழப்பழையார் அங்கன்வாடி மையம் 1–7–1982–ல் தொடங்கப்பட்டு, அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையத்திற்கு கடந்த 2014–2015 ஆம் நிதியாண்டில் ரூ.50,000/– செலவில் பழுதுகள் நீக்கம் செய்து புதுப்பிக்கப்பட்டு, தற்போது மையம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

82—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 20155—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், இடைக்கழிநாடு பேரூராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் கோட்டைக்காடு–2 மற்றும் கோட்டைக்காடு–3 ஆகிய அங்கன்வாடி மையங்கள் முறையே 1988 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டு, அரசுக் கட்டடங்களில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகின்றன. எனவே, இங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

83—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 20156—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, நைனார்குப்பம் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, சித்தாமூர் வட்டாரம், இடைக்கழிநாடு பேரூராட்சி, நைனார்குப்பம் பகுதியில் ஏற்கெனவே 1982 ஆம் ஆண்டு அங்கன்வாடி மையம் அமைக்கப்பட்டு, அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையக் கட்டடம் பழுதடைந்துள்ளதால், கட்டடத்தின்

மற்றொரு பகுதியில் மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2017–2018 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, புதிய மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

84—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 20157—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், கடலூர் ஊராட்சி, தோப்பு தெரு கிராமத்திற்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், கடலூர் ஊராட்சி, தோப்பு தெரு கிராமத்தில் 2016 ஆம் ஆண்டு அங்கன்வாடி மையம் தொடங்கப்பட்டு, அரசுக் கட்டடத்தில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

85—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 20165—திரு. அ. பிரபு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சிறுவங்கூர் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சிறுவங்கூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு முதல் சமுதாயக்கூட கட்டடத்தில் இலவசமாக செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கெனவே அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருவதால், புதிய மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

86—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 20750—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, ஆணைக்காரன்பாளையத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, ஆணைக்காரன்பாளையத்தில் அங்கன்வாடி மையம் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தனியார் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்டும்பொருட்டு, இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2018 ஜூலை 9

87—

சத்துணவு சமையற்கூடம் கட்டுதல்

வினா எண் 20758—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, சோலையப்பன் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் சத்துணவு சமையற்கூடம் புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, சோலையப்பன் தெரு பகுதியில் நகராட்சி கட்டுப்பாட்டில் தொடக்கப் பள்ளி மட்டுமே உள்ளது. கும்பகோணம் நகராட்சி, சோலையப்பன் தெருவில் நகராட்சி நடுநிலைப் பள்ளி இல்லாததால், சத்துணவு சமையற்கூடம் கட்டும் நிலைப்பாடு எழவில்லை.

88—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 20763—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், சோழபுரம் பேரூராட்சி, தோப்புத் தெருவிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், சோழபுரம் பேரூராட்சி, தோப்புத் தெருவில்

2018 ஜூலை 9]

அங்கன்வாடி மையம் எதுவும் செயல்படவில்லை. ஆனால், இத்தெருவிற்கு அடுத்த தெருவில் (மேலத் தெரு) அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தோப்புத் தெருவில் உள்ள பயனாளிகள் அனைவரும் மிக அருகிலுள்ள மேலத் தெருவில் உள்ள மையத்தின்மூலம் பயனடைந்து வருகின்றனர். எனவே, தோப்புத் தெருவில் அங்கன்வாடி மையம் எதுவும் செயல்படவில்லை என்பதால், சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற வினா எழாது.

89—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21036—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், பெருங்காடு ஊராட்சி, மஞ்சக்கரை கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், பெருங்காடு ஊராட்சி, மஞ்சக்கரை கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் மார்ச் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அரசு வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை. இருப்பினும், இலவசக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

90—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21038—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், பொன்பேத்தி ஊராட்சி, இறையாமங்கலம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், பொன்பேத்தி ஊராட்சி, இறையாமங்கலம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் டிசம்பர் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

91—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21039—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கதிராமங்கலம் ஊராட்சி, சாத்தியடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கதிராமங்கலம் ஊராட்சி, சாத்தியடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் டிசம்பர் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில்

2018 ஜூலை 9]

செயல்பட்டு வருகிறது. வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

92—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21040—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், களபம் ஊராட்சி, கோதைமங்கலம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், களபம் ஊராட்சியில் கோதைமங்கலம் கிராமம் உள்ளதாக வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கரூர் ஊராட்சியில்தான் கோதைமங்கலம் கிராமம் உள்ளது. அக்கிராமத்தில் அங்கன்வாடி மையம் டிசம்பர் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அரசு வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை. இருப்பினும், இலவசக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

93—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21046—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், காவதுகுடி ஊராட்சி, பெரியபட்டமங்கலத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், காவதுகுடி ஊராட்சி, பெரியபட்டமங்கலம் அங்கன்வாடி மையம் டிசம்பர் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

94—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21764—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அத்தாணி ஊராட்சி, கலக்கமங்கலம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அத்தாணி ஊராட்சி, கலக்கமங்கலம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் மார்ச் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

2018 ஜூலை 9]

வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

95—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21765—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், பெருங்காடு ஊராட்சி, பெருங்காடு கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், பெருங்காடு ஊராட்சி, பெருங்காடு அங்கன்வாடி மையம் பிப்ரவரி 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அரசு வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை. இருப்பினும், வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

96—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21768—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ரெத்தினக்கோட்டை ஊராட்சி, ரெத்தினக்கோட்டை கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ரெத்தினக்கோட்டை ஊராட்சி, ரெத்தினக்கோட்டை கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கான கட்டடம் 2014–2015 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகளின்படி கட்டி முடிக்கப்பட்டு, மார்ச் 2017 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

97—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21772—திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், விளானூர் ஊராட்சி, கானூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், விளானூர்

2018 ஜூலை 9]

ஊராட்சி, கானூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் டிசம்பர் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

98—

சத்துணவு சமையற்கூடம் கட்டுதல்

வினா எண் 21786—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, சோலையப்பன் தெரு நகராட்சி தொடக்கப் பள்ளியில் சத்துணவு சமையற்கூடம் புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, சோலையப்பன் தெரு நகராட்சி தொடக்கப் பள்ளிக்கு, நகராட்சி கல்வி நிதியிலிருந்து கூடுதலாக புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில், சத்துணவு மைய சமையற்கூடம் கட்ட போதுமான இட வசதி இல்லை. எனினும், தொடக்கப் பள்ளிக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதியில் சத்துணவு மைய சமையற்கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) வரும் நிதியாண்டில் கட்டப்படும்.

99—

எத்தனால் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 93—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

(அ) கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையிலுள்ள கரும்புச் சக்கையை பயன்படுத்தி எத்தனால் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையிலுள்ள கரும்புச் சக்கையை பயன்படுத்தி எத்தனால் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

100—

தொழில் துவங்குதல்

வினா எண் 135—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, போலுப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள சிப்காட் வளாகத்தை தொழில் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கீடு செய்து தொழில் துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, போலுப்பள்ளியில் சிப்காட் தொழில் வளாகம் எதுவும் இதுவரை அமைக்கப்படவில்லை. ஆனால், கிருஷ்ணகிரி மாவட்டம், போலுப்பள்ளியிலிருந்து 38 கி.மீ. தொலைவில் ஓசூர் தொழில் வளாகம் நிலை–1 மற்றும் நிலை–2 செயல்பட்டு வருகின்றன. ஓசூர் தொழில் வளாக விரிவாக்கமாக நிலை–3 மற்றும் நிலை–4 ஆகியவற்றிற்கான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், போலுப்பள்ளியையொட்டியுள்ள (3 கி.மீ.) குருபரபள்ளியிலும் சிப்காட் தொழில் வளாகம் ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2018 ஜூலை 9]

101—

சிப்காட் வளாகம் துவக்குதல்

வினா எண் 139—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடியில் புதிய சிப்காட் வளாகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடியில் புதிய சிப்காட் வளாகம் துவக்கும் திட்டம் அரசிடம் தற்சமயம் இல்லை.

102—

இணை மின் உற்பத்தித் திட்டம் துவக்குதல்

வினா எண் 240—திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 1–ல் இணை மின் உற்பத்தி திட்டத்தைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

ஆம். விழுப்புரம் மாவட்டம், மூங்கில்துறைப்பட்டில் செயல்படும் கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.84.12 கோடி செலவில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) மூலம் இணை மின் திட்டப் பணிகள் திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்றுவருகின்றன.

103—

மெட்ரோ இரயில் திட்டம் தாம்பரம் வரை நீட்டித்தல்

வினா எண் 456—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை தாம்பரம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில மொத்தம் 45.1 கி.மீ. நீளத்திற்கான வழித்தடங்கள் தற்போது செயல்படுத்தப்படுகிறது. வழித்தடம்–1 வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரையிலும், வழித்தடம்–2 சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரையிலும் அமைகிறது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டம் மாநில அரசால் நவம்பர் 2007–லும், மத்திய அரசால் பிப்ரவரி 2009–லும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. உயர்த்தப்பட்ட வழித்தடங்களின் கட்டுமானம் மற்றும் அமைப்புகள் சார்ந்த பணிகள் முடிவுற்ற நிலையில், உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியான கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை (10.15 கி.மீ.) பயணிகள் சேவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29–6–2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மீதமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியான சின்னமலை முதல் விமான நிலையம் வரை விரைவில் துவக்கப்படவுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் மேலும் மூன்று வழித்தடங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த இரண்டாம் கட்டத்திலும் விமான நிலையம் முதல் தாம்பரம் வரையிலான பகுதி சேர்க்கப்படவில்லை.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை தாம்பரம் வரை நீட்டிக்கும் கருத்து அரசிடம் தற்போது ஏதுமில்லை.

104—

கரும்பு சக்கையிலிருந்து எத்தனால் தயாரித்தல்

வினா எண் 839—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜுலை 9]

(அ) ஒரத்தநாடு தொகுதி, குருங்குளம் அறிஞர் அண்ணா அரசு சர்க்கரை ஆலையில் கரும்பு சக்கையிலிருந்து எத்தனால் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரும்புச் சக்கையிலிருந்து (Bagasse) *எத்தனால் தயாரிக்கப்படுவதில்லை. கரும்பு கசண்டு/கழிவுப் பாகில்* (Molasses) *இருந்துதான் எத்தனால் தயாரிக்கப்படுகிறது. ஒரத்தநாடு தொகுதி, குருங்குளம், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரை கரும்பு கசண்டில்* (Molasses) *இருந்து நாள் ஒன்றுக்கு 45 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் தயாரிக்கும் ஆலை அமைக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதற்கான வங்கிக் கடன் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

105—

சிப்காட் தொழில் வளாகப் பணிகளை விரைவுபடுத்துதல்

வினா எண் 1172—திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழில் வளாகம் அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழில் வளாகம் அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த அரசால் தேவையான தகுந்த ஆலோசனைகள்/உத்தரவுகள் அவ்வப்போது மாவட்ட நிருவாகத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

106—

உப்பு தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 1531—திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மரக்காணம் பகுதியில் தயாராகும் உப்புகளை அரசே கொள்முதல் செய்து, அயோடின் கலந்த உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மரக்காணம் பகுதியில் தயாராகும் உப்புகளை அரசே கொள்முதல் செய்து, அயோடின் கலந்த உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்சமயம் இல்லை.

107—

கல் குவாரிகள் குத்தகைக்கு விடுதல்

வினா எண் 1597—திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல் குவாரிகள் குத்தகைக்கு விடும் முறையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களிலுள்ள கற்களை (Rough Stone) *குத்தகை உரிமம் வழங்குவதற்கு எந்தத் தடையும் நடைமுறையில் இல்லை.*

108—

மெட்ரோ இரயில் திட்டம் தாம்பரம் வரை நீட்டித்தல்

வினா எண் 1906—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை பல்லாவரம், குரோம்பேட்டை வழியாக தாம்பரம் வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் மொத்தம் 45.1 கி.மீ. நீளத்திற்கான வழித்தடங்கள் தற்போது செயல்படுத்தப்படுகிறது. வழித்தடம்–1 வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரையிலும், வழித்தடம்–2 சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரையிலும் அமைகிறது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டம் மாநில அரசால் நவம்பர் 2007–லும், மத்திய அரசால் பிப்ரவரி 2009–லும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. உயர்த்தப்பட்ட வழித்தடங்களின் கட்டுமானம் மற்றும் அமைப்புகள் சார்ந்த பணிகள் முடிவுற்ற நிலையில் உயர்த்தப்பபட்ட வழித்தடப் பகுதியான கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை (10.15 கி.மீ.) பயணிகள் சேவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29–6–2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மீதமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியான சின்னமலை முதல் விமான நிலையம் வரை விரைவில் துவக்கப்படவுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் மேலும் மூன்று வழித்தடங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த இரண்டாம் கட்டத்திலும் விமான நிலையம் முதல் தாம்பரம் வரையிலான பகுதி சேர்க்கப்படவில்லை.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை பல்லாவரம், குரோம்பேட்டை வழியாக தாம்பரம் வரை நீட்டிக்கும் கருத்துரு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

109—

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 2192—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதியில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதியில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது டிட்கோ வசம் இல்லை.

இருப்பினும், தகுந்த தொழில் முனைவோர்கள் குளச்சல் தொகுதியில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்திற்கான செயற்குறிப்புகள் மற்றும் தேவையான நிதி ஆதாரங்களுடன் முன்வந்தால் டிட்கோ அவர்களுடன் இணைந்து சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து இத்திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

110—

சிப்காட் பணிமனைக்கு உட்கட்டமைப்பு வசதிகள்

வினா எண் 18150—திரு. சு. ரவி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் சிப்காட் பணிமனைக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணத்திலிருந்து 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிப்காட் ராணிப்பேட்டை தொழில் வளாகத்தில் 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.21.67 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகளான சாலை, மழைநீர் வடிகால், குடிநீர் மற்றும் தெரு விளக்குகள் ஆகியன உலகத் தரத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் சிப்காட் தொழில் வளாகம் இல்லை. ஆனால், சிட்கோ தொழிற்பேட்டை

அமைந்துள்ளது. மத்திய அரசின் குறு, சிறு நிறுவனங்கள் குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2010 ஆம் ஆண்டு அரக்கோணத்தில் புதிய தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.220 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசின் மானியம் ரூ.65.14 இலட்சம் பெறப்பட்டு, 31–12–2012 அன்று உட்கட்டமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு, 149 தொழில் மனைகள் மற்றும் 13 தொழிற்கூடங்கள் உருவாக்கப்பட்டு, தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுவருகிறது.

111—

சிப்காட் தொழிற்பேட்டை துவக்குதல்

வினா எண் 20980—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை துவங்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

112—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 262—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், தேவங்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவங்குடி கிராமத்தின் சரியான பெயர் புதுதேவன்குடி கிராமம் என்பதாகும்.

புதுதேவன்குடி கிராமம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,27,520. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், புதுதேவன்குடி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் பொதக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், புதுதேவன்குடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

113—

மருத்துவர் நியமித்தல்

வினா எண் 266—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், திருமக்கோட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேரமும் பணியாற்றும் வகையில் மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

திருவாரூர் சுகாதாரப் பகுதி, கோட்டூர் வட்டாரத்தில் அமைந்துள்ள திருமக்கோட்டை பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 5 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, 5 மருத்துவ அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக இல்லை. மேலும், 5 மருத்துவ அலுவலர்களும் இருப்பிலுள்ள நிலையில், 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

114—

மகப்பேறு பிரிவுக்கு உபகரணங்கள் வழங்குதல்

வினா எண் 267—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், கோவில்வெண்ணியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு பிரிவுக்கு போதிய உபகரணங்கள் மற்றும் தடுப்பூசிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், கோவில்வெண்ணியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மகப்பேறு பிரிவுக்கு போதிய உபகரணங்கள் மற்றும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

115—

தலைமை மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்கள், கட்டடம், உபகரணங்கள் வழங்குதல்

வினா எண் 269—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் துறைவாரியாக சிறப்பு மருத்துவர்களை நியமிக்கவும், கட்டட வசதி செய்யவும், மருத்துவ உபகரணங்கள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனை 198 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 958 வெளி நோயாளிகள், 148 உள் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 165 பிரசவங்கள், 110 அறுவை சிகிச்சை பிரசவங்கள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் மகப்பேறு, குழந்தைகள், கண், எலும்பு சிகிச்சை, மயக்கவியல், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை நிபுணர்கள் உட்பட 28 மருத்துவர்கள் மற்றும் போதுமான மருத்துவம் சாரா இதர பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டு பணியில் உள்ளனர்.

மேலும், இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், தற்போதுள்ள மருத்துவ வசதிகள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது.

116—

ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துதல்

வினா எண் 329—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, மல்லிநாயன்பள்ளியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

மல்லிநாயன்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. ஆனால், துணை சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது.

மல்லிநாயன்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 2,06,532. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், மல்லிநாயன்பள்ளி கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் மேகலசின்னம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், மல்லிநாயன்பள்ளி கிராம துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

117—

மயக்கவியல் மருத்துவர் நியமனம்

வினா எண் 460—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் மயக்க மருந்து மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை 202 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு மயக்கவியல் மருத்துவர் உட்பட 24 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது காலியாகும் மயக்கவியல் மருத்துவர் பணியிடங்கள் பணி மாறுதல் கலந்தாய்வுகளின்மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. மயக்கவியல் மருத்துவர் பணியிடம் காலியாக உள்ள சமயங்களில் ஒப்பந்த அமர்வு முறையில் (hiring) *மயக்கவியல் மருத்துவர் வரவழைக்கப்பட்டு பொதுமக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.*

118—

மருத்துவர் நியமனம்

வினா எண் 645—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காட்டுக்கூடலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

கடலூர் சுகாதாரப் பகுதி, மருங்கூர் வட்டாரம், காட்டுக்கூடலூரில் அமைந்துள்ளது துணை சுகாதார நிலையம் (HSC) *ஆகும். அரசு விதிகளின்படி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. கிராம சுகாதார செவிலியர் பணியிடம் மட்டுமே ஒப்பளிப்பு உள்ளது. இருப்பினும், காட்டுக்கூடலூர் துணை சுகாதார நிலையம், பேர்பெரியான்குப்பம் என்ற கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவ அலுவலர் பணியிடங்களிலும் 2 மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். காலியிடம் ஏதும் இல்லை.*

2018 ஜூலை 9]

119—

ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 762—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, சிறுமனஞ்சி மற்றும் திருவேங்கடநாதபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தவும், கூடுதல் கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுமனஞ்சி என்பது திருவேங்கடநாதபுரத்தின் மற்றொரு பெயராகும்.

திருவேங்கடநாதபுரத்தின் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் முனைஞ்சிப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருவேங்கடநாதபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், திருவேங்கடநாதபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதுமான கட்டட வசதி உள்ளதால், கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2018 ஜூலை 9

120—

ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 887—திரு. பெரியண்ணன் அரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், கருக்காக்குறிச்சி, கரு. கீழத்தெரு, பொன்னன்விடுதி, வலங்கொண்டான்விடுதி, கணக்கன்காடு, குரும்பிவயல் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம், கருக்காக்குறிச்சி கிராமம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,16,585. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், கருக்காக்குறிச்சி கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், கரு. கீழத்தெரு கிராமம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,16,585. இவ்வூராட்சி ஒன்றியத்தின்

மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், கரு. கீழத்தெரு கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னன்விடுதி கிராமம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,16,585. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டு வரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், பொன்னன்விடுதி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வாணக்கன்காடு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், வலங்கொண்டான்விடுதி கிராமம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,16,585. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டு வரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், வலங்கொண்டான்விடுதி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் மழையூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், கணக்கன்காடு கிராமம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், கணக்கன்காடு கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் வாணக்கன்காடு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், குறும்பிவயல் கிராமம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,16,585. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், குறும்பிவயல் கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

எனவே, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், கருக்காக்குறிச்சி கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும், கரு. கீழத்தெரு கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும், பொன்னன்விடுதி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வாணக்கன்காடு ஆரம்ப சுகாதார நிலையமும், வலங்கொண்டான்விடுதி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் மழையூர் ஆரம்ப சுகாதார நிலையமும், கணக்கன்காடு கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் வாணக்கன்காடு ஆரம்ப சுகாதார நிலையமும் குறும்பிவயல் கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கருக்காக்குறிச்சி, கருகீழத்தெரு, பொன்னன்விடுதி, வலங்கொண்டான்விடுதி, கணக்கன்காடு மற்றும் குறும்பிவயல் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

121—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 1027—திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, ஊசூர் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஊசூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

2018 ஜூலை 9]

122—

மருத்துவர் மற்றும் செவிலியர் நியமனம்

வினா எண் 1030—திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, பொய்கை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

வேலூர் சுகாதாரப் பகுதி, அணைக்கட்டு வட்டாரத்தில் அமைந்துள்ள பொய்கை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவ அலுவலர் பணியிடங்களில் 2 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், பொய்கை ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் காலிப் பணியிடம் ஏதுமில்லை. மேலும், மகப்பேறு சேவைகளை வழங்க 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற செவிலியர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.

123—

அவசர கால ஊர்தி வழங்குதல்

வினா எண் 1250—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், பேர்பெரியான்குப்பத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர கால ஊர்தி (Ambulance) *வழங்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலையில் 10–15 கிலோ மீட்டருக்கு ஒரு 108 ஆம்புலன்ஸ் வாகனமும், மற்ற இடங்களில் மக்கள்தொகை

அடிப்படையில் 20 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு ஒரு 108 ஆம்புலன்ஸ் வாகனமும் செயல்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், பேர்பெரியான்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி 15 கிலோ மீட்டர் தொலைவில் காடாம்புலியூரிலும், 18 கிலோ மீட்டர் தொலைவில் நெய்வேலியிலும் 108 ஆம்புலன்ஸ் இயங்கி வருகிறது. மேலும், பேர்பெரியான்குப்பம் மக்கள் அவசர காலங்களில் அழைக்கும்போது இச்சேவை தங்கு தடையின்றி வழங்கப்படுகிறது.

124—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம்

வினா எண் 1325—திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, கடியாப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டவும், கூடுதல் மருத்துவர்களை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் கடியாப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கடியாப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதுமான வசதியுடன்கூடிய கட்டடம் மற்றும் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் மூன்று செவிலியர் குடியிருப்புகள், மருந்தாளுநர், துணை செவிலியர் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களுக்கு தனியாக குடியிருப்புக் கட்டடம் ஆகியன உள்ளன. வாகனங்கள் நிறுத்துவதற்கு தனியாக மேற்கூரை (shed) போடப்பட்டுள்ளது. நோயாளிகள் காத்திருப்பு அறை தனியாக உள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி சுற்றுச் சுவர் உள்ளது.

கடியாப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2 மருத்துவ அலுவலர்கள் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில், ஒரு மருத்துவ அலுவலர் பணியாற்றி வருகிறார். காலியாக உள்ள பணியிடத்தில் மாற்றுப் பணியில் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். நடமாடும் மருத்துவக் குழுவிலும் ஒப்பளிக்கப்பட்ட ஒரு

2018 ஜூலை 9]

பணியிடத்தில் ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகிறார். மேலும், பள்ளி நலத் திட்டத்திற்கான நடமாடும் மருத்துவக் குழுவிலும் ஒப்பளிக்கப்பட்டு ஒரு ஆண் மருத்துவ அலுவலர் மற்றும் ஒரு பெண் மருத்துவ அலுவலர் ஆகிய பணியிடங்களிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, கடியாப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டவும், கூடுதல் மருத்துவர்கள் நியமிக்கவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

125—

துணை சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 1334—திரு. துரை. கி. சரவணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், பெரியக்கோட்டுமுனை கிராமத்திலுள்ள டேனிடா மருத்துவமனையை துணை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பெரியக்கோட்டுமுனை கிராமத்தின் சரியான பெயர் பெரியகொட்டிமுலை கிராமம் என்பதாகும்.

பெரியகொட்டிமுலை கிராமம், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின்

மக்கள்தொகை 1,59,058. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பெரியகொட்டிமுலை கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் கம்மாபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரியகொட்டிமுலை கிராமத்திலுள்ள டேனிடா மருத்துவமனையை (துணை சுகாதார நிலையம்) ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

126—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1344—திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், நிலாக்கோட்டை ஊராட்சியிலுள்ள பிதிர்காட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பிதிர்காடு கிராமத்தின் சரியான பெயர் பிதர்க்காடு கிராமம் என்பதாகும்.

பிதர்க்காடு கிராமம், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 2,39,669.

2018 ஜூலை 9]

இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் 12 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பிதர்க்காடு கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் நெலாக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அம்பலமூலா ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், கூடலூர் ஊராட்சி ஒன்றியம், பிதர்க்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

127—

தலைமை மருத்துவமனையாக மாற்றுதல்

வினா எண் 1353—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகரில் உள்ள அரசு மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மருத்துவமனை 168 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 135 உள் நோயாளிகள் மற்றும் 747 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாதமொன்றிற்கு 12,899 ஆய்வக பரிசோதனை, 270 எக்ஸ்ரே, 186 ஸ்கேன், 251 இ.சி.ஜி. மேற்கொள்ளப்படுகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 199 பிரசவங்கள், 119 அறுவை சிகிச்சை பிரசவங்கள், 300 பெரிய அறுவை சிகிச்சைகள், 210 சிறிய அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், சீமாங், NICU போன்ற பிரிவுகளுடன் இரத்த வங்கி, Ventilators, Ultra Sonogram ஆகிய வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

[2018 ஜூலை 9

128—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 1779—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. கொத்தமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், கீரமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொத்தமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

129—

துணை சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 1921—திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, மானிதஹள்ளி ஊராட்சியிலுள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும்

2018 ஜூலை 9]

மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மானிதஹள்ளி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை.

மானிதஹள்ளி கிராமம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,86,353. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், மானிதஹள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

130—

மருத்துவர் காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 2041—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனையிலுள்ள மருத்துவர் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை 443 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. ஒப்பளிக்கப்பட்ட படுக்கை வசதிகளுக்கேற்ப இம்மருத்துவமனைக்கு மகப்பேறு, குழந்தைகள், கண், காது–மூக்கு–தொண்டை, எலும்பு சிகிச்சை, மயக்கவியல், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை நிபுணர்கள் உட்பட 82 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, தற்போது 52 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். 14 உதவி மருத்துவர் பணியிடங்கள் முதுநிலை பட்டப்

படிப்பு முடித்து பணியேற்க உள்ள மருத்துவர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் விரைவில் பணியேற்பர். முதன்மை மற்றும் முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடங்களில் வயது மூப்பினால் பணி ஓய்வு பெறுவதாலும், பதவி உயர்வின் காரணமாகவும், அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வின்மூலம் நிரப்பப்பட்டு வருவதால் தற்போது பணியில் உள்ள மருத்துவர்களைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது.

131—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2285—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, அண்ணா நகர், திடீர் நகர் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

அண்ணா நகர் கிராமம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 2,35,438. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளன. மேலும், அண்ணா நகர் கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் நவல்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

2018 ஜூலை 9]

திடீர் நகர் கிராமம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 2,35,438. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளன. மேலும், திடீர் நகர் கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் திருநெடுங்குளம் ஆரம்ப சுகாதார நிலையமும், அரை கிலோ மீட்டர் தொலைவில் திருவெறும்பூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன.

எனவே, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், அண்ணா நகர் கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் நவல்பட்டு ஆரம்ப சுகாதார நிலையமும், திடீர் நகர் கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் திருநெடுங்குளம் ஆரம்ப சுகாதார நிலையமும், அரை கிலோ மீட்டர் தொலைவில் திருவெறும்பூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், அண்ணா நகர் மற்றும் திடீர் நகர் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

132—

சி.டி. ஸ்கேன் வசதி

வினா எண் 2670—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, இடைகோடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சி.டி. ஸ்கேன் கருவி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சி.டி. ஸ்கேன் கருவி வழங்கப்படுவதில்லை. ஆனால், அல்ட்ரா

சவுண்ட் ஸ்கேன் கருவி வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. சி.டி. ஸ்கேன் கருவி அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில்தான் வழங்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. விளவங்கோடு தொகுதியில் உள்ள இடைகோடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் கருவி வழங்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. எனவே, விளவங்கோடு தொகுதி, இடைக்கோடு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சி.டி. ஸ்கேன் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

133—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2672—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, இடைகோடு பேரூராட்சி, பண்டாரவிளையில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பண்டாரவிளை கிராமத்தின் மக்கள்தொகை 5,000–க்கு குறைவாக இருப்பதால், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், பண்டாரவிளை கிராமத்தில் புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2018 ஜூலை 9]

134—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2673—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், விளாத்துறை ஊராட்சி, மேலங்கலம், பாகோடு ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலங்கலம் கிராமத்தின் சரியான பெயர் மேலாங்கலம் கிராமம் என்பதாகும்.

மேலாங்கலம் கிராமம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 2,29,042. இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மேலாங்கலம் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் முஞ்சிறை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் குழித்துறை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன.

பாகோடு கிராமம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 2,07,685. இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள்

(மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்) செயல்பட்டு வருகின்றன. மேலும், பாகோடு கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மேல்புறம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் குழித்துறை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன.

எனவே, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், மேலாங்கலம் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் முஞ்சிறை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் குழித்துறை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், பாகோடு கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மேல்புறம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் குழித்துறை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், மேலாங்கலம் மற்றும் மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், பாகோடு ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

135—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2734—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், காசாங்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், காசாங்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2018 ஜூலை 9]

136—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2826—திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி தொகுதி, திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாநகராட்சியில் திரேஸ்புரம் நகர் நல மையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

137—

இரத்த வங்கி அமைத்தல்

வினா எண் 2955—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு பொது மருத்துவமனையில் இரத்த வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு பொது மருத்துவமனையில் இரத்த சேமிப்பு மையம் ஏற்கெனவே

செயல்பட்டு வருகிறது. அதில், மாதமொன்றுக்கு சராசரியாக 20 யூனிட் இரத்தம் மட்டுமே உபயோகப்படுத்தப்படுகிறது. தற்சமயம், அம்மருத்துவமனையில் உள்ள இரத்த சேமிப்பு மையமே போதுமானதாக உள்ளது.

எனவே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு பொது மருத்துவமனையில் இரத்த வங்கி அமைக்க வேண்டியதன் அவசியம் எழவில்லை.

138—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 3133—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, தண்டராம்பட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில், தண்டராம்பட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

139—

அவசரகால ஊர்தி வழங்குதல்

வினா எண் 3136—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, செங்கம் அரசு மருத்துவமனைக்கு அவசரகால ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அரசு மருத்துவமனையில் "108" அவசரகால ஊர்தி சேவை ஏற்கெனவே சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. எனவே, இம்மருத்துவமனைக்கு புதிதாக "108" அவசரகால ஊர்தி அளிக்கும் தேவை எழவில்லை.

140—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 3195—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், நுகும்பல் ஊராட்சி, நுகும்பல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

[2018 ஜூலை 9

நுகும்பல் கிராமம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,32,200. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், நுகும்பல் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பெரியகயப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் மற்றும் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் சூணாம்பேடு மற்றும் பொலம்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருவதாலும், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், நுகும்பல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

141—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 3201—திரு. சு. ரவி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. குருவராஜப்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் பாணாவரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குருவராஜப்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

2018 ஜூலை 9]

142—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 3257—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக்கை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில், திருவாலங்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு தற்பொழுது அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

143—

ஆஞ்சியோகிராம் கருவி நிறுவுதல்

வினா எண் 3273—திரு. செள. தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ராஜபாளையம் தொகுதி, ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் ஆஞ்சியோகிராம் கருவி நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்ட மருத்துவமனை 164 படுக்கைகள் கொண்ட வட்ட

மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக உள் நோயாளிகளாக 152 நபர்களும், வெளி நோயாளிகளாக 639 நபர்களும் சிகிச்சை பெறுகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 209 பிரசவங்களும், 116 சிசேரியன்களும், 224 பெரிய அறுவை சிகிச்சைகளும், 327 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், விபத்து மற்றும் அவசர சிகிச்சை, குழந்தைகள், சீமாங், NBSU போன்ற பிரிவுகள் உள்ளன. இம்மருத்துவமனையின் செயல்பாட்டினை கருத்தில்கொண்டு, பொது அறுவை, பொது மருத்துவம், மகப்பேறு, குழந்தைகள் நலம் போன்ற 23 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. பொது மருத்துவர்களைக் கொண்டு இதய சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டுவருகிறது. இம்மருத்துவமனையில் NCD பிரிவு சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது. இதில் இதய நோய்க்கு காரணமான இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே, இசிஜி, Cardiac Monitor, Multipara Monitor, Pulse Oximeter, Ventilator போன்ற இதய சிகிச்சைக்குத் தேவைப்படும் கருவிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு இதய சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. ஆஞ்சியோ தேவைப்படும் நோயாளிகள் மிகக் குறைவாகவே உள்ளனர். ஆஞ்சியோகிராம் தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் ஆஞ்சியோகிராம் கருவி நிறுவ தற்போது அவசியம் எழவில்லை.

144—

இரத்த சேமிப்பு வங்கி அமைத்தல்

வினா எண் 3326—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் அரசு மருத்துவமனையில் இரத்தம் தேவைப்படும் நேர்வுகள் குறைவாக உள்ளதால், இரத்தம் தேவைப்படும் நேரங்களில் அருகில் உள்ள பத்மநாபபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து இரத்தம் பெற்று, நோயாளிகளுக்கு சிறப்பான மருத்துவ சேவை அம்மருத்துவமனையில் வழங்கப்பட்டுவருகிறது. எனவே, குளச்சல் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி அமைக்க அவசியம் எழவில்லை.

145—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 3480—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, கோபி ஊராட்சி ஒன்றியம், கடுக்கம்பாளையம் ஊராட்சி, நாட்ராயன்கோவில் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

நாட்ராயன்கோவில்மேடு கிராமம், கோபிசெட்டிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி

ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,31,494. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், நாட்ராயன்கோவில்மேடு கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் சிறுவலூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், கோபிசெட்டிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், நாட்ராயன்கோவில்மேடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

146—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 3490—திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, வீரசிகாமணியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

வீரசிகாமணி கிராமம், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,03,091. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், வீரசிகாமணி கிராமத்திலிருந்து முறையே ஐந்து கிலோ மீட்டர்

2018 ஜூலை 9]

தொலைவில் மடத்துப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சேந்தமரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம், வீரசிகாமணி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

147—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 3521—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கம் தொகுதி, மேல்பெண்ணாகரம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மேல்பெண்ணாகரம் ஊராட்சியின் சரியான பெயர் மேல்பெண்ணாத்தூர் ஊராட்சி என்பதாகும்.

மேல்பெண்ணாத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செங்கம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் மேல்பள்ளிப்பட்டு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேல்பெண்ணாத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[*2018 ஜூலை 9*

148—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 3593—திரு.V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஊராட்சி ஒன்றியம், வலசை ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வலசை ஊராட்சியின் மக்கள்தொகை 5,000–க்கு குறைவாக இருப்பதால், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், வலசை ஊராட்சியில் புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

149—

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்

வினா எண் 3720—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்கெனவே புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்பட்டு, இயங்கிவருகிறது.

2018 ஜூலை 9]

150—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உபகரணங்கள் வழங்குதல்

வினா எண் 3723—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, வெள்ளிச்சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நவீன உபகரணங்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் உள்ள வெள்ளிச்சந்தை ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கிவருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இ.சி.ஜி., செமி ஆட்டோ அனலைசர், அல்ட்ரா சோனோகிராம் ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டு நன்முறையில் இயங்கி வருகின்றன.

151—

அரசு பொது மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 3762—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதியில் நவீன வசதியுடன் அரசு பொது மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் மருத்துவமனை 38 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு

நாளொன்றுக்கு சராசரியாக 527 வெளி நோயாளிகளும், 35 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 5990 ஆய்வக பரிசோதனை, 192 இ.சி.ஜி., 61 USG *எடுக்கப்படுகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 15 பிரசவங்களும், 10 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 14 பெரிய மற்றும் 27 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, சித்தா, அறுவை சிகிச்சைப் பிரிவு, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி போன்ற வசதிகள் உள்ளன. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.116.33 இலட்சம் செலவில் 30 படுக்கை வசதிகளுடன்கூடிய உள்நோயாளிகள் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி மருத்துவமனையின் செயல்பாட்டிற்கேற்ப மருத்துவம், மருத்துவம் சாரா, இதர பணியாளர்கள் மற்றும் தேவையான அனைத்து வசதிகளும் ஒப்பளிக்கப்பட்டு 24 மணி நேரமும் இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி வருகிறது.*

152—

மகப்பேறு பிரிவு அமைத்து கூடுதல் மருத்துவர் நியமனம்

வினா எண் 3930—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தெலுங்கன்குடிகாடு ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு பிரிவு அமைத்து கூடுதல் மருத்துவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தெலுங்கன்குடிகாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு கட்டடம்

2018 ஜூலை 9]

கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், இக்கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவர் பணியிடங்களில் 2 மருத்துவர்கள் பணிபுரிகின்றனர்.

153—

மருத்துவமனையை தரம் உயர்த்துதல்

வினா எண் 4248—திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை 114 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1275 வெளி நோயாளிகளும், 107 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், இம்மருத்துவமனையில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 109 எக்ஸ்ரே, 281 ஸ்கேன், 260 இ.சி.ஜி. மற்றும் 20,077 ஆய்வக பரிசோதனைகளும் நடைபெற்று வருகின்றன. மாதம் ஒன்றுக்கு சராசரியாக 124 பிரசவங்களும், 79 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 157 பெரிய மற்றும் 321 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, குழந்தைகள், தொற்று நோய், 12 படுக்கை வசதிகளுடன்கூடிய விபத்து சிகிச்சைப் பிரிவு (AE Ward) *பச்சிளங்குழந்தைகள் பராமரிப்புப் பிரிவு* (NBSU) *ஆகிய பிரிவுகள், குளிரூட்டப்பட்ட அறுவை அரங்கம், மின்னாக்கி, எக்ஸ்ரே, இ.சி.ஜி. ஆகிய வசதிகளுடன் செயல்பட்டுவருகிறது. இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு, மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இங்கு ஒப்பளிக்கப்பட்ட*

படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான வெளி நோயாளிகளே சிகிச்சை பெற்று வருவதால் இம்மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

154—

மருத்துவக் கருவிகள் அமைத்தல்

வினா எண் 4328—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன், எக்ஸ்ரே கருவிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை 116 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 71 உள் நோயாளிகளும், 1209 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் USG *வசதி செய்யப்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு 15,729 ஆய்வக பரிசோதனை, 143 இ.சி.ஜி., 169 எக்ஸ்ரே, 132* USG *மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 57 பிரசவங்களும், 37 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 94 பெரிய மற்றும் 343 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, குடும்ப நல அறுவை சிகிச்சைப் பிரிவு, பச்சிளங்குழந்தைகள் பிரிவு, தொற்று நோய் பிரிவு போன்ற பிரிவுகள் போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய 2 அறுவை அரங்கம், இரத்த வங்கி போன்ற வசதிகள் உள்ளன.*

2018 ஜுலை 9]

மேலும், இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன், Ventilator, Eliza Reader *போன்ற கருவிகள் உள்ளன. தற்போது, ரூ.13.20 கோடி செலவில் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை உட்பட 12 அரசு மருத்துவமனைகளுக்கு டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி ஒப்பளிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. சி.டி. ஸ்கேன் தேவைப்படும் குறைந்த எண்ணிக்கையிலான நோயாளிகள் அருகில் உள்ள குன்னூர் அரசு வட்ட மருத்துவமனைக்கும் மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, தற்போது மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் கருவி அமைக்க அவசியம் எழவில்லை.*

155—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 4330—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம் ஊராட்சி, காலனிபுதூரில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியம், காலனிபுதூரில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

156—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 4331—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, வெள்ளியங்காடு ஊராட்சி, அத்திக்கடவில் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியம், அத்திக்கடவு (வனப் பகுதி) மானார் கிராமத்தின் ஒரு பகுதி, மானார் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

157—

ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 4433—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, மேலவளவு மற்றும் தும்பைப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மேலவளவு ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. சேக்கிப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் மேலவளவு துணை சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது.

2018 ஜூலை 9]

தும்பைப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் கருங்காலக்குடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டுவருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலவளவு துணை சுகாதார நிலையம் மற்றும் தும்பைப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

158—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 4435—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, தனியாமங்கலம் மற்றும் அம்பலக்காரன்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

தனியாமங்கலம் கிராமம்:

தனியாமங்கலம் கிராமம், மேலூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,33,286. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு

செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளன. மேலும், தனியாமங்கலம் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் கீழவளவு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

அம்பலக்காரன்பட்டி கிராமம்:

அம்பலக்காரன்பட்டி கிராமம், மேலூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,33,286. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளன. மேலும், அம்பலக்காரன்பட்டி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் இடையமேலூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

எனவே, மேலூர் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், தனியாமங்கலம் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் கீழவளவு ஆரம்ப சுகாதார நிலையமும் மற்றும் அம்பலக்காரன்பட்டி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் இடையமேலூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டுவருவதாலும், மேலூர் ஊராட்சி ஒன்றியம், தனியாமங்கலம் மற்றும் அம்பலக்காரன்பட்டி ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

159—

விபத்து சிகிச்சைப் பிரிவு அமைத்தல்

வினா எண் 4436—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி மருத்துவமனையை தரம் உயர்த்தி அவசர விபத்து சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதியில் உள்ள மேலூர் அரசு மருத்துவமனை 108 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டுவருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 1,071 வெளி நோயாளிகளும், 86 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 12,621 ஆய்வக பரிசோதனை எடுக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 67 பிரசவங்களும், 39 பிரசவ அறுவை சிகிச்சை, 70 பெரிய மற்றும் 311 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு பிரிவு, குழந்தைகள், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, சீமாங், மன நல மருத்துவம் போன்ற பிரிவுகள், இரத்த வங்கி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, 2 மின்னாக்கி போன்ற வசதிகள் உள்ளன. மருத்துவமனையின் செயல்பாட்டிற்கேற்ப மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் போன்ற அனைத்து பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் 24 மணி நேரமும் செயல்படும் தீவிர தலைக்காய சிகிச்சைப் பிரிவில் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன், தற்போது 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசு ஆணைப்படி, இம்மருத்துவமனையில் மருத்துவர் மற்றும் செவிலியர் பணியிடங்கள் புதியதாக ஒப்பளிக்கப்பட்டு, மேற்கண்ட 24 மணி நேரமும் செயல்படும் தீவிர தலைக்காய சிகிச்சைப் பிரிவு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

எனவே, மேலூர் தொகுதியில் உள்ள இம்மருத்துவமனையிலிருந்து 20 கிலோ மீட்டரில் உள்ள கொட்டாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

160—

விபத்து சிகிச்சைப் பிரிவு அமைத்தல்

வினா எண் 4437—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்*

[*2018 ஜூலை 9*

துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் அரசு மருத்துவமனையில் அவசர விபத்து சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், மேலூர் அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகளுடன்கூடிய தலைக்காய சிகிச்சைப் பிரிவுடன்கூடிய விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு சிறப்பான வசதிகளுடன் செயல்பட்டுவருகிறது.

161—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 4617—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, அட்டகட்டி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

அட்டகட்டி கிராமம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 2,22,280.

2018 ஜூலை 9]

இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், அட்டகட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

162—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4619—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாறு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆழியாறு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சரியான பெயர் ஆழியார் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதாகும்.

ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் பெரியபோது பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டுவருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

163—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 4652—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்தி-வேலூர் தொகுதி, மோகனூர் ஒன்றியம், குட்லாம்பாறை ஊராட்சியிலுள்ள புதுப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள புதுப்பாளையம் கிராமத்தின் சரியான பெயர் கே. புதுப்பாளையம் கிராமம் என்பதாகும்.

கே. புதுப்பாளையம் கிராமம், மோகனூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 98,010. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், கே. புதுப்பாளையம் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டுவருவதாலும், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், கே. புதுப்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2018 ஜூலை 9]

164—

108 அவசர ஊர்தி வழங்குதல்

வினா எண் 4681—திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், சேர்மாளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு "108" அவசர ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

தற்போது ஹாசனூரை மையமாகக் கொண்டு 108 அவசர ஊர்தி இயக்கப்பட்டுவருகிறது. இதன் மூலமாக சேர்மாளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர ஊர்தி சேவை வழங்கப்பட்டுவருகிறது.

165—

டிஜிட்டல் எக்ஸ்ரே அமைத்தல்

வினா எண் 4955—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனையில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனை 44 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட

மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 40 உள் நோயாளிகளும், 656 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாதமொன்றுக்கு 9,872 ஆய்வக பரிசோதனை, 73 இசிஜி., 51 எக்ஸ்ரே, 110 USG ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 21 பிரசவங்களும், 14 பிரசவ அறுவை சிகிச்சைகளும், 23 பெரிய மற்றும் 278 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், பிரசவ வார்டு, பல் மருத்துவம், சித்தா, மன நல மருத்துவம், கண் பரிசோதனை, குழந்தை நல மருத்துவம், காசநோய் பிரிவு, தாய் சேய் நலப் பிரிவு போன்ற பிரிவுகள், போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம் போன்ற வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் “108” அவசர ஊர்தி வசதியும் உள்ளது. டிஜிட்டல் எக்ஸ்ரே தேவைப்படும் நோயாளிகள் மிக மிகக் குறைவாகவே உள்ளனர்.

மேலும், காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன் மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய ஆய்வகம் போன்ற வசதிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு நோயாளிகளுக்குத் தேவையான பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டு, உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு போதிய அளவு மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி வருகிறது.

166—

சுற்றுச் சுவர்

வினா எண் 5067—திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராதாபுரம் தொகுதி, வள்ளியூர் அரசு மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் அரசு மருத்துவமனை 28 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா மருத்துவமனையாக

2018 ஜூலை 9]

செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றிற்கு 18 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், 309 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 1 பிரசவமும், 1 பெரிய மற்றும் 59 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 2,964 ஆய்வக பரிசோதனை, 79 இசிஜி, 83 எக்ஸ்ரே, 32 ஸ்கேன் எடுக்கப்படுகின்றன. மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், மகப்பேறு, அவசர சிகிச்சைப் பிரிவு அறுவை அரங்கம் ஆகிய பிரிவுகள் உள்ளன. இம்மருத்துவமனையில் இசிஜி, எக்ஸ்ரே, ஸ்கேன், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி வசதி ஆகியவை உள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். தற்போதுள்ள மருத்துவமனை பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் காவலரைக் கொண்டு மேற்படி மருத்துவமனை தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. தேவை ஏற்படின், சுற்றுச் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு போதிய அளவு மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி வருகிறது.

167—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 5123—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, கானி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற

நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கானி ஆரம்ப சுகாதார நிலையத்தின் சரியான பெயர் காளி ஆரம்ப சுகாதார நிலையம் என்பதாகும்.

காளி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் மணல்மேடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காளி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

168—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 5471—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி, அரசங்குடி ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

அரசங்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் நவல்பட்டு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அரசங்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2018 ஜூலை 9]

169—

கண் சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்

வினா எண் 5486—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் அரசு பொது மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அரசு மருத்துவமனை 144 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாகும். நாளொன்றிற்கு சராசரியாக 1,679 வெளி நோயாளிகளும், 112 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 188 பிரசவங்களும், 74 பிரசவ அறுவை சிகிச்சைகளும், 176 பெரிய அறுவை சிகிச்சைகளும், 450 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 26,434 ஆய்வக பரிசோதனைகளும், 157 எக்ஸ்ரேகளும், 132 ஸ்கேன் மற்றும் 223 இசிஜி ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், மகப்பேறு, குழந்தைகள் பிரிவு, சீமாங், NBSU, விஷ முறிவு சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம் ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனையில் இசிஜி, எக்ஸ்ரே, ஸ்கேன், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி, சுற்றுச் சுவர், நவீன சமையல் அறை ஆகிய வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனைக்கு போதுமான அளவு மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளனர். இம்மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் மிகக் குறைவாகவே இருப்பதால், அதற்கான சாதாரண சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கும் மற்றும் கண் சிகிச்சைப் பிரிவு மற்றும் அனைத்து வசதிகளுடன் செயல்படும் கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

170—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 5799—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்களம் ஒன்றியம், சனவேலி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்களம் ஊராட்சி ஒன்றியம், சனவேலி கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டுவருகிறது.

171—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 6569—திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், சாட்டியகுடி மற்றும் தச்சமல்லி ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்

2018 ஜூலை 9]

மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்டியகுடி கிராமத்தின் சரியான பெயர் சாத்தியக்குடி கிராமம் என்பதாகும்.

சாத்தியக்குடி கிராமம்:

சாத்தியக்குடி கிராமம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 92,108. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சாத்தியக்குடி கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது.

தச்சமல்லி கிராமம்:

தச்சமல்லி கிராமம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 92,108. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், தச்சமல்லி கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது.

எனவே, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், சாத்தியக்குடி கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையும். தச்சமல்லி கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையும் செயல்பட்டுவருவதாலும், ஆவுடையார்கோவில் ஊராட்சி

ஒன்றியம், சாத்தியக்குடி மற்றும் தச்சமல்லி ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

172—

பிரேத பரிசோதனைக் கட்டடத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 6746—டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டுவருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 396 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், 32 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 7 பிரசவங்களும், 5 பிரசவ அறுவை சிகிச்சைகளும், 14 பெரிய மற்றும் 182 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், மகப்பேறு, குழந்தைகள் பிரிவு, NBSU, விஷ முறிவு சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம் ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனையில் இசிஜி, எக்ஸ்ரே, ஸ்கேன், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி, சுற்றுச் சுவர், நவீன சமையல் அறை ஆகிய வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் பிரேத பரிசோதனை கட்டட வசதி உள்ளது. மருத்துவமனை கட்டடங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய ஒவ்வொரு நிதியாண்டிலும் கட்டட பராமரிப்பு நிதியின்கீழ் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிதியாண்டில் (2016–2017) மேற்படி மருத்துவமனையின் பிரேத பரிசோதனைக் கட்டடம் உட்பட பழுதடைந்துள்ள கட்டடங்களை

சரி செய்ய ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

173—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 6748—டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், பாளையம் பேரூராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், பாளையம் பேரூராட்சியில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

174—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்

வினா எண் 7618—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, அனந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, அனந்தபுரத்தில் அரசு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது.

அனந்தபுரத்திலிருந்து 18 கிலோ மீட்டரில் செஞ்சி அரசு வட்ட மருத்துவமனை 106 படுக்கை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 1,014 வெளி நோயாளிகளும், 88 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 43 பெரிய, 520 சிறிய அறுவை சிகிச்சைகளும், 22 பிரசவங்களும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, தொற்றாநோய், மகப்பேறு பின் கவனிப்பு, இரத்த சேமிப்பு வங்கி, அம்மா வார்டு, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம் உட்பட பல கட்டடங்களுடன் செயல்பட்டுவருகிறது. மேலும், செஞ்சி தொகுதியில் சத்யமங்கலத்தில் அரசு முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது. எனவே, அனந்தபுரத்திலிருந்து 18 கிலோ மீட்டரில் செஞ்சி அரசு வட்ட மருத்துவமனை செயல்பட்டுவருவதால், செஞ்சி தொகுதி, அனந்தபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்திட அவசியம் எழவில்லை.

175—

துணை சுகாதார நிலையம் செயல்பாட்டுக்கு வருதல்

வினா எண் 8179—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, சோழமாதேவி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையத்தை செயல்பாட்டிற்கு கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கணியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் சோழமாதேவி துணை சுகாதார நிலையம் செயல்பட்டுவருகிறது. இத்துணை

2018 ஜூலை 9]

சுகாதார நிலையத்திற்கு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 4–4–2014 முதல் சொந்தக் கட்டடத்தில் நல்ல முறையில் தற்போது இயங்கி வருகிறது.

176—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 8433—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, அரியூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்தில், அரியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

177—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 8573—திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முசிறி தொகுதி, தா. பேட்டை ஊராட்சி ஒன்றியம், வாலசிராமணி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வாலசிராமணி ஆரம்ப சுகாதார நிலையத்தின் சரியான பெயர் வாளசிராமணி ஆரம்ப சுகாதார நிலையமாகும்.

வாளசிராமணி கிராமம், தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,04,698. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வாளசிராமணி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

178—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 9425—திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கொட்டியம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுவருகின்றன.

2018 ஜூலை 9]

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கொட்டியம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சரியான பெயர் தொட்டியம் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதாகும்.

தொட்டியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் கச்சிராப்பாளையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையமாக ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தொட்டியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

179—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம்

வினா எண் 10552—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேல்புறம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சொந்தக் கட்டடம் 1999 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

180—

முழுநேர மருத்துவமனையாக மாற்றியமைத்தல்

வினா எண் 10556—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2018 ஜூலை 9*

(அ) விளவங்கோடு தொகுதி, பத்துகாணி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி, முழுநேர மருத்துவமனையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுவருகின்றன.

பத்துகாணி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் இடைக்கோடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பத்துகாணி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், பத்துகாணி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முழுநேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

181—

பச்சிளம் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு

வினா எண் 10561—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, குழித்துறை அரசு மருத்துவமனையில் சிறு பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு (சீமாங்) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனை 86 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 762 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 85 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற கருவிகள் உள்ளன. மாதமொன்றுக்கு சராசரியாக 16,216 ஆய்வக பரிசோதனை, 196 எக்ஸ்ரே, 243 யு.எஸ்.ஜி. மற்றும் 303 இசிஜி. ஆகியன எடுக்கப்படுகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 129 பெரிய மற்றும் 299 சிறிய அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, அறுவை சிகிச்சை பின் கவனிப்புப் பிரிவு முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டப் பிரிவு, NCD *பிரிவு உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகள் உள்ளன. 108 அவசர சிகிச்சை ஊர்தி வசதி உள்ளது. மருத்துவமனையின் செயல்பாட்டிற்கேற்ப சிறப்பு மருத்துவர்கள் உட்பட, மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு, சிறப்பான மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 118 பிரசவங்களும், 76 அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு, சீமாங் மற்றும்* SNCU *பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவுகளில் மகப்பேறுக்காக வரும் தாய்மார்களுக்கும், அவசர கால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகளுக்கும் உரிய முறையில் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.*

182—

ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 12383—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, சாம்பவர் வடகரை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

சாம்பவர் வடகரை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் இலத்தூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சாம்பவர் வடகரை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

183—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 12440—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, குப்பநத்தம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் ஊராட்சி ஒன்றியம், குப்பனத்தம் ஊராட்சியில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

2018 ஜூலை 9]

184—

ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 12441—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, பரமனந்தல் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

பரமனந்தல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செங்கம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் மேல்பள்ளிப்பட்டு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பரமனந்தல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

185—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 13196—டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சி ஒன்றியம், ஆலக்கிராமம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியம், ஆலக்கிராமம் ஊராட்சியில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

186—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 13239—திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் ஒடுகத்தூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

187—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 13919—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

சிறுமுகை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் காரமடை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் காரமடை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுமுகை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

188—

நடமாடும் மருத்துவ சேவை

வினா எண் 13994—திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உதகமண்டலம் தொகுதி, சோலூர் கல்லட்டி, இத்துலார் ஊராட்சிக்குட்பட்ட பாலாடா பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவ சேவை மூலமாக சிகிச்சை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உதகமண்டலம் தொகுதி, சோலூர் கல்லட்டி, இத்துலார் ஊராட்சிக்குட்பட்ட பாலாடா பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவமனை ஏற்கெனவே கீழ்க்கண்ட நிரந்தர பயண அட்டவணைப்படி மருத்துவ சேவை செய்து வருகிறது:

வட்டாரத்தின் பெயர்	ஆரம்ப சுகாதார நிலையத்தின் பெயர்	பார்வையிடப் படும் பகுதி	நாள் மற்றும் நேரம்
உதகமண்டலம் (டி–ஒரநல்லி நடமாடும் மருத்துவமனை)	இத்தலார்	தக்காபாவா	முதல் திங்கள், காலை
		இன்பசாகர் நகர்	முதல் திங்கள், மாலை
		இத்தலார்	முதல் செவ்வாய், காலை
		ஆய்வு	முதல் செவ்வாய், மாலை
	பாலாடா	கவர்னர் சோலை	2 ஆம் புதன், காலை
		பார்கன்ஸ் பள்ளத்தாக்கு	2 ஆம் புதன், மாலை
		அண்ணா நகர்	2 ஆம் வியாழன், காலை
		வெல்பேக் எஸ்டேட்	2 ஆம் வியாழன் மாலை
	சோலூர்	பைக்காரா	4 ஆம் திங்கள் காலை
		வள்ளுவர் நகர்	4 ஆம் திங்கள், மாலை

		கிளன் மார்கன்	4 ஆம் புதன், காலை
		ஜெயந்தி நகர்	4 ஆம் புதன், மாலை
	கல்லட்டி	நீத்தி	முதல் வியாழன், காலை
		சக்தி நகர்	முதல் வியாழன், மாலை
		ஆல்காட் நகர்	3 ஆம் சனி, காலை
		அழகர்மலை	4 ஆம் சனி, காலை

189—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 14225—டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கடையம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், கடையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

[*2018 ஜூலை 9*

190—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 14226—டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, வெங்கடாம்பட்டி ஊராட்சி, பண்டாரக்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பண்டாரக்குளம் கிராமத்தின் மக்கள்தொகை 5,000–க்கு குறைவாக இருப்பதால், கடையம் ஊராட்சி ஒன்றியம், பண்டாரக்குளம் கிராமத்தில் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

191—

ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்துதல்

வினா எண் 14586—திருமதி நா. மனோரஞ்சிதம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், வீரனகுப்பம் ஊராட்சி, வேலம்பட்டி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

வேலம்பட்டி கிராமத்தில் தற்பொழுது துணை சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை.

வேலம்பட்டி கிராமம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,64,722. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், வேலம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

192—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 14606—திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், நிச்சாம்பாளையம் ஊராட்சி, பள்ளத்துக்கடை அருகில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்

பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளத்துக்கடை கிராமத்தின் சரியான பெயர் பள்ளத்துஓடை கிராமம் என்பதாகும்.

பள்ளத்துஓடை கிராமம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,55,029. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பள்ளத்துஓடை கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் திங்களூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டுவருவதாலும், பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், பள்ளத்துஓடை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

193—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 14654—திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியத்தில் நெற்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலைம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப

2018 ஜூலை 9]

சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நெற்குப்பம் கிராமத்தின் சரியான பெயர் நெற்குப்பை கிராமம் என்பதாகும்.

நெற்குப்பை கிராமம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,00,067. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், நெற்குப்பை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

194—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 14732—திரு. கே.எஸ். விஜியகுமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கன்னிகைப்பேர் அல்லது மஞ்சங்கரணை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

[2018 ஜூலை 9

கன்னிகைப்பேர் ஊராட்சி:

கன்னிகைப்பேர் ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,29,091. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. கன்னிகைப்பேர் ஊராட்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் பெரியபாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

மஞ்சங்கரணை ஊராட்சி:

மஞ்சங்கரணை ஊராட்சி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,29,091. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது.

கன்னிகைப்பேர் ஊராட்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் பெரியபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டுவருவதாலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், கன்னிகைப்பேர் மற்றும் மஞ்சங்கரணை ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

195—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 16668—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி வட்டம், மீனாம்பூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், மீனாம்பூர் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டுவருகிறது.

196—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 16074—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், மதனகோபாலபுரம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், மதனகோபாலபுரத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டுவருகிறது.

197—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 16824—திரு. அ. பிரபு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், அசகளத்தூர் மற்றும் மடம் ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

விழுப்புரம் மாவட்டம், அசகளத்தூர் கிராமம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,26,731. இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அசகளத்தூர் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் ஈய்யனூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டம், மடம் கிராமம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,26,731. இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மடம் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் முடியனூர் ஆரம்ப சுகாதார நிலையமும், ஏழு கிலோ மீட்டர் தொலைவில் தியாகதுருகம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

விழுப்புரம் மாவட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், அசகளத்தூர் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் ஈய்யனூர் ஆரம்ப சுகாதார நிலையமும், மடம் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் முடியனூர் ஆரம்ப சுகாதார நிலையமும், ஏழு கிலோ மீட்டர் தொலைவில் தியாகதுருகம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், அசகளத்தூர் மற்றும் மடம் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

198—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 17797—திரு. அ. பிரபு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், தென்கீரனூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், தென்கீரனூர் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

199—

மருத்துவ உபகரணங்கள் மாற்றியமைத்தல்

வினா எண் 18885—திரு. சு. ரவி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழைய ஸ்கேன் இயந்திரத்தை மாற்றி, புதியதாக வழங்கவும் மற்றும் பழுதடைந்துள்ள நெஞ்சக எதிரொலிப் பதிவுக் கருவி (Echo cardiograph) இயந்திரத்தை மாற்றிடவும், மருத்துவர் காலிப் பணியிடத்தை நிரப்பவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஒன்றியத்திலுள்ள மூதூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு

புதிய ஸ்கேன் இயந்திரம் இரண்டு மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பழைய ஸ்கேன் இயந்திரமும் உபயோகத்தில் உள்ளது. மேலும், நெஞ்சக எதிரொலி பதிவுக் கருவி (Echo cardiograph) அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 5 ஆகும். தற்போது 5 மருத்துவர்களும் முழுமையாக பணிபுரிந்து வருகின்றனர். நடமாடும் மருத்துவக் குழுவில் ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகிறார். மேலும், 24 மணி நேரமும் மருத்துவ அலுவலர் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

200—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 18974—திருமதி ப. சத்யா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராமம் ஒன்றியத்திலுள்ள திருத்துறையூர், சாத்திப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

2018 ஜூலை 9]

திருத்துறையூர் ஊராட்சி:

திருத்துறையூர் ஊராட்சி, அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,42,643. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், திருத்துறையூர் ஊராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் ஒரையூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

சாத்திப்பட்டு ஊராட்சி:

சாத்திப்பட்டு ஊராட்சி, அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,42,643. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், சாத்திப்பட்டு ஊராட்சியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பண்ருட்டி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது.

எனவே, அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், திருத்துறையூர் ஊராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் ஒரையூர் ஆரம்ப சுகாதார நிலையமும், சாத்திப்பட்டு ஊராட்சியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பண்ருட்டி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியம், திருத்துறையூர் மற்றும் சாத்திப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

பட்டியல்–15

1—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 19348—திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மருதவனம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மருதவனம் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

2—

OCT ஸ்கேன் இயந்திரம்

வினா எண் 27142—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, எழும்பூர் அரசு கண் மருத்துவமனைக்கு OCT ஸ்கேன் இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

சென்னை, மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனையில் கண் பரிசோதனை செய்யும் இசைவு பெருக்க வரைவி கருவி (Optical Coherence Tomography–OCT) 22–5–2007 அன்று தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டது. மேற்கண்ட மருத்துவ உபகரணம் 22–5–2007 முதல் 8–3–2011 வரை இயங்கி வந்தது. இக்கருவியில் உள்ள பழுது 4,41,750 ரூபாய் செலவில் சரிசெய்யப்பட்டு, நோயாளிகளின் பயன்பாட்டுக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டது. மேலும், எழும்பூர் கண் மருத்துவமனைக்கு, தமிழ்நாடு மாநில கண் நோய் தடுப்புச் சங்கத்திற்கு 1 கோடி ரூபாய் நிதியினை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியின்மூலம் OCT மருத்துவக் கருவியினைக் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2018 ஜூலை 9]

3—

வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டடம்

வினா எண் 70—திரு. சு. ரவி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்திலுள்ள வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்திலுள்ள வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டடம் கட்டுவது தொடர்பாக கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

குளிர்பதன கிடங்கு

வினா எண் 471—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் விவசாய விளைபொருட்களை சேமிப்பதற்கு குளிர்பதன கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரத்தில் கூடுதலாக குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

உலர்களம் அமைத்தல்

வினா எண் 641—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கீழ்க்கொல்லை கிழக்குத் தெருவில் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, கீழ்க்கொல்லை கிழக்குத் தெருவில் உலர்களம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

மாம்பழ குளிர்பதன சேமிப்புக் கிடங்கு

வினா எண் 1685—திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்குவிடையளிப்பாரா—*

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலத்தில் மாம்பழங்களுக்கென குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலத்தில் மாம்பழங்களுக்கென குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டத்திற்கு சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

2018 ஜூலை 9]

7—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 194—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம் எடக்கீழையூர் ஊராட்சி—வடக்கு உடையார் தெருவில் வசித்து வரும் 20 இருளர் குடும்பங்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி, மன்னார்குடி வட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடக்கீழையூர் கிராமத்தில் வசித்துவரும் குடும்பத்தினை சார்ந்தவர்களில் சிலர் தாங்கள் மிகவும் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த இந்து அம்பலக்காரர் சாதியினைச் சார்ந்தவர்கள் எனத் தெரிவித்து, சாதிச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்கள். அவர்கள் அனைவரும் பொதுவாக விவசாயக் கூலி வேலை செய்வதன்மூலம் ஜீவனம் செய்து வருகிறார்கள். இவர்களில் யாரும், இருளர் இன மக்களின் சமூக பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, இவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த, அம்பலக்கார சாதியினை சார்ந்தவர்கள் என விசாரணையின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இந்தக் குடும்பத்தினர் இருளர் சாதியினை சார்ந்தவர்கள் என சாதி சான்று வழங்கிட இயலாது.

8—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 196—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்குவிடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், மூவர்கோட்டை பத்தாங்காடு பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் சரகம், 1 மூவர்கோட்டை வருவாய் கிராமம், பத்தாங்கோட்டை கிராமத்தில் பு.எண் 357–ல் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 8.65.5 ஏர்ஸ் நீர்நிலை புறம்போக்கில் 23 குடும்பங்களும் மற்றும் புல எண் 396/பி–ல் 3.390 ஏர்ஸ் ஆற்றுப் புறம்போக்கில் 33 குடும்பங்களும் வசித்து வருகின்றனர். மேற்கண்ட இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நீர்நிலை புறம்போக்கு வகைபாடு உடையது என்பதால் அந்நிலத்தை அரசு விதிகளின்படி மேற்கண்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

9—

புதிய வட்டம்

வினா எண் 345—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து புதியதாக கள்ளிமந்தையத்தை தனி வட்டமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

பழனி வருவாய் வட்டத்திலுள்ள தொப்பம்பட்டி மற்றும் கோரிக்கடவு ஆகிய இரு உள் வட்டங்களையும் ஒட்டன்சத்திரம் வருவாய் வட்டத்திலுள்ள கள்ளிமந்தையம் மற்றும் தேவத்தூர் ஆகிய இரு உள் வட்டங்களையும் ஆய்வு செய்து, அரசு விதிகளின்படியும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும் புதிய வருவாய் வட்டம் உருவாக்க உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப்படும். மேலும், புதிய வட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது.

10—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 388—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதியில் வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதியில் வீட்டுமனைப் பட்டா கோரும் பகுதி மாநகராட்சியை ஒட்டிய நகர் பகுதி என்பதால் பட்டா வழங்க வழிவகை இல்லை.

11—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 549—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், கீழாத்தூர் மேப்பத்துறை கிராமத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழாத்தூர் கிராம சர்வே எண் 15/7பி–ல் 0.98.8 ஏர்ஸ் நிலம் தரிசு (தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட) என கிராம கணக்குகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி புலனில் வீடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கட்டியுள்ள அனைவரும் பிற வகுப்பினைச் சேர்ந்தவர்கள் என்பதால் மேற்படி நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. திருவண்ணாமலை வட்டம், மேப்பத்துறை கிராம சர்வே எண் 127/2–ல் 62.00.0 எக்டேர் நிலத்தில் ஏரி புறம்போக்கில் 5 நபர்கள் வீடுகள் கட்டி வசித்து வருகிறார்கள். நீதிமன்ற உத்தரவின்படியும், அரசு விதிகளின்படியும் நீர்நிலை புறம்போக்குகளில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

12—

முதியோர் உதவித் தொகை

வினா எண் 612—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மற்றும் வாலாஜாபாத் ஆகிய வருவாய் வட்டங்களில் தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மற்றும் வாலாஜாபாத் ஆகிய வருவாய் வட்டங்களில் ஏற்கெனவே தகுதி பெற்றவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. விண்ணப்பித்த அனைவருக்கும் அரசு வழிகாட்டுதலுக்குட்பட்டு, தகுதி பெற்றிருப்பின் அரசு முதியோர் உதவித் தொகை வழங்கப்படும்.

13—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 623—திரு. பெரியண்ணன் அரசு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட தொண்டைமான் நகர், நரிமேடு,

2018 ஜூலை 9]

மாப்பிள்ளையார்குளம், காமராஜபுரம், போஸ் நகர், கோவில்பட்டி மற்றும் திருவள்ளுவர் நகர் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட தொண்டைமான் நகரில் பிளாக் எண் 48-ல், மொத்தமுள்ள 93 இனங்களில் 56 நபர்களுக்கும், கோவில்பட்டி பிளாக் எண் 104–ல் மொத்தமுள்ள 84 இனங்களில் 39 நபர்களுக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கு உரிய ஆவணங்கள் பெறப்பட்டு, பட்டா வழங்க பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. காமராஜபுரம் அரசு புறம்போக்கு இடங்களில் குடியிருப்போர்களுக்கு பட்டா வழங்க சென்னை நில வரித் திட்ட ஆணையரின் உத்தரவு பெறப்பட வேண்டியுள்ளது.*

2. புதுக்கோட்டை வடக்கு வட்டம், நரிமேடு பகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க போதிய அரசு புறம்போக்கு நிலம் இல்லை. ஆகையால், இலவச வீட்டுமனைப் பட்டா தற்போது வழங்க இயலாது.

3. மாப்பிள்ளையார்குளம், போஸ் நகர், திருவள்ளுவர் நகர் ஆகிய பகுதிகளில் மக்கள் குடியிருந்து வரும் பகுதி அரசினால் தடை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்குகள் என்பதால் மனைப் பட்டா வழங்க இயலாது.

14—

புதிய வட்டம்

வினா எண் 740—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருமயம் தொாதி, திருமயம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிதாக அரிமளம் வட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்தைப் பிரித்து அரிமளத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, புதிய வருவாய் வட்டம் அமைப்பதற்கான நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. எனவே, நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் தனி வட்டமாக அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், புதிய வட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது.

15—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 978—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 107–வது வார்டு, சேத்துப்பட்டு பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 107–வது வார்டு, சேத்துப்பட்டு பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரியதில், மேற்படி புலமானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கிரயப் பத்திரம் பெற்றுள்ள மனை ஒதுக்கீட்டுதாரர்களுக்கு பட்டா வழங்க தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடமிருந்து தடையின்மைச் சான்று பெற வேண்டியுள்ளது.

16—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 1146—திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 251 இலட்சம் ரூபாய் செலவில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்ட முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் நடவடிக்கையில் உள்ளது.

17—

புதிய வட்டம்

வினா எண் 1282—திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 9–6–2003–ன்படி, புதிய வட்டம் அமைப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை திசையன்விளை வட்டம் பூர்த்தி செய்யாததால், திசையன்விளையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், புதிய வட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது.

18—

புதிய வட்டம்

வினா எண் 1376—திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, புதிய வருவாய் வட்டம் அமைப்பதற்கான நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. எனவே, நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் தனி வட்டமாக அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், புதிய வட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது.

19—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 1624—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, துவாக்குடி நகராட்சி, சமாதானபுரம் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவெறும்பூர் வட்டம், துவாக்குடி நகராட்சி, சமாதானபுரம் புல எண் 706–ல் 4.74.5 ஏக்கர் சிட்கோ தொழிற்பேட்டை என கிராம கணக்குகளில் பதிவு உள்ளது. அப்புலத்தில் இருபது வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எனவே, மேற்கண்ட புல எண் 706–ல் 4.74.5 ஏக்கர் கணக்கில், சிட்கோ தொழிற்பேட்டை என உள்ளதால், அந்நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. எனவே, அந்நிலத்தில் குடியிருக்கும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா

2018 ஜூலை 9]

வழங்குவதற்கு தகுதியான நிலத்தினை தேர்வு செய்து, பட்டா வழங்குமாறு திருவெறும்பூர் வட்டாட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

20—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 1625—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, வாழவந்தான்கோட்டை ஊராட்சி, குங்குமபுரம் பகுதியில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவெறும்பூர் வட்டம், வாழவந்தான்கோட்டை ஊராட்சி, குங்குமபுரம் புல எண் 272—ல் விஸ்தீர்ணம் 9.13.0 ஹெக்டேர் புல எண் 273—ல் விஸ்தீர்ணம் 3.50.5 ஹெக்டேர், மொத்தம் 12.63.5 ஹெக்டேர் பிராந்திய பொறியியல் கல்லூரி என கிராம கணக்குகளில் பதிவுகள் உள்ளன. மேற்கண்ட நிலத்தில் சுமார் 100 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எனவே, அந்நிலம் வருவாய்க் கணக்கில் பிராந்திய பொறியியல் கல்லூரி என உள்ளதால், அந்நிலத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. எனவே, மேற்கண்ட இடத்தில் குடியிருக்கும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு தகுதியான நிலத்தினை தேர்வு செய்து, பட்டா வழங்குமாறு திருவெறும்பூர் வட்டாட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

21—

புதிய வட்டம்

வினா எண் 1695—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2018 ஜூலை 9*

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விளவங்கோடு வட்டத்தினைப் பிரித்து கிள்ளியூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

22—

வீட்டுமனைப் பட்டா மற்றும் நிலப் பட்டா

வினா எண் 1746—திரு. பி. முருகன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், பெத்தசிகலப்பள்ளி ஊராட்சி, கொட்டாயூர் கிராமத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெத்தசிகலப்பள்ளி கிராம சர்வே எண் 179/2 விஸ்தீர்ணம் 290.39.0 ஹெக்டேர் நிலம் ஒதுக்குக் காடு (Reserve forest) *என வகைபாடு செய்யப்பட்டு உள்ளது. இப்புலத்தில் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேல் 201 குடும்பங்கள் வீடு கட்டியும், நிலம் ஆக்கிரமிப்பு செய்தும் வசித்து வருகின்றனர். அவர்கள் அனைவருக்கும், ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தில் வீடு தவிர வேறு ஏதுமில்லை. இவர்கள் அனைவரும் கூலி வேலை செய்து பிழைத்து வருகின்றனர். இம்மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் அரசால் செய்து தரப்பட்டுள்ளன.*

2. இந்நிலமானது கிராம கணக்குகளில் ஒதுக்குக் காடு (Reserve forest) *என வகைபாடு செய்யப்பட்டுள்ளதாலும், இது மிகவும்*

2018 ஜூலை 9]

ஆட்சேபகரமான புறம்போக்கு (Highly objectionable poramboke) *என்பதாலும், இந்நிலத்தில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் நிலப் பட்டா வழங்க அரசு விதிமுறைகளின்படி வழிவகை இல்லை.*

23—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2133—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவையாறு தொகுதி, பூதலூர் வட்டம், கச்சமங்கலம் வருவாய் கிராமம், மணல்மேடு பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், அகரப்பேட்டை சரகம், கச்சமங்கலம் கிராமம் புல எண் 81, மொத்தப் பரப்பு 1.17.0 ஏர்ஸ் கிராம கணக்கில் பிள்ளை வாய்க்கால் என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறைக்கு சொந்தமான பிள்ளை வாய்க்கால் என்ற நீர்நிலை புறம்போக்கில் 17 குடும்பங்களை சேர்ந்தவர்கள் வீடு கட்டி நிரந்தரமாக வசித்து வருகின்றனர். இவர்கள் இந்து, ஆதி திராவிட தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் இலவச வீட்டுமனைப் பட்டா பெற தகுதியுள்ள நபர்கள். எனினும், அவர்கள் வசித்து வரும் இடம் நீர்நிலை புறம்போக்கு என்பதால் பட்டா வழங்குவதற்கு விதிகளில் இடமில்லை. ஆயினும், அதே கிராமத்தில் புல எண் 80/2—ல், மொத்தப் பரப்பு 0.77.50 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த நிலத்தில் சொக்கநாதேஸ்வரர் (எ) மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இந்த இடத்தில் நத்தமாக வகைமாற்றம் செய்து, இலவச வீட்டுமனைப் பட்டா ஒப்படை செய்திட போதுமான இடம் உள்ளது. எனவே, பூதலூர் வட்டம், அகரப்பேட்டை சரகம், கச்சமங்கலம் கிராமம்,*

மணல்மேடு என்ற இடத்தில் வசித்துவரும் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 17 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா ஒப்படை செய்திட வழிவகை உள்ளது.

24—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2134—திரு. ஆர். காந்தி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா வட்டம், நவ்லாக் பகுதியிலுள்ள புளியங்கண்ணு—அவரக்கரை பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் எல்லைக்குட்பட்ட நவ்லாக் கிராமமானது புளியங்கண்ணு—அவரக்கரை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வருவாய் கிராமமாகும். இக்கிராமத்தில் 1,006 உட்பிரிவுகளைக் கொண்ட புல எண்கள் கணக்குகளின்படி, குழந்தைகள் மதிய உணவு திட்ட அலுவலர், சென்னை என்ற பெயரிலும், 1,285 உட்பிரிவுகளை கொண்ட புல எண்கள் தனிப்பட்ட நபர்களின் பெயரிலும் பதிவாகியுள்ளன என்றாலும், பூமியில் அனுபவப்படி வேறு நபர்கள் வசம் உள்ளது. பட்டா வழங்கக் கோரும் சுமார் 400 குடும்பங்கள் இப்பகுதியில் வசித்து வருகின்றனர். எனவே, கிராமத்தில் முழுவதுமாக மறு நில அளவை செய்து, கிராமக் கணக்குகள் தயார் செய்தும், ஸ்தல விசாரணையும் மேற்கொண்ட பின்னரே பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க இயலும்.

25—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2138—திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை–புதூர்நாடு மலைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், புதூர்நாடு வழி நடுக்குப்பம் மற்றும் பெருமாள் கோயிலூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 4 நபர்கள் நிலப் பட்டா கோரியும், 29 நபர்கள் வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரியும் மனு அளித்துள்ளனர். மேற்படி பட்டா கோரும் இடமானது அனைத்தும் நில அளவை செய்யப்படாத (unsurvey Land) *நிலமாக உள்ளதால், நில அளவை செய்து, புதிய சர்வே எண்கள் அளிக்கப்பட்ட பின்பே பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும். எனவே, இவ்விடத்திற்கு உடனடியாக பட்டா வழங்க வழிவகை இல்லை.*

26—

புதிய மாவட்டம்

வினா எண் 2139—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, புதிய மாவட்டம் அமைப்பது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. எனவே, திருப்பத்தூரை தனி மாவட்டமாக பிரித்திட இயலாது.

மேலும், புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது.

27—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2320—திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, காவல்கிணறு விலக்கு சந்திப்பு பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

ராதாபுரம் தொகுதி, காவல்கிணறு சந்திப்பு பகுதியானது ராதாபுரம் வட்டம், பழவூர் குறுவட்டம், பெருங்குடி பகுதி–2 கிராமம், புல எண் 1947 B/2 *விஸ்தீரணம் 0.54.5 எக்டேர்ஸ் நிலமாகவும், கிராமக் கணக்கின்படி தேசிய நெடுஞ்சாலை மற்றும் கப்பல், போக்குவரத்து துறை எனவும் உள்ளது. மேற்படி புல எண்ணில் 30 குடும்பங்கள் வீடு கட்டி 20 ஆண்டுகளுக்கு மேல் வசித்து வருகிறார்கள். மேலும், ஒரு டீ கடை மற்றும் நாராயணசாமி கோயில் உள்ளது. மேற்படி புலமானது தேசிய நெடுஞ்சாலை மற்றும் கப்பல், போக்குவரத்துத் துறை என கிராமக் கணக்கில் பதிவாகியுள்ளதனால் பட்டா வழங்க வழிவகை இல்லை.*

28—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2373—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பேரூராட்சி பர்மா காலனி மற்றும் சிறுநாட்டான்வயல் நற்பவளக்குடி ஊராட்சியிலுள்ள மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தாலுகா, சிறுநாட்டான்வயல் கிராமம், புல எண் 15/1–ல் 0.37.0 ஏர்ஸ் கிராமக் கணக்கில் "வாய்க்கால்" என உள்ளதால் மேற்படி புல எண்ணில் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக வசித்து வந்தாலும் அரசு விதிகளின்படி நீர்நிலை புறம்போக்கில் மனைப் பட்டா வழங்க இயலாது.

2. ஆலங்குடி தாலுகா, கீரமங்கலம் பேரூராட்சி பர்மா காலனி வீட்டுமனைப் பட்டா கோரும் இடம் தனி நபருக்கு உரிமையான பட்டா நிலமாக இருப்பதால் அதில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

29—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2493—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவாலம்பொழில் கிராமம் கலைஞர் நகரில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவாலம்பொழில் கிராமம் நத்தம் நிலவரித் திட்டத்தின் தூய அடங்கல் பதிவேட்டு ஆவணங்களின்படி கிராம புல எண் 119/21–ல் உள்ள 0.28.60 ஹெக்டேர் பரப்பளவு நிலம் சர்க்கார் புறம்போக்கு என பதிவாகி உள்ளது. இதில் பல்வேறு பிரிவினைச் சார்ந்த 20 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி தெருவின் வடக்கு பக்கம் உள்ள வரிசையில் 4 கூரை வீடுகளும், 6 ஓட்டு வீடுகளும் என 10 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தெற்கு பக்கம் உள்ள வரிசையில் 7 கூரை வீடுகளும், 3 ஓட்டு வீடுகளும் என 10

குடும்பங்களும் காலி மனைகளும் உள்ளன. மேற்படி இடத்தில் தற்போது வசித்துவரும் குடும்பத்தினர்களுக்கும், எம்.சி.டி. முத்தையா செட்டியார் குடும்ப டிரஸ்ட் சென்னை என்ற அமைப்பிற்கும் இடையே மேற்படி இடத்தில் உரிமைக் குறித்து சிவில் வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாக விசாரணையில் தெரிய வருகிறது. எனவே, மேற்படி நீதிமன்ற வழக்கின் தீர்ப்புகள் ஏதேனுமிருப்பின், அவற்றை பரிசீலித்து தகுதியின் அடிப்படையில் மேற்கண்ட குடும்பத்தினருக்கு பட்டா வழங்கிட விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

30—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2494—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ஆலக்குடி கிராமம் பிஷப் சாலமன் நகரில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், ஆலக்குடி வருவாய் கிராமம், பிஷப் சாலமன் நகர் புல எண் 435/8–ல் 0.63.0 உள்ள நிலம் ஏர்ஸ் நத்தம் வகைபாடு என பதிவாகி உள்ளது. மேற்கண்ட நிலத்தில் 15 குடும்பங்கள் 20 ஆண்டுகளாக வீடுகட்டி நிரந்தரமாக வசித்து வருகின்றனர். தற்போது வசித்துவரும் குடும்பங்களிடம் விசாரணை மேற்கொண்டு ஆவணங்களின் அடிப்படையிலும், தகுதியின் அடிப்படையிலும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

31—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2495—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) திருவையாறு தொகுதி, தொண்டாம்பட்டி கடம்பன்குடி ஊராட்சி முத்தரையர் தெருவில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம் மற்றும் சரகம், கடம்பங்குடி கிராமம், முத்தரையர் தெரு (பூசாரி தெரு) என்ற முகவரியில் வசித்துவரும் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு கிராம கணக்குகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

32—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2568—டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், வடுகம்பாடி ஊராட்சி, தேவகவுண்டனூரில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி, வடுகம்பாடி கிராமம் (உட்கடை தேவகவுண்டனூர்) நத்தம் புல எண் 1359/12 மொத்த விஸ்தீரணம் 0.00.63 ஹெக்டேர் (678.13 சதுரடி=1.6 சென்ட்) காலியிடம் புறம்போக்கில் ஒரு நபர் வீடுகட்டி குடியிருந்து வருகின்றார். வீட்டுமனைப் பட்டா வழங்க ஊராட்சியின் தீர்மானம் பெறப்பட வேண்டும்.

33—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 2599—திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

ஈரோடு வட்டாட்சியர் அலுவலக கட்டடம் தற்பொழுது நல்ல நிலைமையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

34—

புதிய வட்டம்

வினா எண் 3712—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், கல்குளம் வட்டத்திலிருந்து கிள்ளியூரை பிரித்து தனி வட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விளவங்கோடு வட்டத்தினைப் பிரித்து, கிள்ளியூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைப்பது குறித்தான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

35—

புதிய வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 4922—திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜுலை 9]

தியாகராய நகர் தொகுதியிலுள்ள மூன்று வட்டாட்சியர் அலுவலகங்களை ஒருங்கிணைத்து புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

சென்னை மாவட்டம், கிண்டி, மாம்பலம் மற்றும் மயிலாப்பூர் ஆகிய மூன்று வட்டங்களில் ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டுமே தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்படுகிறது. எனவே, தியாகராய நகர் தொகுதியிலுள்ள மாம்பலம், கிண்டி, எழும்பூர் ஆகிய மூன்று வட்டாட்சியர் அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க இயலாது.

36—

புதிய வட்டம்

வினா எண் 5159—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தைப் பிரித்து ஆனைமலையை தனி வட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *96 கிராமங்களைக் கொண்ட பொள்ளாச்சி வட்டத்திலிருந்து 19 கிராமங்களைக் கொண்ட ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து ஒரு புதிய வட்டம் உருவாக்குவது என்பது அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோல்களை பூர்த்தி செய்யவில்லை. எனவே, புதியதாக ஆனைமலை வட்டம் உருவாக்க இயலாது.*

37—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 7723—திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மாநகர் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 202 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

38—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 8364—திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், மஜரா அவரப்பாளையம் கிராமத்தில் க.ச.எண் 444, நத்தம் புறம்போக்கில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், அவரப்பாளையம் கிராமத்தில் க.ச.எண் 444, நத்தம் புறம்போக்கில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்த 22 நபர்களுக்கு 18–5–2017 அன்று வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

39—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 8365—திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) *பல்லடம் தொகுதி, கரைப்புதூர் கிராமம், அய்யம்பாளையம் கிராமம், க.ச.எண் 435–ல் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், மஜரா அய்யம்பாளையம் கிராமம் க.ச.எண் 435–ல், கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்த 9 நபர்களுக்கு 18–5–2017 அன்று வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

40—

புதிய வட்டம்

வினா எண் 8534—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவாடனை தொகுதி, திருவாடனை வட்டத்தை இரண்டாக பிரித்து ஆர்.எஸ் மங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆர்.எஸ். மங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குவது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல் அனைத்தும் பூர்த்தியாவதால் ஆர்.எஸ். மங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கலாம். இருப்பினும் புதிய வட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதாகும்.

[2018 ஜூலை 9

41—

இயற்கை பேரிடர் பாதுகாப்பு மையம்

வினா எண் 9678—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, முட்டம் கடற்கரைப் பகுதியில் இயற்கை பேரிடர் பாதுகாப்பு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் கடற்கரைப் பகுதிக்கு அருகில் (2 கிலோ மீட்டர் தொலைவில்) அம்மாண்டிவிளை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 500 பொது மக்கள் தங்கக்கூடிய அளவில் பேரிடர் மேலாண்மையின்கீழ் பல்நோக்கு பேரிடர் பாதுகாப்பு மையம் (Multipurpose Evacuation Shelter) கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

42—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

வினா எண் 10493—திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், துரிஞ்சிக்குப்பம் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலக கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், துரிஞ்சிக்குப்பம் ஊராட்சியில் கிராம நிருவாக

அலுவலகக் கட்டடம் 2003–2004 ஆம் ஆண்டு கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது என்பதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

43—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 11827—திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 276 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக அலுவலகம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

44—

புதிய வட்டம்

வினா எண் 24738—திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி வட்டங்களை சீரமைத்து முத்துப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்ட தனி வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 118, வருவாய்த் துறை, நாள் 28–2–2011–ல், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி

கோட்டம், திருத்துறைப்பூண்டி மற்றும் மன்னார்குடி வட்டங்களை சீரமைத்து முத்துப்பேட்டை என்ற புதிய வட்டத்தினை உருவாக்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

45—

குளிர்சாதன பேருந்து

வினா எண் 52—திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெய்வேலி நகரத்திலிருந்து நேரடியாக சென்னைக்கு 2x2 இருக்கைகள் கொண்ட ஐந்து சொகுசு பேருந்துகள் பத்து நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தட நீளம் 300 கி.மீ. மற்றும் அதற்கு அதிகமான வழித் தடங்களில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் சொகுசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால், மேற்படி கோரியுள்ள வழித் தடத்தின் தட நீளம் 205 கி.மீ. ஆக உள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்மூலம் குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும்போது இக்கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும்.

46—

பேருந்து வசதி

வினா எண் 57—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் இருந்து நாகப்பட்டினம் மாவட்டம் மணல்மேடு வழியாக

வேளாங்கண்ணிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில்–வேளாங்கண்ணி புதிய வழித்தடமாகும். இதன் வழித்தட நீளம் 132 கி.மீ. ஆகும். காட்டுமன்னார்கோவில்–மணல்மேடு வரையிலும், மணல்மேடு–மயிலாடுதுறை வரையிலும் மற்றும் மயிலாடுதுறை–வேளாங்கண்ணி வரையிலும் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. எதிர்வரும் காலங்களில் மேற்படி வழித்தடத்தில் நேரடி பேருந்துகள் இயக்கிட ஆய்விற்குப்பின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

47—

சொகுசுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 58—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, முட்டத்திலிருந்து ஆயங்குடி வழியாக சென்னைக்கு நவீன சொகுசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முட்டத்திலிருந்து காட்டுமன்னார்கோவில் வரை 5 புறநகர் பேருந்துகள்மூலம் 16 நடைகளும் மற்றும் ஒரு நகரப் பேருந்துமூலம் 4 நடைகளும் ஆக மொத்தம் 20 நடைகள் நாளொன்றுக்கு இயக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்மூலம் நவீன சொகுசுப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும்போது இக்கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும்.

48—

சிற்றுந்து வசதி

வினா எண் 59—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியிலுள்ள குக்கிராமங்களுக்கு சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசாணை (நிலை) எண் 136, நாள் 23–2–2011–ன்படி, 100–ம் அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் பகுதியை அருகிலுள்ள பேருந்து நிலையத்துடனும், நகரத்துடனும் இணைக்க பேருந்து இயக்கப்படும் வழித்தடத்தில் 30 சதவிகிதத்துக்கு மிகாமல் தனியார்மூலம் கிராமப் பகுதிகளுக்கு மினி பேருந்து இயக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 146, நாள் 25–2–2011–ல் மினி பேருந்துக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படுவதற்கான வழிமுறைகள் வழங்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறையில் இருக்கிறது.

49—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 75—திரு. சு. ரவி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணத்திலிருந்து 13 கி.மீ. தொலைவிலுள்ள திருத்தணி, 28 கி.மீ. தொலைவிலுள்ள சோளிங்கர் மற்றும் 32 கி.மீ. தொலைவிலுள்ள காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பணிமனைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. G.O. (D) No. 61, *போக்குவரத்துத் துறை, நாள் 9–9–1992–ல் குறிப்பிட்டுள்ளபடி இரண்டு பணிமனைகளுக்கிடையே குறைந்தபட்ச தூரம் 40 கி.மீ. இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் அரக்கோணத்தில் புதிய பணிமனை அமைப்பது குறித்து தற்போது பரிசீலிக்க இயலாது.*

50—

பேருந்து வசதி

வினா எண் 83—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் பேருந்து நிலையத்திலிருந்து களியக்காவிளைக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சல், கருங்கல், மார்த்தாண்டம் வழியாக களியக்காவிளை தடத்தில் தடம் எண் 88F *பேருந்துமூலம் தினம் 8 நடைகளும், தடம் எண் 454 திருவனந்தபுரம் தடப் பேருந்துமூலம் தினந்தோறும் 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. குளச்சல், திங்கள்நகர், அழகியமண்டபம், மார்த்தாண்டம் மற்றும் களியக்காவிளை தடத்தில் தடம் எண் 301 மூலம் தினந்தோறும் 12 நடைகளும், தடம் எண் 453 திருவனந்தபுரம் தடப் பேருந்துமூலம் தினந்தோறும் 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்போதைய தேவைக்கேற்ப இப்பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனினும், இயங்கிவரும் இப்பேருந்துகளின் பயணிகள் பயன்பாடு அதிகரிக்கும்போது கூடுதல்/புதிய பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.*

51—

பேருந்து வசதி

வினா எண் 84—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திங்கள்நகரிலிருந்து குளச்சல் வழியாக குலசேகரத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சல்–குலசேகரம் நேர்தடத்தின் இடையே அமைந்துள்ளது திங்கள்நகர். குளச்சல், திங்கள்நகர், அழகியமண்டபம் வழியாக குலசேகரத்திற்கு தடம் எண் 332–ல் 15 பேருந்துகள்மூலம் தினசரி 130 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த பேருந்துகள் அனைத்தும் திங்கள்நகர் வழியாகவே இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

52—

பேருந்து வசதி

வினா எண் 280—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டையிலிருந்து மதுக்கூர்–திருமக்கோட்டை வழியாக தென்பரை தோணித்துறை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையிலிருந்து மதுக்கூர்–திருமக்கோட்டை வழியாக தென்பரை தோணித்துறை வரை வழித்தடம் ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி வழித்தடம் புதிய வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில், பட்டுக்கோட்டையிலிருந்து தெற்கு தென்பரை வரை நான்கு நடைகளும், மன்னார்குடியிலிருந்து பைங்காநாடு

2018 ஜூலை 9]

இராதாநரசிம்மபுரம் வடக்கு தென்பரை வழியாக புதுக்குடிக்கு நான்கு நடைகளும், மன்னார்குடியிலிருந்து தெற்கு தென்பரை–தோணித்துறை பாலம் வரை ஆறு நடைகளும் என பகுதி பகுதியாக அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வழித்தடத்தில் தற்போது போதுமான பேருந்து வசதியுள்ளதால் இவ்வசதியினையே பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

53—

பேருந்து வசதி

வினா எண் 281—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மன்னார்குடியிலிருந்து இடையர் எம்பேத்தி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *மன்னார்குடி–இடையர் எம்பேத்தி கிராமத்திற்கு பேருந்து இயக்குவது பற்றி உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

54—

பேருந்து வசதி

வினா எண் 282—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மன்னார்குடியிலிருந்து தேவங்குடி வழியாக கற்கோவில்–கருவேலங்குளம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி–கற்கோவில் தட நீளம் 15 கி.மீ. ஆகும். மன்னார்குடியிலிருந்து–தேவங்குடி வரை ஒரு பேருந்துமூலம் 14 நடைகள் இயக்கப்படுகின்றன. இதில் 6 நடைகளை கற்கோவில்–கருவேலங்குளம் வரை நீட்டித்து இயக்கிட உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

55—

பேருந்தினை மீண்டும் இயக்குதல்

வினா எண் 283—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடியிலிருந்து கண்டிதம்பேட்டை, உள்ளிக்கோட்டை, வடசேரி வழியாக பட்டுக்கோட்டைக்கு இயங்கி வந்த தடம் எண் 20 பேருந்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு கண்டிதம்பேட்டை, உள்ளிக்கோட்டை, வடசேரி வழியாக இயக்கப்பட்ட பேருந்து தற்போது மீண்டும் இயக்கப்பட்டு வருகிறது.

56—

பேருந்து வசதி

வினா எண் 284—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடியிலிருந்து பைங்காநாடு–இராதாநரசிம்மபுரம், தென்பரை, தோணித்துறை வழியாக முத்துப்பேட்டைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மன்னார்குடி–முத்துப்பேட்டை வழி பைங்காநாடு–இராதாநரசிம்மபுரம், தென்பரை, தோணித்துறை வழித்தட நீளம் 39 கிலோ மீட்டராகும். இவ்வழித்தடத்தில் மன்னார்குடியிலிருந்து தோணித்துறை வரை இரண்டு சென்று திரும்பும் நடைகளும், மன்னார்குடியிலிருந்து தென்பரை வரை நான்கு சென்று திரும்பும் நடைகளும், மன்னார்குடியிலிருந்து புதுக்குடி வரை எட்டு சென்று திரும்பும் நடைகளும் மற்றும் மன்னார்குடியிலிருந்து முத்துப்பேட்டைக்கு தோணித்துறை நேர்வழியாக முப்பது சென்று திரும்பும் நடைகளும் என பகுதி பகுதியாக வழித்தடம் முழுவதும் போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

57—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 285—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி நகரத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மன்னார்குடி பகுதி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென மன்னார்குடி தாலுகா மூவாநல்லூர் கிராமத்தில் 15 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு, அதனை போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் செய்து தருமாறு மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. மேற்படி நிலம் போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் பெறப்பட்ட பின்னர், உரிய நிதி ஒப்பளிப்பு பெற்று மன்னார்குடி பகுதி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2018 ஜூலை 9

58—

பேருந்து வசதி

வினா எண் 324—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி–ராயக்கோட்டைக்கு மாதேப்பட்டி, செம்படமுத்தூர், எண்ணேகொல், ஒட்டுப்பட்டி, பெல்ஸ்பள்ளி, பாலிகானூர், மிட்டப்பள்ளி வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி–பாலிகானூர் (வழி) மாதேப்பட்டி, செம்படமுத்தூர், எண்ணேகொல்புதூர், ஒட்டுப்பட்டி தடத்தில் 3 நகர் பேருந்துகள்மூலம் 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளின் அடர்வு 30.18 விழுக்காடாக உள்ளது. கிருஷ்ணகிரி–எண்ணேகொல் (வழி) குந்தாரப்பள்ளி, குருபரப்பள்ளி தடத்தில் 1 நகர் பேருந்துமூலம் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளின் அடர்வு 30.56 விழுக்காடாக உள்ளது. கிருஷ்ணகிரி–ராயக்கோட்டை (வழி) மாதேப்பட்டி, பாலகுறி, ஆலப்பட்டி, பூவத்தி, மிட்டப்பள்ளி கிராஸ் தடத்தில் 2 நகர் பேருந்துகள்மூலம் 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளின் அடர்வு 31.90 விழுக்காடாக உள்ளது. பாலிகானூர்–மிட்டப்பள்ளி சாலை கனரக போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. மேலும், எண்ணேகொல்புதூர்–எண்ணேகொல் சாலை பழுதடைந்துள்ளதால் கனரக போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. மிட்டப்பள்ளிகிராஸ்–மிட்டப்பள்ளி 0.50 கி.மீ. நடைபயண தூரமே உள்ளது. மேற்கண்ட கிராமங்கள் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகவே கருதப்படுகிறது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக கருதப்படுகிறது.

2018 ஜூலை 9]

59—

பேருந்து வசதி

வினா எண் 424—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாங்குநேரி தொகுதி, களக்காட்டிலிருந்து சென்னைக்கு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

களக்காட்டிலிருந்து சென்னைக்கு பயணிக்கும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேற்படி தடத்தில் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்து இயக்குவது குறித்து அரசால் பரிசீலிக்கப்படும்.

60—

பேருந்து வசதி

வினா எண் 425—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி—சென்னை இடையே விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாங்குநேரி பகுதி மக்கள் திசையன்விளையிலிருந்தும் மற்றும் குட்டத்திலிருந்தும் சென்னைக்கு நாங்குநேரி வழியாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் இயக்கப்படும் அதிநவீன சொகுசு மிதவை பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், மேற்கண்ட தடப் பேருந்துகளின் சராசரி பயணிகளின் அடர்வு 70 சதவிகிதம் முதல் 88 சதவிகிதம் மட்டுமே உள்ளது.

எனவே, நாங்குநேரியிலிருந்து சென்னைக்கு பயணிக்கும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேற்படி தடத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

61—

பேருந்து வசதி

வினா எண் 638—திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, ஆயிப்பேட்டை கிராமத்திலிருந்து இந்திரா நகர் பகுதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மேற்படி இந்திரா நகர், விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. இந்திரா நகர் வழியாக ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு புறநகரப் பேருந்தும், பன்னிரெண்டு நகரப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. மேலும், ஆயிப்பேட்டை கிராமம் வழியாக பண்ருட்டியிலிருந்து குறிஞ்சிப்பாடிக்கு 2 பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 12 நடைகள் இயக்கப்படுகின்றன. இதனால் அவ்விரண்டு ஊர்களுக்கு செல்லும் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். அரசு ஆணையின்படி நகரப் பேருந்து இயக்கத்திற்கு பேருந்து புறப்படுமிடம் அல்லது சேருமிடம் இவற்றில் ஒன்றாவது அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள நகரமாக இருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், கோரியுள்ள வழித்தடத்தின் இரு முனைகளும் அரசிதழில் வெளியிடப்படாத நகரமாக இருப்பதால், நேரடிப் பேருந்து வசதி அளித்திட இயலாத நிலை உள்ளது. எனவே, மேற்படி பேருந்து வசதியே பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

2018 ஜூலை 9]

62—

பேருந்து வசதி

வினா எண் 640—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நெய்வேலி நகரத்திலிருந்து மதனகோபாலசத்திரம் பகுதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நெய்வேலி நகரத்திலிருந்து மதனகோபாலபுரம் பகுதி வழியாக பள்ளி நேரங்களில் ஒரு நகரப் பேருந்துமூலம் இரண்டு நடைகள் இயக்கப்படுகின்றன. இந்நடைகளின் பயணிகள் அடர்வு 44.28 சதவிகிதமாக உள்ளது. இப்பேருந்து வசதி மாணவ/மாணவியர்கள் மற்றும் பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்கிட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

63—

பேருந்து வசதி

வினா எண் 759—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூரிலிருந்து ஒரக்காட்டுப்பேட்டை, சிறுபிணாயூர் மற்றும் அரும்புலியூர் ஆகிய பகுதிகளுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

உத்திரமேரூரிலிருந்து ஒரக்காட்டுப்பேட்டை வழி செங்கல்பட்டு தடத்தின் நீளம் 49 கி.மீ. ஆகும். இதில் உத்திரமேரூர்

முதல் செங்கல்பட்டு வரை 7 பேருந்துகள்மூலம் தினசரி 70 நடைகளும், செங்கல்பட்டு முதல் ஒரக்காட்டுப்பேட்டை வரை இரு பேருந்துகள்மூலம் தினசரி 10 நடைகள் என பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதி உள்ளது.

உத்திரமேரூர்—அரும்புலியூர்—சிறுபிணாயூர் வழி செங்கல்பட்டு தடத்தின் நீளம்—55 கி.மீ. ஆகும். இதில் உத்திரமேரூர் முதல் செங்கல்பட்டு வரை 7 பேருந்துகள்மூலம் தினசரி 70 நடைகளும், செங்கல்பட்டு முதல் அரும்புலியூர், பினையூர் வரை 6 பேருந்துகள்மூலம் 24 நடைகள் என பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதி உள்ளது. எனவே, கோரப்பட்ட இரு தடங்களும் பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளதால் உத்திரமேரூர்—ஒரக்காட்டுப்பேட்டை—உத்திரமேரூர்—அரும்புலியூர்—சிறுபிணாயூர் என புதிய தடங்கள் இயக்கத் தேவையில்லை.

64—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 880—திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூர் பேரூராட்சியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூர் பேரூராட்சியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

65—

சிற்றுந்து வசதி

வினா எண் 889—திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

(அ) *புதுக்கோட்டை தொகுதியில் பேருந்து வசதி இல்லாத இடங்களுக்கு சிற்றுந்து (Small Bus) இயக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராமப்புற பகுதிகளில் பேருந்து இயங்காத வழித்தடங்களில் பொது மக்களுக்கு பேருந்து வசதியை ஏற்படுத்தும் நோக்கில் 1997 ஆம் ஆண்டு தனியாருக்கு மினி பேருந்து அனுமதி வழங்கும் திட்டத்தினை அரசு அறிமுகம் செய்தது. பின்னர், அத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு 20 கி.மீ. தூரம் சிற்றுந்து இயக்க 1999–ல் அரசு உரிய சட்டத்தினை அறிவிக்கை செய்தது. தற்போது அரசாணை (நிலை) எண் 136, உள் (போக்குவரத்து–3) துறை, நாள் 23–2–2011–ன்படி, 100–ம் அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் பகுதியை அருகிலுள்ள பேருந்து நிலையத்துடனும், நகரத்துடனும் இணைக்க பேருந்து இயக்கப்படும் வழித்தடத்தில் 30 சதவிகிதத்துக்கு மிகாமல் தனியார்மூலம் கிராமப் பகுதிகளுக்கு மினி பேருந்து இயக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

66—

பேருந்து நிலையம் விரிவாக்கம்

வினா எண் 1142—திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கூடலூர் தொகுதி, கூடலூர் பேருந்து நிலையத்தினை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூடலூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய 4.90 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு, இப்பேருந்து

[2018 ஜூலை 9

நிலையத்தின் பின்புறம் அமைந்துள்ள சுமார் 0.99 ஏக்கர் பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது. பேருந்து நிலைய விரிவாக்க பணியின் பூர்வாங்க பணிக்காக முதல் கட்டமாக கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50 இலட்சமும், மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ரூ.23.94 இலட்சமும் பெறப்பட்டு தடுப்புச் சுவர் பணி முடிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையத்திலிருந்தும், அதன் வழியாகவும் தினசரி 119 பேருந்துகள் மூலம் 327 நடைகள் இயக்கப்படுகின்றன. மேற்கண்ட பணிக்காக நீலகிரி மாவட்ட ஆட்சியரிடம் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி பெற்றுத் தர கோரப்பட்டுள்ளது. அவ்வாறு நிதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் மேற்கொண்டு பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகள் குறித்து பரிசீலிக்கலாம்.

67—

பேருந்து வசதி

வினா எண் 1240—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையிலிருந்து பாரிமுனை வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, தமிழ் சாலையில் அமைந்துள்ளது. இச்சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை தடுத்திடவும், அவசர காலத்தில் சிரமமின்றி பேருந்துகளை இயக்கிடவும் ஏதுவாக, எழும்பூர் சேத்துப்பட்டு பகுதி நோக்கி செல்லும் சாலை போக்குவரத்து காவல் துறையினரால் ஒருவழி பாதையாக மாற்றப்பட்டு அதற்கு அருகில் உள்ள எழும்பூர் நெடுஞ்சாலை வழியாக இயக்கப்படுகிறது. அங்கிருந்து சுமார் 300 மீட்டர் தூரத்தில் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட இரு வழித்தடங்களின் 24 பேருந்துகளை

பயன்படுத்தி எழும்பூர் பகுதிக்கு வந்தடைந்தால் பயணிகள் கீழ்க்குறிப்பிட்ட இரண்டு வழித்தட.களின் 41 பேருந்துகள்மூலம் பாரிமுனை/பிராட்வேக்கு எளிதில் சென்றடையலாம்.

68—

பேருந்து வசதி

வினா எண் 1284—திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், S.N. புதூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருச்சி மண்டலத்திலிருந்து துறையூர்–தாத்தையங்கார்பேட்டை (வழி) S.N. புதூர் தடத்தில் ஒரு நகரப் பேருந்துமூலம் தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வந்தன. கடந்த 2016 ஜனவரி மாதம் முதல் பாலகிருஷ்ணப்பட்டி கிராமத்திலிருந்து 2.0 கி.மீ. தூரத்திலுள்ள S.N. புதூரில் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. இதன்காரணமாக, பாலகிருஷ்ணப்பட்டி–S.N. புதூர் தடத்தில் நகரப் பேருந்து இயக்கப்படாமல் இருந்தது. மேற்கண்ட சாலை அமைக்கும் பணி நிறைவுற்றதால் தற்போது இவ்வழித்தடத்தில் மீண்டும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

69—

பேருந்து வசதி

வினா எண் 1285—திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறையூர் தொகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியம், கோம்பை ஊராட்சி, பச்சமலையில் சின்னபழமலை, பெரியபழமலை பகுதிகளுக்கு பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

துறையூர் தொகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியம், கோம்பை ஊராட்சி, பச்சமலையில் உள்ள சின்னபழமலை, பெரியபழமலை பகுதிகளுக்கு அருகில் திருச்சி மண்டலத்திலிருந்து துறையூர்–ஏரிக்காடு, துறையூர்–செம்புளிச்சாம்பட்டி, நெசக்குளம், போந்தை மற்றும் பாளையம் ஆகிய பகுதிகளுக்கு பழமலை பிரிவு சாலை வழியாக 3 பேருந்துகள்மூலம் தினசரி 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த இயக்க நடைகளின் சராசரி பயணிகளின் பயன்பாட்டு அடர்வு 67.55 சதவிகிதம் ஆகும். மேலும், கோரிக்கையின் வழித்தடத்தில் பழமலை பிரிவு சாலையிலிருந்து சின்னபழமலை, பெரியபழமலை ஆகிய கிராமங்களுக்கு திரும்பும் 5 கி.மீ. சாலை பேருந்து திரும்புவதற்கு மிகவும் கடினமாகவும் மற்றும் கொண்டை ஊசி வளைவாகவும் உள்ளது. எனவே, மேற்கண்ட வழித்தடத்தில் சாலை அகலப்படுத்தப்பட்ட பின்பு வழித்தடத்தை ஆய்வு செய்து பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

70—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 1305—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, அந்தியூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஒரு புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவங்குவதற்கு அப்பகுதியில் குறைந்தபட்சம் 7,500 போக்குவரத்து வாகனங்கள் இருத்தல் வேண்டும். ஆனால், அந்தியூர் பகுதியில் 2,046 போக்குவரத்து வாகனங்களும், 27,083 போக்குவரத்து

அல்லாத வாகனங்களும் மட்டுமே உள்ளன. அந்தியூர் பகுதியில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான போக்குவரத்து வாகனங்கள் இருப்பதனால் அந்தியூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு தற்பொழுது சாத்தியக்கூறுகள் இல்லை.

71—

பேருந்தினை மீண்டும் இயக்குதல்

வினா எண் 1319—டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மயிலம் தொகுதி, இரட்டணையிலிருந்து சென்னைக்கு மீண்டும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இரட்டணையிலிருந்து கூட்டேரிப்பட்டு, திண்டிவனம் வழியாக சென்னைக்கு புறநகர் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வந்தது. இவ்வழித்தடத்தில் கூட்டேரிப்பட்டுக்கு அருகே மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருவதால் இப்பேருந்தின் இயக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பாலம் கட்டும் பணி முடிந்தவுடன் பேருந்து மீண்டும் இயக்கப்படும்.

72—

சிற்றுந்து வசதி

வினா எண் 1324—திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கு சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராமப்புற பகுதிகளில் பேருந்து இயங்காத வழித்தடங்களில் பொது மக்களுக்கு பேருந்து வசதியை ஏற்படுத்தும்

நோக்கில் 1997 ஆம் ஆண்டு தனியாருக்கு மினி பேருந்து அனுமதி வழங்கும் திட்டத்தினை அரசு அறிமுகம் செய்தது. பின்னர் அத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு 20 கி.மீ. தூரம் சிற்றுந்து இயக்க 1999–ல், அரசு உரிய சட்டத்தினை அறிவிக்கை செய்தது. தற்போது அரசாணை (நிலை) எண் 136, நாள் 23–2–2011–ன்படி, 100–ம் அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் பகுதியை அருகிலுள்ள பேருந்து நிலையத்துடனும், நகரத்துடனும் இணைக்க பேருந்து இயக்கப்படும் வழித்தடத்தில் 30 சதவிகிதத்துக்கு மிகாமல் தனியார்மூலம் கிராம பகுதிகளுக்கு மினி பேருந்து இயக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

73—

பேருந்து வசதி

வினா எண் 1412—திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலிருந்து நேரடியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் காரைக்குடியிலிருந்தும் மற்றும் ஆவுடையார்கோவிலிலிருந்தும் திருப்பதிக்கு புதுக்கோட்டை வழியாக ஒரு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. ஆகவே, புதுக்கோட்டை பகுதி மக்கள் மேற்கண்ட பேருந்து வசதியினை பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. மேலும், இப்பேருந்திற்கு புதுக்கோட்டையில் முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ளும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை–திருப்பதி தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநில ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்கப்படும்.

2018 ஜூலை 9]

74—

பேருந்து வசதி

வினா எண் 1413—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டையிலிருந்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக நாள்தோறும் சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டையிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தினசரி அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து இரு முனைகளிலும் தலா ஒரு பேருந்து வீதம் 2 பேருந்துகள் 26–2–2016 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் பயணத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

75—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 1415—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூரில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூரில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[*2018 ஜூலை 9*

76—

பேருந்து வசதி

வினா எண் 1418—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையிலிருந்து குளத்துநாயக்கன்பட்டி, மருங்குளம் வழியாக தஞ்சாவூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழித்தடத்தில் கந்தர்வகோட்டையிலிருந்து குளத்துநாயக்கன்பட்டி வழியாக மருங்குளம் வரை ஓர் அரசு நகர பேருந்து மூலமாக 6 நடைகளும், தஞ்சாவூரிலிருந்து மருங்குளம், குளத்துநாயக்கன்பட்டி வழியாக இரண்டு அரசுப் பேருந்துகள்மூலம் 18 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பகுதி பகுதியாக பயணிகளின் அடர்வுக்கேற்ப, பேருந்து சேவை வழங்கப்பட்டுள்ளது. புதிய வழித்தடங்கள் அறிவிக்கும்பொழுது கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

77—

பேருந்து வசதி

வினா எண் 1432—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து சேலத்திற்கு ஈச்சங்கோட்டை, மருங்குளம், வல்லம், திருச்சி வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடத்தின் முழுமைக்கும் தற்பொழுது பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. மேலும், உள்ளார்ந்த கிராமம்

2018 ஜூலை 9]

வழியாக தொலைதூர பேருந்துகள் இயக்கப்படும்போது, நேரடி பயணிகள் பயன்பாடு இருக்க வாய்ப்பு குறைவாகவே இருக்கும் எனக் கருதப்படுகிறது. மேற்குறிப்பிட்டவாறு பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

78—

பேருந்து வசதி

வினா எண் 1433—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து மதுரைக்கு திருவோணம், கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை, திருப்பத்தூர், மேலூர் வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடம் முழுமைக்கும் தற்பொழுது பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. மேலும், உள்ளார்ந்த கிராமம் வழியாக தொலைதூர பேருந்து இயக்கப்படும்போது, நேரடி பயணிகள் பயன்பாடு இருக்க வாய்ப்பு குறைவாகவே இருக்கும் என்பதால் மேற்குறிப்பிட்டவாறு பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

79—

பேருந்து வசதி

வினா எண் 1434—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து வேலூருக்கு கண்ணந்தங்குடி மேலையூர், வடுவூர், நீடாமங்கலம், கும்பகோணம், வடலூர், பண்ருட்டி, திருவண்ணாமலை வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடம் முழுமைக்கும் தற்பொழுது பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. மேலும், உள்ளார்ந்த கிராமம் வழியாக தொலைதூர பேருந்து இயக்கப்படும்போது, நேரடி பயணிகள் பயன்பாடு இருக்க வாய்ப்பு குறைவாகவே இருக்கும் எனக் கருதப்படுகிறது. மேற்குறிப்பிட்டவாறு பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

80—

பேருந்து வசதி

வினா எண் 1436—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து வேளாங்கண்ணிக்கு, மன்னார்குடி, லெட்சுமாங்குடி, திருவாரூர், கீழ்வேளூர், நாகப்பட்டினம் வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடம் முழுமைக்கும் தற்பொழுது பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. மேலும், ஒரத்தநாடு–வேளாங்கண்ணி செல்லும் பயணிகள் ஒரத்தநாடு–தஞ்சாவூர்–வேளாங்கண்ணி பிரதான தடத்தில் பயணம் செய்ய விரும்பி தற்பொழுது பயணம் செய்கிறார்கள். இத்தடத்தில் சராசரியாக 10–20 நிமிட இடைவெளியில் அதிகளவில் பேருந்து வசதி உள்ளது. மேற்குறிப்பிட்டவாறு பகுதி பகுதியாக உள்ள பேருந்து வசதியையே தற்பொழுது பயன்படுத்திக் கொள்ளலாம்.

81—

பேருந்து வசதி

வினா எண் 1437—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து கும்பகோணத்திற்கு கண்ணந்தங்குடி, மேலையூர், கூனிக்காடு, பொன்னாப்பூர், சடையார்கோவில், சாலியமங்கலம், திருக்கடுகாவூர், பாபநாசம் வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை வழித்தடத்தில் தற்பொழுது பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. கோரிக்கை தடம் முழுமையும் கிராமப் பகுதியாக உள்ளது. மேலும், ஒரத்தநாடு–கும்பகோணம் கோரிக்கை வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயன்பாடு குறைவாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. எனவே, மேற்படி பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

82—

பேருந்து வசதி

வினா எண் 1439—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து திருப்பூருக்கு ஈச்சங்கோட்டை, மருங்குளம், வல்லம், திருச்சி வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடத்தின் முழுமைக்கும் தற்பொழுது பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. மேலும், பட்டுக்கோட்டை– திருப்பூர் (வழி) ஒரத்தநாடு, தஞ்சாவூர், வல்லம், திருச்சி தடத்தில் 3 தடப் பேருந்துகள் தற்பொழுது இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கை தடத்திலுள்ள ஒரத்தநாடு, வல்லம் பொது மக்கள் இத்தடப் பேருந்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஈச்சங்கோட்டை, மருங்குளம் கிராம மக்கள் மேற்படி பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும், உள்ளார்ந்த கிராமம் வழியாக தொலைதூர பேருந்துகள் இயக்கப்படும்போது நேரடி பயணிகள் பயன்பாடு இருக்க வாய்ப்பு குறைவாகவே இருக்கும் எனக் கருதப்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்டவாறு பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

83—

போக்குவரத்து பணிமனைக்கு கட்டடம்

வினா எண் 1448—திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் அரசு போக்குவரத்துப் பணிமனைக்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் திண்டுக்கல் மண்டலத்திற்குட்பட்ட ஒட்டன்சத்திரத்தில் செயல்பட்டுவரும் பணிமனைக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணிக்கு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள்மூலம் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்நிலத்திற்கு வேளாண்மைத் துறை நிர்ணயம் செய்துள்ள 3,14,12,612 ரூபாயை நில மதிப்பாகச் செலுத்தி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு நிலத்தினைப் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்போக்குவரத்துக் கழகத்தின் தற்போதுள்ள நெருக்கடியான நிலைமையைக் கருத்திற்கொண்டு அந்நிலத்தை வாங்குவதற்கு இரு துறைகளுக்கும் பொதுவான ஒரு தொகைக்கு நில மதிப்பீடு மறு நிர்ணயம் செய்யப்படும் பட்சத்தில் அங்கே பணிமனை அமைக்க இயலும்.

84—

சிற்றுந்து வசதி

வினா எண் 1680—திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் செம்மேடு, வாசலூர்பட்டி, படகுத்துறை, நம்ம அருவி, மாசில்லா அருவி, ஸ்ரீ பெரியசாமி திருக்கோயில், அரப்பளீஸ்வரர் ஆலயம், சீக்குப்பாறை வியூபாயிண்ட் ஆகிய இடங்களுக்கு சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிராமப்புற பகுதிகளில் பேருந்து இயங்காத வழித்தடங்களில் பொது மக்களுக்கு பேருந்து வசதியை ஏற்படுத்தும் நோக்கில் 1997 ஆம் ஆண்டு தனியாருக்கு மினி பேருந்து அனுமதி வழங்கும் திட்டத்தினை அரசு அறிமுகம் செய்தது. பின்னர், அத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு 20 கி.மீ. தூரம் சிற்றுந்து இயக்க 1999–ல் அரசு உரிய சட்டத்தினை அறிவிக்கை செய்தது. தற்போது அரசாணை (நிலை) எண் 136, உள் (போக்குவரத்து–3) துறை, நாள் 23–2–2011–ன்படி, 100–ம் அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் பகுதியை அருகிலுள்ள பேருந்து நிலையத்துடனும், நகரத்துடனும் இணைக்க பேருந்து இயக்கப்படும் வழித்தடத்தில் 30 சதவிகிதத்துக்கு மிகாமல் தனியார்மூலம் கிராம பகுதிகளுக்கு மினி பேருந்து இயக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள இடங்களில் கீழ்க்கண்ட அரசு போக்குவரத்து வாகனங்கள் இயக்கப்படுகின்றன. எனவே, இவ்வினா எழாது.

நாமக்கல் முதல் கொல்லிமலை வரை	1. TN 30 N 1453 2. TN 30 N 1455 3. TN 30 N 1456 4. TN 30 N 1458 5. TN 30 N 1463 6. TN 30 N 1465 7. TN 30 N 1467 8. TN 30 N 1479
சேலம் முதல் கொல்லிமலை வரை	9. TN 30 N 1464
தம்மம்பட்டி முதல் கொல்லிமலை வரை	10. TN 30 N 1488

இராசிபுரம் முதல் கொல்லிமலை வரை	11. TN 30 N 1490 12. TN 30 N 1480
தனியார் பேருந்துகள், PSK Transport	13. TN 28 AF 2000 14. TN 28 AC 1188

85—

பேருந்து வசதி

வினா எண் 1883—திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடியிலிருந்து திருப்பதிக்கு நேரடிப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கறம்பக்குடி–திருப்பதி வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய இரு மாநில ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போதே பரிசீலிக்க இயலும். எனவே, தற்போது பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

86—

பேருந்து பணிமனை

வினா எண் 1895—திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் மேல்மலையில் பேருந்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கொடைக்கானல் மலையில், பேருந்துகளுக்கு ஏற்கெனவே ஒரு பணிமனை அமைந்துள்ள சூழ்நிலையில், மேல்மலையில் தனியாக ஒரு பணிமனை அமைக்கும் அவசியம் எழவில்லை.

87—

பேருந்து பணிமனை

வினா எண் 1930—திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு நகரிலுள்ள பேருந்து பணிமனையை நகருக்கு வெளியே அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு நகர எல்லைக்கு வெளியே, பேருந்துகளுக்குப் பணிமனை அமைக்க போதுமான நிலம் கிடைத்தவுடன், அங்கு பணிமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

88—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 1953—திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, 32—வது வார்டு விளாங்குறிச்சியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட விளாங்குறிச்சியில், பராமரிப்புக் கூடத்துடன்கூடிய பேருந்துப் பணிமனை அமைக்க தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) வரையறை நிறுவனத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

89—

பேருந்து நகருக்குள் வந்து செல்லுதல்

வினா எண் 2261—திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர்–சென்னை வழியாக செல்லும் அனைத்து பேருந்துகளும் ராணிப்பேட்டை நகருக்குள் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர்–சென்னைக்கு செல்லும் பேருந்துகள் ராணிப்பேட்டை வழியாக இயக்கப்பட்டால் நேரடி பயணிகள் பாதிக்கப்படுவார்கள். எனவே, அரசால் ராணிப்பேட்டை வழியாக பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. எனினும், ஆற்காடு–சென்னை பேருந்துகள் ராணிப்பேட்டை வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், சென்னை–சித்தூர் செல்லும் பேருந்துகளும் ராணிப்பேட்டை வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட பேருந்து வசதிகளே பயணிகளுக்கு போதுமானதாக உள்ளது.

90—

படுக்கை வசதியுடன்கூடிய பேருந்து

வினா எண் 2262—திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) *தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்கள் இயக்கும் நெடுந்தொலைவு செல்லும் பேருந்துகளை படுக்கை வசதியுடன் இயக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 1989 பிரிவு 307 உட்பிரிவு (1)—ன்படி, படுக்கை வசதி கொண்ட பேருந்துகள் தமிழ்நாட்டில் பதிவு செய்ய வழிவகை இல்லை.*

91—

பேருந்து வசதி

வினா எண் 2278—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியிலிருந்து K. ராசியமங்கலம், பரப்பன்காடு, நாடியம்மன்கோவில் வழியாக வடகாடு வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஆலங்குடியிலிருந்து K. ராசியமங்கலம் வழியாகவும், ஆலங்குடியிலிருந்து நாடியம்மன்கோவில் வழியாகவும், வடகாட்டிற்கு பகுதி, பகுதியாக பயணிகள் அடர்வுக்கேற்ப பேருந்து சேவை வழங்கப்பட்டுள்ளது. K. ராசியமங்கலம் வழித்தடத்தில் பயணிகள் பயன்பாடு 30.36 சதவிகிதம் மட்டுமே உள்ளது. மேலும், பரப்பன்காடு K. ராசியமங்கலத்திலிருந்து 400 மீட்டர் தூரமே உள்ளதாலும், மற்ற பகுதிகளில் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளதாலும், மேற்படி பேருந்து வசதியினையே பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

92—

பேருந்து வசதி

வினா எண் 2280—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியிலிருந்து வடகாடு, புள்ளான்விடுதி, நெடுவாசல் வழியாக திருச்சிற்றம்பலத்திற்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை வழித்தடத்தில் புதுக்கோட்டையிலிருந்து வடகாடு வழியாக திருச்சிற்றம்பலத்திற்கும், ஆலங்குடியிலிருந்து நெடுவாசல், புள்ளான்விடுதி வழியாக வடகாட்டுக்கும், கீரமங்கலத்திலிருந்து ஆவணம் வழியாக நெடுவாசலுக்கும், புள்ளான்விடுதிக்கும் பகுதி, பகுதியாக பயணிகள் அடர்வுக்கேற்ப பேருந்து சேவை வழங்கப்பட்டுள்ளது. பயணிகள் அடர்வு 30.51 மட்டுமே உள்ளதாலும், பகுதி, பகுதியாக பேருந்து சேவை வழங்கப்பட்டு உள்ளதாலும், மேற்படி போதிய பேருந்து வசதியினையே பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

93—

பேருந்து வசதி

வினா எண் 2281—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, அறந்தாங்கியிலிருந்து கடையத்துப்பட்டி, நற்பவளக்குடி, செங்கமாரி வழியாக திருமயத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை வழித்தடத்தில் அறந்தாங்கியிலிருந்து கடையத்துப்பட்டி, நற்பவளக்குடி, செங்கமாரி வழியாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2018 ஜூலை 9]

அரிமளத்திற்கும், அரிமளத்திலிருந்து ராயவரம், கடியாபட்டி வழியாக திருமயத்திற்கும் பயணிகள் அடர்வுக்கேற்ப பகுதி பகுதியாக பேருந்து சேவை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, வழித்தடத்தில் பயணிகள் அடர்வு 30.65 மற்றும் 35.89 மட்டுமே உள்ளதாலும், பகுதி பகுதியாக பேருந்து சேவை வழங்கப்பட்டு உள்ளதாலும், மேற்படி பேருந்து வசதியே போதுமானதாகும்.

94—

பேருந்து வசதி

வினா எண் 2289—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, அண்ணாநகர், திடீர்நகர் பகுதிகளிலிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கையின் வழித்தடம் ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி அரியமங்கலம்–அண்ணாநகர் மற்றும் திடீர்நகர் வழித்தட தூரம் 1 கி.மீ. ஆகும். மேற்கண்ட அண்ணாநகர் மற்றும் திடீர்நகர் பகுதிகள் திருச்சி–துவாக்குடி பிரதான சாலையிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளன. சத்திரம் பேருந்து நிலையம்–துவாக்குடி தடத்தில் 42 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 466 நடைகளும், மத்தியப் பேருந்து நிலையம்–துவாக்குடி தடத்தில் 6 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 90 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 556 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இதே தடத்தில் தனியார் பேருந்துகள்மூலம் தினசரி 535 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, திருவெறும்பூர் தொகுதியின் அண்ணாநகர் மற்றும் திடீர்நகர் பகுதிகளுக்கு மேற்கண்டுள்ளவாறு போதிய பேருந்து வசதி வழங்கப்பட்டுள்ளது.

95—

சிற்றுந்து வசதி

வினா எண் 2292—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதி, காட்டூரிலிருந்து வீதிவடங்கத்திற்கு சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவெறும்பூர் தொகுதி, காட்டூரிலிருந்து வீதிவடங்கம் பகுதி திருச்சி துவாக்குடி பிரதான சாலைக்கு மிக அருகில் உள்ளதால், திருச்சி, சத்திரம் பேருந்து நிலையம்–துவாக்குடி தடத்தில் 42 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 466 நடைகளும், மத்தியப் பேருந்து நிலையம்–துவாக்குடி தடத்தில் ஆறு நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 90 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 556 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இதே தடத்தில் தனியார் பேருந்துகள்மூலம் தினசரி 535 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த இயக்க நடைகளின் சராசரி பயணிகளின் பயன்பாட்டு அடர்வு 69.99 ஆகும். திருவெறும்பூர் தொகுதியின் வீதிவடங்கம் கிராமத்திற்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே, சிற்றுந்து இயக்க அவசியம் எழவில்லை.

96—

பேருந்து வசதி

வினா எண் 2731—திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சியிலிருந்து புதுக்கோட்டை, அரிமளம், ஏம்பல், கண்ணங்குடி, மங்களகுடி, திருவாடனை விளக்கு வழியாக இராமேஸ்வரத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருச்சி, புதுக்கோட்டை, காரைக்குடி, தேவக்கோட்டை, திருவாடனை நேர்வழியாக இராமேஸ்வரத்திற்கு 40 நிமிடத்திற்கு 1 பேருந்து இயக்கப்படுகிறது. கோரிக்கை வழித்தடமான

திருச்சியிலிருந்து புதுக்கோட்டை, அரிமளம், ஏம்பல், கண்ணங்குடி, மங்களகுடி, திருவாடானை மற்றும் திருவாடானையிலிருந்து இராமேஸ்வரம் வரை பகுதி பகுதியாக பயணிகள் அடர்வுக்கு தகுந்தாற்போல் பேருந்து சேவை வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கோரிக்கை வழித்தடத்தில் பகுதி பகுதியாக இயக்கப்படும் பேருந்துகளில் பயணிகள் அடர்வு விகிதம் 44.20–ம் அதற்கும் குறைவாகவே உள்ளது. எனவே, மேற்படி வசதியே போதுமானதாகும்.

97—

பேருந்து வசதி

வினா எண் 2780—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, கடியப்பட்டிணத்திலிருந்து நாகர்கோவில் பேருந்து நிலையத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடியப்பட்டிணத்திலிருந்து நாகர்கோவிலுக்கு ஆசாரிபள்ளம் மருத்துவக் கல்லூரி வழியாக 5 பேருந்துகள்மூலம் 54 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கடியப்பட்டிணத்திலிருந்து நாகர்கோவிலுக்கு இராஜாக்கமங்கலம் வழியாக 3 பேருந்துகள்மூலம் 33 நடைகள் இயக்கப்பட்டுவரும் பேருந்துகளின் பயணிகள் அடர்வு விகிதம் 40.08 சதவிகிதம் மட்டுமே உள்ளது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

98—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 2782—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, வில்லுக்குறி பகுதியில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, வில்லுக்குறி பகுதிக்கு அருகில் திங்கள்நகர், குளச்சல் ஆகிய இடங்களில் பணிமனைகள் உள்ளதால் வில்லுக்குறியில் தனியாக ஒரு பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

99—

பேருந்து வசதி

வினா எண் 2824—திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடி மாநகராட்சியில் புறநகர் பகுதிகளுக்கு புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாமவட்டத்தில், தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு, திருநெல்வேலி போக்குவரத்துக் கழகத்தின் தூத்துக்குடி மண்டலம் செயல்பட்டு வருகிறது. இந்த தூத்துக்குடி மண்டலத்தில் மொத்தம் 6 கிளைகள்மூலம் 113 நகரப் பேருந்துகளும், 215 புறநகர் பேருந்துகளும் ஆக மொத்தம் 328 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் நகரப் பேருந்துகளின் பயணிகள் அடர்வு 40.20 சதவிகிதமும், புறநகர் பேருந்துகளின் பயணிகள் அடர்வு 78.44 சதவிகிதமும் மட்டுமே உள்ளன. இதுதவிர, தூத்துக்குடி வழியாக இதர மண்டலங்கள்மூலம் 112 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே, தற்போதைய பயணிகள் அடர்வு விகிதத்திற்கு போதுமானதாக உள்ளது.

2018 ஜூலை 9]

100—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 2839—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஒன்றியம், ஜமுனாமரத்தூரில் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஒன்றியம் ஒரு மலைப்பகுதி தலமாகும். இப்பகுதியிலுள்ள மக்கள் தொகையைப் பொறுத்து நகரப் பேருந்துகள் போதுமான அளவில் இயக்கப்படுகின்றன. மேலும், இப்பகுதியில் போதிய சாலை வசதிகளோ அல்லது பணிமனை அமைக்கும் அளவிற்கு போக்குவரத்து மையமாகவோ இல்லை. எனவே, ஜமுனாமரத்தூரில் போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

101—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 2859—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *செஞ்சி தொகுதி, அனந்தபுரத்தில் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *அனந்தபுரத்தில் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க சித்தரசூர் கிராமத்தில்*

புல எண் 109/10ஏ–ல் உள்ள 1.67.0 ஹெக்டேர் நிலத்தில் 0.89.0 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு நில மதிப்புத் தொகை நிர்ணயம் செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

102—

பேருந்து வசதி

வினா எண் 3007—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சலிலிருந்து கேரள மாநிலத்திலுள்ள குருவாயூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சல்–குருவாயூர் தடம் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்கப்படும்.

103—

பேருந்து வசதி

வினா எண் 3137—திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதி, ஜவ்வாது மலைக்கு செங்கம் மேல்பட்டு வழியாக ஜமுனாமரத்தூர் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கம்–ஜமுனாமரத்தூர் (வழி) மேல்பட்டு, புலியூர், அத்திப்பட்டு வழித்தடத்தின் நீளம் 49.4 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் குப்பநத்தம் கூட்டுச்சாலை முதல்

2018 ஜூலை 9]

மேல்பட்டு வரையிலான 14.2 கி.மீ. மலைப்பகுதி சாலையாகும். இம்மலைச்சாலையில் 12 இடங்களில் கொண்டை ஊசி வளைவுகள் உள்ளன. மூன்று இடங்களில் சாலை வளைவு தடுப்பு அரண்கள் இல்லாமலும் மற்றும் நான்கு இடங்களில் மண் அரிப்பைத் தடுக்கும் வகையில் பாதுகாப்பு சுவர் இல்லாமல் ஆபத்தான நிலையிலும் உள்ளது. எனவே, இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

104—

பேருந்து வசதி

வினா எண் 3198—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள கடப்பாக்கம் முதல் சென்னை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து கடப்பாக்கம் வழியாக புதுச்சேரிக்கு விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் 81 பேருந்துகள் மூலமாக 324 நடைகளும், 4 குளிர்சாதன பேருந்துகள் மூலமாக 16 நடைகளும், புதுச்சேரி போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 6 பேருந்துகள் என 24 நடைகளும், தினசரி இயக்கப்படுகின்றன. இவை நீங்கலாக, கும்பகோணம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக 73 பேருந்துகள் 146 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, மேற்கூறியவாறு 5 நிமிடத்திற்கும் குறைவான இடைவெளியில் கடப்பாக்கம் வழியாக சென்னைக்கு நாள் முழுவதும் அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்படுவதால், இவ்வியக்கங்களே கடப்பாக்கம் பயணிகளின் தற்போதைய பேருந்து தேவைக்கு போதுமானதாக உள்ளது.

105—

பேருந்து வசதி

வினா எண் 3268—திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறையூர் தொகுதி, துறையூரிலிருந்து வி.ஏ. சமுத்திரம் ஊராட்சிக்குட்பட்ட கங்காணிப்பட்டி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கையின் வழித்தடம் ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி திருமனூர்–கங்காணிப்பட்டி வழித்தட தூரம் 0.5 கி.மீ. ஆகும். மேற்கண்ட கங்காணிப்பட்டி கிராமம் திருமனூர்–தாத்தையங்கார்பேட்டை பிரதான சாலையிலிருந்து 0.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இவ்வழித்தடத்தில் துறையூர்–தாத்தையங்கார்பேட்டை (வழி) எரகுடி, திருமனூர் வழித்தடத்தில் இரண்டு புறநகர் பேருந்துகள்மூலம் ஐந்து நடைகளும், ஒரு நகரப் பேருந்துமூலம் நான்கு நடைகளும் மற்றும் நான்கு தனியார் பேருந்துகள்மூலம் இருபது நடைகளும் ஆக மொத்தம் தினசரி 29 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இவ்வழித்தடத்தில் தற்போது போதுமான பேருந்து வசதி உள்ளது. இவ்வசதியினையே பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

106—

பேருந்து வசதி

வினா எண் 3269—திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், சோபனபுரம் ஊராட்சி, காஞ்சேரிமலை, ஒடுவாம்பட்டி, புதூர், சித்தனூர் ஆகிய பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலத்திலிருந்து உப்பிலியாபுரம்–காஞ்சேரிமலை (வழி) புதூர், ஒடுவம்பட்டி தடத்தில் ஒரு

புறநகரப் பேருந்துமூலம் தினசரி இரண்டு நடைகள் இயக்கப்பட்டு வந்தன. பொது மக்களின் கோரிக்கையின்படி உப்பிலியாபுரம்–காஞ்சேரிமலை (வழி) புதூர், ஒடுவம்பட்டி தடத்தில் தினசரி 2 நடைகள் கூடுதலாக காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இப்பேருந்து வசதியே இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாகக் கருதப்படுகிறது.

107—

சிற்றுந்து வசதி

வினா எண் 3356—திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொண்டனூர், கொண்டனூர்புதூர் பணப்பள்ளி, சேம்புக்கரை, குருடம்பாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிற்றுந்து இயக்கும் திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளதால், பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொண்டனூர், கொண்டனூர்புதூர் பணப்பள்ளி, சேம்புக்கரை, குருடம்பாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் சிற்றுந்து இயக்குவதற்கு அவசியம் எழவில்லை. இவ்வினா எழாது.

108—

பேருந்து நிலையம் மற்றும் பணிமனை புதிய இடத்தில் அமைத்தல்

வினா எண் 3368—திரு. அ. ராமு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோத்தகிரி பேரூராட்சி பகுதியிலுள்ள அரசு போக்குவரத்துக் கழக பணிமனை மற்றும் கோத்தகிரி தலைமை பேருந்து நிலையம் ஆகியவற்றை புதிய இடத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோத்தகிரி கிளையானது இக்கிளை ஆரம்பித்த 1973 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கிளையை கழகத்திற்குச் சொந்தமாக அமைக்க உத்தேசித்து கோத்தகிரி–குன்னூர் சாலையில் 3 கி.மீ. தொலைவிலுள்ள ஓரசோலை என்ற இடத்தில் சுமார் 1.57 ஏக்கர் நிலம் வருவாய் துறையிடம் பெறப்பட்டது. தற்பொழுது கழகத்தின் நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினால், இப்போக்குவரத்துக் கழகப் பணிமனையை புதிய இடத்தில் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

109—

பேருந்து வசதி

வினா எண் 3453 திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலையிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை–சென்னை (வழி) வெம்பாக்கம் என்பது ஒரு புதிய சுற்று வழித்தடமாகும். மேற்குறிப்பிட்ட வழித்தடத்தின் நீளம் 219.0 கி.மீ. ஆகும். ஏற்கெனவே, வெம்பாக்கம் வழியாக சென்னைக்கு செல்ல பேருந்து வசதி உள்ளதால், தற்போது இச்சுற்று வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2018 ஜூலை 9]

110—

பேருந்து வசதி

வினா எண் 3461—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, திமிரி ஊராட்சி ஒன்றியம், ஆற்காட்டிலிருந்து பழையனூர் ஊராட்சி வரை திமிரி நகரத்தின் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஆற்காட்டிலிருந்து பழையனூர் ஊராட்சிக்கு 1 நகரப் பேருந்துமூலம் தினசரி 4 நடைகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், வேலூர் மண்டலம் மூலமாக இயக்கப்படுகின்றன. இவற்றில் சராசரியாக பயணிகளின் அடர்வு 30.2 சதவிகிதம் என்ற குறைந்த அளவிலேயே உள்ளதால், இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

111—

பேருந்து வசதி

வினா எண் 3484—திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கோட்டையிலிருந்து தென்காசி, கடையநல்லூர், வாசுதேவநல்லூர், ராஜபாளையம், மதுரை வழியாக சென்னைக்கு குளிர்சாதன விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர்–சென்னை வழித்தடத்தில் 2 அதிநவீன மிதவை பேருந்துகளும், செங்கோட்டை–சென்னை வழித்தடத்தில் 12 அதிநவீன மிதவை பேருந்துகளும் தென்காசி,

கடையநல்லூர், வாசுதேவநல்லூர், ராஜபாளையம், மதுரை வழியாக தினசரி இயக்கப்படுகின்றன. மேற்படி வசதியினை செங்கோட்டை பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

112—

பேருந்து கூண்டு கட்டும் பிரிவு

வினா எண் 3510—திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவினை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்சமயம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக கூண்டு கட்டும் பிரிவு இயங்கி வருகிறது. கூண்டு கட்டும் பிரிவில், விபத்து பேருந்துகளை சரி செய்யும் பணியும், தடத்தில் இயங்கிவரும் பேருந்துகளின் தரத்தை மேம்படுத்த கூண்டு பழுது பணிகள் மற்றும் தகுதிச் சான்று புதுப்பிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

113—

பேருந்து வசதி

வினா எண் 3586—திரு.V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், A.கொளப்பாக்கம் கிராமம், ஆதியூர் ஊராட்சிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது ஆதியூர் ஊராட்சிக்கு ஒரு பேருந்துமூலம் நாளொன்றுக்கு நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. வேப்பூர்–ஆதியூர் வழித்தடத்தில் சேப்பாக்கம் கூட்டுச் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சாலையில் 2 கி.மீ. தூரத்தில் கொளப்பாக்கம் கிராமம் உள்ளது. கொளப்பாக்கம் கிராமத்திற்கு பேருந்து சென்று திரும்ப இயலாத வகையில் சாலை உள்ளது. எனவே, ஆதியூர் ஊராட்சிக்கு இயக்கப்பட்டுவரும் நான்கு நடைகள் இக்கிராம பொது மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

114—

பேருந்து வசதி

வினா எண் 3587—திரு.V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகரிலிருந்து திருச்செந்தூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம்–திருச்செந்தூர் வழித்தடம் தொலைதூர வழித்தடமாகும். தற்பொழுது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் புதுச்சேரி–திருச்செந்தூர் வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்தில் விருத்தாசலம் பேருந்து நிலையத்திலிருந்து திருச்செந்தூருக்கு ஒன்று, இரண்டு நேரடிப் பயணிகள் மட்டுமே பயணிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே பொது மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

[2018 ஜூலை 9

115—

பேருந்து வசதி

வினா எண் 3588—திரு.V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, வேப்பூர் வட்டம், வேப்பூருக்கு மேமாத்தூர், நல்லூர்நகர், சேப்பாக்கம் கிராமங்கள் வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலத்திலிருந்து மேமாத்தூருக்கு நல்லூர் வழியாக ஒரு பேருந்துமூலம் நான்கு நடைகளும், மேமாத்தூரிலிருந்து கண்டப்பங்குறிச்சிக்கு ஒரு பேருந்துமூலம் ஆறு நடைகளும் கண்டப்பங்குறிச்சியிலிருந்து வேப்பூருக்கு 46 பேருந்துகள்மூலம் 160 நடைகளும் பகுதி வாரியாக கோரியுள்ள வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது இயக்கப்படும் இப்பேருந்து வசதிகளே பொது மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

116—

பேருந்து வசதி

வினா எண் 3589—திரு.V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், நல்லூரிலிருந்து கடலூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நல்லூரிலிருந்து கடலூருக்கு நேரடி பயணிகள் எண்ணிக்கை குறைவாக உள்ள நிலை உள்ளது. நல்லூரிலிருந்து விருத்தாசலம் வழியாக கடலூருக்கு பகுதி வாரியாக போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதி, கோரியுள்ள வழித்தடத்திலுள்ள பொது மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

117—

பேருந்தை மீண்டும் இயக்குதல்

வினா எண் 3591—திரு.V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், பரவளூர் கிராமம் முதல் விருத்தாசலம் நகரம் வரை தடம் எண் 28 பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டத்தின் மூலமாக விருத்தாசலத்திலிருந்து பரவளூர் வரை தடம் எண் டி28—ல் 3 பேருந்துகள்மூலம் 7 நடைகள் தற்போது இவ்வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.

118—

பேருந்து கூண்டு கட்டும் பிரிவு

வினா எண் 3650—திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகர்கோவில் இராணித் தோட்டம் I, II, III ஆகிய மூன்று பணிமனைகளில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகளை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலத்திலுள்ள இராணித் தோட்டம் மத்திய தொழிற்கூடத்தில் ஏற்கெனவே கூண்டு கட்டும் பிரிவு அனைத்து வசதிகளுடன் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இராணித் தோட்டம் 1, 2, 3 ஆகிய மூன்று பணிமனைகளில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு மீண்டும் செயல்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

119—

சிற்றுந்து வசதி

வினா எண் 3886—திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, மணலி புதுநகர் முதல் மூலக்கடை வரை சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் தொகுதி, மணலி புதுநகர் முதல் மூலக்கடை வழியாக ஏற்கெனவே மாநகரப் போக்குவரத்து கழகத்தால் மூன்று பேருந்துகள் சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரை பயணிகள் பயன்பாட்டிற்கு ஏற்ப இயக்கப்படுகின்றன. சென்னையில் உட்புறத்தில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் செல்ல முடியாத பகுதியில், அப்பகுதி மக்களின்

போக்குவரத்துத் தேவைக்கு பிரதான சாலையுடன் இணைத்திட ஏதுவாக சிறிய பேருந்துகள் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுகின்றன. எனவே, மேற்படி பேருந்து சேவைகளே போதுமானதாகும் எனக் கருதப்படுகிறது.

120—

சிற்றுந்து வசதி

வினா எண் 3887—திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதியில் செங்குன்றத்திலிருந்து சூரப்பட்டு நரிக்குறவர் சாலை வழியாக நெற்குன்றத்திற்கு சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர் நீதிமன்றத்திலிருந்து ஒரு பேருந்து செங்குன்றம், பாடியநல்லூர், செம்புலிவரம், சோழவரம் காவல் நிலையம், காரனோடை பள்ளி, சோத்துப் பெரும்பேடு, நெற்குன்றம் வழியாக ஞாயிறு வரை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்கு ஏற்ப இயக்கப்படுகிறது. மேலும், ஒரு பேருந்து கோயம்பேடு அங்காடியிலிருந்து செங்குன்றம் செம்புலிவரம், சோழவரம் காவல் நிலையம், காரனோடை பள்ளி, சோத்துப்பெரும்பேடு, நெற்குன்றம் வழியாக சீமாவரம் வரை அப்பகுதி பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் தொடர்ந்து இயக்கப்படுகிறது. எனவே, சூரப்பட்டு நரிக்குறவர் சாலை பொது மக்கள் அருகிலுள்ள சோத்துப்பெரும்பேடு பேருந்து நிறுத்தத்தின் வழியாக நெற்குன்றத்திற்கு இயக்கப்படும் மேற்படி பேருந்துகளை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், செங்குன்றத்திலிருந்து நெற்குன்றம் சுமார் 14 கி.மீ. தொலைவிலுள்ளது. சிற்றுந்துகள் பெரும்பாலும் 10 முதல் 12 கி.மீ. இயக்கத் தூரத்திற்குள் மட்டுமே தற்போது இயக்கப்படுகின்றன.

எனவே, செங்குன்றத்திலிருந்து சூரப்பட்டு நரிக்குறவர் சாலை வழியாக 14 கி.மீ. தொலைவில் உள்ள நெற்குன்றத்திற்கு சிற்றுந்து இயக்கிட தற்போது வாய்ப்பில்லை.

121—

பேருந்து பணிமனை விரிவாக்கம்

வினா எண் 3942—திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவாக்கம் செய்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மண்டலத்திற்குட்பட்ட பொதட்டூர்பேட்டையில் தற்போது இயங்கிவரும் அரசுப் போக்குவரத்துக் கழகத் துணைப் பணிமனையிலிருந்து கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும்போது, இப்பணிமனையை விரிவாக்கம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

122—

பேருந்து பணிமனை

வினா எண் 3947—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், செந்துறை பகுதியில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செந்துறைப் பகுதிக்கு அருகில் அரியலூரிலும் ஜெயங்கொண்டத்திலும் ஏற்கெனவே பணிமனைகள் செயல்பட்டு வருவதால், இப்பகுதியில் பேருந்துகளுக்கு மேலும் ஒரு பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2018 ஜூலை 9]

123—

பேருந்து பணிமனை

வினா எண் 4135—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழிங்கநல்லூர் தொகுதியில் பேருந்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகரில் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் ஆகியவை கட்டும் பணிகள் முடிவுற்று திறக்கப்படும் நிலையிலும், பெரும்பாக்கத்தில் இப்பணிகள் முடிவுறும் நிலையிலும், செம்மஞ் சேரியில் பணிகள் நிறைவு பெற்று செயல்பட்டும் வருகின்றன.

124—

பேருந்து வசதி

வினா எண் 4234—திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பிலிருந்து கோயம்புத்தூர் மற்றும் சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது சென்னையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு ஒரு அதிநவீன சொகுசுப் பேருந்து இரு முனைகளிலிருந்து இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் பயணிகளின்

அடர்வு 74 சதவிகிதமாக உள்ளது மற்றும் தடம் எண் 629 மூலம் செங்கோட்டை—கோயம்புத்தூருக்கு 6 பேருந்துகள் 12 நடைகள் வீதம் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் பயணிகளின் அடர்வு 68 சதவிகிதமாக உள்ளது. இதுவே, இப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

125—

பேருந்து வசதி

வினா எண் 4236—திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு, வலையபட்டி, M.புதுப்பட்டி வழியாக சிவகாசிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு, வலையபட்டி, எம்.புதுப்பட்டி வழியாக சிவகாசி வரை தட தூரம் 41 கி.மீ. ஆகும். வத்திராயிருப்பிலிருந்து கிருஷ்ணன்கோவிலுக்கு 74 தனி நடைகளும், கிருஷ்ணன்கோவிலிலிருந்து வலையபட்டி, எம்.புதுப்பட்டி வழியாக சிவகாசிக்கு 8 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருவதால் பகுதி பகுதியாக இத்தடத்தில் பேருந்து வசதி உள்ளது. மேற்படி பேருந்து வசதிகளை பொது மக்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் வெகுவாக பயன்படுத்தி வருகின்றனர். மேலும், மேற்படி தடத்தில் நேரடிப் பயணிகள் பயன்பாடு குறைவாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகும்.

126—

பேருந்து வசதி

வினா எண் 4309—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் தொகுதி, கொல்லங்கோடு பகுதியிலிருந்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இரயுமன்துறையிலிருந்து நாகர்கோவில் வரை ஒரு பேருந்து கொல்லங்கோடு மார்த்தாண்டம், தக்கலை, பார்வதிபுரம், ஆசாரிபள்ளம் மருத்துவக் கல்லூரி வழியாக 2 சுற்றுகள் இயக்கப்படுகிறது. தற்போது இப்பேருந்தில் ஆசாரிபள்ளம் மருத்துவக் கல்லூரி வழியாக சுற்றி வரும் சுற்றுகளில் பயணிகள் பயன்பாடு மிகக் குறைவாகவே உள்ளது. எனினும் இப்பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், கொல்லங்கோடு–நாகர்கோவில் தடத்தில் 9 பேருந்துகள்மூலம் 54 சுற்றுகள் இயக்கப்படுகின்றன. கொல்லங்கோடு பகுதியினர் இப்பேருந்துகளை பயன்படுத்தி நாகர்கோவில் வந்து பேருந்து மாற்றி நாகர்கோவில்–ஆசாரிபள்ளம் வழியாக இயங்கும் 29 பேருந்துகளின் 354 சுற்றுகளையும் பயன்படுத்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் செல்லலாம். எனவே, தற்போதைய பேருந்து வசதியே போதுமானதாக கருதப்படுகிறது.

127—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 4318—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிள்ளியூர் தொகுதி, தொலையா வட்டத்தில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிள்ளியூர் தொகுதி, தொலையா வட்டத்தில் புதிதாக போக்குவரத்துப் பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

128—

பேருந்து வசதி

வினா எண் 4426—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து பழனி மற்றும் ராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மேலூரிலிருந்தும், பிற பகுதிகளிலிருந்தும் மேலூர் வழியாக மதுரைக்கு சராசரியாக 3 நிமிடத்திற்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, மதுரையிலிருந்து பழனிக்கு 10 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், மேலூர் தொகுதி பொது மக்கள் பயன்பெறும் வகையில், மேலூரிலிருந்து நேரடியாக பழனிக்கு இரண்டு தனி நடைகள் இயக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மேலூரிலிருந்து இராமேஸ்வரம் ஒரு புதிய வழித்தடமாகும். இப்புதிய வழித்தடத்தில் செல்லும் நேரடிப் பயணிகளின் அடர்வு மிகவும் குறைவானதாகவே உள்ளது. எனவே, தற்போது மேலூரில் உள்ள குறைந்தளவு பயணிகள் மதுரை வந்து, மதுரையிலிருந்து 15 நிமிடத்திற்கு ஒருமுறை இராமேஸ்வரத்திற்கு இயக்கப்படும் பேருந்து வசதியினை வெகுவாக பயன்படுத்தி வருகின்றனர். இப்பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

129—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 4430—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சென்னைக்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக மேலூரிலிருந்து சென்னைக்கு தினசரி இரவு 8–30 மணிக்கு ஒரு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. இத்தடத்தில் பயணிகளின் அடர்வு 93 சதவிகிதமாக உள்ளது. எனவே, இப்பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

130—

குளிர்சாதன பேருந்து வசதி

வினா எண் 4455—திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முசிறி நகரத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதன பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது அரசு வழிகாட்டுதலின்பேரில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் இருந்து இரண்டு குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மாவட்ட தலைநகர் அல்லாத முசிறி நகரத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதன பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

131—

சிற்றுந்து வசதி

வினா எண் 4457—திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2018 ஜூலை 9

(அ) கோயம்புத்தூர் காந்திபுரம் முதல் வடவள்ளி வரை சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் காந்திபுரம் முதல் கணபதி வரை வழித்தடம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். இந்த வழித்தடத்தில் 2 நிமிடங்களுக்கு ஒரு நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட வழித்தடத்தில் சிற்றுந்து அனுமதிச் சீட்டு வழங்கும் நிலை எழாது. மேற்படி வழித்தடத்தில் சிற்றுந்து இயக்குவது என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

132—

சிற்றுந்து வசதி

வினா எண் 4458—திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் இரயில் நிலையம் முதல் கணபதி வரை சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் இரயில் நிலையம் முதல் கணபதி வரை வழித்தடம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். இந்த வழித்தடத்தில் 2 நிமிடங்களுக்கு ஒரு நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட வழித்தடத்தில் சிற்றுந்து இயக்க அனுமதி வழங்கும் நிலை எழாது. மேற்படி வழித்தடத்தில் சிற்றுந்து இயக்குவது என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

2018 ஜூலை 9]

133—

பேருந்து வசதி

வினா எண் 4646—திரு. அ. சண்முகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிணத்துக்கடவு தொகுதி, கிணத்துக்கடவு முதல் கண்ணம்மநாயக்கனூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிணத்துக்கடவு–வீரப்பகவுண்டனூர் செல்லும் சாலையில் சொக்கனூரிலிருந்து மிகக் குறைந்த தூரத்தில் (சுமார் 0.5 கி.மீ.) கண்ணம்மநாயக்கனூர் அமைந்துள்ளது. இச்சாலை வழியாக 3 பேருந்துகள் தினசரி 28 நாட்கள் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், கண்ணம்மநாயக்கனூர் பகுதிக்கு கிணத்துக்கடவிலிருந்து 1 பேருந்து தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே, இப்பகுதி மக்களின் தேவையை பூர்த்தி செய்வதாக உள்ளது.

134—

குளிர்சாதன பேருந்து வசதி

வினா எண் 4842—திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி முதல் சென்னை வரை குளிர்சாதன பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது அரசு வழிகாட்டுதலின்பேரில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் இருந்து இரண்டு

குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், சீர்காழி மாவட்டத் தலைநகர் இல்லை. எனவே, மேற்படி தடத்தில் குளிர்சாதனப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

135—

பேருந்து வசதி

வினா எண் 4933—திரு. அ. ராமு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரி முதல் பாலக்காடு வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோத்தகிரி–பாலக்காடு வரை பேருந்து இயக்கக் கோரும் வழித்தடம் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டதால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் இரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது இதுகுறித்து பேசப்படும்.

136—

பேருந்து வசதி

வினா எண் 5065—திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி, இடிந்தகரையிலிருந்து நாகர்கோவிலுக்கு நேரடி பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி கோட்டத்திலிருந்து, நாகர்கோவில்–

திருச்செந்தூர்/தூத்துக்குடி தடத்தில் 12 பேருந்துகள்மூலம் தினம் 34 சுற்றுக்கள் இடிந்தகரை வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளின் சராசரி பயணிகள் பயன்பாடு 59 சதவிகிதம் மட்டுமே உள்ளது. ஆகவே, தற்போது இயக்கப்பட்டுவரும் இப்பேருந்து வசதிகளே போதுமானது எனக் கருதப்படுகிறது.

137—

பேருந்து வசதி

வினா எண் 5134—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, திருமணஞ்சேரியிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமணஞ்சேரி–சென்னை புதிய வழித்தடம் ஆகும். திருமணஞ்சேரி–மயிலாடுதுறை தட நீளம் 18 கி.மீ. ஆகும். மயிலாடுதுறை–சென்னை தட நீளம் 281 கி.மீ. ஆகும். மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு 30 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது. இதன் சராசரி பயணிகளின் பயன்பாட்டு அடர்வு 81 சதவீதமாக உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து திருமணஞ்சேரிக்கு நான்கு நகரப் பேருந்துகள்மூலம் 26 சென்று திரும்பும் நடைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதன் சராசரி பயணிகளின் பயன்பாட்டு அடர்வு 55 சதவீதம் மட்டுமே உள்ளது. எனவே, தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

138—

பேருந்து வசதி

வினா எண் 5135—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு வழியாக காட்டுமன்னார்கோவிலுக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை–காட்டுமன்னார்கோவில் புதிய வழித்தடம் ஆகும். இதன் தட நீளம் 36 கி.மீ. ஆகும். பேருந்து இயக்குவது குறித்து தட ஆய்வு செய்யப்பட்டு, தற்போது மயிலாடுதுறையிலிருந்து காட்டுமன்னார்கோவிலுக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

139—

பேருந்து வசதி

வினா எண் 5136—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையிலிருந்து திருவண்ணாமலை வழியாக திருப்பதிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறையிலிருந்து திருவண்ணாமலை வழியாக திருப்பதிக்கு புதிய பேருந்து இயக்கக் கோரும் வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டதால், இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் இரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது இதுகுறித்து பேசப்படும்.

2018 ஜூலை 9]

140—

பேருந்து வசதி

வினா எண் 5306—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்கு மேலூர் ஊராட்சி, வடலூரிலிருந்து வடக்கு மேலூர் வழியாக மத்திய பேருந்து நிலையத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வடலூரிலிருந்து வடக்குத்து, நெய்வேலி ஆர்ச் வழியாக நெய்வேலி மத்திய பேருந்து நிலையத்திற்கு இயக்கப்படும் ஐந்து நகரப் பேருந்துகளையும் மேலும் தொடர்ச்சியாக அதிக எண்ணிக்கையில் உள்ள புறநகரப் பேருந்துகளையும், வடக்கு மேலூர் கிராம மக்கள் நெய்வேலி மத்திய பேருந்து நிலையம் செல்ல பயன்படுத்தி வருகின்றனர்.

141—

பேருந்து வசதி நீட்டித்தல்

வினா எண் 5775—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆர்.எஸ். மங்கலம்–மதுரை வரை இயக்கப்படும் பேருந்துகளை சேத்திடல் ஊராட்சிக்குட்பட்ட முத்துப்பட்டினம் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆர்.எஸ். மங்கலத்திலிருந்து மதுரை வரை

இயக்கப்படும் பேருந்துகளை சேத்திடல் ஊராட்சிக்குட்பட்ட முத்துப்பட்டினத்திற்கு இயக்கிட ஆய்வு செய்து பேருந்து இயக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

142—

பேருந்துகள் பேருந்து நிலையம் வந்து செல்லுதல்

வினா எண் 5786—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனை ஒன்றியம், அனைத்து பேருந்துகளும் வட்டாணம் கிராமப் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, திருவாடனை ஒன்றியம், வட்டானம் கிராமம் இராமநாதபுரம்–சென்னை கிழக்கு கடற்கரை பிரதான சாலையில் அமைந்துள்ளது. வட்டாணம் தொண்டியிலிருந்து 15 கி.மீ. வழித்தட தூரத்திலும், எஸ்.பி. பட்டினத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திலும் உள்ளது. இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரத்திலிருந்து பட்டுக்கோட்டை வரை செல்லும் அனைத்து பேருந்துகளும், பட்டுக்கோட்டையிலிருந்து தொண்டி வரை செல்லும் பேருந்துகளும், மதுரையிலிருந்து எஸ்.பி. பட்டினம், கோட்டைப்பட்டினம் வரை இரு திசைகளில் செல்லும் அனைத்து பேருந்துகளும் வட்டானம் கிராம பேருந்து நிறுத்தம் வழியாக 15 நிமிட இடைவெளியில் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன.

143—

பேருந்து வசதி

வினா எண் 5833—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

கடையநல்லூர் தொகுதி, கருப்பா நதி பகுதியில் உள்ள கலைமான் கிராமத்திலிருந்து சொக்கம்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கருப்பா நதி அணைப்பகுதியைச் சார்ந்த கலைமான் நகர் தென்காசி–புளியங்குடி பிரதான சாலையிலிருந்து பிரிந்து உட்புறத்தில் சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. இப்பகுதிக்குச் செல்லும் பிரிவு சாலையானது சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு மிகவும் குறுகலாகவும், கன ரக வாகனம் இயக்க இயலாத நிலையிலும் உள்ளது. எனவே, அச்சாலை அகலப்படுத்தப்பட்ட பின்பு பேருந்து இயக்குவதற்கான ஆய்வு மேற்கொண்ட பின்னர் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

144—

பேருந்து வசதி

வினா எண் 5835—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடையநல்லூர் தொகுதி, பொய்கையூரிலிருந்து இடைகால் வழியாக தென்காசி மற்றும் கடையநல்லூருக்கு பேருந்து இயக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொய்கை கிராமம், தென்காசி–புளியங்குடி மற்றும் சுரண்டை–சங்கரன்கோவில் ஆகிய பிரதான சாலைகளுக்கு இடையே உட்புறப் பகுதியில் அமைந்துள்ளது. 3 பேருந்துகள் கடையநல்லூர்–சுரண்டை (வழி) இடைகால், பொய்கை தடத்தில் 6 சுற்றுக்களும், மேலும் ஒரு பேருந்து தென்காசி–சங்கரன்கோவில் (வழி) இடைகால், பொய்கை தடத்தில் 10 சுற்றுக்களும் பொய்கை கிராமத்தை தொடர்புப்படுத்தி இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் அனைத்தும் பொய்கை

மற்றும் இடைகால் வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இப்பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

145—

பேருந்து வசதி

வினா எண் 5848—திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, ராசிபுரம் முதல் போல்காடு வரை முள்ளுக்குறிச்சி, நரியங்காடு, தண்ணிமாத்தி, நொச்சிகாடு, புங்கம்பட்டி, வடகாடு, போல்காடு, நவக்காடு, மேக்கினிக்காடு, செங்கரை வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் கோட்டம் மூலமாக தம்மம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து முள்ளுக்குறிச்சி, நரியங்காடு, நவக்காடு, செங்கரை வழியாக அரபிலீஸ்வரர் கோயில் வரை 2 பேருந்துகளும், ராசிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து காளப்பநாயக்கன்பட்டி, செங்கரை, நவக்காடு, தண்ணிமாத்தி, ஒத்தக்கடை வரை ஒரு பேருந்தும் இயக்கப்பட்டு வருகின்றது. ராசிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து காளப்பநாயக்கன்பட்டி, காரவள்ளி வழியாக செல்லும் பேருந்தை முள்ளுக்குறிச்சி, நரியன்காடு, நவக்காடு, செங்கரை, மேக்கினிக்காடு, தண்ணிமாத்தி, ஒத்தக்கடை, வடக்காடு, போல்காடு வரை மாற்றி இயக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

146—

பேருந்து வசதி

வினா எண் 7555—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

(அ) சைதாப்பேட்டை மேற்கு பகுதியிலிருந்து திருவான்மியூர் வரை புதிய வழித்தடத்தில் புதிய பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பயணிகள் சைதாப்பேட்டை மேற்கிலிருந்து சைதாப்பேட்டை பேருந்து நிலையம்/நிறுத்தம் வழியாக இயங்கும் பேருந்துகளைப் பயன்படுத்தி, சைதாப்பேட்டை பேருந்து நிலையம்/நிறுத்தம் வந்தடைந்தால், அந்நிறுத்தம் வழியாக இயக்கப்படும் பேருந்துகளை பயன்படுத்தி, எளிதில் திருவான்மியூர் சென்றடையலாம். எனவே, மேற்படி பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

147—

பேருந்து வசதி

வினா எண் 7918—திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முசிறி தொகுதி, மேட்டுப்பாளையத்திலிருந்து சமயபுரம் வரை நேரடி பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மேட்டுப்பாளையத்திலிருந்து சமயபுரம் வரை உள்ள வழித்தடத்தில் பகுதி பகுதியாக நகர் மற்றும் புறநகர் பேருந்து வசதிகள் உள்ளன. இதன் பயணிகள் அடர்வு 56.80% ஆகும். எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

148—

பேருந்து வசதி

வினா எண் 7919—திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முசிறி தொகுதி, காட்டுப்புத்தூரிலிருந்து சமயபுரம் வரை நேரடி பேருந்து இயக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, காட்டுப்புத்தூரிலிருந்து சமயபுரம் வரை உள்ள வழித்தடத்தில் பகுதி பகுதியாக நகர் மற்றும் புறநகர் பேருந்து வசதிகள் உள்ளன. இதன் பயணிகள் அடர்வு 66.50% ஆகும். எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

149—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 7923—திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முசிறி தொகுதி, முசிறி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முசிறி பகுதி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென ரூ.123.59 இலட்சம் நிதி ஒப்பளிப்பு

2018 ஜூலை 9]

வழங்கி அரசாணை (நிலை) எண் 131, உள் (போ.வ.7) துறை, நாள் 14–2–2017–ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. தற்பொழுது கட்டடம் கட்டும் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

150—

பேருந்து வசதி

வினா எண் 8175—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, கல்லாபுரம்–பூளவாடி புதுநகர் பகுதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருப்பூர் மண்டல போக்குவரத்துக் கழகத்தின்மூலம் கல்லாபுரம்–பூளவாடி புதுநகர் பகுதிக்கு பயணிகள் அடர்வுக்கு ஏற்ப போதிய பேருந்துகள் இயக்கப்படுவதால் மேலும், கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

151—

பேருந்து வசதி

வினா எண் 8230—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை தொகுதி, இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், கூகுடி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களுக்கு கூடுதலாக நகரப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, திருவாடனை ஊராட்சி ஒன்றியம், திருவாடனையிலிருந்து கூகுடி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்கள் வழியாக நீர்குன்றத்திற்கு ஒரு நடையும், தேவகோட்டையிலிருந்து கூகுடி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்கள் வழியாக நீர்க்குன்றத்திற்கு மூன்று நடைகளும், பயணிகளின் அடர்வுக்கேற்ப பகுதி பகுதியாக அரசு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய தேவைக்கு இவ்வசதியே போதுமானதாக உள்ளது.

152—

பேருந்து வசதி

வினா எண் 9182—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, தக்கலை ஆழ்வார்கோவில் வழியாக திங்கள்நகருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தடம் எண் 45C பேருந்து மண்டைக்காடு–குமாரகோவில் (வழி) திங்கள்நகர், நெய்யூர் ஆஸ்பத்திரி, வட்டம், ஆழ்வார்கோவில், தக்கலை என 2 சுற்றுக்களும், மண்டைக்காடு–குமாரகோவில் (வழி) திங்கள்நகர், இரணியல், ஆழ்வார்கோவில், தக்கலை என 3 சுற்றுக்களும், மண்டைக்காடு–குமாரகோவில் (வழி) திங்கள்நகர், இரணியல், தக்கலை என 13 சுற்றுக்களும் மொத்தம் 18 சுற்றுக்கள் 46 சதவிகித பயணிகள் பயன்பாட்டுடன் இயக்கப்படுகிறது. தடம் எண் 6C/11E பேருந்து திங்கள்நகர்–தக்கலை (வழி) நெய்யூர் ஆஸ்பத்திரி, வட்டம், ஆழ்வார்கோவில் என 1 சுற்று இயக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ஆழ்வார்கோவில் வழியான சுற்றுக்களை குறைந்த எண்ணிக்கையிலான பயணிகளே பயன்படுத்தி வருகின்றனர். எனவே, தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளது.

2018 ஜூலை 9]

153—

பேருந்து வசதி

வினா எண் 9217—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நத்தம் தொகுதி, நத்தத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக நத்தத்திலிருந்து சென்னைக்கு தடம் எண் 135 Ultra Deluxe *பேருந்து இருமுனைகளிலிருந்தும் தலா ஒரு பேருந்து தினசரி இயக்கப்பட்டு வருகிறது.*

154—

பேருந்து வசதி

வினா எண் 9218—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நத்தம் தொகுதி, நத்தத்திலிருந்து ஊமச்சிகுளம், கடச்சனேந்தல் வழியாக மாட்டுத்தாவணிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது இயக்கப்படும் நத்தம்–மாட்டுத்தாவணி (வழி) ஊமச்சிகுளம், அய்யர்பங்களா, ரிசர்வ் லயன், அவுட்போஸ்ட் வழித்தடத்தில் அதிகமான பேருந்து நிறுத்தங்களும் அதிகமான பயணிகளின் பயன்பாடு உள்ளதாலும் இவ்வழித்தடமே

மக்களுக்கு ஏற்றதாக உள்ளது. நத்தம்–மாட்டுத்தாவணி (வழி) ஊமச்சிகுளம், கடச்சனேந்தல், சர்வேயர் காலனி வழித்தடத்தில் பேருந்து நிறுத்தங்கள் குறைவாகவும், மக்கள் பயன்பாடும் மிகவும் குறைவாகவே உள்ளது. இருப்பினும், கடச்சனேந்தல் பகுதி மக்கள் மாட்டுத்தாவணி செல்வதற்கு சர்வேயர் காலனி வழியாக போதுமான அளவு நகரப் பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, மேற்படி பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

155—

பேருந்து வசதி

வினா எண் 9222—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அலங்காநல்லூர், பாலமேடு, வலையபட்டி வழியாக பெரியமுளையூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அலங்காநல்லூர், பாலமேடு, வலையபட்டி வழியாக பெரியமுளையூர் வரை உள்ள தடதூரம் 40.8 கி.மீ. ஆகும். பேருந்து வசதி பெற்ற வழித்தடத்தில் 35.0 கி.மீ. வரையே நகரப் பேருந்து இயக்கம் செய்ய வழிவகை உள்ளது. எனவே, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அலங்காநல்லூர், பாலமேடு, வலையபட்டி வழியாக பெரியமுளையூருக்கு நேரடி நகரப் பேருந்து இயக்கம் செய்ய வாய்ப்பில்லை.

156—

பேருந்து வசதி

வினா எண் 9984—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 9]

(அ) சோழிங்கநல்லூரிலிருந்து கீழ்க்கட்டளை, உள்ளகரம், புழுதிவாக்கம், என்.ஜி.ஓ. காலனி வழியாக கோயம்பேடுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் மூன்று பேருந்துகள் சிறுசேரி தொழில்நுட்ப பூங்காவிலிருந்து சோழிங்கநல்லூர், கீழ்க்கட்டளை, உள்ளகரம், புழுதிவாக்கம் வழியாக கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை வரை இயக்கப்படுகின்றன. ஏ.ஜி.எஸ். அலுவலர்கள் குடியிருப்பிலிருந்து என்.ஜி.ஓ. காலனி கிண்டி வழியாக தியாகராய நகருக்கு எட்டு பேருந்துகளும், இரண்டு பேருந்துகள் புழுதிவாக்கத்திலிருந்து கிண்டி வழியாக பிராட்வேக்கும், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளை பயன்படுத்தி புழுதிவாக்கம், என்.ஜி.ஓ. காலனி வாழ் பொதுமக்கள் கிண்டி வந்தடைந்தால், அந்நிறுத்தம் வழியாக இயக்கப்படும் பேருந்துகள் மூலமாக சென்னை புறநகர் பேருந்து நிலையத்திற்கு எளிதில் சென்றடையலாம்.

157—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 10001—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பணிமனையிலிருந்து சென்னைக்கு கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பணிமனையின்மூலம் செஞ்சி முதல் சென்னை வரை உள்ள வழித்தடத்தில் 21 பேருந்துகள்மூலம்

30 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளே போதுமானதாக உள்ளதால் கூடுதல் பேருந்துகள் இயக்க அவசியம் எழவில்லை.

158—

பேருந்து வசதி

வினா எண் 10006—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சியிலிருந்து ஆரணி–வேலூர் வழியாக திருப்பதிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சியிலிருந்து ஆரணி, வேலூர் வழியாக திருப்பதி வரை உள்ள வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு இடையே அமைந்துள்ள இரு மாநில வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கம் என்பது இரு மாநில அரசுகளின் இடையே ஏற்படும் வழித்தட உடன்படிக்கையின்படியே இயக்க இயலும்.

159—

பேருந்து வசதி

வினா எண் 10007—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி போக்குவரத்து கழக பணிமனையிலிருந்து மேல்மலையனூர்–பாண்டிச்சேரி வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேல்மலையனூர் முதல் செஞ்சி, திண்டிவனம் வழியாக புதுச்சேரி வரை உள்ள வழித்தடம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ள இரு மாநில வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கம் என்பது இருமாநில அரசுகளின் இடையே ஏற்படும் வழித்தட உடன்படிக்கையின்படியே இயக்க இயலும்.

160—

பேருந்து வசதி

வினா எண் 11010—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டையிலிருந்து பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை–பெங்களூரு வழித்தடம் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் இரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பேசப்படும்.

161—

போக்குவரத்து பணிமனை

வினா எண் 11478—திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போளூர் தொகுதி, சேத்துப்பட்டில் புதிய போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போளூர் தொகுதி, சேத்துப்பட்டில் போக்குவரத்துப் பணிமனை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 18–6–2015 அன்று காணொலிக் காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டது.

162—

பேருந்து வசதி

வினா எண் 11587—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, இளங்குண்ணியிலிருந்து சென்னைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் சென்னை (வழி) இளங்குண்ணி, செங்கம் வழியாக 2 புறநகர் வழித்தடங்கள் 4 நடைகளும், தருமபுரி–சென்னை (வழி) இளங்குண்ணி, செங்கம் என 1 புறநகர வழித்தடம் 2 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகளே இப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது. எனவே, செங்கம் தொகுதி, இளங்குண்ணியிலிருந்து சென்னைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.

163—

போக்குவரத்து பணிமனைக்குக் கட்டடம்

வினா எண் 11908—திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) திட்டக்குடி தொகுதி, தி.இளமங்கலத்திலுள்ள போக்குவரத்துப் பணிமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறை நிறுவனத்திற்குட்பட்ட திட்டக்குடி வட்டம்—தி.இளமங்கலத்தில் உள்ள போக்குவரத்துப் பணிமனை, தற்போது சொந்தக் கட்டடத்தில்தான் செயல்பட்டு வருகிறது.

164—

சொகுசுப் பேருந்து வசதி

வினா எண் 12459—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பனந்தாள் பேரூராட்சி பகுதியிலிருந்து சென்னைக்கு சொகுசு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை, மன்னார்குடி, தஞ்சாவூர் மற்றும் கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாள் வழியாக சென்னைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் மூலமாக 43 சொகுசு தடப் பேருந்துகளும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் மூலமாக 10 சொகுசு பேருந்துகளும், 10 விரைவு தடப் பேருந்துகளும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 30 அதிநவீன சொகுசு தடப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மொத்தம் 93 தடப் பேருந்துகள் திருப்பனந்தாள் வழியாக சென்னைக்கு இயக்கப்படுவதால் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

165—

பேருந்து வசதி

வினா எண் 12518—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி, திருமலைநகர் பகுதியிலிருந்து சோழிங்கநல்லூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகம், செம்பாக்கம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள திருமலை நகர் பகுதி வழியாக தடம் எண் S19 (அஸ்தினாபுரம்–கீழ்க்கட்டளை)–ல் இரண்டு சிற்றுந்துகளும், தடம் எண் S2 (குரோம்பேட்டை–மேடவாக்கம்)–ல் மூன்று சிற்றுந்துகளும், தடம் எண் S10 (குரோம்பேட்டை–ஜோதி நகர் மாடம்பாக்கம்)–ல் இரண்டு சிற்றுந்துகளும், தடம் எண் M21B (குரோம்பேட்டை–வேளச்சேரி)–ல் ஒரு பேருந்தும் ஆக மொத்தம் ஏழு சிற்றுந்துகளும் ஒரு பேருந்தும் இயக்கப்படுகின்றன. மேற்படி பேருந்து மற்றும் சிற்றுந்துகள் மூலமாக மேடவாக்கம் மற்றும் காமராஜபுரம் வந்தடைந்தால் அவ்வழியாக இயக்கப்படும் பேருந்துகளை பயன்படுத்தி சோழிங்கநல்லூர் சென்றடையலாம்.

166—

சிற்றுந்து வசதி

வினா எண் 13209—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் பழைய பேருந்து நிலையம் முதல் கந்தகிரி வரை உள்ள வழித்தடத்தில் சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் பழைய பேருந்து நிலையம் முதல் கந்தகிரி வரை உள்ள வழித்தடத்தில் ஏற்கெனவே ஒரு அரசு நகரப் பேருந்து 4 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, இத்தடத்தில் மினிபேருந்து இயக்க அனுமதி எதுவும் வழங்க வழிவகை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

167—

பேருந்து வசதி

வினா எண் 13445—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்திலிருந்து சென்னை மற்றும் பெங்களூருக்கு புதிய வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கத்திலிருந்து பெங்களூருக்கு செல்லும் வழித்தடம் ஒரு அண்டை மாநில வழித்தடம் ஆகும். இத்தடத்தின் நீளம் 242.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் இரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பேசப்படும்.

168—

புதிய போக்குவரத்து பணிமனை

வினா எண் 14064—திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2018 ஜூலை 9*

(அ) மதுராந்தகம் போக்குவரத்துப் பணிமனைக்கு மாற்றாக புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு மாற்றாக புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க தகுந்த நிலம் கிடைக்கப் பெற்றபின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

169—

பேருந்து வசதி

வினா எண் 14179—திரு. அ. ராமு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னூர் முதல் பர்லியார் வரை காந்திப்புரம், காட்டேரி சந்திப்பு இரட்டைச்சாலை, அரசு தோட்டக்கலைப் பண்ணை, நஞ்சப்புற சத்திரம் மரப்பாலம், கே.என்.ஆர். சின்ன குறும்பாடி, கோழிக்கரை, புதுக்காடு வழியாக புதிய தடத்தில் பேருந்து வசதி ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உதகை–மேட்டுப்பாளையம் பிரதான வழித்தடத்தில் பர்லியார் அமைந்துள்ளது. இவ்வழித்தடத்தில் தினசரி 193 நடைகள் சராசரியாக 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, புதிய தடத்தில் பேருந்து வசதி ஏற்படுத்திட அவசியம் எழவில்லை.

2018 ஜூலை 9]

170—

கூடுதல் பேருந்து

வினா எண் 16099—திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் நகரிலிருந்து திருப்பதிக்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து திருப்பதிக்கு இரண்டு பேருந்துகள்மூலம் நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டதால், இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் இருமாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது பேசப்படும்.

171—

சொகுசு பேருந்து வசதி

வினா எண் 16302—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டையிலிருந்து பாண்டிச்சேரி வழியாக கிழக்குக் கடற்கரை சாலையில் சென்னைக்கு சொகுசு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டையிலிருந்து பாண்டிச்சேரி வழியாக சென்னைக்கு இயக்கக் கோரும் வழித்தடம் தமிழ்நாடு

மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டதால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் இரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது பேசப்படும்.

172—

சொகுசு பேருந்து வசதி

வினா எண் 16303—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டையிலிருந்து கோயம்புத்தூருக்கு சொகுசு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டையிலிருந்து கோயம்புத்தூருக்கு செல்லும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தட ஆய்வுசெய்து சொகுசு பேருந்துகள் இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

173—

பேருந்து வசதி

வினா எண் 18994—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலத்திலிருந்து வேப்பூர், இலவாசனூர் கோட்டை, திருவண்ணாமலை வழியாக பெங்களூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலத்திலிருந்து பெங்களூருக்கு நான்கு பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு எட்டு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வழித்தடம் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய இருமாநிலங்கள் சம்பந்தப்பட்டதால், இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் இருமாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பேசப்படும்.

174—

பேருந்து வசதி

வினா எண் 18995—திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உளுந்தூர்பேட்டையிலிருந்து மங்களம்பேட்டை, விருத்தாசலம், கிம்மாபுரம், சேத்தியாதோப்பு வழியாக காட்டுமன்னார்கோவிலுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உளுந்தூர்பேட்டையிலிருந்து காட்டுமன்னார்கோவிலுக்கு செல்லும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும், கோரியுள்ள வழித்தடம் புதிய வழித்தடமாகும். எனவே, தற்போது புதிய வழித்தடம் இயக்கும் திட்டம் எதுவும் இல்லை.

175—

பேருந்து வசதி

வினா எண் 20196—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், அச்சிறுபாக்கம் முதல் வெண்ணாங்குப்பட்டு வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலம் மூலமாக அச்சிறுபாக்கம் முதல் வெண்ணாங்குப்பட்டு வரை பகுதி வாரியாகவும், நேரடியாகவும் போதுமான பேருந்து வசதி உள்ளதாலும், பயணிகளின் அடர்வு குறைவாக உள்ளதாலும் இவ்வழித்தடத்தில் கூடுதலாக பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

176—

கணினி வழி சேவை

வினா எண் 22166—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்க கணினி வழி சேவை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓட்டுநர் உரிமம் புதுப்பிப்பதற்கு கணினி வழி விண்ணப்பம் சமர்ப்பித்தலுக்கான சேவை அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் 1–3–2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

177—

பேருந்து வசதி

வினா எண் 22693—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, கருங்கல்லில் இருந்து கேரள மாநிலம் எடத்துவாவுக்கும், ஆந்திர மாநிலம் திருப்பதிக்கும் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருங்கல்லில் இருந்து கேரள மாநிலம் எடத்துவாவு வரை தட நீளம் 300 கி.மீ.–க்கும் குறைவாக உள்ளதால் புதிய வழித்தடத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்து இயக்க சாத்தியமில்லை. மேலும், கருங்கல்–திருப்பதி புதிய வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி தடத்தில் புதிய பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் தமிழ்நாடு–ஆந்திரா இரு மாநில ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்கப்படும்.

178—

சொகுசு விரைவுப் பேருந்து வசதி

வினா எண் 22792—டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூரிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் கிளை மூலமாக புதிய சொகுசு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் திருச்சி பணிமனையிலிருந்து வேடசந்தூர்–சென்னை (151UD) *தடத்தில், சென்னைக்கு 21–00 மணிக்கும், சென்னையிலிருந்து வேடசந்தூருக்கு 21–30 மணிக்கும் தினசரி இருமுனைகளிலிருந்தும் தலா 1 பேருந்துவீதம் இரண்டு அதிநவீன சொகுசு பேருந்துகள் மக்களின் தேவைக்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன.*

179—

பேருந்து வசதி

வினா எண் 27484—திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவொற்றியூர் தொகுதி, திருவொற்றியூர் பேருந்து நிலையத்திலிருந்து பழவேற்காட்டிற்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகம், தடம் எண் 595–ல் இரண்டு பேருந்துகளை சுங்கச்சாவடியிலிருந்து திருவொற்றியூர் வழியாக பழவேற்காட்டிற்கு இயக்கி வருகிறது.

180—

தேசிய நூலாக அறிவித்தல்

வினா எண் 4295—திரு. எம். இராமச்சந்திரன் மற்றும் திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக சட்டமன்றப் பேரவையில் 24–5–2006 அன்று நடைபெற்ற மேதகு ஆளுநர் உரையில் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்குமாறு மத்திய அரசைத் தொடர்ந்து இவ்வரசு வலியுறுத்தும் என அறிவிக்கப்பட்டது. இவ்வறிவிப்பிற்கிணங்க திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்கக்கோரி புதுதில்லியில் உள்ள மனித வள மேம்பாட்டுத் துறை செயலாளர் அவர்களுக்கு அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் நேர்முக கடிதம் அனுப்பப்பெற்று, தற்போது தேசிய நூல் வகையில் எந்த நூலும் இல்லை என்றும், அதற்கான வரைமுறை உருவாக்கப்படவில்லை என்றும், அவ்வாறு தேசிய நூலாக அறிவிக்க ஏதேனும் மத்திய அரசு முயற்சி செய்யும்போது, திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பதற்கு பரிசீலனை செய்யும் எனத் தெரிவித்து கடிதம் வரப்பெற்றுள்ளது. திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க இவ்வரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

181—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 94—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியம், ஸ்ரீநெடுஞ்சேரி ஊராட்சியிலுள்ள அருள்மிகு வேணுகோபால் சுவாமி திருக்கோயிலினை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியம், ஸ்ரீநெடுஞ்சேரி ஊராட்சியிலுள்ள

அருள்மிகு வேணுகோபால் சுவாமி திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையான திருக்கோயில் ஆகும். எனவே, இத்திருக்கோயிலினை புனரமைப்பதற்கு தொல்லியல் வல்லுநர் குழுவின் பரிந்துரை கோரப்பட்டுள்ளது. தொல்லியல் வல்லுநர் கருத்தின் அடிப்படையில் திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

182—

புதிய திருத்தேர்

வினா எண் 95—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியிலுள்ள அருள்மிகு வீரநாராயண பெருமாள் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், உடையார்குடி, அருள்மிகு வீரநாராயண பெருமாள் திருக்கோயிலின் பழமையை கருதி தற்போது திருத்தேரோட்டத்தின்போது தற்காலிக கட்டுத்தேர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. புதிய மரத்தேர் செய்திட விரைவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தேர் திருப்பணி தொடங்கப்படும்.

183—

புதிய திருத்தேர்

வினா எண் 96—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், உடையார்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

184—

புதிய திருத்தேர்

வினா எண் 97—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, உடையார்குடி, அருள்மிகு அனந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், உடையார்குடி, அருள்மிகு அனந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்திட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

185—

தங்கும் விடுதி

வினா எண் 98—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, மேலகடம்பூர் ஊராட்சியிலுள்ள அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலுக்கு நவீன கழிப்பறையுடன்கூடிய தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், மேலகடம்பூர், அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இன்மையால், தற்போதைக்கு புதியதாக நவீன கழிப்பறை வசதியுடன்கூடிய தங்கும் விடுதி கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

186—

குடமுழுக்கு

வினா எண் 111—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், செந்தலை கிராமத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், செந்தலை கிராமத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் தொன்மை கருதி, தொல்லியல் வல்லுநரின் கருத்து பெற்று, குடமுழுக்கு நடத்திட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

187—

திருமண மண்டபம்

வினா எண் 112—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், கண்டமங்கலம் கிராமத்திலுள்ள அருள்மிகு வாத்தலை நாச்சியம்மன் திருக்கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், கண்டமங்கலம், அருள்மிகு வாத்தலை நாச்சியம்மன் திருக்கோயிலில் போதுமான நிதி வசதி இல்லாததால் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு தற்பொழுது இல்லை.

188—

குடமுழுக்கு

வினா எண் 132—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதியில் உள்ள பாலதண்டாயுதபாணி முருகன் கோயிலை சீரமைத்து, குடமுழுக்கு நடத்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், காட்டிநாயனப்பள்ளி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி என்கிற பாலதண்டாயுதபாணி முருகன் திருக்கோயிலுக்கு திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, 12–12–2013–ல் குடமுழுக்கு நடைபெற்றது. மீண்டும் 12 ஆண்டுகள் கழித்து 2025–ல் குடமுழுக்கு நடத்தப்படும். தற்போது கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

189—

குடமுழுக்கு

வினா எண் 574—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், இனாம்காரியந்தல் கிராமத்திலுள்ள அருள்மிகு மாரியம்மன் கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டம், இனாம்காரியந்தல் கிராமத்திலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத கிராம திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக புனரமைப்பு செய்து குடமுழுக்கு நடத்திட வழிவகை இல்லை.

190—

குடமுழுக்கு

வினா எண் 691—திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்துவது தொடர்பாக முதற்கட்டமாக விமான மராமத்துப் பணி மற்றும் இதர

2018 ஜூலை 9]

மராமத்து திருப்பணிக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து மேற்படி திருப்பணியினை உபயதாரர்கள்மூலம் விரைந்து முடித்து குடமுழுக்கு நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

191—

அடிப்படை வசதி

வினா எண் 781—டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சியிலுள்ள அருள்மிகு பாலதண்டாயுதபாணி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சியிலுள்ள அருள்மிகு பாலதண்டாயுதபாணி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.

192—

குளம் தூர்வாருதல்

வினா எண் 809—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, பொழிச்சலூரிலுள்ள சிவன் கோயில் (சனீஸ்வரன் ஸ்தலம்) குளத்தை தூர் வாரி, ஆழப்படுத்தி நடைபாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம், பொழிச்சலூரிலுள்ள அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில் நிருவாகம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் CRP 1123/2012 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. மேலும், உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட

வழக்கு எண் SLP No. 1361/2009–ல் நடைமுறை நிலை (Status Quo) தொடரப்பட வேண்டும் என ஆணை பெறப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, இத்திருக்கோயில் நிருவாகம் மற்றும் திருக்குளம் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாத நிலை உள்ளது.

193—

குளம் தூர்வாருதல்

வினா எண் 810—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் நகராட்சியிலுள்ள நெமிலிச்சேரி சிவன் கோயில் குளத்தை தூர் வாரி, ஆழப்படுத்தி நடைபாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் நகராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு ஆனந்தவல்லி சமேத அகத்தீஸ்வரர் திருக்கோயில் திருக்குளம் தூர்வாரப்பட்டு, ஆழப்படுத்தப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் திருக்குளத்திற்கு நடைபாதை அமைக்கும் அளவிற்கு குளத்தை ஒட்டி இடவசதி இல்லாத காரணத்தினாலும், திருக்கோயிலை ஒட்டியே திருக்குளம் அமைந்துள்ள காரணத்தினாலும் நடைபாதை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

194—

மீன்கள் வளர்த்தல்

வினா எண் 811—திரு. ஆர். நடராஜ்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மயிலாப்பூர் தொகுதி, அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில் குளத்தின் நீரை தூய்மைப்படுத்தி அதில் மீன்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

மயிலாப்பூர் தொகுதி, அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில் குளத்தின் நீரை தூய்மைப்படுத்தி அதில் மீன்கள் வளர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

195—

அடிப்படை வசதி

வினா எண் 858—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, 78–வது வார்டு பகுதியில் உள்ள அருள்மிகு அங்காளபரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்குமிடம், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 78–வது வார்டு பகுதியில் உள்ள அருள்மிகு அங்காளபரமேஸ்வரி மற்றும் காசி விசுவநாத சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிப்பிட வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், அமாவாசை போன்ற விசேஷ தினங்களில் இரவில் திருக்கோயில் பிரகார மண்டபத்தில் பக்தர்கள் தங்குவதற்கு தங்கும் வசதி உள்ளது.

196—

நவீன அங்காடி

வினா எண் 949—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, 58–வது வார்டிலுள்ள எல்லையம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் இருக்கும் அங்காடியை நவீன வசதிகளுடன் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 58—வது வார்டிலுள்ள எல்லையம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் இருந்த அங்காடி ரூ.11,50,000 செலவில் நவீன வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

197—

ரோப்கார் திட்டம்

வினா எண் 1180—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மலைக் கோயிலில் இரண்டாவது ரோப்கார் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய இரண்டாவது கம்பிவட ஊர்தி அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

198—

திருப்பணி

வினா எண் 1210—திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் பேரூராட்சியிலுள்ள அருள்மிகு ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், சேந்தமங்கலம், அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயிலில் தற்பொழுது போதிய நிதி வசதி இல்லாததால், இதுவரை திருப்பணி செய்யப்படவில்லை. திருப்பணிக் குழு அமைத்து போதிய நிதி திரட்டிய பின் திருப்பணி மேற்கொள்ளப்படும்.

199—

குடமுழுக்கு

வினா எண் 1570—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவெறும்பூர் தொகுதியிலுள்ள மலைக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு எறும்பீஸ்வரர் திருக்கோயில் தற்போது மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு திருப்பணி துவங்கி குடமுழுக்கு நடத்திட, திருச்சி மத்திய தொல்லியல் துறையை அணுகி உரிய நடவடிக்கைகள் திருக்கோயில் நிருவாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

200—

கம்பி வட ஊர்தி

வினா எண் 1672—திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை அறப்பளீஸ்வரர் கோயிலிலிருந்து ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்கு செல்ல கம்பி வட ஊர்தி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், கொல்லிமலை, அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் ஆகும். கடல் மட்டத்திலிருந்து 1000 முதல் 1300 மீட்டர் உயரத்தில் உள்ள கொல்லிமலையில் அமைந்திருக்கும் ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி உள்ள பகுதி அனைத்தும் வனத் துறையினருக்கு சொந்தமான பகுதி ஆகும். எனவே, மேற்படி இடத்திற்கு செல்ல கம்பி வட ஊர்தி இந்து சமய அறநிலையத் துறைமூலம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

201—

குடமுழுக்கு

வினா எண் 1820—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதியிலுள்ள மடவாளம் அருள்மிகு அங்கநாதீஸ்வரர் திருக்கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதியிலுள்ள மடவாளம் அருள்மிகு அங்கநாதீஸ்வரர் திருக்கோயிலில் திருப்பணிக் குழு அமைத்து திருப்பணிகள் மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

202—

தங்கும் விடுதி

வினா எண் 1832—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) மேல்மலையனூர், ஸ்ரீ அங்காள பரமேஸ்வரியம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், ஸ்ரீ அங்காள பரமேஸ்வரியம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு போதுமான அளவில் அறைகள் தற்போது உள்ளன. எனவே, புதிதாக தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு இல்லை.

203—

வெள்ளித்தேர்

வினா எண் 1868—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர், மோட்டூர் ஊராட்சியிலுள்ள அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வெள்ளித்தேர் செய்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், எலத்தூர், மோட்டூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மரத்தேர் ஒன்று நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு உபயதாரர்மூலம் ரூ.30,00,000/– மதிப்பீட்டில் சிறிய வெள்ளித்தேர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2018 ஜூலை 9

204—

குளங்கள் சீரமைத்தல்

வினா எண் 1869—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர், மோட்டூர் கிராம ஊராட்சியிலுள்ள அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் இரண்டு குளங்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர், மோட்டூர் கிராம ஊராட்சியிலுள்ள அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் பயன்பாட்டில் இரண்டு குளங்கள் உள்ளன. திருக்கோயில் மலை அடிவாரத்திலிருந்து மலைக்குச் செல்லும் பாதைக்கு தெற்குப்புறம் "சூர்யபுஷ்கரணி" என்ற குளமும், வடக்குப்புறம் "சந்திரபுஷ்கரணி" என்ற குளமும் உள்ளது. மேற்படி திருக்குளங்களை செப்பனிட திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால், மாவட்ட நிருவாகத்தின் நலத் திட்ட நிதி உதவிமூலம் பணிகளை மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

205—

தங்கும் விடுதிகள்

வினா எண் 1870—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, தென்மகாதேவமங்கலம் கிராம ஊராட்சி, பர்வதமலையில் உள்ள மல்லிகார்ஜுன் சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, தென்மகாதேவமங்கலம் கிராம ஊராட்சி, பர்வதமலை அருள்மிகு மல்லிகார்ஜுன் சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் பகற்பொழுதுக்குள் மலையேறிச் சென்று தரிசனம் செய்து அவரவர் சொந்த ஊருக்கு திரும்புகின்ற வழக்கம் மட்டுமே உள்ளது. எனவே, பக்தர்கள் தங்கும் அறைகளோ, கூடங்களோ கட்டும் நிலை தற்போது எழவில்லை. மேலும், திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத நிலையில், மலையேறுவதற்கு முன்னும் பின்னும் திருக்கோயிலின் அடிவாரத்தில் சுமார் 150 பக்தர்கள் இளைப்பாறி செல்வதற்கு சுற்றுலாத் துறை நிதி உதவி மற்றும் பொது மக்கள் நன்கொடை பெற்று இளைப்பாறும் மண்டபம் அடிப்படை வசதிகளுடன் கட்ட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

206—

திருப்பணி

வினா எண் 2068—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, செங்கத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ அனும்பாம்பிகா ரிஷபேஸ்வரர் கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அனும்பாம்பிகை உடனுறை ரிஷபேஸ்வரர் திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான திருக்கோயில். எனவே, தொல்லியல் துறையின் கருத்து பெற்று திருப்பணிக் குழு அமைத்து, திருப்பணி தொடங்க திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

207—

புதிய தங்கும் விடுதி

வினா எண் 2075—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பழுதடைந்துள்ள தங்கும் விடுதிக்கு மாற்றாக புதிய விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் உள்ள பழுதடைந்துள்ள தங்கும் விடுதிகளில் சிறப்பு மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போதைக்கு பக்தர்கள் தங்குவதற்கு போதுமான திருக்கோயில் விடுதிகள் உள்ளன. எனவே, இத்திருக்கோயிலில் புதியதாக தங்கும் விடுதி கட்டும் கருத்துரு ஏதும் இல்லை.

208—

தெப்பக்குளம் புனரமைத்தல்

வினா எண் 2078—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செந்தூர் தொகுதி, ஆத்தூர் பேரூராட்சி பகுதியிலுள்ள அருள்மிகு சோமசுந்தரி அம்மன் கோயிலின் தெப்பக்குளத்தை புனரமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், ஆத்தூர் அருள்மிகு சோமநாத சுவாமி திருக்கோயில்

2018 ஜூலை 9]

திருக்குளத்தினை சீரமைத்திட திருக்கோயிலில் தற்பொழுது போதிய நிதி வசதி இல்லாததால் இப்பணிக்கான நிதி ஆதாரத்தினை திரட்டி மதிப்பீடு அங்கீகரித்து பணிகளை மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

209—

குடமுழுக்கு

வினா எண் 2862—திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விஜயமங்கலம் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விஜயமங்கலம் அருள்மிகு நாகேஸ்வர சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு 10–4–2017 அன்று நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

210—

திருப்பணி

வினா எண் 3115—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருச்சடவளந்தை அருள்மிகு திருவளந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருச்சடவளந்தை அருள்மிகு திருவளந்தீஸ்வரர் திருக்கோயிலில்

சுவாமி சன்னதி, அம்மன் சன்னதி மற்றும் மகாமண்டபம் திருப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள திருமதிற்சுவர் கட்டும் பணியினை மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் முடிவுற்றதும் குடமுழுக்கு நடைபெற உள்ளது.

211—

திருப்பணி

வினா எண் 3116—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, அள்ளூர், அருள்மிகு வம்சோத்தாரனேசுவரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், அள்ளூர், அருள்மிகு வம்சோத்தாரனேசுவரர் திருக்கோயில் சுவாமி சன்னதி, அம்மன் சன்னதி மற்றும் உபசன்னதிகள் திருப்பணி மற்றும் மதிற்சுவர் கட்டுதல் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்து திருப்பணி வேலைகள் துவங்க திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

212—

திருப்பணி

வினா எண் 3118—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ஆற்காடு அருள்மிகு அனந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், பழைய ஆற்காடு, அருள்மிகு அனந்தீஸ்வரர் திருக்கோயில் சுவாமி சன்னதி, அம்பாள் சன்னதி மற்றும் மதிற்சுவற்றினை ரூ.30 இலட்சத்தில் துறை நிதியுதவியுடன் கட்டி திருப்பணி மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

213—

திருப்பணி

வினா எண் 3119—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, 70 பெரமூர் அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், பெரமூர் அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி வேலைகள் துவங்க திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

214—

திருக்கோயில் புனரமைத்தல்

வினா எண் 3121—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தோகூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலை புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், தோகூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் முன்மண்டபம் கட்டும் பணி மற்றும் மதிற்சுவர் பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. சுவாமி சன்னதி பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி நிலுவையில் உள்ளது. இப்பணி நடைபெற்ற உடன் குடமுழுக்கு செய்திட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

215—

குடமுழுக்கு

வினா எண் 3122—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கண்டியூர் அருள்மிகு பிரம்மா திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கண்டியூர் அருள்மிகு பிரம்மா திருக்கோயிலில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு, இராஜகோபுரம், சுவாமி சன்னதி, அம்மன் விமானம் மற்றும் திருமதிற்சுவர் ஆகியவற்றில் வர்ணம் பூசும் பணி மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வர்ணம் பூசும் பணி முடிக்கப்பட்ட பின்னர் குடமுழுக்கு நடைபெறும்.

216—

தெப்பக்குளம் தூர்வாருதல், படிக்கட்டுகள் மற்றும் மதில் சுவர்கள் புனரமைத்தல்

வினா எண் 3228—திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகர்கோவில் தொகுதி, வடிவீஸ்வரம் அழகம்மன் கோயில் தெப்பக்குளத்தை தூர் வாரி, சுற்றுப்புற படிக்கட்டுகள் மற்றும் மதிற்சுவர்களை புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் தொகுதி, வடிவீஸ்வரம் அழகம்மன் கோயில் திருக்குளம் தூர்வாரப்பட்டும், படிக்கட்டுகள் மற்றும் மதிற்சுவர்கள் சீரமைக்கப்பட்டும் நல்ல நிலையில் உள்ளன.

217—

தங்கும் விடுதி

வினா எண் 4047—திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலில் தங்கி வழிபடுவதற்கு பக்தர்கள் பெருமளவு வருவதில்லை. எனவே, இத்திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

218—

அன்னதான திட்டம்

வினா எண் 4286—திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி, கண்ணநல்லூர் ஊராட்சி, சித்தூர் அருள்மிகு மகாராஜா திருக்கோயிலில் அன்னதான திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சித்தூர், அருள்மிகு மகாராஜேஸ்வரர் திருக்கோயிலில் 15–9–2015 முதல் அன்னதான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

219—

குடமுழுக்கு

வினா எண் 4288—திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, சேத்திரபாலபுரம் ஊராட்சியிலுள்ள அருள்மிகு ஸ்ரீ ஆனந்த காலபைரவர் திருக்கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், குத்தாலம் வட்டம், சேத்திரபாலபுரம் அருள்மிகு காலபைரவர் திருக்கோயிலின் புனரமைப்பு பணிகளை உபயதாரர்மூலம் மேற்கொள்ளவும், பணிகள் முடிவுற்றதும், குடமுழுக்கு நடத்தவும் திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

220—

பாதை அமைத்தல், சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 4519—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

பரமத்தி-வேலூர் தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், கள்ளிப்பாளையம் கிராமம், அருணகிரி மலையிலுள்ள முருகன் கோயிலுக்கு பாதை அமைத்து, சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் வட்டம், கள்ளிப்பாளையம் அருள்மிகு அருணகிரிநாதர் சுவாமி திருக்கோயில் தரை மட்டத்திலிருந்து சுமார் 200 அடி உயரத்தில் சர்வே எண் 183–ல் வருவாய்த் துறைக்குச் சொந்தமான பாறை புறம்போக்கில் அமைந்துள்ளது. எனவே, தற்போது இத்திருக்கோயிலில் மலைப்பாதை அமைத்து, சுற்றுச் சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

221—

கம்பிவட ஊர்தி

வினா எண் 4528—திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மருதமலையில் கம்பிவட ஊர்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மேற்கு தொடர்ச்சி மலையில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள போலாம்பட்டி வனச் சரகத்தில் உள்ளது. மேலும், இப்பகுதி மலைவாழ் மக்கள் வசிப்பிடமாகவும், வன விலங்குகளின் வழித்தடமாகவும் உள்ளது. மேலும், போதிய இடவசதி இல்லாததால் தற்போது இத்திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் இல்லை.

[2018 ஜூலை 9

222—

குடமுழுக்கு

வினா எண் 4772—திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், வழுவூர் ஊராட்சியிலுள்ள அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

குத்தாலம், வழுவூர், அருள்மிகு வீரட்டேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு கடந்த 4–5–2001 அன்று நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. தற்போது இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணி வேலைகள் விரைவில் முடிக்கப்பட்டு எதிர்வரும் தை 2018–ல் குடமுழுக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

223—

கோபுர திருப்பணி

வினா எண் 4781—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், செல்லரப்பட்டி கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் கோயில் கோபுர திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், செல்லரப்பட்டி அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் மற்றும் அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோயில் விமானத்

2018 ஜூலை 9]

திருப்பணியினை ரூ.1,00,000/– மதிப்பீட்டில் 2016–2017 ஆம் நிதியாண்டு கிராமப்புற திருப்பணித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 118, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 27–4–2017–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இப்பணியினை 60 நாட்களில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

224—

கோயில் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வினா எண் 4787—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஆதியூர் ஊராட்சி, திம்மாவரம் பகுதியில் அருந்ததியர் குடியிருப்பில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோயிலை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கந்திலி ஒன்றியம், ஆதியூர் ஊராட்சி, திம்மாவரம் பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லை. அருந்ததியர் குடியிருப்பில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலின் திருப்பணிக்கு நிதியுதவி பெற தகுதியிருப்பின் முன்னுரிமை அடிப்படையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில் திருப்பணி திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

225—

குடமுழுக்கு

வினா எண் 5028—திரு. சி. ராஜா: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, தாரமங்கலம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு கடைசியாக 19–8–1994 அன்று குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. தற்போது திருக்கோயிலில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து திருப்பணிகளும் முடிவுற்று 2018 ஆம் வருடம் மாசி மாதம் குடமுழுக்கு நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

226—

குடமுழுக்கு

வினா எண் 5563—திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூம்புகார் தொகுதி, இலுப்பூர் ஊராட்சியிலுள்ள அருள்மிகு மத்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, இலுப்பூர் ஊராட்சியிலுள்ள அருள்மிகு மத்தீஸ்வரர் திருக்கோயிலில் குடமுழுக்கு 16–7–2006 அன்று நடைபெற்றுள்ளது. எனவே, குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவடையாத நிலையில் இத்திருக்கோயிலுக்கு உடனடியாக தற்போது திருப்பணி செய்யும் அவசியம் எழவில்லை.

227—

குடமுழுக்கு

வினா எண் 5564—திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

பூம்புகார் தொகுதி, இலுப்பூர் ஊராட்சி, முனிவிலங்குடி கிராமத்திலுள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, இலுப்பூர் ஊராட்சி, முனிவிலங்குடி அருள்மிகு கைலாசநாதர் சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு 28–5–2007 அன்று நடைபெற்றுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவு பெறாத நிலையில் இத்திருக்கோயிலுக்கு தற்போது குடமுழுக்கு செய்வதற்கான அவசியம் எழவில்லை.

228—

மூலிகைக் குளம் பராமரித்தல்

வினா எண் 5596—திரு. சி. ராஜா: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, எளம்பிள்ளை சித்தர் கோயில் மலை மீதுள்ள மூலிகைக் குளத்தைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், கஞ்சமலை, அருள்மிகு சித்தேஸ்வர சுவாமி திருக்கோயிலை ஒட்டி அமைந்துள்ள 9 நாழிக்கிணறுகள் (மூலிகைக் குளம்) திருக்கோயில் நிருவாகத்தால் அவ்வப்போது தூய்மைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

229—

குடமுழுக்கு

வினா எண் 5603—திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விஜயமங்கலத்திலுள்ள அருள்மிகு ஶ்ரீ நாகேஸ்வரர் திருக்கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விஜயமங்கலம் அருள்மிகு ஶ்ரீ நாகேஸ்வர சுவாமி திருக்கோயிலில் 2013–2014 ஆம் ஆண்டு 13–வது நிதி ஆணைய நிதிமூலம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் பழமை மாறாமல் திருப்பணிகள் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திருக்கோயில் பரிவார சன்னதிகள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுமான பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து திருப்பணிகளும் முடிவுற்று 2018 ஆம் வருடம் தை மாதம் குடமுழுக்கு நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

230—

திருப்பணி

வினா எண் 6220—திரு. மா. கோவிந்தராசு: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, அம்மணிசத்திரம், அருள்மிகு ஶ்ரீ சுந்தரகோதண்டராமசாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், அம்மணிசத்திரம் அருள்மிகு சுந்தரகோதண்டராமசாமி திருக்கோயிலில் மூலவர் இராமர் சன்னதி பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி மற்றும் திருமதிற்சுவர், மடப்பள்ளி திரும்ப கட்டும் பணி முடிவடைந்துள்ளது.

2018 ஜூலை 9]

231—

திருத்தேர்

வினா எண் 6388—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், திருவரங்கம் கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ அரங்கநாதர் திருக்கோயிலுக்கு திருத்தேர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், திருவரங்கம் கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ அரங்கநாதர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள சாலை மிகவும் குறுகலானதாக உள்ளது. எனவே, தேரோட்டம் நடத்த போதுமான இடவசதி இல்லை. எனவே, இத்திருக்கோயிலில் புதியதாக தேர் செய்வதற்கான கருத்துரு ஏதுமில்லை.

232—

தங்கும் விடுதி மற்றும் பொருட்கள் பாதுகாக்கும் அறைகள்

வினா எண் 7093—திரு. எஸ்.எஸ். சரவணன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரையிலுள்ள அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதி மற்றும் பொருட்கள் பாதுகாப்பு அறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் மேற்கு கோபுர நுழைவு வாயிலின் அருகில் பிர்லா

விஷ்ரம் தங்கும் விடுதி பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளது. இத்திருக்கோயிலிலிருந்து சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் மதுரை மாநகரின் மத்தியப் பகுதியில் எல்லீஸ் நகரில் பக்தர்கள் தங்கும் விடுதி பயன்பாட்டில் உள்ளது. இத்திருக்கோயிலின் ஐந்து கோபுர நுழைவு வாயிலில் காலணி பாதுகாப்பு இடத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறை வசதி ஏற்படுத்தப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளது.

233—

குடமுழுக்கு

வினா எண் 8120—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், குனிச்சி ஊராட்சி, பெரிய குனிச்சியிலுள்ள பெருமாள் கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2013–2014 ஆம் ஆண்டு கிராமப்புற திருக்கோயில் திருப்பணி திட்டத்தின்கீழ் அருள்மிகு வெங்கடரமணப் பெருமாள் மூலவர் கருவறை கட்டும் பணிக்கு ரூ.50,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி முடிவடைந்துள்ளது. மேலும், ரூ.20.00 இலட்சம் மதிப்பில் உபயமாக, அருள்மிகு லட்சுமி நரசிம்மர் உப சன்னதியும், மகா மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது திருமதிற்சுவர் பழுதுபார்க்கும் பணியும், தரைத்தளத்தில் கல் அமைக்கும் பணியும் முடிவுற்றுள்ளது. திருக்கோயிலில் இதர திருப்பணி பணிகள் 90% நிறைவடைந்துள்ளது. 2018 ஜனவரி மாதம் கும்பாபிஷேகம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

234—

குடமுழுக்கு

வினா எண் 8121—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2018 ஜூலை 9]

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், கொரட்டி கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ வெங்கட்ரமண பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், கொரட்டி கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ வெங்கட்ரமண பெருமாள் திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான திருக்கோயில் ஆகும். தற்போது, இத்திருக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு போதிய நிதி வசதி இல்லை. ஆதலால் உடனடியாக திருப்பணிகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

235—

குடமுழுக்கு

வினா எண் 9809—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி, அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வட்டம் மற்றும் நகர், அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து திருப்பணி வேலைகள் முடிவுற்றவுடன் குடமுழுக்கு நடத்தப்படும்.

236—

திருக்கோயில் புனரமைத்தல்

வினா எண் 9820—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, கப்பியறை பேரூராட்சி, கப்பியறையிலுள்ள சிவன் திருக்கோயிலை புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை அருள்மிகு மகாதேவர் திருக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.24.24 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் அனைத்தும் முடிவடைந்த பின்னர் 2018 ஆம் ஆண்டு தை மாதத்தில் குடமுழுக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

237—

திருக்குளம் தூர்வாரி சீரமைத்தல்

வினா எண் 10960—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர், மோட்டூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு சுயம்பு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் மூன்று திருக்குளங்களைத் தூர்வாரி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 9]

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், எலத்தூர், மோட்டூர் கிராமம் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருக்கோயிலுக்குச் செல்லும் வழியில் மலையடிவாரத்தில் சூரிய புஷ்கரணி என்ற குளமும், திருக்கோயிலுக்கு எதிர்புறம் நெடுஞ்சாலை அருகில் சந்திர புஷ்கரணி என்ற குளமும் ஆக இரண்டு குளங்கள் உள்ளன. மேலும், போளூர்–செங்கம் தேசிய நெடுஞ்சாலையில் தெற்குபுறத்தில் கிராம பஞ்சாயத்திற்குச் சொந்தமான ஒரு குளமும் அமைந்துள்ளது. அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள மேற்படி திருக்குளங்களை தூர்வாரி, சீரமைக்க திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால் மாவட்ட நிருவாகத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்மூலம் மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

238—

தமிழில் அர்ச்சனை

வினா எண் 11617—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூரிலுள்ள அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

தஞ்சாவூரிலுள்ள அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறை நடைமுறையில் இருந்து வருகிறது.

239—

யாத்ரி நிவாஸ் கட்டடம்

வினா எண் 12058—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு பூவராகவ சுவாமி திருக்கோயில் பகுதியில் யாத்ரி நிவாஸ் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டம், ஸ்ரீமுஷ்ணம் அருள்மிகு பூவராகவ சுவாமி திருக்கோயிலுக்கு 2013–2014 ஆம் ஆண்டு புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சிமூலம் யாத்ரி நிவாஸ் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு தயாராக உள்ளது.

240—

தங்கும் விடுதி

வினா எண் 12150—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவிடைமருதூர் வட்டம், கஞ்சனூர் சுக்கிரன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கஞ்சனூர் அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள இடம் குக்கிராமம் ஆகும். இங்கு வருகை தரும் பக்தர்கள் தங்கி செல்வதற்கு வருவதில்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2018 ஜூலை 9]

241—

அன்னதான திட்டம் மற்றும் கூடம் அமைத்தல்

வினா எண் 12610—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம், உடையாப்பட்டி அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோயிலில் அன்னதான திட்டத்தினை செயல்படுத்தவும், அதற்கான கூடம் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், உடையாப்பட்டி, அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோயில் மலை குன்றின் மேல் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் சனிக்கிழமை தவிர, இதர நாட்களில் குறைவான எண்ணிக்கையில் சேவார்த்திகள் வருகை புரிவதாலும் போதிய நிதி வசதி இன்மையாலும் இத்திருக்கோயிலில் தற்போது அன்னதான திட்டத்தை செயல்படுத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

242—

குடமுழுக்கு

வினா எண் 12670—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகர், 52–வது கோட்டம், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள மாரியம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், கொண்டலாம்பட்டி, கல்லாங்காடு அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு 2016–2017 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி திட்டத்தின்கீழ் புனரமைக்க அரசாணை (நிலை) எண் 117, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி5–1) துறை, நாள் 27–4–2017–ல் ரூ.1,00,000/– நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

243—

அன்னதான திட்டம்

வினா எண் 12742—திரு. அ. ராமு: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோத்தகிரி மாரியம்மன் திருக்கோயிலில் அன்னதான திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ள பகுதி மலை பிரதேசம் மற்றும் குளிர் பிரதேசம் என்பதால் பக்தர்கள் குறைந்த அளவே தரிசனம் செய்ய வருகின்றனர். மேற்படி திருக்கோயிலில் அன்னதான திட்டம் மேற்கொள்ள சமையல் கூடம், அன்னதான கூடம், பொருள்கள் வைக்க கிடங்கு ஆகியவற்றினை கட்டுவதற்கு போதிய இட வசதி, நிதி வசதி இல்லை. எனவே, மேற்படி திருக்கோயிலில் அன்னதான திட்டம் செயல்படுத்த இயலாத நிலை உள்ளது.

244—

தங்கும் விடுதி

வினா எண் 13057—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சியில் உள்ள சிவன் கோயில் அருகில் தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ரிஷிவந்தியம் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் போதிய நிதி வசதி மற்றும் இடவசதி இல்லாததால் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

245—

குடமுழுக்கு

வினா எண் 13798—திரு. ஜெ.கே.என் ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொல்லியல் துறை கட்டுப்பாட்டிலுள்ள அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம்,

கங்கைகொண்ட சோழபுரம் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலில் 2–2–2017 அன்று திருக்குடமுழுக்கு நடைபெற்றது.

246—

யாத்ரி நிவாஸ்

வினா எண் 16635—திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் நகரில் யாத்ரி நிவாஸ் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் உள்ள அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில் சொத்துகள் பொது தீட்சிதர் நிருவாகத்திலும், பராமரிப்பிலும் உள்ளது. அருள்மிகு தில்லை காளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான தகுதியான நிலம் மற்றும் இடவசதி சிதம்பரம் நகரில் இல்லை. எனவே, சிதம்பரம் நகரில் யாத்ரி நிவாஸ் கட்டுவதற்கு தற்போது வழிவகையில்லை.

247—

குடமுழுக்கு

வினா எண் 20723—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ஆவூர் அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2018 ஜூலை 9]

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ஆவூர், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகளுக்கு 2012–2013 ஆம் ஆண்டு 13–வது நிதி ஆணைய நிதியுதவிமூலம் ரூ.75,00,000/– மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும்.

248—

குடமுழுக்கு

வினா எண் 20724—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழாத்தூர் அருள்மிகு ஸ்ரீரேணுகாம்பாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டம், கீழாத்தூர் கிராமம், அருள்மிகு ஸ்ரீரேணுகாம்பாள் திருக்கோயில் திருப்பணி வேலைகள் தற்போது முடிவுபெற்றுள்ளன. விரைவில் குடமுழுக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

249—

இசைப் பள்ளிக்குக் கட்டடம்

வினா எண் 21509—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், சமுத்திரம் கிராமத்தில் 0.20.5 ஹெக்டேர் நிலத்தில், திருவண்ணாமலை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு 2016–2017 ஆம் நிதியாண்டில் ரூ.85.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8–5–2017 அன்று புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

250—

குடமுழுக்கு

வினா எண் 25170—திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் கடை வீதியில் உள்ள அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம் மற்றும் நகர், என்.ஜி.ஆர். வீதியில் அமைந்துள்ள அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயிலில் திருப்பணி செய்வதற்கு தற்பொழுது போதிய நிதி வசதி இல்லை. எனவே, உபயதாரர்கள்மூலம் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உபயதாரர்கள் வரப்பெற்றவுடன் திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
